॥ श्रीः ॥

महाकविश्रीकालिदासकृता

॥ श्रीदेवीपञ्चस्तवी ॥

ஸ்ரீமஹாகவி காளிதாஸன் இயற்றிய

ஸ்ரீதேவீ பஞ்சஸ்தவீ

1. லகுஸ்தவம் 2. சர்ச்சாஸ்தவம்
3. கடஸ்தவம் 4. அம்பாஸ்தவம்
5. ஸகல ஜனனீஸ்தவம்



ஸ்ரீ பக்த ஸமாஜம்

சென்னை.33.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

॥ श्रीः ॥

महाकविश्रीकालिदासकृता

॥ श्रीदेवीपञ्चस्तवी ॥

ஸ்ரீ மஹா கவி காளிதாஸன் இயற்றிய

ஸ்ரீதேவீ பஞ்சஸ்தவீ

1. லகுஸ்தவம்
2. சர்ச்சாஸ்தவம்
3. கடஸ்தவம்
4. அம்பாஸ்தவம்
5. ஸகல ஜனனீஸ்தவம்

வாதூல வே. ராமசந்த்ர சர்மா
இயற்றிய ஸரளா என்ற தமிழ் உரையுடன் கூடியது

ஸ்ரீ பக்த ஸமாஜம்

சென்னை-33

தபால் செலவு தனி] 1969 [விலை ரூ. 6-00

CC-0. Vatsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

பொருளடக்கம்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

FOREWORD

The Laghustuti is a short devotional poem of twenty verses with a concluding 21st verse in Sardulavikridita metre, addressed to the Godess Sarasvati. In this short poem the author has brought in all the chief doctrines of the Sakta system in a very lucid way. The text with an elaborate commentary by Raghavananda has been already published in the Trivandrum Sanskrit Series as No. LX. by the late Ganapati Sastri in 1917. Now, Pandit Sri Ramachandra Sarma who is on the staff of the Adyar Library, has written a Tamil explanation of the text and has published the text with this Tamil commentary. Sri Ramachandra Sarma has to his credit a few Sanskrit works published with his own Tamil explanations, besides the work he has done in the Adyar Library by collaborating in various publications of the Library. He is a good scholar in Sanskrit and he has also good command of Tamil. His explanation is accurate and clear.

His plan has much to commend. He takes the words of the Text in prose order and then gives the meaning for each of the words. Later he gives the total meaning in Tamil followed by detailed explanations. There are appropriate introductory statements before the verses are

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

taken up for interpretation. Thus it is useful to Sanskrit students who stand in need of some help to understand the text, and also to those who know only Tamil.

The sublime thoughts contained in Sanskrit Literature can reach the people of India only through the regional languages, and it is a very laudable undertaking of the Pandit to have given this precious gem in a Tamil garb. I am sure this book will appeal to a large circle of readers and will meet with full success.

Adyar Library,
30th April,
1949

C. KUNHAN RAJA

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

முகவுரை

*ஸ்ரீ தேவீ பஞ்சஸ்தவங்களில் முதலாவதாகிய இந்த லகுஸ்தவம் ஸ்ரீபாரதீ தேவியினுடைய அரும்பெரும் சக்திகளையும், பெருமைகளையும் விளக்குகின்ற ஒரு சிறு காவ்ய வடிவாயமைந்த ஸ்தவமாகும். இதைச் செய்தவர் ஸ்ரீ லகுபட்டாரகர். இவர் சிறந்த தேவீயுபாஸகர். காஷ்மீர தேசத்தவர். பத்தாவது நூற்றூண்டிலே காஷ்மீர தேசத்திலே தோன்றிய பல சைவ நூல்களிலும், சாக்த நூல்களிலும், இந்த ஸ்தவமானது பெரிதும் மேற்கோளாகக் கொள்ளப்படுவதைக் கொண்டு அதற்குச் சற்று முந்திய காலத்திலே தோன்றியிருத்தல் வேண்டுமெனத் தெரிய வருகிறது.

இக் கவியினுடைய இயற்பெயர் யாதென விளங்க வில்லை. மேற்கோளாகக் கொள்ளும் நூல்களிலே ஆசிரியருக்கு லகுபட்டாரகர் என்றும், தர்மாசார்யர் எனவும், ஸ்ரீகாளிதாஸ பகவத்பாதா: எனவும்; இந்நூலுக்கு, விம்சதிஸ்தவமென்றும் பாலாவிம்சதியெனவும் விளக்கம் கொடுக்கின்றனர். ஆகவே இவை இரண்டும் காரணப் பெயர் போலும். ஸ்ரீதேவீபஞ்சஸ்தவத்தைச் செய்தவர் ஸ்ரீமஹா காளிதாஸரெனவும் ஒரு வழக்குள்ளது. எனவே ஸ்ரீ காளிதாஸருக்கே லகுபட்டாரகர் எனவும் பெயர் இருக்கலாம். இந்த விமர்சனமானது சரித்திர ஆராய்ச்சி செய்யும் அறிஞர்களுக்கே உரியதாகும்.

இந்த ஸ்தவமானது அழகிய நடையும், ஆழ்ந்த கருத்தும், பெருகிய பொருள் விளக்கமும் கொண்ட சீரிய காவிய லக்ஷணங்களமைந்த சிறு (லகு) காவ்யமாகும். ஸ்ரீஸௌந்தர்யலஹரியைப் போலவே இந்நூலும் ஸ்ரீதிரிபுரஸுந்தரியினுடைய பெருமையை விளக்குவதோடு, ஒவ்வொரு ச்லோகமும் ஒவ்வொரு பலனைக் குறித்த உபாஸனையையும் விளக்குவதாகும்.

---

* ஸ்ரீ தேவீ பஞ்சஸ்தவங்களாவன: லகுஸ்தவம், சர்ச்சாஸ்தவம், கடஸ்தவம், அம்பாஸ்தவம், ஸகலஜநநீஸ்தவம் என்பன.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

மந்த்ரம், யந்த்ரம் முதலியவைகளின் விளக்கங்களும், முக்கியமாகத் தாந்த்ரிகர்களுக்கு (ஸ்ரீ தேவீயுபாஸர்களுக்கு) இன்றியமையாததும், அநுதினமும் அநுஷ்டானத்திலே கைக்கொள்ள வேண்டியதும், ஸ்ரீகுருபரம்பரையிலே வந்த உபதேசத்தோடு கூடியதுமான நாமபாராயணத்தினுடைய விளக்கமானது இந் நூலிலே சீரிய முறையிலே உபதேசிக்கப் பெறுவது ஒன்றே இந்த ஸ்தவத்தின் தனிப்பெருமையை விளங்கச் செய்வதற்குப் போதிய சான்ருகும். இந்த நூலேத்தவிர வேறெந்த நூலிலும் இந்த நாமபாராயணம் விளக்கப்படவில்லை யெனவும் தெரிய வருகிறது.

எனவே, இந்நூலுக்குள்ள அருமை பெருமைகளை அவரவர்களுடைய சித்தத்தின் பரிபக்குவத்திற்குகந்தவாறு அநுபவிக்க வியலுமே யல்லாது, ஒருவர் மற்றொருவருக்கு எடுத்துச் சொல்லுவதும் எளிதான காரியமல்ல. ஆயினும் இச்சிறந்த ஸ்தவத்தை நாள்தோறும் பாராயணம் செய்து வருவது நமது பாரத நாட்டிலே தோன்றிய ஆஸ்திகக் குடும்பத்தினரது சீரிய மரபாகும்.

பாராயணமென்பது தெய்வழிபாடுகளிலே ஒன்ருகும். இதை நாமபஜனம் எனவும் சொல்லலாம். அதாவது அகத்திலே உபாஸனைக்குக் குறிக்கோளாக் கொண்ட மூர்த்தியினுடைய அரும்பெரும் குணங்களை வாயாரப் புகழ்ந்து, ஒரு முகப்படுத்திய மனத்திலே, அச்சீரிய குணங்களை இடைவிடாது லயிக்கச் செய்து, தானும் உபாஸநா மூர்த்தியும் ஒன்றேயென அபேதமாகப் பாவனை செய்து வருவதே தான் நாமபாராயணத்தின் பொருளாகும்.

அதுவன்றி, கண்கள் ஒன்றைப் பார்க்க, மனம் ஒன்றை நினைக்க, கைகள் ஒன்றைச்செய்ய வாயால் எவ்வளவு தடவை நாமாக்களையுச்சரித்தாலும், ச்லோகங்களைச் சொன்னாலும் ஒரு விதப்பயனும் ஒருக்காலும் உண்டாகாது. ஒவ்வொரு நாமாவை

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

யும் நன்கு ஆராய்ந்தறிந்து பொருள் கொண்டு, அதனாலேற்பட்ட மனப்பண்புடன் உபாஸனை செய்து வருவதே சாலச்சிறந்ததாகும். இதுவே நமது ஆன்றோர் நமக்கு வகுத்தருளிய வழியுமாகும்.

சென்ற சிலதினங்களாக, இக்கருத்தைச் சிந்தையிலே கொண்டு ஆஸ்திக அன்பர்களுக்கும், அன்னைமார்களுக்கும், ஸஹோதரஸஹோதரிகளுக்கும், பயன் தரும் வழியிலே, பதவுரை, பொழிப்புரை, விரிவுரை முதலிய விளக்கங்களோடு எனது சிற்றறிவிற்கு எட்டியவரையில் வடமொழியிலுள்ள பல உரைகளையும் ஒப்புநோக்கிச் சுருக்கமாக ஓர் உரையையும் எழுதலானேன்.

இச்சிறந்த ஸ்தவத்திற்கு, ஸ்ரீபரமேச்வரர் என்றவர் ஆயிரம் ச்லோகம் கொண்டதோர் உரையொன்றும் செய்திருக்கிறார். அவரது உரைமுழுவதும் செய்யுள் வடிவாயமைந்தது. ஒவ்வொரு செய்யுளுக்கும் உரை வகுத்து ஒவ்வொரு செய்யுளையும் ஒவ்வொரு படலமாகக் கணக்குக் கொடுத்துள்ளார். மற்றும் ஸ்ரீஸிம்ஹராஜர், ஸ்ரீஸோமதிலகஸூரி, ஸ்ரீராகவாநந்தர், ஸ்ரீ மஹாகவி மகுடமணி, ஸ்ரீ ஸதாசிவர், ஸ்ரீ கச்சபேச்வரஸூரி (எனது குரு) முதலிய பல அறிஞர்கள் விரிவாக உரை செய்திருக்கின்றனர்.

இவர்கள் அனைவரும் ஸம்ப்ரதாய வழியிலே வந்த சிறந்த தேவீயுபாஸகர்களாவர். அத்துடன் சாஸ்த்ரபரிசீலனையிலும் கரை கண்டவர்கள். இவர்களுடைய உரைகளிலே ஆங்காங்கு பல ஸம்ப்ரதாய ரஹஸ்யார்த்தங்கள் விளக்கப்பெறுகின்றன. அவைகள் அனைத்தும் இங்கே தமிழிலே மொழிபெயர்க்கவொண்ணாததாகும். வடமொழியிலே நன்கு பரிசயமுள்ளவர்கள் அவைகளைப் படித்து ரஸிக்க முடியும். இங்கு எவ்வளவு தூரம் அவச்யமான பொருள் விளக்கம் கொடுக்க வேண்டுமோ

CC-0. Mahasakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

அவ்வளவு தூரம் அவச்யமானவைகளுக்குப் பொருள் விளக்கம் கொடுக்க முயற்சித்துள்ளேன்.

இக்காவியத்தைக் கண்ணுறும் ஆஸ்திக அன்பர்களும, அன்னைமார்களும், ஸஹோதரஸஹோதரிகளும் இதனை நன்கு படித்து ஸ்ரீத்ரிபுரஸுந்தரியினுடைய திருவருளைப் பெறவேண்டு மென்பதே எனது பேரவாகும். எனவே இந்நூலிலுள்ள குற்றங் களைக் களைந்து, குணங்களைக் கொண்டு நடு நோக்குடன் என்னைப் பயன் பெறச் செய்வதும் குணக்குன்றிலே யிலங்கும் கற்றறிந்த மாந்தர் கடனாகும்.

இந்நூலுக்கு நூன்முகம் கொடுத்து உதவிய பேராசிரியர் ஸ்ரீகுன்ஹன் ராஜா அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றி யைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இரண்டாவது பதிப்பு

சென்ற சில ஆண்டுகளுக்கு முன்பு ஸ்ரீ தேவீ பஞ்சஸ்தவங் களில் முதலாவது ஸ்வதமாகிய 'லகுஸ்துதி' தமிழுரை யோடு வெளிவந்தது. பல வாசகர்களுடைய வேண்டு கோளுக்கிணங்க எஞ்சியுள்ள நான்கு ஸ்தவங்களையும் ஒன்று திரட்டி 'தேவீ பஞ்சஸ்தவீ' என்ற தலைப்பில் பல விளக்கங்களு டன் இப்பொழுது வெளிவருகின்றது. வழக்கம் போல் அன்பர் களாம் வாசகர்கள் இவைகளைப் படித்துச் சுவைத்து அன்னை யின் திருவருட் பயனைப் பெற வேண்டுகிறேன்.

ஆசிரியன்

नमो वाङ्मनसातीतमहिम्ने परमेष्ठिने ।
त्रिगुणाष्टगुणानन्तगुणनिर्गुणमूर्तये ॥

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri


ஸ்ரீ தேவீ பஞ்சஸ்தவீ

லகுஸ்தவ: (1)

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

॥ श्रीचक्रम् ॥



विन्दुत्रिकोणवसुकोणदशारयुग्म-

मन्वश्रनागदलसंयुतषोडशारम् ।

वृत्तत्रयं च धरणीसदनत्रयं च

श्रीचक्रमेतदुदितं परदेवतायाः ॥

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

शिवाभ्यां नमः

श्रीमहाकविकालिदासविरचिता

(लघुभट्टारकः)

श्रीदेवीपञ्चस्तवी

(लघुस्तवः - १)

ஸ்ரீதேவீபஞ்சஸ்தவீ

(லகுஸ்தவ: — 1)

தோற்றுவாய்

லகுஸ்துதி யென்னும் இச்சிறந்த ஸ்தோத்திரத்தைச் செய்த ஸ்ரீலகுபட்டாரகர் ஸ்ரீதேவியினுடைய கருணைகடாக்ஷத்தால் ஜீவன்முக்தி பதவியையடைந்த ஒருசிறந்த மஹாநுபாவராவர். இவர், அஜ்ஞானத்தால் ஸம்ஸாரக் கடலில் மூழ்கிக் கரைசேர வழியறியாது பரிதவிக்கின்ற பாமர ஜனங்களைக் கண்டு மனங்கலங்கி, அவர்களும் தன்னைப் போலவே ஸ்ரீ தேவியின் அருளைப் பெறவேண்டுமெனக் கருதி, ஸ்ரீ தேவியினுடைய தத்துவ - விபூதி - விபவ - விசேஷங்களை பிரகாசிக்கச் செய்கின்ற இந்த ஸ்துதியை 'சார்தூல விக்ரீடிதம்' என்ற விருத்தத்திலே (யாப்பிலே) இருபத்தொன்று ச்லோகங்கள் கொண்டதாகச் செய்தருளினர்.

இந்த ஸ்துதியிலே முதல் ச்லோகத்தில், ஸ்ரீத்ரிபுராமந்த்ரத்தையும், த்ரிபுராதேவியின் ஸ்வரூபத்தையும், த்ரிபுராதேவியினுடைய உபாஸநாமார்க்கத்தையும், இரண்டாவது ச்லோகத்தில், மோக்ஷத்தின் பொருட்டு முதல் பீஜத்திலுள்ள சப்தப்ரபஞ்சபீஜமாகிய நாதத்தோடு கூடிய பிந்துவினுடைய உபா

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஸனையையும், குண்டலினீஸ்வரூபத்தையும் விரிவாகச் சொல்லுகிறார். மூன்று, நான்கு, ஐந்தாவது ச்லோகங்களிலே, முறையே முதல், இரண்டு, மூன்றாவது பீஜங்களுடைய உபாஸனைகளாலுண்டாகும் பலன்களையும்; ஆறாவது ச்லோகத்திலே, மந்த்ரஜபக்ரமத்தையும் விளக்குகிறார். இந்த ஆறு ச்லோகங்களும் பீஜாக்ஷரங்களை மாத்திரம் குறித்துச் சொல்லுவனவாம்.

ஏழு முதல் பதினோராவது ச்லோகம் வரையில் முன்பு கூறிய பீஜாக்ஷரங்களுடைய த்யாநத்திற்குரிய மூர்த்திகளைச் சொல்லுவதாகும். அதாவது, ஏழாவது ச்லோகம், கவிதா சக்தியைக் குறித்து ஸஹஸ்ராரகமலத்தில் சக்தி பீஜத்தையும்; மூலாதாரகமலத்திலே காமராஜ பீஜத்தையும்; ஹ்ருதயகமலத்திலே வாக்பவ பீஜத்தையும், "वामे" என்ற ச்லோகத்தில் சொல்லிய ஸகலமூர்த்தியுடன் அபேதமாக த்யாநம் செய்யவேண்டுமென்றும்; எட்டாவது, வாக்கின் வன்மைக்காக ஸஹஸ்ராரகமலத்திலே சக்திபீஜத்தை, "ये त्वाम्" என்ற ச்லோகத்தில் சொல்லிய த்யாநமூர்த்தியோடு அபேதமாகவும்; ஒன்பதாவது ச்லோகம், வச்யத்தின் பொருட்டு மூலாதாரகமலத்திலே காமராஜபீஜத்தை "ये सिन्दूर" என்ற ச்லோகத்திலே சொல்லிய மூர்த்தியோடு அபேதமாகவும்; பத்தாவது ச்லோகம், ஐச்வர்யத்தின் பொருட்டு ஹ்ருதய கமலத்திலே "चञ्चत्काञ्चन" என்ற ச்லோகத்தில் சொல்லிய மூர்த்தியோடு அபேதமாகவும்; பதினோராவது ச்லோகம், மோக்ஷத்தின் பொருட்டு ஸஹஸ்ராரகமலத்திலே காமராஜ பீஜத்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

திலுள்ள இரண்டாவதாகிய ககார லகாரங்களைத் தள்ளி எஞ்சிய காமகலாக்ஷரத்தை, "ஆங்ஸ்யா" என்ற ச்லோகத்திலே சொல்லிய மூர்த்தியோடு அபேதமாக த்யாநம் செய்ய வேண்டு மென்பதையும் கூறுவதாகும். பன்னிரண்டாவது ச்லோகம், ஸ்ரீதேவி யினுடைய உபாஸனையானது இஹலோக பரலோக ஸுகங்களை ஒன்ருகவே ஒரே ஸமயத்தில் கொடுக்க வல்லது என்பதை உபதேசிப்பதாகும்.

பதிமூன்ருவது ச்லோகம், ஸ்ரீதேவியை உபாஸனை செய்தாலன்றி சக்ரவர்த்தி பதவியை ஒரு பொழுதும் அடைய முடியாது என்பதையும்; பதினன்காவது ச்லோகம், ஸ்ரீ தேவியினுடைய உபாஸனையால் ஸகல கார்ய ஸித்திகளையும் பெறலாமென்றும், அக் காரியங்களைச் செய்யும் அதிகாரிகளையும், ஸ்தாநங்களையும் விவரிப்பதாகும். பதினைந்தாவது ச்லோகம், சப்தாதீதமா யிருக்கின்ற ஸ்ரீதேவியினுடைய பரரூபத்தையும்; பதினருவது ச்லோகம், அபரரூபத்தையும்; பதினேழாவது ச்லோகம், பலவகையான கார்யஸித்திகளுக்கு வேண்டிய ஸ்ரீதேவி யினுடைய நாம ரூபங்களையும்; பதினெட்டாவது ச்லோகம், மந்த்ர பாராயண க்ரமத்தையும்; பத்தொன்பதாவது ச்லோகம், நாமபாராயண க்ரமத்தையும்; இருபது, இருபத்தொன்ருவது ச்லோகங்களிரண்டும், பலச்ருதியின் விளக்கத்தோடு மந்த்ரோத்தாரத்தின் சிறப்புக்களையும் முறையே விளக்குவதாகும்.

நூல்—

(அவதாரிகை) ஸ்ரீ லகுபட்டாரகர் இவ்விதம் தானியற்றிய இச்சிறப்பு வாய்ந்த ஸ்துதியானது ஒருவித இடையூறுகளுமின்றி இனிது நிறைவேறுவதற்காக ஆசீர்வாத ரூபமான மங்களாசாஸனத்தை இந்த முதல் ச்லோகத்திலே செய்தருளுகிருர்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ऐन्द्रस्येव शरासनस्य दधती मध्येललाटं प्रभां
शौक्लीं कान्तिमनुष्णगोरिव शिरस्यातन्वती सर्वतः ।
एषासौ त्रिपुरा हृदि द्युतिरिवोष्णांशोः सदाहः स्थिता
छिन्द्याद् वः सहसा पदैस्त्रिभिरघं ज्योतिर्मयी वाङ्मयी ॥ १ ॥

मध्येललाटम् - நெற்றியினுடைய நடுவில்; ऐन्द्रस्य- இந்த்ர ஸம்பந்தமான; शरासनस्य - தநுஸினுடைய; इव - போல; प्रभाम् - காந்தியை; दधती - தரிக்கின்ற வளும்; शिरसि - சிரஸில்; अनुष्णगोः - சந்த்ரனுடைய; इव - போல; शौक्लीम् - வெண்மையான; कान्तिम् - காந்தியை; सर्वतः - எங்கும்; आतन्वती - பரவச்செய்கின்ற வளும்; हृदि - ஹ்ருதயத்தில்; अहः स्थिता-உதயத்தைய டைந்த; उष्णांशोः-ஸூர்யனுடைய; द्युतिः-சோபை; इव- போல; स्थिता - இருக்கின்றவளும்; ज्योतिर्मयी - (கேவலம்) ஒளியின் வடிவாகவும்; वाङ्मयी - (கேவலம்) சொற்களின் வடிவாகவும்; त्रिभिः - மூன்று; पदैः - பதங்களோடு கூடியவளுமான; एषा - இந்த; असौ - அந்த த்ரிபுரஸுந்தரீ; वः - உங்களுடைய; अघम् - பாபத்தை; सदा - எப்பொழுதும்; छिन्द्यात् - நாசம் செய்யட்டும்.

ஐந்த்ரஸ்யேவ சராஸநஸ்ய தததீ
மத்யே லலாடம் ப்ரபாம்
சௌக்லீம் காந்தி மநுஷ்ணகோரிவ
சிரஸ்யாதந்வதீ ஸர்வத: ।

CC-0. Arutsakthi Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஏஷாஸௌ த்ரிபுரா ஹ்ருதி த்யுதி-
ரிவோஷ்ணும்சோ: ஸதாஹ: ஸ்திதா
ச்சிந்த்யாத் வ: ஸஹஸாபதை-
ஸ்த்ரிபிரகம் ஜ்யோதிர்மயீ வாங்மயீ || 1 ||

இந்த்ர தநுஸைப் (வானவில்) போன்ற பல வர்ணங்களோடு கூடிய காந்தியை நெற்றியினுடைய நடுவிலும்; சந்த்ரனுடைய வெண்மையான காந்தியை சிரஸிலும்; பகலில் பிரகாசிக்கின்ற ஸூர்யனுடைய காந்தியை ஹ்ருதயத்திலும் தரித்துக் கொண்டு ஒளியின் வடிவாகவும்; ஒலியின் (சப்தங்கள்) வடிவாகவும்; மூன்று பதங்களினுல் அல்லது மூன்று ஸ்தானங்களினுல் குறிக்கப் படுகின்றவளுமான இந்த த்ரிபுரஸுந்தரீ உங்களுடைய பாபத்தை நாசம் செய்யட்டும்.

(விரிவுரை) நெற்றியினுடைய நடுவிலே (இரண்டு புருவங்களுக்கு மிடையில்) ஆஜ்ஞா சக்ரத்தில் இந்த்ர தநுஸைப் (மழை காலத்திலே ஆகாயத்தில் பல வர்ணங்களோடு தோன்றும் வானவில்) போன்ற காந்தியை 'ஐம்' என்ற உருவத்தோடும்; சிரஸில் (த்வாதசாந்த பத்மம்) சந்த்ரனைப் போன்ற வெண்மையான காந்தியை நான்கு பக்கங்களிலும் பரவச் செய்து "ஸௌ:" என்ற உருவத்தோடும்; ஹ்ருதயத்தில் (அநாஹதபத்மம்) உதய காலத்திலே தோன்றும் ஸூர்யனுடைய சிவந்த காந்தியை 'க்லீம்' என்ற உருவத்தோடும்; ஒளியின் வடிவாகவும், மூன்று ஸ்தானங்களின் வடிவாகவும், அல்லது மூன்று பீஜாக்ஷரங்களின் வடிவாகவும் இருந்து கொண்டு ஸ்ரீ த்ரிபுரஸுந்தரீ உங்களுடைய ஆணவம், மாயீ, கார்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

மம், என்ற மூன்று வகையான மலங்களும்,[1] எப்பொழுதும் மூன்று காலத்திலும்[2] உண்டாகாது வெகு விரைவில் நாசம் செய்யட்டும்.

இங்கே, உபாஸகர்களினால் ஆஜ்ஞாசக்ரத்தில் வெண்மை, சிவப்பு, கருப்பு, என்ற மூன்று வர்ணங்களோடு கூடிய ஒளியின் வடிவாகவும், ஸஹஸ்ரார கமலத்தில் வெளுப்பு வர்ணத்தோடு கூடிய ஒளியின் வடிவாகவும்; அநாஹத கமலத்தில் சிவப்பு வர்ணத்தோடு கூடிய ஒளியின் வடிவாகவும்; த்யாந த்ருஷ்டியோடு பார்க்கப்படுகின்றவளும், ஒலியின் வடிவாக மூன்று பீஜாக்ஷரங்களிலும் பரவியிருக்கின்றவளுமான இந்த ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரீ உங்களுடைய பாபத்தைத் தாமதியாது நாசம் செய்யட்டும் என்பது ச்லோகத்தின் ஸாரமாகும்.

இக்கருத்தையே ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாமமும்,

शिरस्थिता चन्द्रनिभा भालस्थेन्द्रधनुः प्रभा ।
हृदयस्था रविप्रख्या .... ।

சிர: ஸ்திதா சந்த்ரநிபா
பால ஸ்தேந்த்ரதநு: ப்ரபா ।
ஹ்ருதயஸ்தா ரவிப்ரக்யா.......... ॥

"சந்த்ரனைப் போன்ற வெண்மை நிறத்தோடு சிரஸிலிருப்பவளும்; வானவில்போன்ற பல வர்ணங்கள் தோய்

1. ஆணவமலமாவது-அபூர்ணமாயிருத்தல். கார்மமலமாவது—சுபமும் அசுபமுமான அநுஷ்டானம். மாயீமலமாவது - பின்னமான வேத்யங்களின் விளக்கம், அல்லது மாயை முதல் வித்யாதத்துவம் வரையிலுள்ள சட்டைகள்.

2. மூன்று காலங்கள்—சென்ற காலம், நிகழ்காலம், வருங்காலம்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ந்த நிறத்துடன் நெற்றியிலிருப்பவளும்; ஸூர்யனைப் போன்ற சிவந்த நிறத்தோடு ஹ்ருதயத்திலிருப்பவளும்" என வர்ணத்துள்ளது.

இங்கு சிரஸ், நெற்றி, ஹ்ருதயம், என்றது முறையே ஸஹஸ்ராரத்தையும், ஆஜ்ஞையையும், அநாஹதத்தையும் குறிப்பதாகும். இவ்விதமே ஸௌபாக்யஹ்ருதயத்திலும்;

योनौ कनकपुञ्जाभं हृदि विद्युच्छटोपमम् ।
आज्ञायां चन्द्रसंकाशं महस्तव महेश्वरि ॥

யோனௌ கநகபுஞ்ஜாபம்
ஹ்ருதி வித்யுச்சடோபமம் ।
ஆஜ்ஞாயாம் சந்த்ர ஸம்காசம்
மஹஸ்தவ மஹேச்வரி ॥

"ஹே மஹேச்வரி; நீ உன்னுடைய மூலாதாரத்தில் ஸுவர்ணத்தைப் போன்ற காந்தியையும்; அநாஹதத்தில் பலவர்ணங்களுடன் மின்னல் போன்ற காந்தியையும்; ஆஜ்ஞாசக்ரத்தில் சந்திர கிரணம் போன்ற வெண்மையான காந்தியையும் தரித்துக் கொண்டிருக்கிறாய்" என வர்ணித்திருப்பது போல உண்மையில் பாலாமந்த்ரத்திலுள்ள ஒளியானது மூலாதாரம் முதல் ப்ரஹ்மரந்த்ரம் வரையில் பரவி ப்ரகாசிக்கின்ற குண்டலிநீ சக்தியைத்தான் குறிப்பதாகும்.

அது எவ்விதமெனில், "பிரளயகாலத்தில் தோன்றும் அக்நியைப் போன்ற காந்தியானது முதலில் மூலாதாரத்திலிருந்து அநாஹதத்தைத் (ஹ்ருதயத்தை) தொடுகிறது. இதுவே முதலாவது கூடமாகும். கோடிஸூர்ய

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ப்ரகாசம் போன்ற மற்றொரு காந்தியானது அநாஹதத்திலிருந்து ஆஜ்ஞை (புருவத்தின் நடுவு) வரையில் சென்று தொடுகிறது. இதுவே இரண்டாவது கூடமாகும். சந்திரனைப் போன்ற ஒளிமிகுந்த மற்றொரு காந்தியானது ஆஜ்ஞை முதல் நெற்றி வரையில் வியாபித்திருக்கின்றது. இதுவே மூன்றாவது கூடமாகும்.'' இதுவே ஸ்ரீவித்யையினுடைய மந்த்ர ரூபமான த்யாநமாகும். ஆகவே பாலாமந்த்ர ரூபமான தேஜஸுக்கும், குண்டலிநீ சக்திக்கும் வித்யாஸமில்லை யென்பதும் ரஹஸ்யார்த்தமாகும்.

மற்றும், பாலாபீஜத்தில் முதல் அக்ஷரமாகிய வாக்பவ பீஜமும்; ஸ்ரீவித்யையினுடைய முதல் ஐந்து அக்ஷரங்கள் கொண்ட வாக்பவகூடமும்; பாலஸூர்யனைப் போன்ற காந்தியோடு மூலாதாரம் முதல் அநாஹதம் வரையிலும்; பாலாதேவியினுடைய இரண்டாவது அக்ஷரமாகிய காமராஜ பீஜமும், ஸ்ரீவித்யையினுடைய அடுத்த ஆறு அக்ஷரங்கள் அடங்கிய காமராஜகூடமும்; பலவர்ணங்களோடு அநாஹதம் முதல் ஆஜ்ஞை வரையிலும்; பாலாதேவியினுடைய மூன்றாவது அக்ஷரமாகிய சக்திபீஜமும், ஸ்ரீவித்யையினுடைய எஞ்சிய நான்கு அக்ஷரங்கள் கொண்ட சக்தி கூடமும்; பூர்ணசந்த்ர ப்ரகாசத்தோடு ஆஜ்ஞை முதல் ஸஹஸ்ராரம் வரையிலும் பரவியிருக்கின்றன என்பது உண்மையான கருத்தாகும். இவ்விதம் பீஜம், கூடம், நாதம் என்ற மூன்றுக்கும், மேலேயுள்ள தேஜஸுக்கும், வேற்றுமையில்லை யென்பதும் கிடைக்கின்றது.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ज्योतिर्मयी - (ஒளியின் வடிவு) என்றதால் இந்த்ர தநுஸையும், சந்த்ரஸூர்யர்களையும் போன்ற காந்தியோடு கூடிய ஜ்யோதிஸ்வரூபமாயுள்ளவள் என்றும்; **वाङ्मयी** - (ஒளியின் வடிவு) என்றதால் ऐ (ஐம்) முதலான பீஜாக்ஷரங்களுடைய ஸ்வரூபமாயுள்ளவள் என்றும் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. இவ்விடத்தில் ஜ்யோதிர்மயீ சப்தமானது உண்மையில் அநாவ்ருத (மறைக்கப்படாத) ஆத்மஸ்வரூபத்தின் ஒளியாகவும், ஸ்வயம்ப்ரகாசவடிவாகவும், ஸர்வப்ரபஞ்ச வடிவாகவும், பரப்ரஹ்ம வடிவாகவுமிருக்கின்ற ஸ்ரீபரமேச்வரனுடைய ஸ்வபாவ (இயற்கை) வடிவமான (அஹங்கார ரூபிணீயான) இவ்விதம், அவ்விதம், என்று நிர்ணயம் செய்ய முடியாத நிலையிலேயிருக்கின்ற அஹம் (நான்) என்ற விமர்ச சக்தியைத்தான் குறிப்பதாகும்.

வரிவஸ்யாரஹஸ்யத்திலும் இந்த விமர்சசக்தியைப் பின் வருமாறு வர்ணித்துள்ளது.

प्रलयाग्निनिभं प्रथमं मूलधारादनाहतं स्पृशति ।
तस्मादाज्ञाचक्रं द्वितीयकूटं तु कोटिसूर्याभम् ॥
तस्माल्ललाटमध्यं तार्तीयं कोटिचन्द्राभम् ।
नैसर्गिकी स्फुरत्ता विमर्शरूपास्य वर्तते शक्तिः ।
तद्योगादेव शिवो जगदुत्पादयति पाति संहरति ॥

ப்ரளயாக்நி நிபம் ப்ரதமம்
மூலாதாராதநாஹதம் ஸ்ப்ருசதி ।

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

தஸ்மாதாஜ்ஞாசக்ரம்
த்விதீயகூடம் து கோடி ஸூர்யாபம் ||
தஸ்மால்லலாட மத்யம்
தார்த்தீயம் கோடி சந்த்ராபம் |
நைஸர்கிகீ ஸ்புரத்தா
விமர்சரூபாஸ்ய வர்ததே சக்தி: |
தத்யோகதேவ சிவோ
ஜகதுத்பாதயதி பாதி ஸம்ஹரதி ||

"ஊழிக்காலத்திலே தோன்றுகின்ற அக்கியை நிகர்த்த காந்தியானது, முதலில் மூலாதாரத்திலிருந்து அநாஹததத்தைத் தொடுகிறது. அதிலிருந்து கோடி ஸூர்யப்ரகாசமாயுள்ள இரண்டாவது கூடமான ஆஜ்ஞையையும், அந்த ஆஜ்ஞையிலிருந்து கோடி சந்த்ர ப்ரகாசமாயுள்ள மூன்றுவதான லலாடத்தின் நடுவையும் தொடுகிறது. அந்த மஹாப்ரகாசத்திற்கு சிவமென்னும் பரப்ரஹ்மத்திற்கு - இயற்கையாகவே - சலிக்கின்றதாயும், (स्फुरण - அசைவது, நகர்வது) ப்ரகாசவடிவாகவுமுள்ள ஒருவிதசக்தியின் தன்மையுண்டு. அந்த சக்தியோடு சேர்ந்த காரணத்தாலே அந்த மஹாப்ரகாசம்-ஒளிப்பிழம்பு-உலகத்தின் ஸ்ருஷ்டி; (ஆக்கல்) ஸ்திதி; (காத்தல்) ஸம்ஹாரம்; (அழித்தல்) திரோதாநம்; (மறைத்தல்) அநுக்ரஹம் (அளித்தல்) என்ற ஐந்து தொழில்களையும் நடத்தி வருகின்றது." என்பதாகும்.

இங்கு, (नैसर्गिकी 'ஸ்வபாவம்') என்றதால் சந்த்ரிகையும்; மலரும் மணமும்; சர்க்கரையும் மதுர சந்த்ரனும்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

மும் போல அந்தப்ரகாச சக்திகள் இரண்டும் ஒன்றேடொன்று வேறுபடாதவை என்பதும் கருத்தாகும்.

वाङ्मयी—(ஒலியின் வடிவு) என்ற சப்தமானது அந்த விமர்ச சக்தியினுடைய வாசகமாக வியாபித்து (பரவி) (பூரணமான அஹம் என்ற) அகாரம் முதல் ஹகாரம் வரையிலுள்ள ஸமஸ்தவேதபீஜங்களுக்கும் காரணமாயிருந்து கொண்டு (**अहम्**) நான் என்ற வாசகத்தைக் குறிப்பதாகும். (**एषा** - இந்த) என்றதால் த்வைதப்ரபஞ்சத்தோடு கூட யாவராலும் உபாஸிக்கப் பெறுகின்றவளென்றும்; (**असौ**-அந்த) என்றதால் ஞானிகளால் மாத்திரம் உபாஸிக்கத் தக்க அகண்டாகார ஸம்வித்ரூபிணீ (எங்கும் நிறைந்த சைதன்ய) எனவும் தாத்பர்யமாகும். (**अघम्**- பாபம்) என்ற சப்தமானது ஆத்மதத்துவத்தினுடைய அஜ்ஞான நிமித்தமாகத் தங்களால் ஆரோபிக்கப் பெற்ற புண்ய பாபங்களைக் குறிப்பதாகும். **त्रिपुरा** - மூன்று புரம்) என்றதால் தேஜஸ், (நெருப்பு) அப்பு, (ஜலம்), அன்னம், (ஸுதை) போன்ற மூன்று உலகங்கள், மூன்று மூர்த்திகள், மூன்று சக்திகள், முதலியவைகளான த்ரிபுடிகளுக்கும் முன்னேயுள்ளவள் எனவும் தாத்பர்யமாகும்.

மற்றும் இந்த ச்லோகத்திலே அடங்கியுள்ள மந்த்ரோத்தாரமும் சொல்லப்பெறுகிறது. அது வருமாறு— முதல் இரண்டு பாதங்களில் பாலாமந்த்ரத்தினுடைய முதல் இரண்டு அக்ஷரங்களையும்; மூன்று

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

வது பாதத்தில் விஸர்கத்தோடு சேர்ந்த மூன்ருவது அக்ஷரத்தையும்; (सर्वतः-எங்கும்) என்றதால் மூன்ருவது அக்ஷரத்தினுடைய கடைசியிலுள்ள விஸர்கத்தையும் சேர்த்து ऐं - क्लीं - सौः எனக்கொள்ள வேண்டும். मन्त्रोद्धारविधिर्विशेषसहितः - மந்த்ரோத்தாரவிதிர் விசேஷஸஹித: — மந்த்ரோத்தாரவிதியானது விசேஷத்தோடு கூடியது என்று இருபதாவது ச்லோகத்தில் சொல்லியிருப்பது கொண்டு இந்த ச்லோகத்தில் மந்த்ரவிசேஷங்களும் உத்தாரம் செய்யப் பெற்றுள்ளது.

அது எவ்விதமெனில்—ऐं-ई-औ; ऐं-ई-औ; ऐं-ई औ என்னுமிவைகள் சுத்தபேதங்களாகும். सर्वतः हस्थिता—மூன்று பீஜாக்ஷரங்களிலும் ஹகாரத்தோடு இருப்பவள் என்று கிடைப்பதால், ह्रैं; ह्क्लीं; हसौं; என்ற த்ரிபுரவாஸிநீ மந்த்ரத்தையும்; सहसा—ஹகார ஸகாரங்களோடு கூடியிருப்பவள் என்று கிடைப்பதால், हस्क्लीं; हसौं; என்ற த்ரிபுரா ஸ்ரீ மந்த்ரத்தையும்; सहसा सदाहः स्थिता என்றதால், (सदाहः அக்நிபீஜமாகிய ரகாரம்,) हस्रैं-हस्क्लरीं-हस्रौः என்ற த்ரிபுராம்பா மந்த்ரத்தையும்; सर्वतः सहसा सदाहः स्थिता क्लीं कान्तिम् आतन्वती-என்றதால் हस्क्रैं- हस्क्लरीं हस्कस्रौः என்று ஐந்து கூடாக்ஷரங்களாலாகிய ஸ்ரீத்ரிபுராஸித்தா மந்த்ரத்தையும்; अनुष्णगोः शिरसि-என்றதால் சந்த்ர பீஜமாகிய ठ காரத்தினுடைய சிரோபாகத்தின் -மேலேயுள்ள-ङ காரமென்று கிடைப்பதால் हस्कलरडैं, हसकलरडीं, हसकलरडौः,

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

என்று த்வாதசார்த (ஆறு) கூடாக்ஷரங்களாலாகிய த்ரிபுராம்பிகா மந்த்ரத்தையும் உத்தாரம் செய்துள்ளது.

பாலாபீஜாக்ஷரங்களில் இது போலவே அனேக மந்த்ரங்கள் அடங்கியிருக்கின்றன. மற்றும் அகாரத்தோடு கூட இகாரம் சேரும்பொழுது (तव+इति—तवेति) என்று (ए) ஏகாரமாகவும்; அகாரத்தோடு ஏகாரம் சேரும்பொழுது (तव+एतत्—तवैतम्) என (ऐ) ஐகாரமாகவும் திரியும். இவைகள் ஹ்ரஸ்வத்வத்திலும், (குறில்) தீர்க்கத்திலும் (நெடில்) உண்டாகுமென்று வடமொழி வியாகரணத்தை யநுஸரித்துச் சொல்லப்பெறுவதாகும். अ-आ-इ-ई-ए-ऐ என்ற ஆறு ஸ்வரங்கள் (உயிரெழுத்துக்கள்) முதல் பீஜத்திலும்; அகாரத்தோடு உகாரம் சேரும்பொழுது (गङ्गा+उदकम्—गङ्गोदकम्) என (ओ) ஓகாரமாகவும்; அகாரத்தோடு ஓகாரம் சேரும் பொழுது तव+ओषधिः—तवौषधिः) என (औ) ஔகார மாவும் திரியும். இந்த நியாயத்தை யநுஸரித்து, उ-ऊ-ओ-औ— என்ற நான்கு ஸ்வரங்களும், விஸர்க்கமும் கடைசிபீஜத்திலும் சேர்திருக்கின்றன. (क्लीं) க்லீங்காரத்தில் ககார இகாரங்களைக் கொண்டு ககாரம் முதல் இகாரம் வரையிலுள்ள அக்ஷரங்களை ஸங்க்ரஹம் (சுருக்கம்) செய்தால் அவைகளும் ரகாரலகாரங்களுடைய ரூபாந்தரமான (வேறு வடிவும்) ऋ-ऌ என்ற ஸ்வரங்களும் மத்ய பீஜத்தினுள்ளே அடங்கியிருப்பது புலனாகும்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

இதுவேயன்றி, अहः स्थिता என்ற பதத்திலிருந்து (अ) அகாரம் முதல் (ह) ஹகாரம் வரையிலுள்ள அக்ஷரங்களும் குறிக்கப்பெறுகின்றதெனச் சொல்ல முடியும். இவ்விதம் இங்கே மாத்ருகாக்ஷரங்களை யெல்லாம் உத்தாரம் (தோற்றம்) செய்திருப்பது கொண்டு, இந்த மந்த்ரம் ஸர்வமந்த்ரதந்த்ரவேத சாஸ்த்ர இதிஹாஸ புராணங்களுடைய ஸாரமாக வுள்ளது என்பதும் கிடைக்கப்பெறுகின்றது.

இனி மூன்றாவது பீஜாக்ஷரத்திலே, सु-औ-जस्- என்ற முதல் விபக்தியின் (விகுதி) உருவமானது விளக்குவது கொண்டு மற்ற ஆறு விபக்திகளும், (स) ஸகார (औ) ஔகாரங்களைக் கொண்டு முப்பத் தைந்து தத்துவங்களும்; தானாகவே சக்தி பீஜமா யிருப்பது கொண்டு, ஐந்துவித சக்திகளுடைய வடிவான சித் - ஆநந்த - இச்சா - ஞாந - க்ரியா என்ற சக்திகளுடைய தத்துவங்களும்; மேலும் கீழுமாக பிந்துவின் வடிவாயமைந்த விஸர்க்கத்தைக் கொண்டு, ஸமஸ்ததத்துவங்களுடைய ஆவிர்பாவ (உத்பத்தி) திரோபவங் (மறைவு) களுக்கு இருப்பிட மாகிய ஸ்ரீபரமசிவபராபட்டாரிகையாயிருக்கின்ற ப்ரதாந (முக்யம்) தத்துவமும் அடங்கியிருக்கின்றது. இக்கருத்தையே;

यथा न्यग्रोधबीजस्थशक्तिरूपो महान् द्रुमः ।
तथा हृदयबीजस्थं जगदेतच्चराचरम् ॥

யதா ந்யக்ரோத பீஜஸ்த-
சக்திரூபோ மஹாந் த்ருமः ।

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ததா ஹ்ருதய பீஜஸ்தம்
ஜகதேதச் சராசரம் ॥

" எவ்விதம் பெரிய ஆலமரத்தினுடைய சிறிய வித்தினுள்ளே வித்தின் சக்திவடிவான பெரிய விருக்ஷம் அடங்கியுள்ளதோ, அவ்விமே ஹ்ருதய பீஜத்தினுள்ளே அதனுடைய சக்தியின் தோற்றமாகிய இச்சராசரங்களும் அடங்கியிருக்கின்றன " என்பதும் திரண்டஸார மாரும். (1)

(அவதரரிகை) இவ்விதம் முதல் ச்லோகத்திலே ஸ்ரீத்ரிபுரா மந்த்ரத்தையும், அதனுடைய தேவதையையும்' அந்த தேவதையை உபாஸிக்க வேண்டிய ஸ்தாநங்களையும் (இருப்பிடங்களையும்) பொதுவாகச் சொல்லி, அவைகளுடைய விசேஷங்களை விளக்கக் கருதி, நாத-பிந்து-பீஜ-பேதத்தால் மூன்று வகையாயிருக்கின்றதும், முதல் பீஜத்திலே நிஷ்கலம், ஸகலம், நிஷ்கலஸகலம், என மூன்று வகையாகப் பிரிந்திருக்கிற தேவதைகளுடைய பெருமையும் அடுத்துவரும் இரண்டு ச்லோகங்களிலே விளக்கப்பெறுகின்றன—

या मात्रा त्रपुसीलतातनुलसत्तन्तुस्थितिस्पर्धिनी
वाग्बीजे प्रथमे स्थिता तव सदा तां मन्महे ते वयम् ।
शक्तिः कुण्डलिनीति विश्वजननव्यापारबद्धोद्यमां
ज्ञात्वेत्थं न पुनः स्पृशन्ति जननीगर्भेऽर्भकत्वं नराः ॥ २ ॥

(பதவுரை) हे देवि-ஒளிமிகுந்தவளே ; அன்னய்! तव - உன்னுடைய ; प्रथमे-முதலாவதாகிய ; वाग्बीजे - வாக்பவபீஜத்தில் ; त्रपुसी-लता-तनु-लसत्-स्थिति-तन्तु-

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

स्पर्धिनी-வெள்ளரிக்கொடியின் நுனியில் மெல்லியதாகப் பிரகாசிக்கின்ற நூல் போன்ற இளங்கொடியின் இருப்பை வெல்லுகின்ற; या-யாதொரு; मात्रा-கலையானது; (சைதன்யத்தின் ஒரு அம்சம்) स्थिता - இருக்கின்றதோ; विश्व-जनन-व्यापार - बद्ध-उद्यमाम् - உலகத்தினுடைய ஸ்ருஷ்டித் தொழிலைச் செய்வதற்கு எடுத்த முயற்சியையுடையதான; ताम् - அக்கலையை; कुण्डलिनी - शक्तिः- इति - குண்டலிநீ சக்தி என்று; सदा-எப்பொழுதும்; ते-உன்னுடைய; वयम्-(பக்தர்களாகிய) நாங்கள்; मन्महे - நினைக்கின்றோம்; नराः-மனிதர்கள்; इत्थम् - இவ்விதம்; ज्ञात्वा - உணர்ந்து (கொண்டால்) जननी-गर्भे - அன்னையின் கருப்பையில்; पुनः-மறுபடியும்; अर्भकत्वम् - குழந்தையாயிருக்கும் தன்மையை; न-स्पृशन्ति - அடையமாட்டார்கள்.

யா மாத்ரா த்புரஸீலாதருலஸத்
 தந்துஸ்திதி ஸ்பர்திநீ
வாக்பீஜே ப்ரதமே ஸ்திதா தவ ஸதா
 தாம் மந்மஹே தே வயம் ।
சக்தி: குண்டலிநீதி விச்வஜநந
 வ்யாபாரபத்தோத்யமாம்:
ஜ்ஞாத்வேத்தம் ந புந: ஸ்பருசந்தி
 ஜநநீகர்பேऽர்பகத்வம் நரா: ॥ (2)

(பொழிப்புரை) ஓ மஹாதேவி! உன்னுடைய திருமேனியினுடைய மூன்று பீஜங்களில் முதலாவதான வாக்பவபீஜத்தில் (ऐं-ஐம் என்ற அக்ஷரத்தில்) வெள்ளரிக் கொடியின் நுனியில் நூல் போல விளங்குகின்ற மெல்லியதும், மிருதுவானதுமான இளங்கொடியைப்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

பழிக்கின்ற யாதொரு கலையின் அம்சமிருக்கின்றதோ, அக்கலையை, ப்ரபஞ்சத்தை நிர்மாணம் செய்யும் முயற்சியிலே ஈடுபட்டிருக்கின்ற குண்டலிநீ சக்தியென உனது பக்தர்களாகிய நாங்கள் எப்பொழுதும் நினைக்கின்றோம். இவ்விதமே மற்ற மக்களும் அறிந்துகொண்டால் பிறவிக் கடலைக் கடக்கக் காரணமாக இருக்குமல்லவா ?

(விரிவுரை) ஸ்ரீத்ரிபுரஸுந்தரியினுடைய திருமேனியின் பீஜங்களிலே முதன்மையானதும், வெள்ளரிக் கொடியின் நுனியில் கொஞ்சம் நீண்டு சுருண்டு பல வளைவுகளோடு கூட நூல் போன்று மெல்லியதாயும், வெண்ணிறத்தோடு மிருதுவாயும். யோகிகளுக்கே அநுபவத்தில் காணக்கூடியதாயும், குண்டலிநீ சக்தியெனச் சொல்லப் பெறுவதும், நாதத்தோடு கூடிய பிந்துவின் வடிவாயும் அமைந்த யாதொரு கலையின் அம்சமானது, சப்தப்ரபஞ்சத்திற்குக் காரணமாயுள்ளதோ, அக்கலாசக்தியை மற்றவர்களும் உண்மையிலுணர்ந்துகொண்டால் பிறவிக் கடலைக் கடந்து ஜீவன் முக்தி பெறக்கூடு மென்பதும் கருத்தாகும்.

அழிவற்று என்றும் நிலைத்திருக்கின்ற மோக்ஷஸாதநத்தை உபதேசம் செய்யும் இச்செய்யுளிலே ஸ்ரீதேவியினுடைய முதல் பீஜத்திலுள்ள சப்தப்ரசஞ்ச வடிவமான நாதத்தோடு கூடிய பிந்துவின் உபாஸனை சொல்லப் பெறுகின்றது என்பது ஸாரமாகும்.

இங்கே ; தேவி (देवि) என்ற பதத்தை அடுத்த செய்யுளிலிருந்து வருவித்துக் கொள்ளவேண்டும். தேவி என்னும் பதத்திற்கு, பிரப்பஞ்சத்தினுடைய ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதாநம், அநுக்-

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ரஹமென்னும் ஐந்து தொழில்களையும் தன்னிடத்திலே நிலைக்கப் பெற்று, தானே அவைகளை இயங்கச் செய்பவள் என்ற பொருளாகும். மற்றும் 'திவ்' (दिवु) என்ற வினைச்சொல்லுக்குப் பல பொருள்கள் இருந்தாலும், க்ரீடா (क्रीडा-விளையாடுதல்) என்ற பொருளில் இங்கே வழங்கியிருக்கின்றதெனக் கொள்ளவேண்டும்.

முதல் ச்லோகத்தில் சொல்லிய மூன்று பீஜாக்ஷரங்களில் முதலாவதாகிய ஐம் (ऐं) என்பதில் ஐகாரம் பிந்து என இரண்டு பிரிவுகளுண்டு. அதில் ஐகாரமானது, 'அ-எ' (अ-ए) என்பவற்றின் இணைப் பேயாகும். 'அ' என்பது மூலாதாரத்தோடு சேர்ந்த ஆதார சக்தியையும், 'எ' என்பது 'அ. ஆ.' என இரண்டு அவயவத்தோடும், 'ஈ' என்பது 'இ. ஈ. ஈ.' என மூன்று அவயவத்தோடும் கூடியதாகச் செய்ய வேண்டும்.

இவைகளில், அ. ஆ. இ. ஈ. என்ற நான்கும் மூலாதாரத்தினுடைய தளங்களாகவும் எஞ்சிய ஈகாரத்தை த்ரிகோணமாகவும், அநுஸ்வாரத்தை மூலாதார த்ரிகோணங்களுடைய ஒற்றுமையைச்-சேர்க்கையை-குறிப்பதாகவும் கொண்டால் வாக்பவபீஜத்திற்கு மூலாதாரத்திலுள்ள நான்கு தளங்களோடு கூடிய கமலத்தின் நடுவேயுள்ள த்ரிகோணமெனப் பொருள் கிடைப்பதாகும்.

இக்கருத்தையே,

आधारकमलं तत्र चतुर्भिः सहितं दलैः ।
तस्य मध्ये महाभागे योनिः सिद्धनमस्कृते ।
तस्यामेव्यत्यभिव्यक्तिमत्तयो महेश्वरि ।

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஆதாரகமலம் தத்ர
சதுர்பி: ஸஹிதம் தளை: ।
தஸ்ய மத்யே மஹாபாகே
யோநி: ஸித்தநமஸ்க்ருதே ।
தஸ்யாமேஷ்யத்ய பிவ்யக்தி-
மந்தர்யாகே மஹேச்வரி ॥

"ஸித்தர்களால் வணங்கப்பெறுகின்ற ஹே புநிதே ஹே மஹேச்வரி! அவ்விடத்தில் நான்கு தளங்களுடன் கூடியது மூலாதாரகமலம். அதனுடைய நடுவே இருப்பது த்ரிகோணம். அந்தர்யாகத்திலே (ஸமாதிநிஷ்டை) அக் கமலத்தினிடத்தில் அபிவ்யக்தியை (பிரகாசம்) யடையக்கூடும்?' எனப் பவநஸம்ஹிதையிலும்;

आस्ति कुण्डलिनी नाम शक्तिराधारपङ्कजे ।
कर्णिकामध्यभागस्थे त्रिकोणे सर्वसिद्धिदा ॥

அஸ்தி குண்டலிநீ நாம
சக்திராதாரபங்கஜே ।
கர்ணிகாமத்ய பாகஸ்தே
த்ரிகோணே ஸர்வஸித்திதா ॥

"மூலாதார கமலத்தின் கர்ணிகையுடைய நடுவி லிருக்கின்ற த்ரிகோணத்தில் ஸர்வஸித்திகளையுமளிக்க வல்ல குண்டலிநீ என்ற பெயரோடு கூடிய சக்தி யுள்ளது" எனச் சைவாகமரஹஸ்யத்திலும் வர்ணித் துள்ளது.

'மாத்ரா' (मात्रा) என்ற பதத்திற்கு நாதத்தோடு கூடிய பிந்துவின் வடிவமான கலையெனப் பொருள் கொள்ள வேண்டும். இவ்விதம் பரா (परा) வடிவா

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

யிருக்கின்ற கலையேதான், பச்யந்தீ (पश्यन्ती) என்பது மாகும். முதல் பீஜத்திலுள்ள கலையானது பச்யந்தீ என அறியத்தக்கதாகும். இக் கலையே தான் ஸமஸ்தவாங்மயங்களும் (சப்தங்களின் வடிவாயுள்ள ஸநாதனமாயுள்ள (பழமை) காரணமாயிருப்பது" எனவும் வர்ணித்துள்ளது.*

कला प्रथमवीजस्था पश्यन्तीत्यवधारय ।
इयमेव पराशक्तिर्वाचोयोनिः सनातनी ॥

கலா ப்ரதம பீஜஸ்தா
பச்யந்தீத்ய வதாரய ।
இயமேவ பராசக்திர்
வாசோயோநி: ஸநாதநீ ॥

---

*பாரா, பச்யந்தி, மத்யமா, வைகரி என வாக்குகள் நான்கு. அவைகளில் பரா என்பது வேறு அபேக்ஷயின்றி நான் என்ற நினைப்பின் நிறைவான பராசக்தி அல்லது பரமாநந்த வடிவாய மைந்த ஸ்வதந்த்ர சக்தியாகும்:

பச்யந்தீ என்பது எங்கே வாச்யவாசகமானது வரிசையாகத தோன்றுது பிரிவானது தெளிவுற்று இருக்கின்றதோ அவ்விடம் பராசக்தி சித்தின் முக்யத்தால் காணப்பெறுபவள்.

மத்யமா என்பது வாச்யவாசகத்தின் வரிசைகள் பிரிந்திருந்தாலும், தெளிவுற்றும் தெளிவற்றதுமாயிருந்து கொண்டு புத்திக்கு மாத்திரம் விளக்கமாயுள்ளதாம். இது பராசக்தினுனுடைய பார்வையின் (தோற்றம்) முக்யத்தால் த்ருஷ்ட்ரு த்ருச்யத்திற்கு நடுவேயிருக்கும் தன்மையாகும்.

வைகரீ என்பது சிரவணேந்த்ரியத்திற்கு புலப்படுவதும், யாவராலும் பேசப்படுவதுமாம்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

विश्व-जनन-व्यापार-वद्भुद्यमाम् — பிரபஞ்சஸ்ருஷ்டி க்ரியை என்பதை சப்தப்ரஹ்மத்தோடு கூடச் சொல்லுவதாக இருந்தால் அகாரம் முதலிய அக்ஷரங்களுடைய உத்பத்திக்கும் காரணமெனக் கிடைக்கின்றது. ஆகவே முதல் பீஜமான (ऐ) ஐகாரத்திற்கு வாக்பவம் என்ற பெயரும், இதையே கலாரூபமான குண்டலிநீ சக்தி யெனவும் சொல்லப்பெறுகிறது.

एषा कुण्डलिनीशक्तिः पश्यन्ती कैश्चिदुच्यते ।

ஏஷா குண்டலிநீ சக்தி:
பச்யந்தீ கைஶ்சிதுச்யதே ।

"இந்த குண்டலிநீ சக்தியானது வேறு சிலரால் 'பச்யந்தீ' எனவும் சொல்லப்பெறுகின்றது." எனச் சைவாகம ரஹஸ்யம் கூறும்.

(ते-वयम्) 'தே-வயம்' என்றதால் உன்னுடைய பக்தர்களல்லாத மற்றவர்கள் இக்கலையின் வடிவாயுள்ள உனது ஸ்வரூபத்தைக் காணமுடியாது எனவும் கிடைக்கின்றது. (ज्ञात्वा-इत्थम्) 'ஞாத்வா - இத்தம்'—இவ்விதமறிந்து' என்றதால் குண்டலிநீ சக்தியின் உபாஸனையினுடைய அநுபவஸம்ப்ரதாயத்தை வாக்கினல் மாத்திரம் சொல்லப் பெற்றபொழுதிலும், முன்பு கூறிய கலையை, பரா-பச்யந்தீ முதலிய தேவதைகளுடைய வடிவாக ஐம்பது அக்ஷரங்களிலும் பரவி நின்று, அவைகளுடைய உத்பத்திக்கும் காரணமாகவுள்ள குண்டலிநீ சக்தியெனத் தன்னோடு அபேதமாகப் பாவித்து, நன்ருக உபாஸனை செய்து ஸித்தியடைந்த ஒருவன் மறுபடியும் தாயின் கர்பவாஸ

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

மென்னும் பிறவித்துன்பத்தை யொழித்து அழிவற்ற ஜீவன் முக்தி நிலையை யடைகின்றான் என்பதும் இந்தச் செய்யுளின் திரண்ட பொருளாகும். (2)

(அவதாரிகை) இரண்டாவது செய்யுளில் வாக்பவ பீஜத்தினுடைய சிறப்பானது கூறப்பெற்றது. மறுபடியும் அந்த வாக்பவபீஜத்தையே, ஸத்யவ்ரதன் என்னும் பக்தனுடைய கதையின் வாயிலாக இச்செய்யுளில் சிறப்பாகச் சொல்லப்பெறுகின்றது—

दृष्ट्वा संभ्रमकारि वस्तु सहसा ऐ ऐ इति व्याहृतं
येनाकूतवशादपीह वरदे बिन्दुं विनाप्यक्षरम् ।
तस्यापि ध्रुवमेव देवि तरसा जाते तवानुग्रहे
वाचः सूक्तिसुधारसद्रवमुचो निर्यान्ति वक्त्रोदरात् ॥ ३ ॥

(பதவுரை) हे वरदे - வரத்தைக் கொடுப்பவளே! इह - இவ்வுலகில்; येन - எவனொருவனால்; सहसा - சீக்கிரமாக; संभ्रमकारि - பரபரப்பை யுண்டாக்கக் கூடிய; वस्तु - பொருளை; दृष्ट्वा - பார்த்து; आकूतवशात् - அபிப்பிராயத்தின் காரணமாக; ऐऐ - ஐஐ; इति - என்ற; अक्षरम् - அக்ஷரமானது; बिन्दुम् - பிந்துவை- அநுஸ்வாரத்தை; विना - விட்டதாக; व्याहृतम् - अपि - உச்சரித்த பொழுதிலும்; हे देवि! ஓ தாயே! तस्य-अपि - அவனுக்கும்; तव - உன்னுடைய; अनुग्रहे; அநுக்ரஹமானது; जाते - உண்டாகும் பொழுது; सूक्ति - सुधा - रस - द्रव - मुचः— நல்லவார்த்தை யென்னும் அம்ருத ரஸத்தைப் பொழிகின்ற; वाचः - வாக்குகள்; वक्त्र-उदरात् - முகத்திலிருந்து; तरसा - வேகத்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

தோடு; निर्यान्ति - வெளிவருகின்றன; ध्रुवम् - एव - உறுதியன்றே!

த்ருஷ்ட்வாஸம்ப்ரமகாரி வஸ்து ஸஹஸா
ஐ ஐ இதிவ்யாஹ்ருதம்
யேநாகூதவசாத பீஹி வரதே
பிந்தும் விநாப்யக்ஷரம் ।
தஸ்யாபி த்ருவமேவ தேவி தரஸா
ஜாதே தவாநுக்ரஹே
வாசஃ ஸூக்திஸுதாரஸத்ரவமுசோ
நிர்யாந்தி வக்த்ராம் புஜாத் ॥ 3 ॥

(பொழிப்புரை) பக்தர்கள் விரும்பும் வரத்தைக் கொடுப்பவளே! எங்கும் ஒளியின் வடிவாய் நிறைந்து நிற்பவளே! ஓ அன்னையே! எவனொருவன் முன்பின் ஆராய்ந்து அறியாது அவஸரத்தில் பரபரப்பை யுண்டு பண்ணுகின்ற ஏதோனுமொரு வஸ்துவைக் கண்ட காரணத்தால் எழுந்த உனது பீஜமான 'ஐ ஐ! என்னும் அக்ஷரத்தை, அநுஸ்வரத்தைத் (பிந்துவை) தள்ளி சாஸ்திரத்தில் சொல்லப் பெற்ற நியமங்களுமில்லாது உச்சரித்தாலும், அவனுக்கும், உன்னுடைய கருணையினால் மிகுந்த வேகத்தோடு, தெளிந்ததும், அம்ருதம் போலச் சுவையுள்ளதுமான மங்களவார்த்தைகளின் பெருக்கானது அவனுடைய வாக்கிலிருந்து உண்டாகுமேயாகில், விதிப்படி (சாஸ்த்ரமுறைப்படி) பொருளறிந்து உனது மந்த்ரத்தைப் பாராணயம் செய்பவனுக்குச் சிறந்த அநுக்ரஹமேற்படு மென்பதில் எள்ளளவும் ஐயமில்லையன்றே!

(விரிவுரை) ஸத்யவ்ரதன் என்னும் ஒரு அந்தணன் வனத்தில் தவம் செய்து கொண்டிருந்தான். அப்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

பொழுது ஒரு வேடன் மிகவும் அச்சத்தை யுண்டு பண்ணக்கூடிய தவம் செய்யும் அந்தணன் அருகில் வந்தான். அவனைக்கண்ட அந்தணனும் அச்சத்தால் நடுங்கி நிலைதவறி 'ஐ ஐ' என உரக்கக் கதறினான். இவ்விதம் அவ்வந்தணன் வாக்கினின்றும் வெளிவந்த ஐகாரமானது ஸ்ரீதேவியினுடைய அநுஸ்வாரத்தோடு கூடாத பீஜாக்ஷரமாகும். அவனும் அநுஸ்வாரமின்றி இதை யுச்சாரணம் செய்கிறோமே என்ற எண்ணம் ஒரு சிறிது மில்லாது பரபரப்போடு உச்சரித்துக்கொண்டு அலைந்தான். அந்த ஐகாரமானது, ஸ்ரீதேவினுடைய பீஜாக்ஷரங்களின் ஒரு பகுதியாயிருக்கும் காரணத்தாலே அவனை ஸ்ரீதேவியின் கடாக்ஷத்திற்குப் பாத்திரமாகச் செய்து மிகுந்தவாக்கின் வன்மையையும் (கவிதையின் பெருக்கை) அடையச் செய்தது.

அவ்விதமிருக்க, மிகுந்த நியமத்தோடு பொருளறிந்து, விதிப்படி தேவியினுடைய பீஜாக்ஷரங்களை ஒருவன் ஜபம் செய்துவந்தால் அவனுக்குக் கவிதையின் பெருக்கும், மற்றுமுள்ள பலன்களும் கிடைக்குமென்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை யென்பது கதையின் ஸாரமாகும். இந்த ஸத்யவ்ரதனுடைய சரித்திரம் ஸ்ரீதேவீ பாகவதத்தில் மூன்றாவது ஸ்கந்தத்தில் 10, 11 வது அத்தியாயங்களில் விரிவாகச் சொல்லப்பெற்றுள்ளது.

முன் ச்லோகத்திலே நாதத்தோடு கூடிய பிந்துவின் உபாஸனையானது மோக்ஷத்தைக் கொடுக்கவல்லது எனச் சொல்லப்பெற்றது. இந்த ச்லோகத்திலே பீஜாக்ஷரத்தின் உபாஸனையினாலுண்டாகும் வாக்ஸித்தியின் (வாக்கின் வச்யம்) வடிவாயமைந்த பயனையும் உணர்த்தலாயிற்று என்பதும் ஸாரமாகும்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(அவதாரிகை) இனி இரண்டாவது பீஜத்திலும் ஸாரஸ்வத (அறிவு) பீஜத்தினுடைய பயன் ஒரு பகுதிக்கா, அல்லது பீஜத்தினுடைய முழுப் பகுதிக்குமா என்பதை இந்த ச்லோகத்திலே விளக்கப் பெறுகின்றது.

यन्नित्ये तव कामराजमपरं मन्त्राक्षरं निष्कलं
तत्सारस्वतमित्यवैति विरलः कश्चिद् बुधश्चेद् भुवि ।
आख्यानं प्रतिपर्व सत्यतपसो यत् कीर्तयन्तो द्विजाः
प्रारम्भे प्रणवास्पदप्रणयिनीं नीत्वोच्चरन्ति स्फुटम् ॥ ४ ॥

हे नित्ये - *அழிவற்று* (முக்காலத்திலும்) நிலைத்திருப்பவளே! **कामराजम्** - *காமராஜமென்னும் பெயரோடு கூடிய*; **अपरम्** - *மற்றொரு*; **तव**-*உன்னுடைய*; **यत्** - *யாதொரு*; **मन्त्राक्षरम्** - *மந்த்ரத்தின் இரண்டாவது அக்ஷரமிருக்கின்றதோ*; **तत्** - *அந்த அக்ஷரத்தை*; **निष्कलम्** - *ககார லகாரங்களோடு கூடாது*; **सारस्वतम्** - *ஸ்ரீஸரஸ்வதீ தேவியின் ஸம்பந்தமானது*; **इति** - *என்று*; **भुवि** - *உலகில்*; **विरलः** - *ஞானசூன்யனை*; **कश्चित्** - *ஒருவன்*; **अवैति** - **चेत्** - *அறிந்து கொண்டாலும்*; **सः** - *அவன்*; **बुधः** - *அறிவு நிறைந்த வித்வானாக ஆகின்றான்*. **सत्यतपसः** - *ஸத்ய தபஸ் என்ற மஹர்ஷியினுடைய*; **आख्यानम्** - *கதையை*; **प्रति-पर्व** - *ஒவ்வொரு பர்வத்திலும்*; **कीर्तयन्तः** - *பாராயணம் செய்கின்ற*; **द्विजाः** - *அந்தணர்கள்*; **प्रारम्भे** - *முதலில்*; **यत्** - *யாதொன்றை* (*காமராஜ பீஜத்தை*) **प्रणवास्पद** - **प्रणयिनीम्** - *பிரணவத்தினுடைய* (*ஓம்காரத்*

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

திற்கு) இருப்பிடமாயிருக்கும் தன்மையை விரும்புகின்ற; ईम् - ஈம் - என்று (ஈகாரத்தோடு கூடிய அநுஸ்வாரத்தை மட்டும் மந்த்ரத்தின் வடிவாக) नीत्वा - செய்து; स्फुटम् - தெளிவாக; उच्चरन्ति - உச்சாரணம் செய்கின்றனர்.

யஸ்மித்யே தவ காமராஜமபரம்
மந்த்ராக்ஷரம் நிஷ்கலம்
தத்ஸாரஸ்வதமித்யவைதி விரல:
கஸ்சித் புதஸ்சேத் புவி ।
ஆக்யாநம் ப்ரதி பர்வ ஸத்யதபஸோ
யத்கீர்த்யந்தோ த்விஜா:
ப்ராரம்பே ப்ரணவாஸ் பதப்ரணயிநீம்
நீத்வோச்சரந்தி ஸ்புடம் ‖ 4 ‖

(பொழிப்புரை) முக்காலத்திலும் அழிவற்று ஞாநவடிவாக இருந்து கொண்டு நித்யமாக விளங்குகின்ற அன்னையே! உனது மற்றொரு பீஜாக்ஷரமான காமராஜ பீஜத்தை ககாரலகாரங்களோடு சேர்க்காது ஈம் (ईम्) என்ற கடைசிபாகத்தை மாத்திரம் ஸ்ரீஸரஸ்வதீதேவியின் ப்ரஸாதமென்று உலகத்தில் ஞாநமில்லாத ஒரு சிறுவனும் அறிந்து கொண்டால், அவனும் அறிவு நிறைந்த பண்டிதனாகின்றான். ஒவ்வொரு பர்வத்திலும் (பௌர்ணிமா) ஸத்யதபஸ் என்ற மஹர்ஷியினுடைய சரித்திரத்தைப் பாராயணம் செய்கின்ற அந்தணர்கள் ஓம்காரத்தினுடைய இருப்பிடத்தை யடைய விருப்பம் கொண்டு, ஆரம்பத்தில் 'ஈம்' (ईम्) என்பதை மட்டிலும் உச்சஸ்வரத்தில் உச்சரிக்கின்றனர்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(விரிவுரை) அறிவில்லாத ஒரு சிறுவனும் ககார லகாரங்களைத் தள்ளி, இது ஸ்ரீஸரஸ்வதீதேவியினுடைய அருளைக் கொடுக்கவல்லது என விசாரித்துத் தெரிந்து கொண்டு, ஈம் என்ற ஈம்காரத்தை யுபாஸித்தால் அவனும் மஹாஞாநியாகின்றான். மற்றும் பிரணவத்திற்கு ஸமானமான இந்த ஈம்காரோபாஸனையானது மோக்ஷத்தையும் கொடுக்க வல்லது. இக்கருத்தை ச்ருதியும்;

यदीं श्रृणोत्यलकं श्रृणोति ।
न हि प्रवेद सुकृतस्य पन्थामिति ॥

யதீஂ ச்ருணோத்யலகஂ ச்ருணோதி ।
நஹிப்ரவேத ஸுக்ருதஸ்ய பந்தாமிதி ॥

"எவனொருவன் ககாரலகாரங்களோடு கூடாத ஈம் என்ற காமகலையை மாத்திரம் ஸ்ரீ குருவினிடமிருந்து உபதேசம்பெற்று உபாஸனை செய்கின்றானோ, அவன் ககாரலகாரங்களோடு கூடிய காமராஜ பீஜத்தினுடைய மஹிமையால் மூன்று உலகத்தையும் வச்யம் செய்யக்கூடிய சக்தியைப் பெறுகிறான். மற்றும், த்வைதப்ரபஞ்சரூபமான ஸம்ஸார பந்தத்திலிருந்து விடுதலை யடைவதோடு ப்ரஹ்மாநந்த வடிவாகவும், நித்யமாகவு முள்ள மோக்ஷத்தையுமடைகிறான்". எனக்கூறும்.*

முன்னொரு காலத்தில் ஸூர்யவம்சத்திலே பிறந்த ஸுதர்சனன் என்ற அரசனும், இந்த காமராஜபீஜத்

* மற்ற விசேஷங்களை எமது அருணோபநிஷத் தேவீ உபநிஷத்துக்கள் தமிழுரையில் விரிவாகக் காணலாம்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

தையே உபாஸித்து, ஸ்ரீதேவியினுடைய அநுக்ரஹத்தைப் பெற்று, சக்ரவர்த்தி பதவியையும் அடைந்தான் என்ற வரலாறையும் ஸ்ரீ தேவிபாகவத்தில் மூன்றுவது ஸ்கந்தத்தில் 10 வது அத்யாயம் முதல் 24 வது அத்தியாயம் வரையில் விரிவாகக் காணலாம். (4)

(அவதாரிகை) இவ்விதம் முன் ச்லோகத்தில் காமராஜ பீஜத்தினுடைய சிறப்பானது சொல்லப் பெற்றது. இப்பொழுது இந்த ச்லோகத்திலே ஸம்மோஹந மென்னும் சக்தி பீஜத்தினுடைய பெருமையானது விளக்கப் பெறுகின்றது—

यत् सद्यो वचसां प्रवृत्तिकरणे दृष्टप्रभावं बुधैः
तार्तीयं तदहं नमामि मनसा त्वद्बीजमिन्दुप्रभम् ।
अस्त्वौर्वोऽपि सरस्वतीमनुगतो जाड्याम्बुविच्छित्तये
गौः शब्दो गिरि वर्तते स नियतं यो गं विना सिद्धिदः ॥

(பதவுரை) हे नित्ये! அழிவற்றவளே! நித்தியமாக விளங்குபவளே! यत् - யாதொரு பீஜாக்ஷரம்; सद्यः - உடனே; वचसाम् - வார்த்தைகளுடைய; प्रवृत्तिकरणे - நிர்மாணவிஷயத்தில்; (வெளிவரச் செய்வதில்) बुधैः - பண்டிதர்களினால்; दृष्ट-प्रभावम् - கண்ணுல் காணப்பட்ட மஹிமையோடும்; तार्तीयम् - மூன்ருவதாக உள்ளதும்; इन्दु-प्रभम् - சந்த்ரனைப்போன்ற காந்தியோடு கூடியதுமாகிய; तत् - அந்த; त्वत् உன்னுடைய; बीजम् - பீஜாக்ஷரத்தை; अहम् - நான்; मनसा - மனதால்; नमामि - வணங்குகிறேன். यः - யாதொரு; (பீஜாக்ஷரமானது) गौः - கௌ: (என்ற)

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

शब्दः - சப்தமானது ; गिरि - ஸ்ரீ ஸரஸ்வதீ தேவி யினிடத்தில் வாசகமாக ; वर्तते - இருக்கின்றதோ ; यः - யாதொரு சப்தமானது ; गं - (ग) ககாரத்தை ; विना - விட்டு ; (ஔ:) (औः) என்று மாத்திரம் ; सिद्धिदः - ஸித்தியைக் கொடுக்கின்றதாயிருக்கின்றதோ ; सरस्वतीम् - ஸ்ரீ ஸரஸ்வதீ தேவியை ; अनुगतः - அநு ஸரித்த ; सः - அந்த ; औः-अपि - ஔகாரம் என்ற ஸ்வரமும் ; वः - உங்களுடைய ; जाड्य-अम्बु - विच्छित्तये - அஜ்ஞானமாகிற - ஜலத்தை - வற்றவைப்பதற்கு ; नियतम् - நிச்சயமாக ; अस्तु - இருக்கட்டும்.

யத் ஸத்யோ வசஸாம் ப்ரவ்ருத்தி கரணே
 த்ருஷ்டப்ரபாவம் புதைः
தார்தீயம் ததஹம் நமாமி மநஸா
 த்வத்பீஜமிந்து ப்ரபம் |
அஸ்த்வௌர் வோऽபி ஸரஸ்வதீமநுகதோ
 ஜாட்யாம்பு விச்சித்தயே
கௌஃ சப்தோ கிரி வர்த்ததே ஸநியதம்
 யோ கம் விநா ஸித்தித: || 5 ||

(பொழிப்புரை) அழிவற்றவளே ! ஓ அன்னையே ! யாதொரு பீஜாக்ஷரமானது மாதுர்யம் முதலிய குணங் களோடு கூடிய வார்த்தைகளின் பெருக்கை வெளிவரச் செய்கின்ற கவிதையின் காரணமாகப் பண்டிதர்களால் அநுபவித்துக் காணப்பெறுகின்ற சிறப்பு வாய்ந்ததாக வும் ; சந்த்ரனுடைய காந்தியைப் போல் வெண்மையாக வும் ; ஸ்ரீதேவியுனுடைய வாசகமாகவுள்ளதுமான உனது பீஜாக்ஷரத்தை (ஸௌ: என்ற அக்ஷரத்தை) நான்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

மந்தால் வணங்குகிறேன். மூன்ருவது பீஜாக்ஷரத்திலுள்ள யாதொரு ஔ; என்ற ஸ்வரமானது. 'ஸௌ:' என்ற சப்தமாகத்திரிந்து ஸ்ரீஸரஸ்வதீ தேவியின் வாசகமாயுள்ளதோ; யாதொரு பீஜாக்ஷரமானது ககாரத்தோடும் சேர்ந்து 'ஔஃ' என்று தனித்து நின்றுகொண்டு ஸகல ஸித்திகளையுமளிக்க வல்லதாயிருக்கின்றதோ; அந்த 'ஔஃ' என்ற ஸ்வரவடிவாயுள்ள பீஜாக்ஷரமானது ஸ்ரீஸரஸ்வதீதேவியை யநுஸரித்ததாக இருந்து கொண்டு உங்களுடைய அஜ்ஞாநமாகிற ஜலத்தை வற்றவைப்பதற்கு (மோஹப்ரவாஹத்தை நாசம் செய்வதற்கு) நிச்சயமாக இருக்கக்கடவது.

(விரிவுரை) இந்த ஸௌஃ என்ற பீஜாக்ஷரத்திலேயுள்ள ஔஃ என்ற ஸ்வரமானது ககாரத்தோடு சேரும்பொழுது கௌ: (गौः) என்ற ஸ்ரீ ஸரஸ்வதீ தேவியினுடைய வாசகத்தைக் குறிக்கின்ற பீஜா-க்ஷரமாகக் கிடைக்கின்றது. ஈகாரத்தையும் சேர்க்காது ஔ: என்று தனியாக இருக்கும் பொழுது பாடவாக்கி மந்த்ரமாகவு மிருக்கின்றது. அஜ்ஞாநமாகிற ஸமுத்ரத்தை வற்றவைப்பதற்கு பாடவாக்கியே சக்தி வாய்ந்தது. பீஜாக்ஷரத்தினுடைய ஒரு பகுதியான ஔஃ என்ற ஸ்வரத்திற்கு இவ்வளவு சிறப்பு இருக்குமேயாகில், பரிபூர்ணமான மூன்ருவது பீஜாக்ஷரத்திற்கு (ஸௌஃ) எவ்வளவு சிறப்பு இருக்குமென்பது சொல்லாமலே விளங்கும்.[1]

---

1. "பாலைக்கு மிஞ்சிய மந்திரமுண்டோ
நல்ல பாலுக்கு மிஞ்சிய பாக்யமுண்டோ"
என ஒரு ஸித்தர் பாடியிருப்பதும் இங்கு கவனிக்கத்தக்கது.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(दृष्ट-प्रभावम्) த்ருஷ்டப்ரபாவம்—என்றதால் இந்த ஔ: என்ற பீஜமானது மிகவும் வேகமான வாக்ப்ரவாஹத்தை யுண்டு பண்ணக்கூடிய சக்தி வாய்ந்தது எனக் கிடைக்கின்றது. மற்றும், அநேக வித்வான்கள் இந்த வாக்பவத்தை உபாஸனை செய்து பலன்களை யடைந்தனர் என்றும், அறிவற்ற ஒரு சிலருக்குப் பலன் கிடைக்காமலிருந்தாலும், அது அநுபவ மடைந்தவர்களுக்கு விரோதமா யிருக்காது. உபாஸகனுகிய கவிக்கு அவனுடைய மனவுறுதியையும், அஜ்ஞானிகளைக் குறித்த உதாஸீநத்தையும் வெளிப்படுத்துவதாகும்.

(मनसा नमामि) மநஸா-நமாமி—என்பது, மநம் கொண்டு நமஸ்காரம் செய்கிறேன் என்றதால் சில ஸமயம் சிலருக்குப் பலன்கள் கிடைக்காமலும் இருக்கலாமென்ருல் அதற்குக் காரணம் அவர்களுடைய மனச்சஞ்சலமேயாகு மென்பதையும் விளக்குவதாகும். "औकारो बीजतां धत्ते वाडवस्य विसर्गवान्" इति ஔகாரோ பீஜதாம் தத்தே பாடவஸ்ய விஸர்கவான்—"பாடவாக்யினுடைய விஸர்க்கமான ஔகாரமானது பீஜத்தன்மையை யடைகிறது". என்ற பிரமாணத்தை யநுஸரித்து பாடவாக்னி பீஜமாகவும் கொண்டால், எவ்விதம் பாடவாக்னியானது ஜலத்தை வற்றவைக்குமோ அதுபோல இந்த ஔகாரமும் அஜ்ஞாநத்தையகற்ற வல்லது. இவ்விடத்தில் அஜ்ஞாநத்தை ஜலமாக வர்ணித்திருப்பதும் பொருத்தமேயாகும்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஆகவே, இந்த ஸௌ; என்ற பீஜாக்ஷரத்தில் ஸ × ஔ; என்று இரண்டு அக்ஷரங்களுண்டு. அதில் இரண்டாவதாகிய ஔ: என்ற அக்ஷரம் 'ஸ' என்னும் அக்ஷரத்தோடு சேரும்பொழுது, வியாகரணஸூத்ரப் பிரகாரம் விருத்தி ஸந்திசெய்தால் ஸௌ: என ஆகின்றது. அப்பொழுது அந்த ஸௌ: என்னுமக்ஷரம் ஸ்ரீஸரஸ்வதீதேவியின் வாசகத்தைக் குறிப்பதாகக் கிடைக்கின்றது.

அவ்விதமே ஸௌ: என்ற அக்ஷரம் ஸ என்ற அக்ஷரத்தோடு சேராமல் தனியே ஔ: என்றிருக்கும் பொழுது அதுவும் ஸ்ரீஸரஸ்வதீப்ரஸாதமான மந்த்ரமுமாகின்றது, ஆகவே இந்த மஹிமை வாய்ந்த ஔ: என்ற பீஜாக்ஷரமானது கேவலம் கவிதாசக்தியைப் பெறுவதற்கு மாத்ரம் உபாஸனை செய்யாது. எல்லாவிதமான அவித்யைகளையும் அழித்து, நித்யமான ஞானத்தையடைவதற்கும் உபாஸனை செய்வது அவச்யம் என்றும் கிடைக்கின்றது.

(5)

(அவதாரிகை) இவ்விதம் "या मात्रा" என்ற ஆரம்பித்து நான்கு ச்லோகங்களில் ஐம், ஈம், என்ற சுத்த ஸ்வரங்களை உபாஸனை செய்யும் லக்ஷணங்களையும், பூர்ணோபாஸனையின் பலன்களையும் விரிவாகச் சொல்லி, இந்த ஆருவது ச்லோகத்திலே, அந்த பீஜாக்ஷரங்களை எவ்விதம் ஜபம் செய்ய வேண்டும்மென்பதும் சொல்லப் பெறுகின்றது—

एकैकं तव देवि बीजमनघं सव्यञ्जनाऽव्यञ्जनं
कूटस्थं यदि वा पृथक् क्रमगतं यद्वा स्थितं व्युत्क्रमात् ।
यं यं काममपेक्ष्य येन विधिना केनापि वा चिन्तितं
जप्तं वा सफलीकरोति तरसा तं तं समस्तं नृणाम् ॥ ६ ॥

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பதவுரை) हे देवि ! ஹே தேவி ; तव-உன்னுடைய ; अनघम् - தோஷமில்லாத (பரிசுத்தமான) बीजम् - பீஜாக்ஷரமானது ; एकैकम् - ஒவ்வொன்ருகவோ ; सव्यञ्जन-अव्यञ्जनम् - மெய்யெழுத்துக்களுடன் சேர்ந்தும், சேராமலும் ; कूटस्थम् -ஹகாராதிகளான கூடங்களில் இருப்பதாகவோ ; पृथक्-தனியாகவோ ; क्रमगतम् - க்ரமத்தை யஸஸரித்து ; यदि - वा - இருந்தாலும் ; व्युत्क्रमात् - க்ரமத்தையநுஸரிக்காமல் स्थितम् - இருந்தாலும் ; यं-यम् - எந்த எந்த ; कामम् - அபிலாஷையை (விருப்பத்தை) अपेक्ष्य எதிர்பார்த்து (விரும்பி) येन-केनापि - ஏதாவதொரு ; विधिना - விதியோடு கூட ; (முறையோடு) चिन्तितं - वा - சிந்தனை செய்தாலும் ; जप्तं - वा ஜபம் செய்தாலும் ; नृणाम् - மனிதர்களுக்கு ; समस्तम् - எல்லாவற்றையும் ; (விருப்பங்களையும்) तरसा - விரைவில் ; सफली-करोति - நல்ல பலனுள்ளதாக ஸித்தி பெறச் செய்கின்றது.

ஏகைகம் தவ தேவி பீஜமநகம்
ஸவ்யஞ்ஜநாவ்யஞ்ஜநம்
கூடஸ்தம் யதி வா ப்ருதக் க்ரமகதம்
யத்வா ஸ்திதம் வ்யுத்க்ரமாத் ।
யம் யம் காமமபேக்ஷ்ய யேந விதிநா
கேநாபி வா சிந்திதம்
ஜப்தம் வா ஸபலீகரோதி ஸததம்
தம் தம் ஸமஸ்தம் ந்ருணாம் ॥ 6 ॥

(பொழிப்புரை) ஓ தாயே ! கங்கையினுடைய ஜலம் போல மிகவும் பரிசுத்தமாயிருக்கின்ற உனது பீஜாக்ஷர

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

மானது ஒவ்வொன்ருகவோ, மெய்யெழுத்துக்களுடன் கூடியதாகவோ, கூடாததாகவோ, இரண்டு முதல் ஆறு வரையிலுள்ள கூடாக்ஷரங்களோடு கூடியதாகவோ; அவ்விதம் கூடாததாகவோ; க்ரமத்தை அநுஸரித்திருந்தாலும், அநுஸரிக்காமலிருந்தாலும்; எந்த விதமான விருப்பத்தை யுத்தேசித்திருந்தாலும்; எந்த விதிப்பிரகாரமாவது சிந்தனை செய்தாலும்; ஜபம் செய்தாலும்; மனிதர்களுக்கு அந்த அந்த அபிலாஷைகளையெல்லாம் இப்பிறவியிலேயே விரைவில் ஸித்தி பெறச் செய்கின்றது.

(விரிவுரை) இவ்விடத்தில், देवि - தேவி ' என்றதால் ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், திரோதாநம், அநுக்ரஹம் என்ற ஐந்து தொழில்களையும் தன்னிடத்திலே நிலைக்கப்பெற்று ஸ்வயம்ப்ரகாச வடிவாயிருப்பவள் என்பது தாத்பர்யம். (अनघम्) - அநகம் - பரிசுத்தம் என்றதால், தான் தோஷமற்றவளாயிருப்பதுமன்றி, ஸகல ஜீவராசிகளையும் பரிசுத்தமாகச் செய்கின்ற சக்தி வாய்ந்தவள் எனவும் கிடைப்பதாகும்.

सव्यञ्जन-अव्यञ्जनम् - ஸவ்யஞ்ஜந-அவ்யஞ்ஜநம்-மெய்யெழுத்துக்கள் சேர்த்தும், சேர்க்கப் படாமலும் என்ற பதத்தின் விசேஷம் வருமாறு--வடமொழியில் வியாகரண சாஸ்த்ரத்தில் அக்ஷரங்கள், ஸ்வரங்கள் (உயிர்) என்றும்; வ்யஞ்ஜநங்கள் (மெய்) என இரண்டு வகையாகப் பிரிக்கப் பெற்றுள்ளன. (अ-आ-इ-ई) அ. ஆ. இ. ஈ, என்று ஆரம்பித்து (औ-अं-अः) ஔ-அம்-அ:- என முடிவுறும் அக்ஷரங்கள் ஸ்வரங்கள் (உயிரெழுத்துக்கள்) என கூறப்பெறும்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(क् ख् ग् घ्) க் க் க் க் என்று ஆரம்பித்து (स् ह् क्ष्) ஸ் ஹ் க்ஷ் என முடிவுறும் அக்ஷரங்கள் வ்யஞ்ஜநம் (மெய்யெழுத்துக்கள்) எனப்பெறும். அவைகளை முறையே அச்செழுத்துக்கள் என்றும் ஹல்லெழுத்துக்கள் என்றும் கூறுவதுண்டு. இங்கே ஸவ்யஞ்ஜநம் என்றதால் மெய்யெழுத்துக்களோடு சேர்ந்தது என்று பொருள். அவ்யஞ்ஜநம் என்றதால் மெய்யெழுத்துக்களோடு சேராதது என்று பொருள்.

ஆகவே, ஸௌ: என்ற பீஜாக்ஷரத்தில் ஸ+ஔ என்று ஒரு மெய்யெழுத்தும், ஒரு உயிரெழுத்தும் இருக்கிறது. ஔ: என்றதில் மெய்யெழுத்துச் சேராது உயிரெழுத்துத் தனித்து நிற்பதால் அது அவ்யஞ்ஜநம் எனச் சொல்லப்பெற்றது. இவ்விதமே மற்ற விடங்களிலும் கண்டு தெளிதல் வேண்டும்.

மற்றும், (कूटस्थम्) - கூடஸ்தம் — என்றதால் மெய்யெழுத்துக்களுடைய ஸமுதாயத்தைக் குறிப்பதாகும். இக்கருத்தையே, முதல் ச்லோகத்திலே (सदाहस्थिता) - 'ஸதாஹஸ்திதா' என்ற பதவுரையில் அகாரம் முதல் ஹகாரம் வரையில் பரவி யிருப்பதாகச் சொல்லப்பெற்றுள்ளது. இந்த கூடாக்ஷரங்கள் உயிரெழுத்துக்களுடன் இரண்டு முதல் ஆறு வரையிலுள்ள மெய்யெழுத்துக்கள் சேர்த்தும் உச்சரிக்கப்படுவதுண்டு.

(पृथक्) - ப்ருதக் - தனியே என்ற பதமானது கூடாக்ஷரங்கள் முழுவதையும், அவைகள் தனித்திருக்கின்ற நிலையையும் குறிப்பதாகும். தனித்திருக்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

காவிடில் தொடர்ந்தோ, தொடராமலோ இருக்கும். இந்த விதிகளனைத்தும் மெய்யெழுத்துக்களுக்கே யன்றி உயிரெழுத்துக்களுக்கு முண்டு.

(यं यं कामम् अपेक्ष्य) - யம் யம் காமம் அபேக்ஷய— எந்த எந்த காமனையை விரும்பி என்ற வாக்யத்தால் உபாஸகர்களுக்கு மற்ற மந்த்ரங்கள் ஒரு குறிப்பிட்ட பலனைத்தான் கொடுக்க வல்லது. இந்த மந்த்ரமோ வெனில், அவ்விதமல்லாது ஸகல பலன்களையுமளிக்க வல்லது என்பதும் கிடைக்கின்றது.

(येन केनापि विधिना) - யேந - கேநாபி - விதிநா— ஏதாவது ஒரு முறையினால் என்றதால் மற்ற மந்த்ரங்களுக்கு ரிஷி, சந்தஸ், அங்கந்யாஸம், கரந்யாஸம். * குருபாதுகா ஸ்மரணம்; முதலிய சிற்சில விதிகளை யநுஸரித்து ஜபம் செய்தாலல்லாது, அவைகளுக்குரிய பலன்களை யடைய முடியாது. ஆனால் இம் மந்த்ரத்திற்கோ அவ்வித விதிகளொன்றும் வேண்டுவதில்லை யென்பதும் கிடைக்கின்றது.

(चिन्तितं जप्तं वा) சிந்திதம் - ஜப்தம் -வா—த்யாநம் அல்லது ஜபம் செய்தாவது என்றதால், "देवतागुरुमन्त्राणां भावयन्नैक्यमात्मना।" इति। "தேவதை, குரு, மந்த்ரம் இவைகளை த்யாநம் செய்யும் பொழுதோ, ஜபம் செய்யும் பொழுதோ, தன்னோடு ஒரு முகப்படுத்தி பாவனை செய்ய வேண்டும்." என்பது போல

---

* இக் குருபாதுகையின் விசேஷ விளக்கங்களை எமது "ஸ்ரீ பாதுகா பஞ்சரத்நஸ்தவம்" என்னும் நூலில் பரக்கக் காணலாம்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

உபாஸகர்கள் தேவதையையும், குருவையும், மந்த்ரத்தையும், தன்னையும், ஒன்று சேர்த்து அபேத வடிவாகக் கருதி த்யாநம் செய்ய வேண்டுமென்பதும் கிடைகின்றது.

(नृणाम्) - ந்ருணாம்—மனிதர்களுக்கு என்றதால் இந்த மந்த்ரோபாஸனையில் ஆண் பெண் என்ற வேற்றுமையின்றி எல்லோரும், எல்லா வர்ணத்தவரும் எப்பொழுதும் உபாஸனை செய்வதற்குத் தகுதியுள்ள வர்களென்பதும் கிடைக்கின்றது.

ஆகவே, இந்த மந்த்ரத்திற்கு அவச்யமாயுள்ள அங்க ந்யாஸங்களையும், சரீர ரக்ஷைகளையும், ப்ரயோகக்ரமங்களையும், அவைகளால் ஏற்படக்கூடிய பலன்களையும் விரிவாக ஸ்ரீ ஸிம்ஹராஜர், ஸ்ரீ ஸோமதிலகஸூரி, ஸ்ரீ ராகவாநந்தர் முதலியவர்களியற்றிய வியாக்யானங்களில் கண்டுகொள்ள வேண்டுவதாகும். (6)

(அவதாரிகை) 'चिन्तितम् जप्तं वा' 'சிந்திதம், ஜப்தம் வா,—த்யாநம் செய்தாவது, ஜபம் செய்தாவது என்றதால், அந்த த்யாநத்திற்கும். ஜபத்திற்குமுரிய உருவத்தைச் சிந்தனை செய்ய, நிஷ்கலவடிவை, 'ஜ்யோதிர்மயீ வாங்மயீ' என்றும் உபதேசித்து, ஸகலநிஷ்கல வடிவாயிருப்பதை, 'ஐந்த்ரஸ்யேவ சராஸநஸ்ய' என்றும் உபதேசித்து, எஞ்சியுள்ள ஸகல வடிவானது இந்த ச்லோகம் முதல் ஐந்து ச்லோகங்களிலே விளங்கப் பெறுகின்றது—

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

वामे पुस्तकधारिणीमभयदां साक्षस्रजं दक्षिणे
भक्तेभ्यो वरदानपेशलकरां कर्पूरकुन्दोज्ज्वलाम् ।
उज्जृम्भाम्बुजपत्रकान्तिनयनस्निग्धप्रभालोकिनीं
ये त्वामम्ब न शीलयन्ति मनसा तेषां कवित्वं कुतः ॥ ७ ॥

(பதவுரை) **हे अम्ब** - ஓ! தாயே! **वामे** - இடது கையில்; **पुस्तक - धारिणीम्** - புஸ்தகத்தைத் தரித்துக் கொண்டவளும்; **अभयदाम्** - அபயத்தை யளிக்கவல்ல முத்ரையைத் தரித்துக் கொண்டவளும்; **दक्षिणे** - வலது கையில்; **साक्षस्रजम्** - ஸ்படிகமாலையையோடு கூடியவளும்; **भक्तेभ्यः** - பக்தர்களுக்கு; **वर - दान-पेशल-कराम्** - வரத்தைக்கொடுக்க வல்ல அழகிய வரதமுத்ரையைத் தரித்துக்கொண்டவளும்; **कर्पूर - कुन्द-उज्ज्वलाम्** - கர்ப்பூரம் போலும், முல்லைப்புஷ்பம் போலும் வெண்மையாகப் பிரகாசிக்கின்றவளும்; **उज्जृम्भ-अम्बुज-पत्र-कान्ति-नयन - स्निग्ध-प्रभा- आलोकिनीम्** - நன்கு மலர்ந்த தாமரை-புஷ்பத்தின்-காந்திபோன்ற-காந்திபொருந்திய வாத்ஸல்யம் நிறைந்து பிரகாசிக்கின்ற கடைக்கண் பார்வையோடு கூடியவளுமான; **त्वाम्** - உன்னை; **ये** - எந்த (மனிதர்கள்) **मनसा** - மனதாலும்; **न - शीलयन्ति** - த்யானம் செய்வதில்லையோ; **तेषाम्** - அவர்களுக்கு; **कवित्वम्** - கவிதை புனையும் சக்தியானது; **कुतः** - ஏது? (கிடையாது).

வாமே புஸ்தகதாரிணீம் அபயதாம்
ஸாக்ஷஸ்ரஜம் தக்ஷிணே

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

பக்தேப்யோ வரதாநபேசலகராம்
 கர்பூர குந்தோஜ்ஜ்வலாம் |
உஜ்ஜ்ரும்பாம்புஜபத்ரகாந்தி நயந-
 ஸ்நிக்தப்ரபாலோகிநீம்
யே த்வாமம்ப ந சீலயந்தி மநஸா
 தேஷாம் கவித்வம் குத: || 7 ||

(பொழிப்புரை) ஓ அன்னையே! (சப்தார்த்தங்களின் வடிவமாயிருக்கின்ற இந்த ப்ரபஞ்சத்திற்குத் தாய் போன்றவளே!) இடது கைகளில் புஸ்தகத்தையும், அபய முத்ரையையும், வலது கைகளில் ஸ்படிக மாலையையும், பக்தர்களுக்கு வேண்டிய வரத்தையளிக்கவல்ல வரதமுத்ரையையும், கர்ப்பூரம் போலும், முல்லைபோலும் வெண்ணிறத்தோடு ப்ரகாசிக்கின்றவளும்; மலர்ந்த தாமரை மலரின் காந்திபோன்ற கண்களில், வாத்ஸல்யம் ததும்பி ப்ரகாசிக்கின்ற கடைக்கண் பார்வையோடு கூடியவளுமான உன்னை, எந்த மனிதர்கள் மநதினுலும் த்யாநம் செய்வதில்லையோ, அவர்களுக்குக் கவிதா சக்தியானது எவ்விதம் உண்டாகும்? ஒரு பொழுதும் உண்டாகாது என்பதும் ஸாரம்.

(விரிவுரை) இந்த ச்லோகமானது மூன்று பீஜாக்ஷரங்களுக்கும் ஸாதாரணமாயிருக்கின்ற த்யாந விசேஷத்தையும், ஸ்ரீ ஸரஸ்வதீ தேவியின் ஸம்பந்தமான ப்ரயோகத்தையும் கொண்டதாகும். இந்த ச்லோகத்தின் கருத்தும், ஆநந்தலஹரியில்; “शरज्ज्योत्स्नाशुभ्राम्” - “சரத் - ஜ்யோத்ஸ்நா - சுப்ராம்”—என்ற பதினைந்தாவது ச்லோகத்தின் கருத்தும் ஒன்ருயிருப்பது கவனிக்கத்தக்கது. மற்று

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

முள்ள விசேஷங்களை எமது "ஆநந்தலஹரீ" என்ற ஸௌந்தர்யலஹரியினுடைய முதல் பாகத்தில் கண்டு தெரிந்து கொள்ளலாம். (7)

(அவதாரிகை) முன் ச்லோகத்திலே பீஜாக்ஷரங்களுக்குப் பொதுவானதும், ஸர்வஜ்ஞத்வரூபமான பலத்தைக் கொடுக்கவல்லதுமான வடிவத்தைச்சொல்லி அடுத்துவரும் இந்தச் ச்லோகத்தில், சக்தி, காமராஜம், வாக்பவம், என்ற க்ரமத்தோடு கூடிய த்வாதசாந்தம், மூலாதாரம், ஹ்ருத்பத்மம் என்ற மூன்று ஸ்தானங்களிலும் த்யாநம் செய்ய வேண்டிய ஸாதாரண வடிவமும், அதனுடைய பலனும் விளக்கப்படுகிறது.

ये त्वां पाण्डरपुण्डरीकपटलस्पष्टाभिरामप्रभां
सिञ्चन्तीममृतद्रवैरिव शिरो ध्यायन्ति मूर्ध्नि स्थिताम् ।
अश्रान्तं [1]विकचस्फुटाक्षरपदा निर्याति वक्त्रोदरात्
तेषां भारति भारती सुरसरित्कल्लोललोलोर्मिवत् ॥ ८ ॥

(பதவுரை) **हे भारति** - ஒளி மிகுந்தவளே, ஓ தாயே ; **पाण्डर-पुण्डरीक-स्पष्ट - अभिराम -प्रभाम्** - வெண்மையான தாமரைப் புஷ்பம் போல் மனோஹரமாயிருக்கின்ற காந்தியோடு ; **अमृत-द्रवैः** - அம்ருதத்தினுடைய பெருக்குகளால் ; **शिरः** - சிரஸை ; **सिञ्चन्तीम्** - நனைக்கின்றவளும் ; **मूर्ध्नि** - மஸ்தகத்தில் ; **स्थिताम्** - இருக்கின்றவளுமான ; **त्वाम्**-உன்னை ; **ये**-எந்த ; (மனிதர்கள்) **ध्यायन्ति** - த்யானம் செய்கின்றனரோ ; **तेषाम्** - அவர்களுடைய; **वक्त्र-उदरात्** - முகத்திலிருந்து ; **विकच-**

1. **विकट** - உதாரம்- என்பது ஸ்ரீஸோமதிலகருடைய பாடம்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

स्फुट-अक्षर-पदा-விரிந்ததும்; தெளிந்ததுமான அக்ஷரங்களோடு கூடிய பதங்களையுடைய; भारती-வாக்கானது (கவிதாசக்தியானது) सुर-सरित् - कल्लोल - लोल-ऊर्मिवत्- ஆகாசகங்கையினுடைய பெரிய அலைகளோடு அசைந்து வருகின்ற ப்ரவாஹம் போல; अश्रान्तम् - இடைவிடாது ; निर्याति - வெளிவருகின்றது.

யே த்வாம் பாண்டர புண்டரீகபடல-
ஸ்பஷ்டாபிராமப்ரபாம்
ஸிஞ்சந்தீமம்ருதத்ரவைரிவ சிரோ
த்யாயந்தி மூர்த்நி ஸ்திதாம் ।
அஶ்ராந்தம் விகசஸ்புடாக்ஷரபதா
நிர்யாதி வக்த்ராம் புஜாத்
தேஷாம் பாரதி பாரதீ ஸுரஸரித்
கல்லோல லோலோர்மிவத் ‖ 8 ‖

(பொழிப்புரை) ஓ தாயே! சப்தப்ரபஞ்சகத்திற்கு அதிதேவதையாக இருப்பவளே! வெண்தாமரை போல் வெண்மையாகவும்; மநோஹரமாயுமிருக்கின்ற சோபையோடும், அம்ருதப் பெருக்குகளால் ஸாதகர்களுடைய சிரஸை நனைக்கின்றவளும், ஸஹஸ்ராரகமலத்தில் வஸிக்கின்றவளுமான உன்னை எந்த மனிதர்கள் த்யாநம் செய்கின்றனரோ; அவர்களுடைய முகத்திலிருந்து (வாக்கிலிருந்து) தோஷமற்றதும், தெளிந்ததும், சுவையுள்ளதும், வ்யக்தமர்யுள்ளதுமான அக்ஷரங்கள் நிரம்பிய பதங்களோடு கூடிய கவிதாசக்தியானது, ஆகாச கங்கையினுடைய திரண்ட அலைகளோடு கூடிய பெருகிய ப்ரவாஹம் போல் வெளியே வருகின்றது.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(விரிவுரை) இந்த ச்லோகமானது ஸஹஸ்ரார கமலத்தில் சக்தி பீஜோபாஸனே செய்வதற்காகச் சொல்லப் பெற்றதாகும். த்யாநம் செய்யும்பொழுது முன் ச்லோகத்திலே கூறியுள்ள புஸ்தகம், ஜபமாலே, வரதாபயகரங்கள் முதலியவைகளைச் சேர்த்து த்யாநம் செய்ய வேண்டும்.

मूर्ध्नि पुस्तकमालाभिर्वरदोज्ज्वलविग्रहाम् ।
शिवशक्त्यात्मिकां ध्यायेत् कुन्देन्दुधवलप्रभाम् ॥

மூர்த்நி புஸ்தகமாலபிர் வரதோஜ்ஜ்வல விக்ரஹாம்।
சிவசக்த்யாத்மிகாம் த்யாயேத் குந்தேந்து தவள
ப்ரபாம் ||

சிரஸில்; புஸ்தகம், ஸ்படிகமாலே, வரதாபய ஹஸ்தம் முதலியவைகளால் ப்ரகாசிக்கின்ற சரீரத்தோடும், சிவசக்தியின் வடிவாயமைந்துள்ளவளும், முல்லேயையும், சந்திரனேயும் நிகர்த்த வெண்ணிறச் சோபையோடு கூடியவளுமாக ஸ்ரீதேவியை த்யாநம் செய்யவேண்டும்" என ஆகமமும் இக்கருத்தையே ஆதரிப்பதாகும்.

(அவதாரிகை) முந்திய ச்லோகங்களிலே கவிதா சக்தி முதலிய தர்ம புருஷார்த்தங்களே விரும்புகின்ற பக்தர்களுக்கு வாக்பவமந்த்ரமும், அதை உபாஸிக்க வேண்டிய முறையும் விளக்கப்பெற்றது. இந்த ச்லோகத்தில் காமபுருஷார்த்தங்களே விரும்புகின்ற பக்தர்களுக்கு காமராஜபீஜத்தின் உபாஸனேயும், அதன் பலனும் சொல்லப்பெறுகின்றது—

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ये सिन्दूरपरागपुञ्जपिहितां त्वत्तेजसा द्यामिमा-
मुर्वीं चापि विलीनयावकरसप्रस्तारमग्नामिव ।
पश्यन्ति क्षणमप्यनन्यमनसस्तेषामनङ्गज्वर-
क्लान्तास्त्रस्तकुरङ्गशावकदृशो वश्या भवन्ति ध्रुवम् ॥ ९ ॥

(பதவுரை) हे भारति ! ஓ தாயே ! ये - எவர்கள் ; अनन्यमनसः - ஏகாக்ரசித்தத்துடன் ; (ஒரு முகமாக நிலைநிறுத்தப்பெற்ற மனதோடு) त्वत्-உன்னுடைய ; तेजसा - காந்தியினால் ; इमाम् இந்த ; द्याम् - ஆகாசத்தை ; सिन्दूर-पराग-पुञ्ज-पिहिताम्-इव-குங்குமத்துகள்களுடைய ஸமூஹத்தால் மறைக்கப் பெற்றது போலவும் ; उर्वीम् - பூமியை ; विलीन-यावक-रस-प्रस्तार-मग्नाम्-इव-च-अपि - நனைக்கப்பட்ட செண்பஞ்சுக் குழம்பினுடைய ப்ரவாஹத்தில் (அரக்கு வெள்ளத்தில்) முழுகியது போலவும் ; क्षणम्-अपि - ஒரு க்ஷணமாவது, पश्यन्ति - பார்க்கின்றனரோ ; (த்யானம் செய்கின்றனரோ) तेषाम् - அவர்களுக்கு ; त्रस्त - कुरङ्ग - शावक-दृशः- பயத்தையடைந்த மான்குட்டிகளுடைய கண்களைப் போன்ற கண்களையுடைய பெண்கள் ; अनङ्ग - ज्वर - क्लान्ताः - மன்மத தாபத்தினால் - பீடிக்கப் பட்டவர்களாகக்கொண்டு ; वश्याः-வசமானவர்களாக ; भवन्ति- ஆகின்றனர் ; ध्रुवम् - உறுதி.

யே ஸிந்தூர பராகபுஞ்ஜபிஹிதாம்
த்வத்தேஜஸா த்யாமிமாம்
உர்வீம் சாபி விலீநயாவகரஸ-
ப்ரஸ்தாரமக்நாமிவ |

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

பச்யந்தி க்ஷணமப்யநந்யமநஸஸ்-
தேஷாமநங்கஜ்வர-
க்லாந்தாஸ்த்ரஸ்த குரங்கசாபக-
த்ருசோ வச்யா பவந்தி த்ருவம் ॥ 9 ॥

(பொழிப்புரை) ஓ தாயே! ஆதார பத்மத்தில் மனதை ஒரு முகமாக நிலைநிறுத்தி, உன்னுடைய காந்தியினால் இந்த ஆகாசத்தை குங்குமப் பொடிகளுடைய வெள்ளத்தினால் முழுகியதாகவும், அவ்விதமே இந்த பூமியை செண்பஞ்சுக்குழம்பினுடைய வெள்ளத்தினால் முழுகியதாகவும்; எவர்கள் ஒரு க்ஷணகாலமாவது (த்யாநத்ருஷ்டியோடு) பார்க்கின்றனரோ; அவர்களுக்கு மிகுந்த சஞ்சலத்தோடு கூடிய மான் குட்டிகளுடைய கண்களைப் போன்ற கண்களையுடைய ஸுந்தரிகள் (நங்கையர்) மன்மததாபத்தால் பீடிக்கப்பெற்று வச்யமாகின்றனர். இது உறுதி.

(விரிவுரை) இங்கே, (भारति) - 'பாரதி' என்ற பதத்தை முன் ச்லோகத்திலிருந்து வருவித்துக் கொள்ளவேண்டும். மற்றும், இவ்விடத்தில் ஆதார பத்மத்தில் த்யாநம் செய்ய வேண்டுமென ஸ்பஷ்டமாகச் சொல்லவில்லை. என்னையோ? அடுத்த ச்லோகத்தில் (ये त्वां चेतसि) 'யே த்வாம் சேதஸி' 'எவர்கள் உன்னை மனதில்' என த்யாந க்ரமத்தை விதிப்பதாலும், முந்திய ச்லோகத்தில், (मूर्ध्नि स्थिताम्)- 'மூர்த்நி ஸ்திதாம்' 'சிரஸில் இருப்பவள்' என்று சொல்லப்பெற்றதாலும், இரண்டுக்கும் நடுவேயுள்ள இந்த ச்லோகத்திலே ஆதாரபத்மத்தில த்யாநமானது

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

சொல்லாமலே கிடைக்கின்றதெனக் கொள்ள வேண்டும்.

மற்றும்,

"आधाराब्जे धनुर्बाणवरदाभयलक्षिताम्।
ध्यायेद् बन्धूकपुष्पाभां कामराजस्वरूपिणीम्॥

ஆதாராப்ஜே தநுர்பாண வரதாபயலக்ஷிதாம்।
த்யாயேத் பந்தூக புஷ்பாபாம் காமராஜ ஸ்வரூபிணீம்॥"

"மூலாதாரபத்மத்தில் தநுஸ், பாணம், வரதாபயமுத்ரை இவைகளோடு காணப்பெறுகின்ற வளும், செம்பருத்தி மலர் போன்ற சென்னிறக் காந்தியை யுடையவளும், காமராஜ பீஜத்தின் வடிவாயுள்ளவளுமான ஸ்ரீதேவியை த்யாநம் செய்ய வேண்டும்," என ஆகமங்களில் கூறியிருப்பதும் இங்கே பொருந்தும். மேலும் இந்த ச்லோகமும், ஆநந்தலஹரியில், (तनुच्छाया) - 'தநுச்சாயா' என்ற பதினெட்டாவது ச்லோகமும் ஒரே கருத்தைக் கொண்டதென்பதும் கவனிக்கத் தக்கதாகும்.* (9)

(அவதாரிகை) இந்த ச்லோகத்திலே, இரண்டாவது பீஜத்தினுடைய உபாஸனுபலத்தின் எஞ்சிய பகுதியும், முதல் பீஜத்தினுடைய அஸாதாரணமான த்யாநமும், அர்த்த புருஷார்த்தங்களை விரும்புகின்றவர்களுக்கு ஸ்ரீசக்திபீஜத்தினுடைய த்யாநமும் விளக்கப் பெறுகின்றது—

* எம்மால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட ஆநந்தலஹரியில் மற்று விசேஷங்களை விவரமாகக் காணலாம்.

CC-0. Prof. Satya Vrat Shastri Collection, New Delhi. Digitized by eGangotri

चञ्चत्काञ्चनकुण्डलाङ्गदधरामाबद्धकाञ्चीस्रजं
ये त्वां चेतसि तद्गते क्षणमपि ध्यायन्ति कृत्वा स्थिराम् ।
तेषां वेश्मसु विभ्रमादहरहः स्फारीभवन्त्यश्चिरं
माद्यत्कुञ्जरकर्णतालतरलाः स्थैर्यं भजन्ते श्रियः ॥ १० ॥

(பதவுரை) हे तत् - गते - த்யாநம் செய்கின்றவர்களுடைய ஹ்ருதயத்தில் நிலைபெற்று விளங்குபவளே! ये - எவர்கள்; चेतसि - மனதில்; चञ्चत्-काञ्चन-कुण्डल-अङ्गद - धराम् - அசைகின்ற ஸ்வர்ணமயமான குண்டலங்களையும், தோள்வலயங்களையுமணிந்தவளும்; आ - बद्ध - काञ्ची-स्रजम्-சுற்றிலும் அணிந்துகொள்ளப்பெற்ற ஒட்டியாணத்தையும், மாலையையுமுடையவளுமான; त्वाम्-உன்னை; स्थिरां-कृत्वा-உறுதியாக நிலைக்கச் செய்து; क्षणम्-अपि-க்ஷணகாலமாவது; ध्यायन्ति-த்யாநம் செய்கின்றனரோ; तेषाम्-அவர்களுடைய; वेश्मसु - வீடுகளில்; श्रियः - ஸம்பத்துக்கள்; अहरहः - தினந்தோறும்; विभ्रमात् - பலவடிவங்களோடு; स्फारी भवन्त्यः - வளர்ந்து கொண்டு; माद्यत् - कुञ्जर - कर्णताल - तरलाः- மதம்பிடித்த யானைகளுடைய விசிறிபோன்ற காதுகள் போல் சஞ்சலமாயிருந்த பொழுதிலும்; चिरम् - வெகுகாலம்; स्थैर्यम् -நிலைத்திருக்கும் தன்மையை; भजन्ते - அடைகின்றன.

சஞ்சத் காஞ்சந குண்டலாங்கத தரா-
மாபத்த காஞ்சீ ஸ்ரஜம்
யே த்வாம் சேதஸி தத்கதே க்ஷணமபி
த்யாயந்தி க்ருத்வா ஸ்திராம் |

CC-0. Arutselvi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

தேஷாம் வேச்மஸு விப்ரமாதஹரஹ:
ஸ்பாரீ பவந்த்யச்சிரம்
மாத்யத்குஞ்ஜரகர்ணதால தரலா:
ஸ்தைர்யம் பஜந்தே ச்ரிய: ‖ 10 ‖

(பொழிப்புரை) ஓ தாயே! இடைவிடாது உன்னை த்யாநம் செய்கின்ற பக்தர்களுடைய ஹ்ருதயத்தில் நிலைத்து வஸிக்கின்றவளே! அநாஹதபத்மத்தில் அசைந்து கொண்டிருக்கின்ற குண்டலங்களோடும், தோள்வலயங்களோடும் ஸ்வர்ணமயமான ஒட்டியாணத்தோடும், மாலை முதலியவைகளோடும் கூடிய உன்னை, எவர்கள் ஒரு க்ஷணமாளது மனதை ஒரு முகப்படுத்தி உறுதியாக த்யாநம் செய்கின்றனரோ, அவர்களுடைய வீடுகளில் பூமி, ஸ்வர்ணம், பசு, வாஹநம். ரத்நம் முதலிய ஸம்பத்துக்கள்; மதப்பெருக்கெடுத்த யானைக் கூட்டங்களுடைய, அசைந்து கொண்டிருக்கின்ற விசிறி போன்ற காதுகள் போல எப்பொழுதும் சஞ்சலமாயிருந்த பொழுதிலும், உன்னுடைய அநுக்ரஹத்தினால் நிலையாயிருந்து கொண்டு தினந்தோறும் வளர்கின்றன.

(விரிவுரை) இந்த ச்லோகமானது ஹ்ருதய கமலத்தில் வாக்பவ பீஜோபாஸனைக்காகச் சொல்லப்பெற்றதாகும்.

"हृत्पद्मे काञ्चनप्रख्यां पाशाङ्कुशसमुज्ज्वलाम् ।
वरदाभयहस्तां च ध्यायेद् वाग्भवरूपिणीम् ॥

ஹ்ருத்பத்மே காஞ்சந ப்ரக்பாம் பாசாங்குச
ஸமுஜ்ஜ்வலாம் ।
வரதாபயஹஸ்தாம் சத்யேத் வாக்பவ ரூபிணீம் ‖"

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

—" ஹ்ருதய கமலத்தில் ஸ்வர்ணத்தை யொத்த காந்தியோடும், பாசம், அங்குசம் இவைகளால் ப்ர காசிக்கின்றவளும், வராபயஹஸ்தங்களோடும், வாக்பவஸ்தாநத்தின் வடிவாகவுமுள்ள, ஸ்ரீதேவியை த்யாநம் செய்யவேண்டும்" என ஆகமம் கூறும்.

(அவதாரிகை) இவ்விதம், முன்பு தர்மங்களையும், பொருள்களையும், போகங்களையும் விரும்பும் பக்தர் களுக்கு த்யாநம் செய்ய வேண்டிய க்ரமங்களும், அந்த த்யாநங்களுக்குரிய மூர்த்தி பேதங்களும். அந்த மூர்த்தி களுடைய உபாஸனையாலேற்படும் பலன்களும் விஸ்தார மாகச் சொல்லப்பெற்றன. இப்பொழுது இந்த ச்லோ கத்திலே மோக்ஷத்தை - பேரின்பத்தைப்பெற - விரும்பு கின்ற பக்தர்களுக்கு த்யாநக்ரமமும், த்யாநத்திற்குகந்த மூர்த்தியின் வடிவமும். அதனாலேற்படும் பலனும் சொல் லப்பெறுகின்றது—

आभट्या शशिखण्डमण्डितजटाजूटां नृमुण्डस्रजं
वन्धूकप्रसवारुणाम्वरधरां प्रेतासनाध्यासिनीम् ।
त्वां ध्यायन्ति चतुर्भुजां त्रिनयनामापीनतुङ्गस्तनीं
मध्ये निम्नवलित्रयाङ्किततनुं त्वद्रूपसंवित्तये ॥ ११ ॥

हे भारति - ஓ தாயே! **त्वद्-रूप-सं-वित्तये** - உன்னு டைய ஸ்வரூபஸாக்ஷாத்காரத்தின் பொருட்டு; **आभट्या** - ஆர்படீ என்ற ஆஸநவிசேஷத்தோடு; **प्रेत-आसन-अध्यासिनीम्**-பரமசிவனுடைய வாம (இடது) பாகத்திலிருப்பவளும்; **शशि-खण्ड-मण्डित-जटा-जूटाम्**-சந்த்ரகலையினால் அலங்கரிக்கப்பெற்ற ஜடாமகுட

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

த்தோடு கூடியவளும்; नृ-मुण्ड स्रजम्-மண்டை ஓடுகளா லாகிய மாலையை யணிந்தவளும்; बन्धूक-प्रसव - अरुण - अम्बर-धराम् - செம்பருத்திப் புஷ்பம் போன்ற சிவந்த வஸ்த்ரத்தைத் தரித்தவளும்; चतुर्भुजाम्; நான்கு கைகளை யுடையவளும்; त्रिनयनाम् - மூன்று கண்களை யுடையவளும்; आ - पीन - तुङ्ग-स्तनीम् - சுற்றும் பருத் துயர்ந்த கொங்கைகளை யுடையவளும்; मध्ये-நடுவில்; निम्न - वलि - त्रय - अङ्कित-तनुम्-வளைந்த மூன்று மடிப்புக் களினால் அடையாளம் செய்யப்பெற்ற சரீரத்தை யுடையவளுமான; त्वाम् - உன்னை; ध्यायन्ति - த்யானம் செய்கின்றனர்.

ஆர்பட்யா சசிகண்ட மண்டிதஜடா-
ஜூடாம் ந்ருமூண்டஸ்ரஜம்
பந்தூகப்ரஸ வாருணாம்பரதராம்
ப்ரேதாஸநாத் யாஸிநீம் ।
த்வாம் த்யாயந்தி சதுர்புஜாம்
த்ரிநயநாமாபீநதுங்கஸ்தநீம்
மத்யே நிம் ந வலித்ரயாங்கிததநும்
த்வத்ரூப ஸம்வித்தயே ॥ 11 ॥

(பொழிப்புரை) ஓ தாயே! மோக்ஷத்தை விரும்பு கின்ற பக்தர்கள், உன்னுடைய ஸ்ருபத்தைக் காண விரும்பி, ஆர்படீ என்ற ஆஸந விசேஷத்தோடு ஸ்ரீபரம சிவனுடைய இடதுபுறத்திலிருப்பவளும், சந்த்ரகலையைத் தலையில் தரித்தவளும், மண்டையோடுகளை மாலையா யணிந்தவளும்; செம்பருத்திப் புஷ்பமெனச் சிவந்த வஸ்த்ரத்தை யணிந்தவளும்; நான்கு கைகளோடும்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

மூன்று கண்களோடும், நாற்புறமும் நன்கு பருத்துயர்ந்த கொங்கைகளோடும், நடுவே மூன்று மடிப்புக்களால் அடையாளம் செய்யப்பெற்ற சரீரத்தோடு கூடியவளாக வும் உன்னை த்யாநம் செய்கின்றனர்.

(விரிவுரை) आर्भटी (ஆர்படீ) என்பது ஒரு ஆஸந விசேஷமாகும். அந்த ஆஸநத்தினுடைய லக்ஷணம் வருமாறு; 'ऊरुद्वयं निधायोर्वोः स्थितिरार्भटिकासनम्' ஊருத்வயம் நிதாயோர்வோ: ஸ்திதிரார்படிகாஸநம்- 'இடது தொடையின் மேல் வலது தொடையையும், வலது தொடையின் மேல் இடது தொடையையும், சேர்த்து உயர்த்தி உட்காருவது ஆர்படீ என்ற ஆஸ நபேதமாகும். மற்றும், "समं कायशिरोग्रीवं धारयन्नचलं शिरः ஸமம் 'காயசிரோக்ரீவம் தாரயந்நசலம் சிர:"- "சரீரம், சிரஸ், கழுத்து இவைகளை அசையாமல் ஸமமாகச் செய்ய வேண்டும்" எனவும் கூறியிருப் பது போல அவயவங்களை வளையாமல் நேராகச் செய்து த்யாநம் செய்ய வேண்டும். இந்த ஆர்படீ என்ற ஆஸநம் மிகவும் பெருமை வாய்ந்ததாகும்.

இவ்விடத்தில், प - इत - आसन - अध्यासिनीम्- (प्रेतः) ப்ரேத: என்ற பதத்தில் प+इतः - प्रेतः "எப்பொழு தும் பரமசிவனுடன் சேர்ந்திருப்பவள்" எனச் சிவ பரமாகப் பொருள் கொள்ள வேண்டும். இப் பதத் திற்கு ஸ்ரீ ஸோமதிலகர் என்ற உரை ஆசிரியர், शिवारूढाम्-சிவனோடு சேர்ந்தவள்" என்று உரையும் செய்திருக்கிறார்.

नृ-मुण्ड-स्रजम्-ந்ருமுண்டஸ்ரஜம்- என்ற இப்பதத் திற்கு ஸாதாரணமாக மண்டையோடுகளான மாலை

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

எனப் பொருளாகும். எனினும் உண்மைப் பொருள் அதுவன்று. இப்பதத்திற்கு முல்லைமாலைகளென்றே மண்டையோடு போல் பெருத்தும் வர்த்துலமாகவும், வெண்மையாகவுமிருக்கின்ற முத்துக்களுடைய மாலை யென்றே, செண்பக மாலையென்றே பொருள் கொள்ள வேண்டும். இவ்விதமே ஸ்ரீராகவாநந்தர் உரைசெய்திருக்கிறார். இதற்கு மற்ற விசேஷமான பொருள்களை அங்கே காணலாம்.

ஆனால் ஸ்ரீஸோமதிலகர் "கபால மாலையை யணிந்தவன்" என்று தான் பொருள் கொள்ளு கிறார். ஸ்ரீஸிம்ஹராஜரோ விசேஷமாகப் பொரு ளொன்றும் கூறாது இந்த ச்லோகத்திலே ஸ்ரீதேவி யின் ப்ரௌடாவஸ்தை (நடுவயது) வர்ணிக்கப் பெறுகின்றது, வேறு விசேஷம் ஒன்றுமில்லை எனச் சொல்லுவர்.

மேலும், இந்த ச்லோகம் இரண்டாவது பீஜத்தி னுடைய ககாரலகாரங்களைத் தள்ளி எஞ்சிய காம கலையான ஈம்காரத்தின் வடிவாகிய ஸ்ரீதேவியி னுடைய த்யாந ரூபத்தையும் சொல்லுவதாகும்.

चतुर्भुजाम्-சதுர்புஜாம்-என்ற பதத்திற்கு நான்கு கைகளிலும் பாசம், அங்குசம், கரும்பு, புஷ்பபாணம் இவைகளைத் தரித்தவள் என்று பொருள்.

इक्षुचापप्रसूनेषु पाशाङ्कुशलसद्भुजाम् ।
ध्यायेत्कामकलां देवीं कामेशाङ्कनिवासिनीम् ॥

இக்ஷுசாபப்ரஸூநேஷுபாசாங்குசலஸத்புஜாம்।
த்யேத் காமகலாம் தேவீம் காமேசாங்கநிவாஸிநீம்॥

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

“ கரும்புவில், புஷ்பபாணம், பாசம், அங்குசம், இவைகளினால் பிரகாசிக்கின்ற கைகளையுடையவளும், பரமசிவனுடைய மடியில் வஸிப்பவளும், காமகலையின் வடிவாயமைந்தவளுமான ஸ்ரீதேவியை த்யாநம் செய்ய வேண்டும் ”. என்பதும் சைவாகம ரஹஸ்யமாகும். உண்மையில் த்ரிபுரைக்கும், த்ரிபுரஸுந்தரிக்கும் பேதம் கிடையாது. ஆகவே இந்த ச்லோகமானது முக்யமாயிருப்பதோடுமல்லாமல் ஸ்ரீத்ரிபுரஸுந்தரியின் த்யான வடிவாயுள்ளது என்பதும் அறியத்தக்கது.

(அவதாரிகை) எவர்கள் “ உன்னை மனதாலும் நினைப்பதில்லையோ அவர்களுக்கு கவிதாசக்தியானது எவ்விதமுண்டாகும் ” என்றும், ஸ்ரீதேவியை உபாஸிக்காதவர்களுக்கு ஸர்வஜ்ஞத்வம் கிடைப்பதும் துர்லபமென்று முன்பு சொல்லப்பட்டது, இப்பொழு ஸ்ரீதேவியை உபாஸிப்பவர்களுக்கு அந்த ஸர்வஜ்ஞத்வமும் கிடைப்பது ஸுலபமென்பதை இந்த ச்லோகத்தினால் உபதேசிக்கப்பெறுகின்றது—

जातोऽप्यल्पपरिच्छदे क्षितिभुजां सामान्यमात्रे कुले
निःशेषावनिचक्रवर्तिपदवीं लब्ध्वा प्रतापोन्नतः ।
यद्विद्याधरबृन्दवन्दितपदः श्रीवत्सराजोऽभवद्
देवि त्वच्चरणाम्बुजप्रणतिजः सोऽयं प्रभावोदयः ॥ १२ ॥

(பதவுரை) हे देवि-ஒளியின் வடிவே ! ஓ தாயே ! श्रीवत्सराजः- ஸ்ரீவத்ஸராஜன் என்னும் அரசன் ; अल्प - परिच्छदे - அல்பமான உபகரணங்களோடு

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

கூடிய ; सामान्यमात्रे - கேவலம் மண்டலாதிபதி என்ற அளவிலே ; क्षिति - भुजाम् - சிற்றரசர்களுடைய ; कुले- வம்சத்தில் - जातः - अपि - பிறந்தாலும் प्रताप - उन्नतः - பராக்ரமத்தால் உயர்ந்த நிலையையடைந்து ; निः-शेष-अवनि-चक्रवर्ति-पदवीम् - ஸகல ஸார்வபௌமர் களுடைய பதவியை ; लब्ध्वा - அடைந்து ; विद्या धर- वृन्द-वन्दितपदः - வித்யாதரஸமூஹங்களால் வணங்கப் பெற்ற பாதங்களையுடையவனாக ; अभवत् - ஆனான் ; इति - என்பது ; यत् - யாதொன்று உண்டோ ; सः - அப்புகழ்வாய்ந்த ; अयम् - இந்த (பெருமையும்) त्वत्- चरण- अम्बुज:-प्रणतिजः-உன்னுடைய சரணகமலங்களை ஸேவித்தகாரணத்தினாலுண்டாகிய ; प्रसाद - उदयः - அநுக்ரஹத்தினுடைய உதயமன்றோ !

ஜாதோऽப்யல்ப பரிச்சதே க்ஷிதிபுஜாம்
  ஸாமான்ய மாத்ரே குலே
நி:சேஷாவநி சக்ரவர்திபதவீம்
  லப்த்வா ப்ரதாபோந்நத: ।
யத்வித்யாதர ப்ருந்த வந்திதபத:
  ஸ்ரீ வத்ஸராஜோऽபவத்
தேவி ! த்வச்சரணாம்புஜப்ரணதிஜ:
  ஸோऽயம் ப்ரஸாதோதய: ॥ 12 ॥

(பொழிப்புரை) ஒளியுடன் திகழும் ஓ தாயே ! ஸ்ரீவத்ஸராஜன் என்ற அரசன் ஸாதாரண அரசகுடும்பத்தில் பிறந்தும், தன்னுடைய பராக்ரமத்தினால் ஸார்வ பௌமர்களாகிய சக்ரவர்த்திகளை வென்று, நான்கு ஸமுத்ரமும் சூழ்ந்த இத்தரணியை ஏகசக்ராதிபதியா யிருந்துகொண்டு, வேத வேதாங்கங்களை முற்றும் கற்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

றுணர்ந்த முனிவர்களாலும், ஞானிகளாலும், தேவர்களாலும், வித்யாதரர்களாலும் ஸேவிக்கத்தக்க மஹிமையையடைந்ததும், உன்னுடைய திருவடித்தாமரையை அவன் இடைவிடாது ஸேவித்த காரணத்தினாலன்றோ!

(விரிவுரை) ஸ்ரீ வத்ஸராஜன் என்ற இந்த அரசன் கௌசாம்பீ யென்னும் நகரத்திலே ஒரு சிற்றரசனாக இருந்த உதயனன் என்பவன். இந்த உதயனனையே வத்ஸராஜன் எனக் கூறுவதுமுண்டு.

"प्राप्यावन्तीनुदयनकथाकोविदग्रामवृद्धान्" ப்ராப்யாவந்தீநுதய நகதாகோ விதக்ராம வ்ருத்தான்—"உதயனன் என்ற அரசனுடைய கதையைப் புகழ்வதில் திறமை வாய்ந்த மூதியோர்கள் நிறைந்த அவந்தீ தேசத்தையடைந்து" என்றும்; "प्रद्योतस्य प्रिय-दुहितरं वत्सराजोऽथ जह्रे "ப்ரத்யோதஸ்ய ப்ரியதுஹிதரம் வத்ஸராஜோऽத ஜஹ்ரே" பிரத்யோதன் என்ற அரசனுடைய அன்புள்ள மகளை வத்ஸராஜன் என்ற அரசன் அபஹரித்தான்" எனவும் இத்துதியை இயற்றிய கவிகுலதிலகன் ஸ்ரீ காளிதாஸனும்; "लोके हारि च वत्स - राजचरितम्"— லோகே ஹாரிச வத்ஸராஜ சரிதம் "உலகத்தில் ஸ்ரீ வத்ஸராஜனுடைய சரிதம் மக்களுடைய மனதைக் கவர்வதாகும்" என ஸ்ரீ ஹர்ஷகவியும் வர்ணித்திருக்கின்றனர்.

கேவலம் ஒரு சிற்றரசனான ஸ்ரீவத்ஸராஜன்; யௌகந்தராயணன், ருமண்வான் முதலிய மந்த்ரீ ஸேநாதிபதி இவர்களுடைய உதவியினால் ஒரு பெரிய சக்ரவர்த்தி பதவியை யடைந்தான் என கதாஸரித்ஸாகரம் கூறும்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஸ்ரீவத்ஸராஜனுடைய மற்றுமுள்ள விசேஷங்களை ரத்னாவலீ, ஸ்வப்நவாஸவதத்தம் முதலிய நாடகங்களில் விரிவாகக் காணலாம்.

இவ்விடத்தில் ஸ்ரீலகுபட்டாரகர் ஸ்ரீ தேவியை உபாஸனை செய்து ஸ்ரீவத்ஸராஜன் மிகுந்த பெருமையையடைந்தான் என்று வர்ணிப்பதிலிருந்து அந்த அரசன் தன் முயற்சியும், சிறந்த கல்வியறிவும்; ஸ்ரீதேவீயுபாஸகனுகவும் இருந்து கொண்டு, சக்ரவர்த்திகளாலும், கவிகளாலும், முநிவர்களாலும், தேவர்களாலும், வணங்கத்தக்க குணுதிசயங்களைப் பெற்று விளங்கியவனெனவும் தெரிய வருகிறது. (12)

(அவதாரிகை) "ஓ அன்னையே; உன்னை எவர்கள் மனதாலும் நினைத்து த்யாநம் செய்யவில்லையோ, அவர்களுக்கு கவிதாசக்தியானது எவ்விதமுண்டாகும்" என்று முன்பு கூறியதையே மறுபடியும் வற்புறுத்தி, அதை விரிவாகச் சொல்ல நினைத்து, அவ்விதம் த்யாநம் செய்யாவிடில், அதனுல் ஏற்படுகின்ற குற்றமும் இந்த ச்லோகத்திலே வர்ணிக்கப் பெறுகின்றது—

चण्डि त्वच्चरणाम्बुजार्चनकृते बिल्वीदलोल्लुण्ठन-
त्रुट्यत्कण्टककोटिभिः परिचयं येषां न जग्मुः कराः ।
ते दण्डाङ्कुशशङ्खचापकुलिशश्रीवत्समत्स्याङ्कितै-
र्जायन्ते पृथिवीभुजः कथमिवाम्भोजप्रभैः पाणिभिः ॥ १३ ॥

(பதவுரை) हे चण्डि-மிகுந்த கோபமுள்ளவளே! ஓ அன்னையே! येषाम्-எவர்களுடைய; कराः-கைகள்; त्वत् - चरण - अम्बुज - अर्चन - कृते-உன்னுடைய - சரண கமலங்களை-அர்ச்சனை-செய்வதில்; बिल्वी-दल-उल्लुण्ठन

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

त्रुट्यत् - कण्टक - कोटिभिः - பில்வதளங்களைக் கொய்யும் பொழுது (அதன்) முள்ளுகளுடைய நுனிகளோடு; परिचयम् - பழக்கத்தை; न जग्मुः - அடையவில்லையோ; ते - அவர்கள்; दण्ड-अङ्कुश-चक्र-चाप-कुलिश-श्रीवत्स-मत्स्य अङ्कितैः - தண்டம், அங்குசம், சக்ரம், தனுஸ், வஜ்ராயுதம், ஸ்ரீ வத்ஸம், மத்ஸ்யம், முதலிய ரேகைகளால் அடையாளம் செய்யப்பட்டதும்; अम्भोज-प्रभैः - தாமரைப் புஷ்பங்களுடை சிவந்த காந்திபோன்ற காந்தியோடு கூடியவைகளுமான; पाणिभिः - கைகளோடு (கூடிய) पृथिवी-भुजः - அரசர்களாக; कथम्-इव - எவ்விதம்; जायन्ते - பிறக்கின்றனர்? ஒருக்காலும் பிறக்க முடியாதன்றோ!

சண்டி த்வச்சரணம் புஜார்சநக்ருதே
பில்வீதளோல்லுண்டந-
த்ருட்யத் கண்டக கோடிபி: பரிசயம்
யேஷாம் ந ஜக்மு: கரா:।
தே தண்டாங்குச சக்ரசாபகுலிச-
ஸ்ரீ வத்ஸ மத்ஸ்யாங்கிதைர்
ஜாயந்தே ப்ருதிவீபுஜ: கதமிவாம்-
போஜப்ரபை: பாணிபி: ‖ 13 ‖

(பொழிப்புரை) மிகுந்த கோபமுள்ளவளே ஓ தாயே எவர்களுடைய கைகள், உன்னுடைய் சரண கமலங்களைப் பூஜை செய்வதற்கு பில்வதளங்களைக் கொய்யும் பொழுது அதனுடைய முட்களான் கீறப்பட்ட வடுக்களோடு கூட பழக்கத்தை யடைய வில்லையோ, அவர்கள் தண்டம், அங்குசம், சக்ரம், தனுஸ், வஜ்ரம், ஸ்ரீ வத்ஸம்,

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

மத்ஸ்யம் முதலிய ரேகைகளால் அடையாளம் செய்யப்பட்டு, தாமரைமலர் போலச் சிவந்து மிருதுவாயிருக்கின்ற கைகளோடு காணப்பெறுகின்ற உத்தம ராஜ லக்ஷணம் பொருந்திய சக்ரவர்த்திகளாக எவ்விதம் பிறக்க முடியும்? உனது சரண கமலங்களை இடைவிடாது எப்பொழுதும் பில்வம் முதலிய புஷ்பங்களைக் கொண்டு அர்ச்சனை செய்வதன் பயனாகவே உலகில் சக்ரவர்த்தியாகப் பிறக்க முடியுமென்பதும் தாத்பர்யம்.

மேலே கூறிய தண்டம், அங்குசம், சக்ரம் முதலிய ரேகைகள் ஸாமுத்ரிக லக்ஷணங்களை யனுஸரித்து சக்ரவர்த்தி யாயிருக்கும் தன்மையை ஸூசனை செய்வதாகும். "पत्रेषु बिल्वपत्रं स्यान्नान्यत्पत्रं विशिष्यते"—பத்ரேஷு பில்வபத்ரம் ஸ்யாந்நாந்யத் பத்ரம் விசிஷ்யதே "பத்ரங்களில் பில்வபத்ரம் சிறந்தது, மற்றவைகள் அவ்வளவு விசேஷமன்று" என ஆகமங்கள் கூறுவதால், ஸ்ரீ தேவியை அர்ச்சனை செய்வதற்கு பில்வம் மிகச் சிறப்புள்ளதென கூறப்பெற்றுள்ளது.

மற்றும், "वामे पुस्तकधारिणीम्" —வாமே புஸ்தகதாரிணீம் என்று ஏழாவது ச்லோகத்திலே சொல்லப்பெற்ற கவிதாசக்தியினாலுண்டாகும் ஸர்வஜ்ஞத்வமும், இந்த ச்லோகத்திலே சொல்லியிருக்கின்ற சக்ரவர்த்தி லக்ஷணத்திற்கு உபலக்ஷணமெனக் கொள்ளவேண்டும். அதே போல இந்த ச்லோகத்திலே கூறப்பெற்ற சிறந்த சக்ரவர்த்திலக்ஷணமும், அந்த ஏழாவது ச்லோகத்தில் கூறப்பட்ட ஸர்வஜ்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஞத்வ லக்ஷணத்திற்கு உபலக்ஷணமாக் கொள்ள வேண்டும்.

தவிர, " यत्पादपद्मं समुपासकानां भोगापवर्गौ तु नृणां करस्थौ " —யத்பாதபத்மம் ஸமுபாஸகாநாம் போகாபவர்கௌ து ந்ருணும் கரஸ்தௌ "எந்த தேவியினுடைய சரணகமலத்தை நன்ருக உபாஸிக்கின்ற மனிதர்களுக்கு, போகமும், (இவ்வுலக ஸம்பந்தமான பலன்கள்) அபவர்கமும், (மறு உலக ஸம்பந்தமான பலன்கள்) அவர்களுடைய கைகளிலிருக்கின்றனவோ" எனச் சிறப்பித்துக் கூறியிருப்பது போல, இங்கே ஸ்ரீ மஹாதேவியினுடைய பாதகமலங்களை அர்ச்சனை செய்வது அவச்யமென வற்புறுத்துவதாகும். அர்ச்சனையின் வாயிலாக ஸமஸ்த ஸித்திகளும் கைகூடு மென்பதும் ஆகமங்களின் தாத்பர்யமாகும். "न पूजावर्जितं सौख्यम्" —ந பூஜாவர்ஜிதம் ஸௌக்யம் "ஸௌக்யமென்பது பூஜா - அர்ச்சனை - வடிவாயில்லாது கிடைக்காது" என்பதும் ஆகமங்களுடைய கொள்கையாகும். 'சண்டீ' என்று அழைப்பதன் தாத்பர்யமானது, ஸ்ரீ தேவியை ஸுலபமாக ஆராதிப்பது முடியாது என்பதையும் ஸூசனை செய்வதாகும்.* (13)

(அவதாரிகை) முன் ச்லோகத்தில் "உன்னுடைய சரணாரவிந்தங்களை அர்ச்சனை செய்துதான் இவ்வுலக

---

* இந்த 'சண்டீ' என்னும் சொல்லின் விஸ்தாரமான பொருள் விளக்கங்களை எமது தேவீமஹாத்ம்யத்தினுடைய தமிழுரையில் காணலாம்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஸுகத்தையும் மறு உலக ஸுகமான மோக்ஷத்தையும் அடைய முடியும் " என்று கூறப்பெற்றது. அவ்விதம் அர்ச்சனை செய்வதற்குறிய அதிகாரிகள் போன்றவர்கள், அந்த அர்ச்சனைக்கு வேண்டிய உபகரணங் (ஸாதனங் கள்) கள், அதனுலேற்படும் பலன்கள், அப்பலன்கள் எப் பொழுது கிடைக்குமென்பதும் உபாஸிக்க வேண்டிய ஸ்ரீதேவியின் வடிவமும் உபாஸனு விதிகளும் இங்கே விளக்கப்பெறுகின்றன.

विप्राः क्षोणिभुजो विशस्तदितरे क्षीराज्यमध्वासवै-
स्त्वां देवि त्रिपुरे परापरमयीं संतर्प्य पूजाविधौ ।
यां यां प्रार्थयते मनः स्थिरतया तेषां त एते ध्रुवं
तां तां सिद्धिमवाप्नुवन्ति तरसा विघ्नैरविघ्नीकृताः ॥ १४ ॥

(பதவுரை) हे त्रिपुरे-முப்புரத்தையும் இருப்பிடமாகக் கொண்டவளே! हे देवि! ஒளியுடன் வியங்குபவளே! ஓ தாயே! विप्राः - அந்தணர்கள்; क्षोणि-भुजः- க்ஷத்ரி யர்கள்; विशः - வைச்யர்கள்; तत्-इतरे - இந்த மூன்று வர்ணத்தைக் காட்டிலும் வேறுபட்டவர்களான சூத்ரர்கள்; क्षीर-आज्य-मधु-आसवैः - பால்-நெய்-தேன்- மத்யம் இவைகளால்; परापरमयीम् - ஸகல நிஷ்கல வடிவாயிருக்கிற; त्वाम् - உன்னை; पूजा-विधौ - பூஜை செய்வதில்; - सं-तर्प्य - ஸந்தோஷிக்கும்படி செய்து; यां - याम् - எந்த எந்த; सिद्धिम् - ஸித்தியை; तेषाम् - அவர்களுடைய; मनः - மனமானது; स्थिरतया - உறு தியோடு கூட; प्रार्थयते - விரும்புகின்றதோ; ते - एते- அந்த பக்தர்களும்; विघ्नैः தடைகளினுல்; (தொடரம்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

படினும்) अविघ्नी - कृताः - விலக்கப்பட்டவர்களாகக் கொண்டு; तां-ताम् - அந்த அந்த (ஸித்தியை) अव - आप्नुवन्ति - அடைகின்றனர்; ध्रुवम् - நிச்சயம்.

விப்ரா: க்ஷோணிபுஜோ விசஸ்ததிரே
க்ஷீராஜ்ய மத்வாஸவை-
ஸ்த்வாம் தேவி த்ரிபுரே பராபரமயீம்
ஸம்தர்ப்ய பூஜாவிதௌ।
யாம் யாம் ப்ரார்த்தயதே மந:-
ஸ்திரதயா தேஷாம் த ஏதே த்ருவம்
தாம் தாம் ஸித்திமவாப்நுவந்தி தரஸா
விக்நைரவிக்நீக்ருதா: ‖ 14 ‖

(பொழிப்புரை) முப்புரத்தையும் இருப்பிடமாகக் கொண்டவளே! ஒளியின் வடிவே! ஓ தாயே! ப்ரஹ்ம-க்ஷத்ரிய-வைச்ய-சூத்ரர்களென்ற நான்கு வர்ணத்தவர்களும்; பால், நெய், தேன், மத்யம் என்ற திரவியங்களைக் கொண்டு ஸகல வடிவாகவும், நிஷ்கல வடிவாகவுமுள்ள உன்னைப் பூஜை செய்து திருப்தி செய்வித்தால், அவர்களுடைய மனமானது உறுதியோடு கூட எந்த எந்த ஸித்திகளை விரும்புகின்றதோ, அந்த அந்த ஸித்திகளையும், பலவித இடையூறுகளால் தொடரப்பட்டாலும், அந்த பக்தர்கள் உனது அருளின் பெருமையால் இடையூறுகள் விலக்கப்பட்டு, இப்பிறவியிலேயே அவர்கள் விரும்பிய பலன்களையும் அடைகின்றனர் என்பது உறுதியன்றோ!

(விரிவுரை) இவ்விடத்தில், तदितरे - ததிதரே - 'மூன்று வர்ணத்தவரைக் காட்டிலும் வேறுபட்டவர்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

களான சூத்ரர்கள் என்றதால் ஸ்ரீ மஹாதேவியை பூஜை செய்வதற்கு பக்தியுள்ள எவரும் தகுதியுள்ள வர்கள் என்பதைக் குறிப்பதாகும். **परापर-मयीम्-** பராபரமயீம்”-என்ற பதத்தால் ஸ்ரீதேவியை ஸகுண மாகவோ, நிர்குணமாகவோ, உபாஸனை செய்யலா மென்றும்; “सगुणा रागिभिः सेव्या निर्गुणा तु विरागिभिः” —ஸகுணா ராகிபி: ஸேவ்யா நிர்குணா து விராகிபி:” “ஸகுண வடிவை பயனில் விருப்பமுள்ளவர்களும், நிர்குணவடிவை விரக்தர்களும் தன்னுடன் அபேத வடிவாக, கர்மத்திலே அகர்மத்தைக் கண்டு கொண்டு, “यतस्तृतीयो विदुषां तुरीयं तत्परं महः”—யதஸ்த்ருதீயோ விதுஷாம் துரீயம் தத்பரம் மஹ: “எந்த வஸ்துவா னது அறிஞர்களுக்கு மூன்றாவதாக உள்ளதோ, அந்த வஸ்துவானது. துரீய வடிவாய் நிற்கும் சிறப்பு வாய்ந்த ஒளியே யாகும்.” என்பது போல உறுதி யோடு கூட தர்ப்பணாதிகளைச் செய்கின்ற காரணத் தினாலும்; “निस्त्रैगुण्ये पथि विचरतां को विधिः को निषेधः” நிஸ்த்ரை குண்யே பதி விசரதாம் கோ விதி: கோ நிஷேத:” “முக்குணங்களுக்குமப்பாலுள்ள வழியில் ஸஞ்சரிக்கின்றவர்களுக்கு விதியேது நிஷேதமேது?” என்பது போலவும்; அவர்களுக்கு பாபமோ, புண்ய மோ, பந்தமோ, மோக்ஷமோ ஒன்றும் கிடையாது என்று கூறியிருப்பதும் இங்கு அறியத்தக்கது.

“**सं-तर्प्य-पूजा-विधौ** - ஸம் - தர்ப்ய-பூஜா-விதௌ- பூஜாவிதிகளில் நன்கு ஸந்தோஷிக்கும்படி செய்து,” என்றதால் விதிப்பிரகாரமுள்ள ஸ்ரீபராதேவதையை

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

னுடைய பூஜாஸமயத்தைத் தவிர மற்ற ஸமயங்களில் பிந்துதர்ப்பணாதிகளைச் செய்வது கூடாது என்பதைத் தெரிவிப்பதாகும். "मनः-स्थिरतया - மனஸ்திரதயா"-"மனமானது உறுதியோடு" என்றதால் சித்தத்தின் உறுதியின் பொருட்டு ஆஸநத்தை ஸ்வீகரிக்க வேண்டியதை ஸூசனை செய்வதாகும்."ध्रुवम्-த்ருவம் - நிச்சயம்" என்றதால் ஸ்ரீ தேவியின் திருவடியை ஸேவிக்கின்ற பக்தர்களுக்குள்ள ஸ்வாரூபவத்தை உறுதி செய்வதாகும்.

"तरसा:- தரஸா - விரைவில்" என்றதால் இப்பிறவியிலேயே ஸகல ஸித்திகளையுமடையக் கூடுமென்பதைத் தெரிவிப்பதாகும். "विघ्नैः अविघ्नी-कृताः-விக்னை: அவிக்னீக்ருதா:"-"இடையூறுகளோடு கூடியிருந்தாலும், அவைகளை விலகச்செய்து" என்றதால் வலியதான ப்ராரப்த கர்மங்கள் முதலிய பிரதிபந்தங்கள் உண்டானாலும், அவைகளையெல்லாம் நாசமடையச் செய்து அநுக்ரஹம் செய்கின்றவள் என்பதும் கிடைப்பதாகும்.

மற்றும் இந்த ச்லோகத்திலே கூறியுள்ள ரஹஸ்யார்த்தமாயிருக்கின்ற பராபரஸகலநிஷ்கலவடிவாகிய ஸ்ரீதேவியினுடைய உபாஸனைகளும்; பூஜாக்ரமங்களும், அவைகளுக்குரிய திரவியங்களும், அதிகாரிகளும், அங்கந்யாஸங்களும், பலன்களும், ஸ்ரீஸிம்ஹராஜர், ஸ்ரீஸோமதிலகர் ஸ்ரீராகவாநந்தர் முதலியவர்களுடைய உரைகளில் நன்கு விளக்கப் பெற்றுள்ளன. அவைகளை அங்கே விரிவாகக் காணலாம்.

CC-0. Mutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

உரையாசிரியர்களுடைய அபிப்பிராயமனைத்தும் இங்கு விளக்கப் போதிய சக்தியும் எனக்குக் கிடையாது. புத்தகமும் பெருகிவிடும். மேலும் அந்த ரஹஸ்யார்த் தங்களை ஸ்ரீகுருவினுடைய உபதேசத்தோடு தீக்ஷாஸ்வீ கரணம் செய்துகொண்டு, அக்குருக்களுடைய ஸம்பிர தாய க்ரமமாக வந்துள்ள வழியைப் பின் பற்றுகின்றவர் களிடமே தெரிந்து கொள்ள வேண்டிய விஷயமாதலால் இந்த ச்லோகத்திற்கு உரை எழுதுவதை இத்துடன் முடித்துக் கொள்ளுகிறேன்.

(அவதாரிகை) முன் ச்லோகத்திலே, "परापरमयीम् பராபரமயீம்" என்று ஸ்ரீ தேவியினுடைய விசேஷம் சொல்லப்பெற்றது. இப்பொழுது. அந்த ச்லோகத் திலே கூறப்பெற்ற தேவியினுடைய பராவடிவம் யாது? அபரா வடிவம் யாது? என்பதை அறிய விரும்பும் பக்தர் களுக்கு முன்னதான பராவடிவம் இங்கு விளக்கப்பெறு கின்றது—

शब्दानां जननि त्वमत्र भुवने वाग्वादिनीत्युच्यसे
त्वत्तः केशववासवप्रभृतयोऽप्याविर्भवन्ति ध्रुवम् ।
लीयन्ते खलु यत्र कल्पविरमे ब्रह्मादयस्तेऽप्यमी
सा त्वं काचिदचिन्त्यरूपमहिमा शक्तिः परा गीयसे ॥१५॥

(பதவுரை) हे वाग्वादिनि! வாகிந்த்ரியத்தை ப்ரேரணை செய்கின்றவளே! ஓ தாயே! त्वम् - நீ; अत्र - இந்த; भुवने - (சப்தாத்த வடிவான) பிரபஞ் சத்தில்; शब्दानाम् (பராமுதலிய) சப்தங்களுக்கு; जननी - தாய்; इति - என்று; उच्यसे - (அறிஞர்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

களால்); சொல்லப்படுகிறாய்; केशव-वासवःप्रभृतयः- விஷ்ணு, இந்த்ரன், முதலியவர்கள்; त्वत्तः-உன்னிட மிருந்து; आविर्भवन्ति - உண்டாகின்றனர்; ध्रुवम् - நிச்சயம்-अयी-இந்த; ब्रह्म-आद्यः - ப்ரஹ்மன் முதலியவர் களும்; ते, अपि-அந்த விஷ்ணு முதலியவர்களும்; कल्प-विरमे - பிரளயத்தின் முடிவில்; यत्र - எவ்விடத் தில்; लीयन्ते, खलु - லயத்தை (ஒடுக்கம்) அடைகின்ற னரோ! सा - (அப்பெருமையை வாய்ந்த; त्वम् - நீ; काचित् - அநிர்வசநீயமான; महिमा - சிந்தனைக்கும் எட்டாத பெருமையையுடைய; परा - பராவடிவான; शक्तिः - சக்தி என்று; गीयसे-துதிக்கப்பெறுகின்றாய்-

சப்தாநாம் ஜநநி த்வமத்ர புவநே
வாக்வாதிநீத்யுச்யஸே
த்வத்தஃ கேசவ வாஸவப்ரப்ருதயோ-
ऽப்யாவிர்பவந்தி த்ருவம் |
லீயந்தே கலு யத்ர கல்பவிரமே
ப்ரஹ்மாதயஸ்தேऽப்யமீ
ஸா த்வம் காசிதசிந்த்யரூபமஹிமா
சக்திஃ பரா கீயஸே || 15 ||

(பொழிப்புரை) வாக்கு என்னும் இந்திரியத்தை (வார்த்தைகளை இயங்கச் செய்வது) பிரேரணை செய்கின்ற ஓ அன்னையே! ஸரஸ்வதி! ஒலியின் வடிவாகவும், பொருளின் வடிவாகவும், தோற்றமளிக்கும் இப்பிரபஞ்சத்தில்; பரா, பச்யந்தீ, மத்யமா, வைகரீ என்ற நான்கு வகையான வடிவங்களோடு, ஐம்பது அக்ஷரங்களிலும் ப்ரவீ ஸமஸ்த வேதங்களுடைய லக்ஷ்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ணங்களாயிருக்கின்ற சப்தராசிகளோடு ஒன்றி யிருக்-கின்ற நீ, சப்தங்களுக்குத் தாயே போன்றவள் என அறிஞர்களால் புகழப்படுகின்ருய்.

தவிர, பிரபஞ்சத்தை நிர்மாணம் செய்கின்ற ப்ரஹ்மா, விஷ்ணு முதலிய தேவர்களும், தேவாஸுர மனுஷ்யர்களும் கல்பகாலத்தின் துவக்கத்திலே உன்னிட மிருந்தே உண்டாகின்றனர். அவ்விதமே, கல்பத்தின் முடிவிலும் உன்னிடமே லயத்தை அடைகின்றனர். இவ்வளவு சிறப்பு வாய்ந்த உன்னை, வாக்கினுல் நிர்ண யம் :செய்யமுடியாது, சிந்தனைக்கும் எட்டாத ஒரு மஹாசக்தி என வேதங்களும், உபநிஷதங்களும். ஆகமங் களும் போற்றுகின்றனவன்ரே !

இந்த ச்லோகத்திலுள்ள சப்த தத்துவங்களுடைய விசேஷங்களை ஸ்ரீராகவாநந்தர் ஸ்ரீஸோமதிலகர் முதலிய வர்களியற்றிய வியாக்யானங்களில் விரிவாகக் காண லாம். (15)

(அவதாரிகை) இவ்விதம் முன் ச்லோகத்திலே ஸ்ரீதேவியினுடைய ப்ரபஞ்சாதீதமான பராஸ்வரூபத் தைச் சொல்லி த்யாநம் செய்வதற்குத் தகுந்த மற்ருெரு ஸ்வரூபமாகிய அபரா என்னும் வடிவமானது இங்கு விளக்கப்பெறுகின்றது—

देवानां त्रितयं त्रयी हुतभुजां शक्तित्रयं त्रिस्वराः
त्रैलोक्यं त्रिपदी त्रिपुष्करमथो त्रिब्रह्म वर्णास्त्रयः ।
यत्किंचिज्जगति त्रिधा नियमितं वस्तु त्रिवर्गात्मकं
तत्सर्वं त्रिपुरेति नाम भगवत्यन्वेति ते तत्त्वतः ॥ १६ ॥

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பதவுரை) हे भगवति - பகவதி, தாயே! देवनाम्- தேவர்களுடைய; त्रितयम् - மூன்றும்; (ப்ரஹ்மா, விஷ்ணு: மஹேச்வரன்) हुतभुजाम् - அக்நிகளுடைய त्रयी - மூன்றும்; (கார்ஹபத்யம், ஆஹவநீயம், தக்ஷிணாக்நி) शक्तित्रयम् - சக்திகளுடைய மூன்றும்; (இச்சா சக்தி, ஞாநசக்தி. கிரியாசக்தி) त्रिस्वराः - மூன்று ஸ்வரங்களும்; (உதாத்தம்-அநுதாத்தம், ஸ்வரிதம்) त्रैलोक्यम् - மூன்று உலகங்களும்; (பூமி, ஸ்வர்க்கம், பாதாளம்) त्रिपदी - மூன்று பாதங்களாலான காயத்ரியும்; त्रिपुष्करम् - மூன்று தீர்த்தங்களும்; (கங்கை, யமுனை, ஸரஸ்வதீ) त्रिब्रह्म - மூன்று வேதங்களும்; (ரிக், யஜுஸ், ஸாம) त्रयः - மூன்று அக்ஷரங்களும்; (ஓங்காரத்தின் வடிவாகிய அகாரம், உகாரம், மகாரம்) जगति - உலகத்தில்; त्रिधा - மூன்றாக; नियमितम्- பரிச்சேதம் (விரிவு) செய்யப்பட்ட; यत्-किंचित्-எந்த எந்த; वस्तु-வஸ்துவானது' (இருக்கின்றதோ) तत्- அந்த; सर्वम् - எல்லா வஸ்துவும்; तत्त्वतः-உண்மையிலேயே; त्रिपुरा-इति த்ரிபுரா என்ற; ते-உன்னுடைய; नाम - பெயரை; अन्वेति - அநுஸரிக்கின்றது.

தேவாநாம் த்ரிதயம் த்ரயீ ஹுதபுஜாம்
 சக்தி த்ரயம் த்ரிஸ்வரா:
த்ரைலோக்யம் த்ரிபதீ த்ரிபுஷ்கரமதோ
 த்ரிப்ரஹ்ம வர்ணாஸ்த்ரய: ।
யத்கிஞ்சஜ்ஜகதி த்ரிதா நியமிதம்
 வஸ்து த்ரிவர்காத்மகம்
தத் ஸர்வம் த்ரிபுரேதி நாம
 பகவத்யன்வேதி தே தத்வத: ॥ 16 ॥

CC-0. Arutselvar R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பொழிப்புரை) ஷாட்குண்ய பரிபூர்ணே! (அறு வகை ஐச்வர்யங்களும் நிரம்பியுள்ள ஓ அன்னையே ;) ஆறு குணங்களாவன ஐச்வர்யம், வீர்யம், யசஸ், ஸ்ரீ, ஞானம், வைராக்யம் என்பன. இவைகள் குறைவில்லாது நிரந்தரமாக ஸ்ரீ தேவியினிடமிருப்பதாகும்.) ஓ அன்னையே! பிரஹ்ம - விஷ்ணு-மஹேசர்களும் ; வஸு-ருத்ர-ஆதித்யர்களும். அக்நி-வாயு-ஸூர்யர்களும் கார்ஹபத்ய ஆஹவநீய, தக்ஷிணாக்நிகளும் ; பௌம (பூமியிலிருப்பது) ஜார்டர (ஜடரத்திலிருப்பது) பாடவ (ஸமுத்திரத்திலிருப்பது) என்றவைகளும் ; இச்சா, ஞாந, க்ரியா சக்திகளும், உதாத்த-அநுதாத்த-ஸ்வரிதங்களும் ; ஸவர்க-பூமி-பாதாளங்களும்; மூன்று பாதங்களையுடைய காயத்ரியும் ; தேவ, ரிஷி, பித்ருக்களும் ; புஷ்டியைக் கொடுக்கின்ற மூன்று தீர்த்தங்களும் ; ரிக், யஜுஸ், ஸாமவேதங்களும் ; அகார-உகார-மகார-வடிவாயமைந்த ஓங்காரமும் ; ஆத்மா, அந்தராத்மா, பரமாத்மா, என்றவைகளும் ; குணபேதத்தால் மூன்று விதமாகப் பிரிந்த பிரக்ருதி, விக்ருதி, புருஷன் என்றவைகளும், ஸ்வரங்களும் ; வ்யஞ்ஜநங்களும் ; இரண்டு வகையான அநுஸ்வார-விஸர்கங்களும், வெளுப்பு, சிவப்பு, கருப்பு என்ற வர்ணங்களும் ; ப்ராஹ்மண-க்ஷத்ரிய - வைசிய-வர்ணங்களும் ; மற்றும் இவ்வுலகில் மூன்று எண்களால் ஸத்வம் முதலிய குணங்களைக் கொண்டு எந்தெந்த வஸ்துக்கள் குறிக்கப்படுகின்றனவோ அவைகளும் ; தர்ம, அர்த்த-காமங்களும் ; (அறம், பொருள், இன்பம்) ஜாக்ரத், ஸ்வப்ந-ஸுஷுப்திகளும் ; ப்ராத:, மத்யாஹ்ந:, ஸாயம் (காலை, நண்பகல், மாலை) என்ற ஸந்திகளும் ; பூர், புவ:, ஸுவ: (பூலோகம்-புவர்லோகம்-ஸுவர்லோகம்) என்ற

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

வைகளும்; பூத - பவிஷ்யத் - வர்த்தமானம் (சென்ற காலம், வருங்காலம், நிகழ்காலம்) என்றவைகளும்; இவைகளைப் போல மற்றும் எந்த எந்த வஸ்துக்கள் மூன்று விதமாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகளெல்லாம், உன்னுடைய த்ரிபுரா என்ற பெயரைக் காரணமாகக் கொண்டு பின் தொடரப் பெறுகின்றன.

"तत्त्वतः- உண்மையிலேயே" - என்றதால் முன்பு கூறிய ப்ரஹ்ம, விஷ்ணு, மஹேசர்கள் முதலிய த்ரிபுடிகளெல்லாம் உண்மையில் த்ரிபுரா என்ற பெயரைக் காரணமாகக் கொண்டது என்பதை வலியுறுத்துவதாகும். அவ்விதமில்லாவிடினும், இவைகளெல்லாம் உனது இருப்பிடமாகிய த்ரிபுரா என்ற நகரமாகவேனும் கொள்ள முடியுமென்பதும் ஸாரமாகும்.

(விரிவுரை) இந்த ச்லோகத்திற்கு விசேஷமாகச் சிற்சில பதங்களுக்குத் தமது விவரணத்திலே 'ஸ்ரீஸோமதிலகர்' என்ற உரையாசிரியர் உபாஸனா பரமாகவே ஸம்பிரதாயத்தைத் தழுவிப் பொருள் கூறுகிறார். அது வருமாறு—

"தேவாநாம்" என்ற பதத்திற்கு மூன்று குரவர்கள் என்றும், அவர்கள் முறையே குரு, பரமகுரு, பராத்பரகுரு என்றும்; 'ஹுதபுஜாம் த்ரயீ' என்பதற்கு மூன்று ஒளிகள் என்றும் அவை முறையே ஹ்ருதயத்திலும், நெற்றியிலும், சிரஸிலும் என்றும்; 'சக்தித்ரயம்' என்பதற்கு முறையே பிராஹ்மீ, வைஷ்ணவீ, மாஹேச்வரீ எனவும்; 'த்ரிஸ்வரா:-' அகாரம், இகாரம், பிந்து எனவும், 'த்ரைலோக்யம்'

CC-0. Amtsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

என்பதற்கு முறையே மூலாதாரம், ஸ்வாதிஷ்டாநம், மணிபூரகம், ஒன்று; ஆஹார - நிரோத விசுத்தி, இரண்டு; ஆஜ்ஞா-ஸ்பர்ச-ப்ரஹ்மஸ்தானம் மூன்று; ஆக மூன்று உலகமென்றும், 'த்ரிபதீ' என்பதற்கு ஜாலந்தரம், காமரூபம், ஒட்யாணம் என்ற மூன்று பீடங்கள் என்றும், அவ்விதமில்லாவிடில் கமநாநந்த -பரமாநந்த-கமலாநந்த என்ற மூன்று நாமாக்கள் எனவும், 'த்ரிபுஷ்கரம்' என்பதற்கு சிரஸ்-நாபி-ஹ்ரு தயகமலமென்றும், 'த்ரிப்ரஹ்ம' என்பதற்கு அதீத தம் (சென்றது) அநாகதம் (வரப்போவது) வர்த்த மான (நடப்பது) இவைகளை விளங்கச் செய்கின்ற ஹ்ருதயாகாசம், த்வாதசாந்தம், ப்ரஹ்மரந்த்ரம், எனவும், 'த்ரயோவர்ண:' என்பதற்கு வாக்பவம், காமராஜம், சக்தி பீஜம் எனவும், அல்லது மூலமந் த்ரமே மூன்று அக்ஷரங்கள் எனவும், முடிவில் மூன்று பத்மங்கள், மூன்று முத்ரைகள், மூன்று தேவிகள், மூன்று ஸித்திகள், மூன்று தூதிகள், மூன்று பீடங்கள், மூன்று மந்த்ரங்கள், மூன்று விரு க்ஷங்கள், மூன்று ஸமுத்ரங்கள், மூன்று ஸமாதிகள், மூன்று கலைகள் முதலியவைகள் யாவும் ஸ்ரீமஹா த்ரிபுர ஸௌந்தரியினுடைய ஸ்வரூபங்களெனவும் பொருள் கூறுகிறார். மற்றுமுள்ள ரஹஸ்யார்த்தங் களை மற்ற உரையாசிரியர்களுடைய நூல்களிலிருந்து அறிந்து கொள்ள வேண்டுவதாகும். (16)

(அவதாரிகை) முன் ச்லோகங்களிலே பரா-அபரா என்ற இரண்டுவிதமான சிவசக்தியின் வடிவாகிய விபூதி

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

யோடு கூடிய ஸ்ரீ தேவியினுடைய இரண்டு ஸ்வரூபத்தையும், த்ரிபுரா என்ற நாமத்தின் பெருமையையும் சொல்லப்பெற்றது. அடுத்துவரும் இந்த ச்லோகத்திலே எந்த எந்த காரியங்களை உத்தேசித்து எந்த எந்த நாமங்களை ஸ்மரணம் செய்ய வேண்டுமென்பது உபதேசிக்கப் பெறுகிறது.—

लक्ष्मीं राजकुले जयां रणमुखे क्षेमंकरीमध्वनि
क्रव्याद्द्विपसर्पभाजि शबरीं कान्तारदुर्गे गिरौ।
भूतप्रेतपिशाचजम्भकभये स्मृत्वा महाभैरवीं
व्यामोहे त्रिपुरां तरन्ति विपदस्तारां च तोयप्लवे ॥ १७ ॥

हे भगवति - ஓ தாயே! **राज-कुले** - அரச குலத்தி லுள்ளவர், **लक्ष्मीम्**-மஹாலக்ஷ்மீ யென்றும், **रण-मुखे** - யுத்தத்தின் துவக்கத்தில், **जयाम्** - ஜயாதேவியென்றும், **क्रव्याद-द्विप-सर्प-भाजि** -புலிகளாலும், காட்டுயானைகளாலும், ஸர்ப்பங்களாலும் ஆக்ரமிக்கப்பட்ட; **अध्वनि**-வழியில்; **क्षेमं-करीम्** - க்ஷேமங்கரீயென்றும், **कान्तार-दुर्गे** - காடுகளாலும், அகழிகளாலும் பிரவேசிக்க முடியாத, **गिरौ** - மலையில், **शबरीम्** - சபரீ என்றும், **भूत-प्रेत-पिशाच-जम्भक-भये** - பூதங்கள், ப்ரேதங்கள், பிசாசங்கள், ராக்ஷஸர்கள் முதலியவர்களிடமிருந்து உண்டாகும் பயத்தில், **महा-भैरवीम्** - மஹாபைரவீயென்றும், **व्यामोहे** - சித்தப்ரமத்தில், **त्रिपुराम्**- த்ரிபுரா என்றும், (**तोय-प्लवे** - ஜலத்தில் முழுகிய ஸமயத்தில், **ताराम्** - தாரா என்றும், (**त्वाम्** - உன்னை) **स्मृत्वा** - நினைத்து (ஸ்மரணம் செய்து) **विपदः** - ஆபத்துக்களை, **तरन्ति** - கடக்கின்றனர்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

லக்ஷ்மீம் ராஜகுலே ஜயாம் ரணமுகே
க்ஷேமங்கரீ மத்வநீ
க்ரவ்யாத த்விப ஸர்பபாஜி சபரீம்
காந்தார துர்கே கிரௌ ।
பூதப்ரேத பிசாச ஜம்பகபயே
ஸ்ம்ருத்வா மஹா பைரவீம்
வ்யாமோஹே த்ரிபுராம் தரந்தி
விபதஸ்தாராம் ச தோயப்லவே ॥ 17 ॥

(பொழிப்புரை) ஓ அன்னையே! பக்தர்கள் உன்னை அடியில் கண்ட ஏழு இடங்களிலும் ஸ்மரணை செய்து விபத்துக்களைக் கடக்கின்றனர். அந்த ஏழு இடங்கள் வருமாறு— அரச குலத்திலுள்ளவர்கள் ஸகல ஐச்வர்யத்தையும் கொடுக்க வல்ல மஹாலக்ஷ்மீ யென்றும்; போர் வீரர்கள் போர்க்களத்திலே ஜயத்தைக் கொடுக்கவல்ல ஜயாதேவீயென்றும்; புலி, காட்டுயானை, ஸர்ப்பங்கள் முதலிய துஷ்ட ஜந்துக்கள் நிறைந்த வழியிலே, க்ஷேமத்தைச் செய்கின்ற க்ஷேமங்கரீ யென்றும்; காடுகளாலும், அகழிகளாலும் சூழப்பட்டு பிரவேசிக்க முடியாத பர்வதத்தில் சபரீயென்றும்; பூத-ப்ரேத-பிசாச-ராக்ஷஸர்களால் உண்டாகின்ற பயத்தில் மஹா பைரவீ யென்றும்; சிந்தை கலங்கிய காலத்திலே ஸ்ரீத்ரிபுரா என்றும்; ஜலத்தில் முழுகிய நிலையிலே தாரா என்றும் உன்னை யுபாஸித்து அந்த அந்த விபத்துக்களை யெல்லாம் கடக்கின்றனர்.

(விரிவுரை) இங்கே சொல்லப்பெற்ற லக்ஷ்மீ, ஜயா, க்ஷேமங்கரீ, சபரீ, மஹாபைரவீ; த்ரிபுரா;

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

தாரா என்ற ஏழு நாமாக்களுடைய ஜபக்ரமங்கள், அடுத்த ச்லோகத்தில் மந்த்ர பாராயணத்தில் விளக்கப்பெறும். இந்த நாமாக்கள் யாவும் சப்தத்தால் பேதமேயன்றி அர்த்தத்தில் பேதம் கிடையாது. மற்ற விசேஷங்களையும், த்யாந க்ரமங்களையும், ஸித்தியின் பொருட்டு ஸ்ரீ குருபரம்பரையின் வழியாக ஆங்காங்கு உரையாசிரியர்களுடைய க்ரந்தங்களின் உதவி கொண்டு தெளிதல் வேண்டும். (17)

लक्ष्मी: - லக்ஷ்மீ:— என்ற இந்நாமாவுக்கு இளமை ததும்பியவளும், விசித்ரமான ஆபரணங்கள், மாலைகள் இவைகளையணிந்துள்ளவளும், சக்ரம், குடை, சாமரம், முதலிய விபூதிகளைக் கொண்டு விளங்கும் ஸௌவர்ணம் கொண்டவளுமாக பகவதியாம் அன்னையை நினைத்து, அவளுடைய கல்யாண குணங்களிலே திளைத்தவனாய் எவன் இருக்கின்றானோ, அவன் பலவகையான இடையூறுகளிலிருந்தும், பெருகிய பிணிகளிலிருந்தும் விடுதலை பெறுகின்றான் என ஸ்ரீஸோமதிலகஸூரி உரைகொள்ளுவர்.

(அவதாரிகை) முன் ச்லோகத்திலே ஸ்ரீ தேவியினுடைய ஏழு நாமாக்களையும், அவைகளை யுபாஸிக்கின்ற ஸந்தர்பங்களையும், பலன்களையும் சொல்லி, இப்பொழுது ஸ்ரீதேவியினுடைய மந்த்ரபாராயணமும், அதனுடைய பெருமையும் விளக்கப்பெறுகின்றது.—

माया कुण्डलिनी क्रिया मधुमती काली कला मालिनी
मातङ्गी विजया जया भगवती देवी शिवा शांभवी ।
शक्तिः शंकरवल्लभा त्रिनयना वाग्वादिनी भैरवी
ह्रींकारी त्रिपुरा परापरमयी माता कुमारीत्यसि ॥ १८ ॥

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பதவுரை) ஓ தாயே! உன்னை; माया - மாயா (1) कुण्डलिनी - குண்டலிநீ (2) क्रिया - க்ரியா (3) मधुमती - மதுமதீ (4) काली - காளீ (5) कला - கலா (6) मालिनी - மாலிநீ (7) मातङ्गी - மாதங்கீ (8) विजया - விஜயா (9) जया - ஜயா (10) भगवती - பகவதீ (11) देवी - தேவீ (12) शिवा - சிவா (13) शांभवी - சாம்பவீ (14) शक्ति - சக்தி (15) शंकरवल्लभा - சங்கரவல்லபா (16) त्रिनयना - த்ரிநயநா (17) वाग्वादिनी - வாக்வாதிநீ (18) भैरवी - பைரவீ (19) ह्रींकारी - ஹ்ரீங்காரீ (20) त्रिपुरा - த்ரிபுரா (21) परापरमयी - பராபரமயீ (22) माता - மாதா (23) कुमारी - குமாரீ (24) इति-असौ; என்று மிகவும் பிரஸித்தமான நாமாக்களால் ஜபம் செய்கின்றனர்.

மாயா குண்டலினி க்ரியா மதுமதீ
காளீ கலா மாலிநீ
மாதங்கீ விஜயா ஜயா பகவதீ
தேவீ சிவா சாம்பவீ ।
சக்திஃ சங்கர வல்லபா த்ரிநயநா
வாக்வாதிநீ பைரவீ
ஹ்ரீங்காரீ த்ரிபுரா பராபரமயீ
மாதா குமாரீத்யஸௌ ॥ 18 ॥

(பொழிப்புரை) இந்த ச்லோகத்திலே மந்திரபாராயணத்தினுடைய க்ரமம் சொல்லப்பெறுகிறது. அந்த மந்த்ர பாராயணமானது ஆறுவித பாராயணங்களில் ஒன்றாகும். அது வருமாறு:— மாயா-ஹ்ரீங்காரம்; குண்டலிநீ-ஐங்காரம்; க்ரியா-க்லீங்காரம்; ம-து-ம-தீ-அ

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

என்பது சுத்த மாத்ருகையாகும். அம் என்பது பிந்து வோடு கூடிய மாத்ருகை. அ: என்பது விஸர்கத்தோடு கூடிய மாத்ருகை. அ:-ம் என்பது பிந்து விஸர்கத்தோடு கூடிய மாத்ருகை. காளீ, கலா, மாலிநீ, மாதங்கீ, விஜயா, ஜயா, பகவதீ, தேவீ, சிவா, சாம்பவீ, இவ்விதம் பத்து நாமங்களாகும்.

(விரிவுரை) சக்தி :- ஸௌ: ; சங்கரவல்லபா - ஹ்ஸ்ரீம் ; ஹ்ஸ்ரூம் ; த்ரிநயா, வௌஷட் ; வாக் வாதிநீ - ஐம் वद वद वाग्वादिनी - ஸ்வாஹா ; பைரவீ - ஹஸ்ரைம் ; ஹ்ஸ்ரீம் ; ஹ்ஸ்ரௌ: ; ஹ்ரீம்காரீ - ஹ்ரீம் ; த்ரிபுரா - ஹஸலஹ்ரீம் ; ஹஸகஹ ; லஹ் ரீம் ; ஸகல ஹ்ரீம் ; பராபரமயீ - ஹஸ்ரௌம் ; மாதா हसकलरडैं ; हसकलरडीं ; हसकलरडौः ; குமாரி, ऐं क्लीं, सौः ; இவ்விதம் பத்து மந்திரங்கள்.

இம்மந்த்ரங்களில் சங்கரவல்லபா மந்த்ரம், ஹஸ் ரீம் என்றும் ; த்ரிநயநாமந்த்ரம் க்லீம் என்ற பக்ஷங் களுமுண்டு. இவ்விதம் இந்த ச்லோகத்தைக் கொண்டு ஹ்ரீங்காரம் முதலிய பீஜங்களும், அகாரம் முதலிய நான்குவித மாத்ருகைகளும், காளீ முதலிய நாமங்களும், சக்தி முதலிய மந்த்ரங்களும் வெளியிடப் பெற்றன. இவைகளுடைய பரஸ்பர சேர்க்கைகள் தான் மந்த்ர பாராயணமென்பதாகும்.

ஆதிபராசக்தியாகிய ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரியை ஒன்பது வயதுள்ளவளாக த்யாநம் செய்யும் பொழுது பாலா அல்லது த்ரிபுரா என்றும், பதினைந்து வயதுள்ள வளாக த்யாநம் செய்யும் பொழுது ஸ்ரீவித்யா என்றும்,

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

பதினாறு வயதுள்ளவளாக த்யாநம் செய்யும் பொழுது ஷோடசீ என்றும், ப்ரௌடா வஸ்தையில் மஹாஷோடசீ என்றும் வ்யவஹாரம் செய்யப்பெறுகிறது. இவைகளுடைய த்யாநங்களும், மந்த்ரங்களும், ஆகமங்களிலும், தந்த்ர சாஸ்த்ரங்களிலும் விரிவாக விளக்கப்பெற்றுள்ளன.

எனினும் ஸ்ரீ தேவியையுபாஸித்து ஸித்தியடைந்த மஹாத்மாக்கள் யாவரும் ஸ்ரீவித்யாவிஷயமாக ஷட் பாராயணத்தையும் செய்து, அதனாலேற்பட்ட மஹத்தானதும், அழியாததுமான பெருமையையும் யடைந்தனர். ஆதலால் ஸ்ரீ வித்யையினுடைய சுத்த ஜபமல்லாது, மற்றும் ஸ்ரீவித்யாஸந்த்யாவந்தநம், ஸ்ரீசக்ரபூஜை முதலியவைகளில் ஸ்ரீவித்யயை பாலாஸம்புடிதமாகச் செய்து உபாஸிப்பது ஸாதாரண ஸம்பிரதாயமாயிருக்கின்றதால், இவ்விடத்தில் ஷட்பாராயணங்களேயும் ஸ்ரீவித்தைக்கு அங்கமாகக் கொண்டு சற்று விரிவாக எழுத வேண்டியது அவசியமாகும்.

ஷட்பாராயண மென்பது மிகவும் ரஹஸ்யமானது. அது அநுஷ்டாநத்திலே உறுதி கொண்டு ராஜயோகாதிகளை ஸித்தி பெறச் செய்து, அதன் வழியாக ஸ்ரீ மஹா தேவியை நேரில் தர்சனம் செய்யக்கூடிய ஒரு உத்தம மான மார்கமாகும். இம்மார்கத்திற்கு ரிஷி, சந்தஸ், ந்யாஸம், முதலியவைகளும், கால, தேச, நிர்ணயங்களும் அவச்யமில்லை.

ஸ்ரீவித்யா மந்த்ரத்தை அக்ஷரலக்ஷம் ஜபம் செய்து அதனுடைய தசாம்சம் பத்தில் ஒரு பங்கு ஹோமாதிகளையும், செய்தால் அதற்கு எவ்வளவு பலன்களுண்டோ,

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

அவ்வளவு பலன்கள் இந்த ஷட்பாராயணத்திற்கு முண்டு, வைதிகர்களுக்கு எவ்விதம் பஞ்சாங்கம்-முக்ய மோ, அவ்விதமே தாந்த்ரிகர்களுக்கு (சாக்தர்களுக்கு அல்லது ஸமயிகள்) அஷ்டாங்கத்தை முக்கியமாகக் கொண்ட இந்த ஷட்பாராயணத்திலே, இந்த மந்த்ர பாராயணத்தை யொழித்த மற்ற ஐந்து பாராயணங் களையும் அவச்யமெனக்கருதி, தந்த்ரசாஸ்த்ரங்களிலே நியமம் செய்திருக்கிறது. இவ்விதச் சிறப்புடன் கூடிய மந்த்ர பாராயணத்தை இங்கே விளக்கி, அடுத்த ச்லோ கத்திலே எஞ்சிய ஐந்து பாராயணங்களையும் முறையே விளக்குவோம்.

ஓங்காரத்தோடும், மூன்று தாரங்களோடும் சேர்ந்தி ருக்கின்ற ஸ்ரீவித்யா மந்த்ரத்தில் முறையே மாயா பீஜத் தையும்; க்ரியாபீஜத்தையும் சேர்த்து சுத்தமாகவும் பிந்துவோடு கூடியதாகவும்; விஸர்க்கத்தோடு கூடியதா கவும், பிந்துவிஸர்கத்தோடு கூடியதாகவும்; மாத்ரு காக்ஷரங்களையும் சேர்த்து, காளீ முதல் பத்து நாமாக் களையும் முறையே உச்சரித்து, சக்தி முதல் பத்து மந் த்ரங்களையும் முறையே சேர்த்து ஜபம் செய்வதுதான் மந்த்ரபாராயணமென்பது. இம்முறையை யநுஸரித்து ஒரு ஆவர்த்தி மந்த்ரபாராயணம் செய்யும் பொழுது ஆறுயிரத்து நூற்றிருபது (6120) எண்களாகும். அது வருமாறு:

ओं ऐं ह्रीं श्रीं क ए ई ल ह्रीं ; ह स क ह ल ह्रीं ;
स क ल ह्रीं श्रीं ह्रूीं अकाली सौः । (१)
ओं ऐं ह्रूीं श्रीं क ए ई ल ह्रीं ; ह स क ह ल ह्रीं ;

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

स क ल ह्रीं श्रीं ह्रीं अकाली सौः (२)

ओं ऐं ह्रीं श्रीं क ए ई ल ह्रीं; ह स क ह ल ह्रीं;

स क ल ह्रीं श्रीं ह्रीं इकाली सौः (३)

இவ்விதம் சுத்த மாத்ருகாக்ஷரங்களையெல்லாம் சேர்ந்து ஜபம் செய்யும்பொழுது ओं ऐं ह्रीं श्रीं क ए ई ल ह्रीं; ह स क ह ल ह्रीं; स क ल ह्रीं; श्रीं ह्रीं क्षकाली सौः என்பது வரையில் ஐம்பத்தொன்று (51) மந்த்ரங்களாகின்றன.

இம்முறைப்படி பிந்துவோடு கூடிய மாத்ருகைகளுடைய சேர்க்கையிலும், ஐம்பத்தொன்று மந்த்ரங்கள் கிடைக்கின்றன. எவ்விதமெனில்; ओं ऐं ह्रीं श्रीं क ए ई ल ह्रीं; ह स क ह ल ह्रीं; स क ल ह्रीं श्रीं; अं काली सौः முதல் 'क्षं काली' என்பது வரையில் ஜபம் செய்தால் அப்பொழுது நூற்றிரண்டு (102) எண்ணிக்கைகளாகும்.

இதுபோலவே விஸர்கத்தோடு கூடிய மாத்ருகாக்ஷரங்களைச் சேர்க்கும் பொழுதும்; பிந்துவிஸர்கத்தோடு கூடிய மாத்ருகாக்ஷரங்களைச் சேர்க்கும் பொழுதும், முறையே நூற்றிரண்டு (102) எண்ணிக்கைகள் வரும். அப்பொழுது ஹ்ரீம்காரத்தினுடைய் சேர்க்கையால் நான்குவித மாத்ருகைகளாகிய இருநூற்றுநான்கு (204) எண்ணிக்கைகள் கிடைக்கும்.

இதே போல ஹ்ரீங்காரத்தின் முன்பு ஐம்காரத்தைச் சேர்த்தும், அவ்விதமே க்லீங்காரத்தையும்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

சேர்க்க, முறையே இருநூற்றுநான்கு (204) வீதம் கிடைக்கும். ஆகவே காளியினுடைய நாமத்தில் அறுநூற்றுப் பன்னிரண்டு (612) எண்ணிக்கைகள் வரும். இவ்விதமே காளீ நாமத்தினுடைய ஸ்தானத்தில் கலாநாமத்தையும், அதேபோல மாலினீ முதல் சாம்பவீ வரையிலுள்ள நாமங்களையும் சேர்த்து ஜபம் செய்யும் பொழுது ஆறுயிரத்து நூற்றிருபது (6120) வரும்.

மறுபடியும், சக்தி ஸ்தானத்தில் சங்கரவல்லபா மந்த்ரத்தைச் சேர்த்து இதே போல ஜபம் செய்ய வேண்டும். அது எவ்விதமெனில்; ओं ऐं ह्रीं श्रीं क ए ई ल ह्रीं, ह स क ह ल ह्रीं, स क ल ह्रीं, श्रीं ह्रीं अ काली ह्स्रीं ह्स्रूं; ओं ऐं ह्रीं श्रीं क ए ई ल ह्रीं ह स क ह ल ह्रीं स क ल ह्रीं श्रीं ह्रीं काली ह्स्रीं ह्स्रूं என்பது போல க்ஷகாரம் வரையிலும், மறுபடியும் முன் போல பிந்துக்களோடு கூடிய மாத்ருகைகளையும், கலா முதலிய பத்து நாமங்களையும் சேர்த்து ஜபம் செய்யும் பொழுது முன்போலவே ஆறுயிரத்து நூற்றிருபது (6120) எண்ணிக்கைகள் கிடைக்கும்.

மறுபடியும் சங்கரவல்லபா என்ற ஸ்தானத்தில் த்ரிநயநா முதலிய மந்த்ரங்களை முறையே சேர்க்க வேண்டும். இவ்விதமே குமாரீ மந்த்ரம் வரையிலும் வேண்டும். இப்படிச் சேர்க்கும் பொழுது கிடைக்கக் கூடிய எண்ணிக்கைகள் (6120) கிடைக்கும். மற்ற விடங்களிலும் முன் போலவே கண்டு தெளிந்து கொள்ளவேண்டும்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

மற்றும், காளீநாமத்தோடு கூட, கலாநாமத்தைச் சேர்த்து श्रीं अकालीकलासौः आकालीकलासौः "ஸ்ரீம் அகாலீ கலா ஸௌ:, ஆகாலீ கலா ஸௌ:" என்பது முதல், क्षकालीकलामातङ्गीसौः "க்ஷகாலீ கலா மாதங்கீ ஸௌ:" என்பவைகளை முன்னர் சொன்ன விதம் சாம்பவீநாமம் வரையில் சேர்க்கும் பொழுது, ஐம்பத்தைந்தாயிரத்து எண்பது (55080) எண்ணிக்கைகள் ஆகின்றன. ஆகவே ஒரு லக்ஷத்து பதினாயிரத்து இருநூற்று எண்பது (116280) மந்த்ரங்கள் கிடைக்கின்றன.

இவ்விதம் முன் ச்லோகத்திலே சொல்லிய லக்ஷ்மீ முதலிய ஏழு நாமாக்களையும், ह्रीं अलक्ष्मीसौः, ह्रीं अजयासौः 'ஹ்ரீம் அலக்ஷ்மீ ஸௌ: ஹ்ரீம் அஜயா ஸௌ:" என்பது போலவே ஜபம் செய்தால் அதனால் கிடைக்கக் கூடிய மந்த்ரங்களுடைய எண்ணிக்கைகள் (142840) ஆகின்றன. மறுபடியும் முன்பு சொன்னது போலவே லக்ஷ்மீ நாமத்தோடு கூட ஜயா முதலிய நாமங்களை ह्रीं अलक्ष्मीजयासौः ; ह्रीं अलक्ष्मीक्षेमंकरीसौः ; ह्रीं अलक्ष्मीजयाशवरीसौः ; "ஹ்ரீம் அலக்ஷ்மீ ஜயா ஸௌ:, ஹ்ரீம் அலக்ஷ்மீ க்ஷேமங்கரீ ஸௌ:, ஹ்ரீம் அலக்ஷ்மீ ஜயாசபரீ ஸௌ:" என்பது போல முறையே ஜபம் செய்தால் மந்த்ரங்கள் எண்ணிக்கைகள் (36720) கிடைக்கின்றன. ஆகவே மொத்தம் கிடைக்கின்ற மந்த்ரஸங்க்யை ஒரு லக்ஷத்து தொண்ணூராயிரத்து எண்ணூற்று நாற்பதாகும் 190840.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

இவ்விதம் எல்லா மந்த்ரங்களிலும் முதலில் சொல்லியது போல ப்ரணவமும், தாரத்ரயமும், மூல மந்த்ரமும் சேர்ந்து வருமென்பதை மறப்பது கூடாது. மற்றும் இங்கு ஒரு விஷயத்தைச் சொல்ல வேண்டியிருக்கிறது. அதாவது பிந்துவில் பிந்துவும், விஸர்கத்தில் விஸர்கமும், லோபமடையும் என்ற மந்த்ரசாஸ்த்ர மரபை யநுஸரித்து ஜபகாலத்தில், அ் என்பது 15ம், அ: என்பது 16ம் ஸ்வரங்களில் சில வித்யாஸங்கள் செய்வதாலுண்டாகின்றன.

பிந்துவோடு கூடிய மாத்ருகையில் அ் என்ற ஸ்வரத்தில் பிந்து லோப மடைந்தால் அ என்பது கிடைக்கும். விஸர்கத்தோடு கூடிய மாத்ருகையில் அ: என்ற ஸ்வரமானது விஸர்கத்தை விடும்பொழுது கிடைக்கின்றது அ என்பதே.

இவ்விதமே பிந்து விஸர்கத்தோடு சேர்ந்த மாத்ருகையில் அ் என்ற பதிைனந்தாவது ஸ்வரம், அ என்றும்; அ: என்ற பதினாறாவது ஸ்வரம் அ் என்றும் மாறுபடும். பிந்து விஸர்கங்கள் இரண்டும் சேரும்பொழுது எழுதவேண்டிய முறை வருமாறு. அ்: என்பது. இதை யுச்சாரணம் செய்யும் முறையும் அ் ஹ் எனவும் ஸித்தமாகிறது. விதிப்படி ஸரியாகச் செய்யும் மந்த்ரபாராயணமும் இதுவே யாகும்.

இச்செய்யுளுக்கு ஸ்ரீஸிம்ஹராஜர் என்ற உரையாசிரியர் விசேஷமாகப் பொருள் விளக்கம் கொடுத்துள்ளார். அது வருமாறு—

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

1. माया— மாயா, குண்டலிநீ முதலிய மந்த்ராத்வாக்களையும், அஹங்காரம் முதலிய அசுத்தாத்வாக்களையும் சொல்லுவதாலேயே அன்னை மாயை என அழைக்கப்பெறுகின்றாள்.

2. कुण्डलिनी— குண்டலிநீ - பரா, இச்சை, ஞானம், க்ரியா என்ற வடிவாக எங்கும் வியாபித்து (பரவி)ள்ள காரணத்தால் குண்டலிநீ சக்தியாவள்.

3. क्रिया— க்ரியா - க்ரியாயோகம், க்ரியா, சர்யை என க்ரியைகளுடைய முக்கியமான ஸித்தாந்தங்களுடைய செயல்களில் தொடர்பு கொண்டுள்ள காரணத்தால் க்ரியா சக்தியாவள்.

4. मधुमती–மதுமதீ -தஹராகாச சக்தியைக் காட்டிலும் வேறுபடாது சிறந்த அமுதத்தைப் பெறுகச் செய்து எல்லா நிலையிலும் பரவியுள்ள காரணத்தால் மதுமதியாவள்.

5. काली— காளீ - இந்த அண்டங்கள் யாவையும் விழுங்கி எல்லாவிடத்திலும் பரவியிருந்து கொண்டு ஐஹிகம், ஆமுஷ்மிகம் இவ்விரண்டன் பயன்களைக் கொடுக்கின்ற காரணத்தால் காளீ - பத்ரகாளீ எனவுமாம்.

6. कला-मालिनी— கலாமாலிநீ - அறுபத்து நான்கு கலைகளின் க்ரம வடிவாயிருப்பவள். அல்லது முப்பத்தெட்டு ப்ரஹ்ம கலைகள் எவளிடமிருந்து தோன்றுகின்றனவோ, அவளே கலாமாலினியாவாள். அல்லது ஸோமன், ஸூர்யர், அக்னி என்ற இம்மூவருடைய

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

கலைகள் எவளிடத்தில் காண்கின்றனவோ, அவளே கலாமாலினியாவாள். இக்கலைகளின் விளக்கங்கள் எமது பவானீ புஜங்கஸ்தவத்திலும், தேவீமாஹாத்ம்யத்திலும் விரிவாகச் சொல்லப்பெற்றுள்ளன. அங்கு கண்டு தெரிந்து கொள்ளற்பாலது.

7. मालिनी— மாலினீ - என தனியாகப் பிரித்துள்ள வார்த்தைக்குப் பின்வருமாறு பொருள் விளக்கம் காணலாம். அகாரம் முதல் ஹகாரம் வரையிலுள்ள அக்ஷரங்களில் பரவியுள்ள காரணத்தாலும் மாலை போன்று விளங்குவதாலும் அன்னை மாலினியாவாள்.

8. मातङ्गी—மாதங்கீ- மூவுலகையும் மோஹமடையச் செய்பவள் அல்லது எண் வகையாயுள்ள ஐச்வர்யங்களையும் விரைவில் கொடுக்க வல்லவள் என்ற காரணத்தாலும் மாதங்கியாவள். அல்லது மூவுலகையும் மோஹமடையச் செய்பவள் என்றே த்ரிபுராஸாரம் சொல்லும்.

9. विजया–விஜயா, உபாஸகர்களுடைய வெற்றிக்கு எவள் காரணமாயிருந்துகொண்டு தானாகவே அவர்களுக்கு ஜயஸ்ரீயை-பலம் ஸம்பத்துக்களின் நிறைவுகளை - கொடுக்கின்றனளோ அக் காரணத்தால் விஜயா என அழைக்கப் பெறுகின்றாள்.

10. जया–ஜயா, உபாஸகர்களுக்கு எங்கும் எந்நிலையிலும் வெற்றியைக் கிடைக்கச் செய்வதால் ஜயா என அழைக்கலாயிற்று. திரிபுராஸாரத்திலும், 'விஜயா ஜயா' எனச் சக்தியை இரு வகையாகக் கூறுவதும்

CC-0. Arutselvi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

இதை வலியுறுத்தும். லலிதாஸஹஸ்ரநாமத்திலும், விஜயா, ஜயா என்ற இரண்டு நாமாக்களுண்டு. அவைகளுடைய விசேஷமான பொருள் விளக்கங் களை ஸௌபாக்யபாஸ்கரத்தில் காணலாம்.

11. भगवती—பகவதீ - உபாஸகர்களுக்கு துர்க்கம்-அரண், போலுள்ள காரணத்தால் பகவதீ, துர்கா எனவும் அழைக்கப்பெறுகின்றாள். அல்லது மிகவும் சிரமமான-கடுமையான-தவம், உபாஸனை முதலிய வைகளால் அடையத் தக்கவள் எனவுமாம்.

12. देवी—தேவீ - ஒளியுடன் விளங்குபவள் அல்லது துர்கையின் வடிவாயுள்ளவள்.

13. शिवा—சிவா -மங்களத்தைச் செய்பவள் அல்லது மங்கள வடிவாயமைந்துள்ளவள்.

14. शांभवी— சாம்பவீ - பல வழிகளிலும் பற்பல ஸித்திகளை நிறைவுகளை கொடுக்கவல்லவள். அல்லது சாக்தம் சாம்பவம் முதலிய பல தீக்ஷையின் வடிவா யமைந்துள்ள சக்தியுமாம்.

15. शक्तिः— சக்தி - ஸ்ரீகுருவினுடைய அருளால் எல்லாப் பிராணிகளுடைய வேத-அறிவு-வ்யவஹார நிலையில்-அறிந்துகொள்ளும் நிலையில்-உள்ள சக்தி யின் வடிவினள் அல்லது எவளுடைய துணையில்லாது துரும்பும் அசைய மாட்டாதோ, அப்பெருமை வாய்ந்த சக்தியும் நீயே என்பதுமாகும்.

16. शंकरवल्लभा— சங்கரவல்லபா - சிறந்த நிர்வாஹ மென்னும் ஸாதக வடிவாகவும், அப்பெருமைவாய்ந்த

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

பரமேச்வரனுடைய யாதொரு சக்தியுண்டோ, அச் சக்தியே சங்கரவல்லபா என அழைக்கப் பெறுகின்றவள்.

17. त्रिनयना - த்ரிநயநா— தனது தொண்டர்களுக்கு ஈச்வர ஸம்பந்தமான விஷயங்களை யுணருவதற்கு உதவியாயிருக்கின்ற மூன்று கண்களை எவள் கொடுக்கின்ருளோ அவளே த்ரிநயநா என்பவள், அல்லது இச்சை ஞாநம், க்ரியை என்ற வடிவாயமைந்த மூன்று சக்திகளை எவள் நியமநம் செய்கின்ருளோ, அவளே சங்கரவல்லபா என்ற சக்தியாவள்.

18. वाग्वादिनी - வாக்வாதிநீ—எவளுடை அருளில்லாது எல்லா தேவர்களும் ஊமையாகின்றனரோ, அவளே வாக்வாதிநியாவள். அல்லது எல்லா சாஸ்த்ரங்களிலும் வார்த்தைகளுடைய பெருக்கின் திறமை எங்கு வெளியாகின்றதோ, அந்த ஸாரஸ்வதவடிவாயமைந்த சக்தியே வாக்வாதிநீ என அழைக்கப் பெறுகின்றவள்.

19. भैरवी - பைரவீ—தோற்றம், நிலை, அழிவு, மறைவு, அருள் என்ற ஐந்து தொழில்களினல் எல்லா உலகங்களுக்கும் ஆதாரவாயிருந்து கொண்டு, எவளுடைய உதவியானல் பரமேச்வரன் இவ்வுலகைத் தாங்குகின்ருனே, அச்சக்தியே பைரவீ யென்பவள்.

20. ह्रींकारी - ஹ்ரீங்காரீ — ஹரீங்காரம் என்னும் மந்த்ரத்திற்கு இலக்காயிருக்கின்ற புவனேசவரி

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

வடிவாயிருப்பவள். இந்த ஹ்ரீங்கார மந்த்ரத்தின் பெருமைகளையும், ரஹஸ்யங்களையும், ஸ்ரீமதாசார்ய பகவத்பாதரியற்றிய ஸ்ரீலலிதா த்ரிசதியில் விரிவாகக் காணலாம். பீஜாக்ஷரங்களுடைய அவயவார்த்தங் களையும் எமது ஸ்ரீவித்யா மந்த்ரவிளக்கம் என்ற நூலிலும் காணலாம்.

21. त्रिपुरा - த்ரிபுரா— முன்பு சொல்லிய எல்லா த்ரிபுடிகளிலும் பரவியுள்ள காரணத்தால் த்ரிபுரா என அழைக்கலாயிற்று.

22. परापरमयी - பராபரமயீ— பரா என்ற சொல், யாவற்றையும் கடந்து நிற்கின்ற உன்மனா என்ற வடிவமாகும். அபரா என்பது உன்மனியி னுள்ளே யிலங்கும் பரமசிவ வடிவம் கொண்ட நிலை யாகும். அவளே பராபரமயீ என்பவளுமாவள்.

23. माता - மாதா— எல்லா சராசரங்களுக்கும் தனித்தன்மை வாய்ந்த அன்னையின் வடிவா யமைந்தவள்.

24. कुमारी - குமாரீ— துஷ்டர்களான மஹிஷா ஸுரன் முதலியவர்களையழித்த காரணத்தால் குமாரீ என அழைக்கலாயிற்று. அல்லது வநதுர்கை என்றும் குமார சக்தியின் வடிவாயுள்ளவள். அல்லது சிறந்து யாவற்றிலும் ஒட்டாது சுத்தமாகவும் நிர்மலமாகவும் இருக்கின்ற அறிவின் வடிவாகவும், விடுதலைக்குகந்த வடிவாகவும் அமையப்பெற்றுள்ள சக்தியே குமாரீ என்பவள்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

இச்செய்யுளில் இருபத்து நான்கு நாமாக்கள் சொல்லியுள்ளன. ஆயினும் மாலினீ, ஜயா - மாலினீ, ஜயா, இந்த இரண்டையும், கலாமாலினீ, விஜயா ஜயா என்றும் ஒன்றாகக் கணநம் செய்துள்ளதால் இருபத்திரண்டு நாமாக்கள் என்பதையும் அறிய வேண்டும்.

ஸோமதிலகஸூரியின் உரை வருமாறு—

இங்கு ஸாமான்யமாக அன்னையினுடைய இருபத்து நான்கு பெயர்களும் சொல்லப் பெற்றுள்ளன. அவைகள் படித்த அளவிலே பெரிதும் பொருள்கள் புலனாவன. பொருளறிந்துகொள்ள சிரமமும் கிடையாது. ஆயினும் விசேஷமாகப் பின்வருமாறு பொருள் விளக்கமும், இச்சிறு காவ்யத்தில் மறைந்துள்ள மந்த்ரங்களும் பல அமைந்துள்ளன. அது வருமாறு—

மாயா என்ற சொல் ஹ்ரீங்காரத்தைக் குறிக்கும். காளீ என்ற சொல் மெய்யெழுத்து - கேந - ககாரம் என்ற சொல்லோடு கூடிய ஆலீ - காளீ என ஸமாஸம் செய்தால் க்லீம் என்ற மந்த்ரம் கிடைக்கும். பிந்து உச்சாரணத்தின் பகுதி என்பதையும் அறிய வேண்டும்.

இவ்விதமே மாலினீ என்றவிடத்தில் மா-லக்ஷ்மீ அவளுடைய பீஜம் ஸ்ரீம் என்பது; சக்தி என்பது ஹ்ரஸோம்; வாம் என்பது வாக்பவ பீஜம்; இவ்விதம் ஐந்து பீஜங்கள் - மந்த்ரங்கள் - கிடைப்பன. முதலில் ப்ரணவம், முடிவில் நம: என்பதையும் சேர்த்தால் இது எல்லா மந்த்ரங்களுக்கும் பொதுப் படையாக இருப்பதுமாகும்.

ந்யாஸத்தில் அக்ஷரக்ரமம் பின் வருமாறு—ஓம் ஹ்ரீம், க்லீம், ஸ்ரீம், ஹ்ரஸௌம், ஐம், நம: என்ற

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஐந்து மந்த்ரங்களையும் தினந்தோறும் நூற்றெட்டு ஆவ்ருத்தி ஜபம் செய்து வந்தால், ஸுகம், ஆரோக்யம், வச்யம், நிறைவு, காராக்ரஹவிடுதலை முதலிய பயன்கள் உண்டாகும். த்யானமாவது (சிந்தனை) சாந்த கார்யத்தில் வெண்மையாகவும்; வச்யத்தில் செந்நிறமாகவும், மோஹனத்தில் மஞ்சளாகவும், உச்சாடனத்தில் கருமையாகவும் சிந்தனை செய்ய வேண்டுமென்பது மரபு. இதுவே யோகினீவித்யை என்பதுமாகும்.

ஆகவே தொடர்ந்து யோகினீதோஷ விதான யந்த்ர விளக்கமும் எமது பக்தர்களுக்கு உபகாரமாயிருப்பதற்காக இங்கு வெளியிடப் பெறுகின்றது. அந்த யோகினிகளுடைய பெயர்களும் வருமாறு—

1. குமாரீ, 2. வராஹீ, 3. சாங்கரீ, 4. இந்த்ராணீ, 5. கங்காலீ, 7. காலீ, 8. மஹாகாளீ, 9. சாமுண்டா, 10. ஜ்வாலாமுகீ, 11. காமாக்ஷீ, 12. கபாலினீ, 13. பத்ரகாளீ, 14. துர்கா, 15. அம்பிகா, 16. லலிதா, 17. கௌரீ, 18. ஸுமங்களா, 19. ரோஹிணீ, 20. கபிலா, 21. சூலகரா, 22. குண்டலீ, 23. த்ரிபுரா, 24. குருகுல்லா, 25. பைரவீ, 26. பத்ரா, 27. சந்த்ராவதீ, 28. நாரஸிம்ஹீ, 29. நிரஞ்ஜனா, 30. ஹேமகாந்தீ, 31. ப்ரேதாஸனீ, 32. ஈசானீ, 33. வைச்வானரீ, 34. வைஷ்ணவீ, 35. விநாயகீ, 36. வாமகண்டா, 37. ஹாஸித்தி, 38. ஸரஸ்வதீ, 39. தோதலா, 40. பந்தீ, 41. சங்கினீ, 42. பத்மினீ, 43. சித்ரிணீ, 44. வாருணீ, 45. நாராயணீ, 46. வனதேவீ, 47. யமபகினீ, 48, ஸூர்யபுத்ரீ 49. ஸுசீதலா, 50. க்ருஷ்ணவாராஹீ, 51. ரக்-

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

தாக்ஷீ, 52. காலராத்ரீ, 53. ஆகாசீ, 54. ச்ரேஷ்டிநீ, 55. ஜயா, 56. விஜயா, 57. தூமாவதீ, 58. வாகீச்வரீ, 59. காத்யாயநீ, 60. அக்நிஹோத்ரீ, 61. சக்ரேச்வரீ, 62. மஹாவித்யா, 63. ஈச்வரீ, 64. என அவர்களுடைய பெயர்களாகும்.

இந்த யோகிநீ யந்த்ரத்தை குங்குமம், கோரோசநம் இவைகளுடைய கலவைகளில் எழுதி விதி முறை வழுவாது பழம், மலர், சந்தனம், தூபம், முத்ரை, நைவேத்யம் இவைகளைக்கொண்டு, சுத்தனுகவும், தூய்மையுள்ள மனமுள்ளவனுகவும், நிலைத்த ஒரு முகமான மனதோடு பூஜை செய்ய வேண்டும். இங்கு கூறப் பெற்ற யந்த்ர விதாநம், பூஜை முறை முதலியவை ஸ்ரீ குருவின் வாயிலாகவே தெரிந்து கொள்ளவேண்டு மென்பதும் அவசிமாகக் கருதப் பெறும்.

இந்த யோகிநீ தேவதைகள் யாவரும், ருதிரம், ஆமிஷம், பால், ஸுரா, இவைகளில் பிரீதியுள்ளவர்கள். கேளிக்கைகள், கோலாஹலமான கீதம், வாத்யம், நிருத்தம் இவைகளிலும் பற்றுள்ளவர்கள். இவர்களில் லக்ஷ்வீ, தருணு, ப்ரௌடா, வ்ருத்தா, ப்ரமரா, என்ற நிலையை உடையவர்கள் அக்நி, சந்திரன் இவர்களுயைய வர்ணங்கள் போன்றவர்கள். விகாரமானபற்கள், தலைவிரி கோலமாயுள்ள நிலைமை, வளைந்த நாக்குகள், மிகவும் நுண்ணிய தன்மை, மதுரமாகவும், முரட்டுத்தனமாகவுமுள்ள ஒலிகளையும், நிரந்தரமான ஆசைகளையும் உடையவர்கள். சாந்தம், ரௌத்ரம், என்ற சுவைகளைப் பெரிதும் விரும்புகின்றவர்கள். அசைகின்ற பலம் பொருந்திய காற்றைப் போன்ற திறமையுள்ளவர்கள். நான்கு கைகளையுடையவர்கள். அழகிய துகில்களையணிந்தவர்கள். அங்குசம், கபாலம், கார்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

முகம், த்ரிசூலம், கத்தி, சங்கு, சக்ரம், கதை, குந்தம், தநுஸ், வஜ்ராயுதம் இவைகளினால் அலங்கரிக்கப் பெற்றவர்கள்.

மற்றும், இவர்கள் விஷ்கம்பம் முதலிய இருபத் தேழு யோகங்களையும், அச்விநீ முதலிய இருபத் தெட்டு நக்ஷத்ரங்களையும், மேஷம் முதலிய பன்னி ரண்டு ராசிகளையும், ஸூர்யன் முதலிய ஒன்பது க்ரஹங்களையும், நாரஸிம்ஹன், வீரபத்ரன், க்ஷேத்ர பாலன், மணிபத்ரன், மாஹில்லன் முதலிய யக்ஷர் களையும், சிந்தனை செய்து முன்பு சொல்லிய மந்த்ர த்தை ஜபம் செய்யவேண்டும். இவ்வாறு ஜபம் செய் தால் யோகிநீ தோஷம் விலகுமென்பது சாஸ்த்ரங் களின் துணிவு,

ஆகவே இச்செய்யுளில் யோகிநீ சக்ரவிதாந மும் மறைமுகமாகச் சொல்லியுள்ளது என்பதையும் உணரவேண்டும். (18)

(அவதாரிகை) முன் ச்லோகத்திலே மந்த்ரபாரா யணக்ரமம் விளக்கப்பெற்றது. இப்பொழுது அடுத்து வரும் இந்த ச்லோகத்திலே ஆகமங்களில் விளக்கப்பட்ட ஸ்ரீத்ரிபுரஸுந்தரியினுடைய நாமோத்பத்தியும், அந்த நாமங்களுடைய எண்ணிக்கைகளும், அவைகளை பாரா யணம் செய்ய வேண்டிய முறைகளும் விளக்கப் பெறுகின்றன—

आईपल्लवितैः परस्परयुतैर्द्वित्रिक्रमादक्षरैः
काद्यैः क्षान्तगतैः स्वरादिभिरथ क्षान्तैश्च तैः सस्वरैः ।
नामानि त्रिपुरे भवन्ति खलु यान्यत्यन्तगुह्यानि ते
तेभ्यो भैरवपत्नि विंशतिसहस्रेभ्यो परेभ्यो नमः ॥ १९ ॥

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பதவுரை) हे भैरवपत्नि - ஹே ஸதாசிவமஹிஷி! (ஸதாசிவனுடைய மனைவி) आई पल्लवितैः—ஆ ஈ. என்ற ஸ்வராக்ஷரங்களுடைய கடைசியிலுள்ள; स्वर - आदिभिः—அகாரம் முதலிய பதினாறு ஸ்வரங்களோடு ஆரம்பமாகின்றவைகளும்; क्ष - अन्त - गतैः — க்ஷகாரமென்ற ஸம்யுக்தாக்ஷரத்தினுடைய கடைசியையடைந்த; क-आद्यैः-ககாரத்தை முதலாவதாகக் கொண்டவைகளோடு ஆரம்பிக்கின்றவைகளும்; द्वि-द्वि-क्रमात् - நான்கு நான்கு அக்ஷரங்களாக முறையே; परस्पर-युतैः — ஒன்றோடொன்று சேர்ந்தவைகளும்; अथ - பிறகு; सस्वरैः—அ முதல் பதினாறு ஸ்வரங்களோடு சேர்ந்தவைகளும்; क्ष-अन्तैः-க்ஷ என்ற அக்ஷரத்தைக் கடைசியாகக் கொண்டவைகளும்; तैः-च अक्षरैः ஆகாரம் முதலிய அக்ஷரங்களோடு சேர்ந்தவைகளும்; अत्यन्त-गुह्यानि-மிகவும் ரஹஸ்யமாயுள்ளவைகளுமான; तव - உன்னுடைய; यानि - எந்த; नामानि - நாமங்கள்; भवन्ति - खलु - பிரஸித்தி பெற்றவைகளாக இருக்கின்றனவோ; विंशति- सहस्रेभ्यः, परेभ्यः - இருபதினாயிரத்திற்கும் அதிகமாயிருக்கின்ற; तेभ्यः - அந்த நாம பாராயண மந்த்ரங்களுக்கு; नमः - நமஸ்காரம்.

ஆஈ பல்லவிதைஃ பரஸ்பரயுதைர்
த்வித்விக்ரமா தக்ஷரைஃ
காத்யைஃ க்ஷாந்தகதைஃ ஸ்வராதிபிரத
க்ஷாந்தைஶ்ச தைஃ ஸஸ்வரைஃ।
நாமானி த்ரிபுரே பவந்தி
கலு யாந்யத்யந்த குஹ்யானி தே

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

தேப்யோ பைரவ பத்நி விம்சதி
ஸஹஸ்ரேப்ய: பரேப்யோ நம: ॥ 19 ॥

(பொழிப்புரை) ஸமஸ்த த்வைத ப்ரபஞ்சங்களுடைய இருளையகற்றும் ஒளியின் வடிவாயுள்ள மஹேச்வரனான பைரவனை ஆச்ரயித்துப் பிரகாசிக்கின்ற ஓ அன்னையே! ஆ ஈ என்ற ஸ்வரங்களுடைய கடைசியிலுள்ள அகாரம் முதலிய பதினாறு ஸ்வரங்கள் முதல், க்ஷ என்ற கடைசி அக்ஷரத்தை அடைந்த ககாரம் முதலியவைகளோடு கூடியவைகளாகவும், நான்கு நான்கு அக்ஷரங்கள் சேர்ந்தவைகளாகவும்; பின்னும், அகாரம் முதல் பதினாறு ஸ்வரங்களோடு சேர்ந்து, க்ஷ என்ற முடிவுகளோடு கூடிய ஆகாராதிகளோடு சேர்ந்தவைகளாகவுமிருக்கின்ற அக்ஷரங்களைக் கொண்டு, மிகவும் ரஹஸ்யங்களாயிருக்கின்ற உன்னுடைய யாதொரு நாமங்களிருக்கின்றனவோ, இருபதினாயிரத்திற்கு மேற்பட்ட அந்த பிரஸித்திபெற்ற நாமபாராயண மந்த்ரங்களின் பொருட்டு நமஸ்காரம்.

(விரிவுரை) இந்த நாமபாராயணத்தைத் தன்னிடத்தே கொண்ட ஷட்பாராயணமும் இங்கே சுருக்கமாக விளக்கப்பெறுகிறது. ஷட்பாராயணமென்பது வருமாறு: நாதபாராயணம்; கடிகாபாராயணம்; தத்துவபாராயணம்; நாமபாராயணம்; நித்தியாபாராயணம்; மந்த்ரபாராயணம் என ஆறு வகையாகும். இவைகளில் மந்த்ரபாராயணம் முன் ச்லோகத்திலே விளக்கப்பெற்றது.* ஆகவே அதைவிடுத்து மற்ற ஐந்து

---

* இந்த பாராயணக்ரமங்களுடைய வரிவான விளக்கங்களை "ஸௌபாக்ய தந்த்ரம்" என்ற நூலில் விரிவாகக் காணலாம்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

பாராயணங்களேயும் சாக்தர்கள் (சக்தியுபாஸகர்கள்) அஷ்டாங்கத்தை முக்கியமாகக் கொண்டு நித்யமாயநுஷ்டானம் செய்து வருவதால், அவர்களுடைய விளக்கத்தின் பொருட்டு அஷ்டாங்கங்களும் இங்கு ஸங்க்ரஹமாகக் கொடுக்கப்பெறுகிறது.

அதாவது கடிகை; வாரம்; திதி; தினம்; மாஸம்; வர்ஷம்; பரிவ்ருதி; யுகம் இவைகளே அஷ்டாங்கங்களாகும். இவைகளெல்லாம் மாத்ருகாக்ஷரங்களுடைய வடிவங்களாகும். பத்து அக்ஷரங்கள் கொண்டது ஆறு கடிகை, ஒரு தினம்; மாத்ருகாக்ஷரங்களெல்லாம் அடங்கிய ஒன்பது வாஸரம், ஒரு வாரம்; பதினைந்து ஸ்வரவடிவான பதினைந்து திதி ஒரு பக்ஷம், அ என்ற அக்ஷரமும், க முதல் க்ஷ வரையிலுள்ள முப்பத்தைந்து அக்ஷரமும் இவ்விதம் முப்பத்தாறு தினம் ஒரு மாஸம். பதினாறு ஸ்வரவடிவான பதினாறு மாஸம் ஒரு வர்ஷம். தினம்போல முப்பத்தாறு வர்ஷம் ஒரு பரிவ்ருதி. அது போல முப்பத்தாறு பரிவ்ருதி ஒரு யுகம்.

நாதபாராயணம்—அஷ்டாங்கம்; ப்ரணவம்; தாரத்ரயம் (மூன்று தாரஸ்வரங்கள்) இவைகளின் வழியாக வர்ஷ, மாஸ, தினாக்ஷரங்கள் வருமாறு— आ ईं हं सं ह्रीं श्रीं என்று அந்த அந்த வாராக்ஷரங்கள் முதல்-आनन्दनाथरूपिणी श्रीमहात्रिपुरसुन्दरीपादुकां पूजयामि नमः - "ஆநந்தநாதரூபிணீ ஸ்ரீ மஹாத்ரிபுரசுந்தரீ பாதுகாம் பூஜயாமி நமஃ" இவ்விதம் ஒவ்வொரு நாளும் - அதாவது வாரம் முதல் ஆரம்பித்துச்செய்து வர வேண்டும். இதுவே நாதபாராயணம். (1)

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

கடிகாபாராயணம்— அஷ்டாங்கம், ப்ரணவம், தாரத்ரயம் இவைகளின் மூலம் வர்ஷ மாஸ திநாக்ஷரங்கள் ஆ - ஈ - ஹ்ல: - அதாவது தினத்திலிருக்கிற கடிகையினுடைய முதல் அக்ஷரம். प्रथमघटिकारूपिणी श्रीत्रिपुरसुन्दरीपादुकां पूजयामि नमः’- “ப்ரதமகடிகாரூபிணீ ஸ்ரீ த்ரிபுரசுந்தரீ பாதுகாம் பூஜயாமி நம:” என்பது. இவ்விதமே - द्वितीयघटिकारूपिणी, तृतीयघटिकारूपिणी - “த்விதீயகடிகாரூபிணீ த்ருதீய கடிகாரூபிணீ” என்பது முதல் அறுபது கடிகை வரையில் அக்ஷரங்களைக் கொண்டு செய்து வரவேண்டும். இதுவே கடிகாபாராயணம் (2)

தத்துவபாராயணம் —சிவ-சக்தி-ஸதாசிவ-ஈச்வர - சுத்த வித்யா-மாயா-கலா-வித்யா - ராக - கால - நியதி - புருஷ-ப்ரக்ருதி-அஹங்கார-புத்தி-மந - ச்ரோத்ர - த்வக்-சக்ஷுர்-ஜிஹ்வா - க்ராண - வாக் - பாணி - பாத - பாயு - உபஸ்த-சப்த-ஸ்பர்ச-ரூபரஸ-கந்த-ஆகாச-வாயு-வஹ்நி ஸலில-ப்ருத்வீ என்ற முப்பத்தாறு தத்துவங்களையும், அ-க-முதல் க்ஷ வரையிலுள்ள முப்பத்தாறு அக்ஷரங்களையும் சேர்த்துச் செய்து வரவேண்டும். இதுவே தத்துவ பாராயணமென்பது. (3)

நித்யாபாராயணம்— காமேச்வரீ, பகமாலிநீ, நித்திய க்லிந்நா, பேருண்டா, வஹ்நிவாஸிநீ, மஹாவித்யேச்வரீ, சிவதூதீ, த்வரிதா, குலஸுந்தரீ, நித்யா, நீலபதாகா, விஜயா, ஸர்வமங்களா; ஜ்வாலாமாலிநீ, சித்ரா இவ்விதம் அ முதல் அம் வரையிலுள்ள பதினைந்து ஸ்வரங்களோடு, இந்தப் பதினைந்து நித்யா தேவதைகளையும் சேர்த்து, அ என்ற பதினாறுவது ஸ்வரத்தில் மஹா

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

நித்யாதேவியை ஒவ்வொரு திநத்திலும் சேர்த்துச் செய்து வருவதே நித்யாபாராயணமென்பது. (4)

நாதபாராயணம், கடிகாபாராயணம், தத்துவ பாராயணம், நித்யாபாராயணம்—இந்த நான்கிலும் அஷ்டாங்கம் முதலாவதாகவும், அந்த அந்த அக்ஷ ரங்கள் முதல் தொடங்கி அதனுடைய முன்புள்ள அக்ஷரம் வரையில் கொண்டு வந்து நிறுத்த வேண்டு மென்பதும் ஸமாநமாகும். எனினும் நாதபாராயணத் தினுடைய வாஸராக்ஷரங்களுக்கு முன்பு ह्रीं श्रीं என் றும்; நித்யாபாராயணத்தினுடைய நித்யைகளுக் குள்ள ஸ்வரங்களுக்கு முன்பு, ऐं ह्रीं श्रीं என்றும் சேர்க்க வேண்டும். தத்துவபாராயணம், நாமபா ராயணம் இந்த இரண்டிலும், அந்த அந்த திநாக்ஷரம் முதல் ஆரம்பிக்க வேண்டும். நாம பாராயணத்தி லோ திநாக்ஷரத்தோடு மாத்திர மல்லாது அஷ்டாங் கத்தில் வேறு ஒரு ஸம்பந்தமுமில்லை. மந்த்ரபாராய ணத்திற்கு அஷ்டாங்கத்தோடு ஸம்பந்தமே கிடை யாது என்று முன் ச்லோகத்திலேயே விளக்கப் பெற்றுள்ளது.

நாமபாராயணம்—ப்ரணவம், தாரத்ரயம், திநா க்ஷரம் आई என்ற ஸ்வரங்கள், ச்லோகத்தில் ஹம்ஸ மந்த்ரம் விதிக்கப்பெறவில்லை. என்வே பரம்பரை யாக வந்த உபதேசக்ரமத்தோடு ஹம்ஸமந்த்ரமும் சேர்க்கவேண்டும். அது எவ்விதமெனில், உத்தேச திநத்தினுடைய அக்ஷரத்தோடு, 'ओं ऐं ह्रीं श्रीं क ए ई ल ह्रीं श्रीं लक्षाईहंसः,' என இவ்விதம் 'लक्षाईहंसः'

CC-0. Shrutsakthi Ranganathan Collection, New Delhi. Digitized by eGangotri

என்பது வரையில் முப்பத்தாறு மாத்ருகைகள் கிடைக்கின்றன. மறுபடியும் 'लआईहंसः, लकाईहंसः, लखाईहंसः - लक्षाईहंसः' என இவ்விதம் முப்பத்தாறு. மறுபடியும். लिआईहंसः, लिकाईहंसः, लिक्षाईहंसः என இம்முறையை யநுஸரித்து ली-लु-लृ-लं-लः வரையில் - लःक्षाईहंसः - என்பது வரையில், வரும் பொழுது எழுபத்தாறு எண்ணிக்கைகள் கிடைகின்றன. மறுபடியும் व. श, ष. என்றவைகளை अ முதல் क्ष வரையில் முப்பத்தாறு திநாக்ஷரங்களையும் சேர்த்துச் செய்யும் பொழுது 20736 எண்ணிக்கை கிடைக்கின்றன. இந்த எழுநூற்று முப்பத்தாறு எண்ணிக்கைகள் அதிக மாயிருப்பது கொண்டு, विंशतिसहस्रेभ्यः परेभ्यः' என மூலச்லோகத்தில் சொல்லப்பெற்றுள்ளது. ஒரு திநாக்ஷரம் கொண்டு ஒரு திநம் 576 வீதம் செய்தால் ஒரு மாஸம் முப்பத்தாறு திநம் கொண்டு இந்த பாராயணம் ஒரு ஆவர்த்தி பூர்த்தி செய்யப்பட வேண்டியதாகும். இதுவே நாமபாராயண மென்பது.* (5)

மற்றும், இந்த விம்சதி ஸ்தவத்தின் உரையாசிரியர்கள் சொல்லியிருப்பது போல இந்த நாம பாராயணத்தினுடைய மற்றொரு வழியும் இங்கு விளக்கப்பெறுகின்றது. அது வருமாறு—अकाई

N. B. முப்பத்தாறு தத்வாக்ஷரங்களையும் முறையே பதினாறு உயிர்களுடன் பெருக்கினால் நாம் பெறுவது 36 × 16 — 576 அக்ஷரங்களாம்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

முதல் अःकाई முடிய 16; अखाई முதல் अःखाई முடிய 16; अगाई, अघाई; अङाई இவ்விதம் अक्षाई வரையில் ஜபம் செய்யும் பொழுது 560 மந்த்ரங்கள் கிடைக்கின்றன.

மறுபடியும், ककाई, काकाई किकाई, कीकाई, कः क्षाई வரையில் ஜபம் செய்யும் பொழுது 560 மந்த்ரங்கள் கிடைக்கின்றன. இந்த முறையை யநுஸரித்து खकाई; गकाई இவ்விதம் क्षः क्षाई என்பது வரையில் ஆகும் பொழுது இந்த நாமபாராயணம் பூர்த்தி யடைகின்றது. முதலாவதாகச் சொல்லியதில் ஒரு ஸ்வரத்தை மூப்பத்தாறு அக்ஷரங்களோடும் சேர்க்க வேண்டும். அவ்விதமே பதினாறு ஸ்வரங்களையும் ஒவ்வொரு அக்ஷரத்தோடு சேர்க்கவேண்டும். இரண்டாவதாகச் சொல்லியதில் பதினாறு ஸ்வரங்களோடு சேர்க்க வேண்டும். அவ்விதமே முப்பத்தாறு அக்ஷரங்களோடும் சேர்க்க வேண்டும். இந்த ஷட் பாராயணமானது ஸ்ரீ மஹாத்ரிபுரஸுந்தரியி னுடைய அபரா என்ற வடிவமென்பதையும் அறியத்தக்கது.

“ नामपारायणप्रीता ” - நாம பாராயணப்ரீதா-நாம பாராயணத்தினால் த்ருப்தியடைகின்றவள் ” என்பது ஸ்ரீலலிதாஸஹஸ்ரநாமமாகும். இந்த நாமபாராயணத்தினுடைய பெருமையை ஸ்ரீ லலிதாஸஹஸ்ரநாம பாஷ்யத்திலும், இந்த விம்சதி ஸ்தவத்திற்குப் பல அறிஞர்கள் எழுதிய உரைகளிலும் விசேஷமாகக் காணலாம். இங்கு எனது சிற்றறிவிற்கு எட்டிய

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

வரையில் இந்த பாராயணக்ரமங்களை ஸூசனை யாக எழுதப்பெற்றதாகும். இந்த ஷட்பாராயண விதிகளை ஸ்ரீகுருவினுடைய அநுக்ரஹத்துடன், தீக்ஷை முதலியவைகளைப் பெற்று உபதேசக்ரமமாக அநுதினமும் பாராயணம் செய்ய வேண்டியதாகும். கேவலம் புஸ்தகபாராயணமாக இருப்பது கூடாது. அது மஹாபாபமுமாகும். (19)

(அவதாரிகை) இதுவரையில், ஸ்ரீதேவினுடைய ஸ்துதியானது விஸ்தாரமாகச் சொல்லப்பெற்றது. இனி இந்த ஸ்துதியை நன்ருகத் தெரிந்து கொண்டு அநுதின மும் அப்யாஸம் செய்து வரவேண்டுமென்பதையும், இந்தச் லோகத்திலே பக்தர்களைக் குறித்து உபதேசிக்கப் பெறுகின்றது—

बोद्धव्या निपुणं बुधैः स्तुतिरियं कृत्वा मनस्तद्गतं
भारत्यास्त्रिपुरेत्यनन्यमनसो यत्राद्यवृत्ते स्फुटम् ।
एकद्वित्रिपदक्रमेण कथितस्तत्पादसंख्याक्षरै-
र्मन्त्रोद्धारविधिर्विशेषसहितः सत्संप्रदायान्वितः ॥ २० ॥

हे भैरवपत्नि - ஒ பரப்ரஹ்ம மஹிஷி; भारत्याः - வாகீச்வரியான; तव - உன்னுடைய; त्रिपुरा इति - த்ரிபுரா என்ற; इयम् - இந்த; स्तुतिः - ஸ்தோத்திரமானது; बुधैः - அறிஞர்களால்; तद्गतम् - உன்னுடைய ஸ்தோத்திரத்திலே மனதை லயிக்கும்படி; कृत्वा - செய்து; निपुणम् - நன்கு; बोद्धव्या - தாரணை செய்யப் படவேண்டும். यत्र - எந்த பாரதியினுடைய ஸ்துதியில்; अनन्यमनसः - வேறுபடாத மனத்துடன் கூடிய

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

பக்தனுண்டோ ; (அவனைக் குறித்து) आद्य-वृत्ते-முதல் ச்லோகத்தில் ; तत्-पाद-संख्या-अक्षरैः அதனுடைய பாத எண்ணிக்கையினுலே ஸமானமாயிருக்கிற அக்ஷரங்களோடு ; एक-द्वित्रि-पद-क्रमेण-ஒன்று, இரண்டு, மூன்று என்ற பாதவரிசையினுலே ; विशेष-सहितः விசேஷத்தோடு கூடியதாகவும் ; सत् संप्रदाय-अन्वितः - பரிசுத்மான உபதேச பரம்பரையோடு கூடியதாகவுமிருக்கிற ; मन्त्र-उद्धार-विधिः - மந்த்ரங்களுடைய உத்தார க்ரமமானது ; स्फुटम् - தெளிவாக ; कथितः - சொல்லப்பெற்றதோ !

போத்தவ்யா நிபுணம் புதைঃ ஸ்துதிரியம்
 க்ருத்வா மநஸ்தத்கதம்
பாரத்யாஸ் த்ரிபுரேத்யநந்ய மநஸோ
 யத்ராத்யவ்ருத்தே ஸ்புடம் |
ஏகத்வித்ரிபதக்ரமேண கதிதஸ்
 தத்பாத ஸங்க்யாக்ஷரைঃ
மந்த்ரோத்தார விதிர்விசேஷ ஸஹிதঃ
 ஸத் ஸம்ப்ரதாயாந்விதঃ ॥ 20 ॥

(பொழிப்புரை) ஓ அன்னையே ! இந்த த்ரிபுராஸ் துதியை அறிவு நிறைந்த விவேகிகள், உன்னிடத்திலே ஒன்றிய மனத்துடன் வேறு ஒன்றையும் சிந்தனையிலே கொள்ளாது, முதல் ச்லோகத்தில் வரிசையாக மூன்று பாதங்களிலே சொல்லப்பெற்ற மந்த்ரங்களை, முறையே முதல் பாதத்திலே முதல் அக்ஷரத்தையும், இரண்டாவது பாதத்திலே இரண்டாவது அக்ஷரத்தையும், மூன்றுவது பாதத்திலே மூன்றுவது அக்ஷரத்தையும், கொண்டால்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஸ்ரீபாலாதேவியினுடைய மந்த்ரமானது உத்தாரம் செய்யப்பட்டதாகக் கிடைக்கும். எனவே த்ரிபுரா மந்த்ர விஷேசங்களோடு கூடியதும், ஸ்ரீகுருவினுடைய பரிசுத்த மான உபதேசஸம்ப்ரதாயத்தைத் தழுவியதுமான மந்த்ரோத்தாரங்களுடைய முறையானது இங்கு தெளிவாகச் சொல்லப்பெற்றது என்பதும் தாத்பர்யம்.

(விரிவுரை) தவிர, நிர்தோஷமான-பரிசுத்தமான - ஸத்ஸம்பரதாயம், அதாவது ஸ்ரீகுருவினுடைய உபதேச பரம்பரையை யநுஸரித்து. இந்த மந்த்ரங்களுடைய உத்தாரக்ரமமானது இங்கு விளக்கப்பட்டதேயன்றி, என்னுடைய புத்தியின் வன்மையாலன்று எனவும் கவியினுடைய அபிப்பிராயமும் வெளியிடப் பெறுவதாகும். ஏனெனில், ஸ்ரீ குருபரம்பரையைத் தழுவி, அந்த வழியிலே வந்த மந்த்ரமே விரும்பிய பலன்களை யளிக்கவல்லதாம். ஆகவே ஸாவதானமான - நிதானமான - மனத்துடன் உபதேசத்தைப் பெற்று அநுஸந்தாநம் செய்ய வேண்டியது அறிஞர்களுடைய கடமையுமாகுமென்பதும் கிடைக்கின்றது.

மற்றும், இந்த பாரதீதேவியினுடைய ஸ்துதியானது, வேதத்தைப் போலவே அபௌருஷேயமானது கொண்டு ஸ்வதந்த்ரப்ராமாண்யமுள்ளது என்பதும் கிடைக்கின்றது. இவ்விதம் கர்த்ருத்வத்தினுலும், விஷயத்திலும், ஸ்வரூபத்திலும், இந்த ஸ்துதிக்குத் தனிப்பட்ட ஒரு சிறப்பு உண்டு என்பதும் தெளிவாம்.

तत्तदुत्प्रेक्षमाणानां विशुद्धैरागमैर्विना ।
अनुपासितवृद्धानां विद्या नाति प्रसीदति ॥

தத்ததுத்ப்ரேக்ஷமாணாநாம் விசுத்தைராகமைர்விநா
அநுபாஸிதவ்ருத்தாநாம் வித்யா நாதி ப்ரஸீததி ||

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

"அந்த அந்த விஷங்களை மிகவும் பரிசுத்தமான ஆகம ஞானங்களைத் தள்ளி, தனது புத்தியின் வலுவைக் கொண்டு, உத்தாந த்ருஷ்டி-மேலெழுந்த-பார்வையுடன் பார்க்கின்றவர்களும், முதிர்ந்த அறிவுடன் கூடிய பெரியோர்களை ஸேவிக்காதவர்களுமான மக்களுக்கு வித்யா வடிவாயமைந்த ஸ்ரீபாரதீதேவியினுடைய அருளால் கிடைக்கப்பெறுகின்ற ப்ரஜ்ஞா-புத்தி - விசேஷமானது உண்டாகாது" என ஸ்ரீ பகவான் பர்த்ருஹரி கூறியிருப்பது போல, பரிசுத்தமான பாரம்பர்யம் - குல வொழுக்கம் இல்லாமலும், வித்யாவிருத்தர்களை ஸேவிக்காமலும், கேவலம் தனது புத்தியின் வன்மை கொண்டு க்ரந்தங்களைப் பார்த்துப் பொருள் கொள்வதுமான வித்யையானது ஒருக்காலும் மேன்மையடையாது என்பதையும் இந்தச் செய்யுள் வலியுத்தும். (20)

(அவதாரிகை) இவ்விதம் இந்த ஸ்தவமானது தோஷமற்றதாயிருந்தாலும். காவ்ய லக்ஷணங்களுக்குரிய சப்தம், அர்த்தம் என்ற இரண்டுவித அலங்காரங்கள் ஒன்றும் இல்லாத காரணத்தால் ரஸிகர்கள் எவ்விதம் இதை அப்யாஸம் செய்வார்கள்? என ஸந்தேஹமடைகின்றவர்களைக் குறித்து, கவியானவர்; இந்த ஸ்துதியானது ஸ்ரீபரதேவதையினுடைய பக்தியுபாஸனையை முக்யமாகக் கொண்டதாலும், அந்த பக்தியினுடைய பெருமை கொண்டு என்னையுமறியாது உண்டாகியதாலும், ஸ்ரீ தேவியினுடைய ஸம்பந்தத்தைப் பெற்றதாலும், ஸ்ரீதேவியினுடைய பக்தர்கள் அவச்யம் இதை அங்கீகாரம் செய்வார்கள் எனத் தனது மனவுறுதியையும், வணக்கத்தையும் இந்த ச்லோகத்தின் வாயிலாக அவர்களுக்கு அறிவித்துக்கொண்டு, இந்த ஸ்தவத்தையும் உபஸம்ஹாரம் (முடிவு) செய்கிறார்:—

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

सावद्यं निरवद्यमस्तु यदि वा किं वानया चिन्तया
नूनं स्तोत्रमिदं पठिष्यति जनो यस्यास्ति भक्तिस्त्वयि ।
संचिन्त्यापि लघुत्वमात्मनि दृढं संजायमानं हठात्
त्वद्भक्त्या मुखरीकृतेन रचितं यस्मान्मयापि ध्रुवम् ॥ २१ ॥

इति श्रीमहाकविकालिदास (लघुभट्टारक) विरचितायां श्री देवीपञ्चस्तव्यां प्रथमो लघुस्तवः संपूर्णः

हे भैरवपत्नि-ஓ பரப்ரஹ்மமஹிஷி! त्रिपुरे-முப்புரம் கொண்டவளே! सावद्यम् - நிந்திக்கத்தக்கதாகவோ; निरवद्यम्-நிந்திக்கத்தகாததாகவோ; अस्तु-இருக்கட்டும். अनया - இந்த; चिन्तया - சிந்தையினால்; किं वा - என்ன ப்ரயோஜனம்? यस्य - எவனொருவனுக்கு; त्वयि-உன்னிடத்தில்; भक्ति - பக்தியானது; अस्ति - இருக்கின்றதோ; सः - அந்த; (மனிதன்) பக்தன்; इदम् - இந்த; स्तोत्रम् - ஸ்துதியை; पठिष्यति- பாராயணம் செய்யப்போகிறான். ध्रुवम् - நிச்சயம். आत्मनि - என்னிடத்தில்; लघुत्वम् - அல்பபுத்தியின் தன்மையை; दृढम् - உறுதியாக; संचिन्त्य-अपि-நன்கு ஆராய்ந்தறிந்து கொண்டிருந்தாலும்; त्वद् - भक्त्या - உன்னிடத்திலுள்ள பக்தியினாலே; मुखरी-कृतेन-தூண்டப்பட்ட; मया-अपि-என்னாலும்; हठात् - பலாத்காரத்தினால்; संजायमानम्-நன்கு உண்டாகிய; इदम् - இந்த; स्तोत्रम् - ஸ்தோத்ரமானது; रचितम् - செய்யப்பெற்றது, नूनम् - உறுதி.

ஸாவத்யம் நிரவத்யமஸ்து யதி வா
கிம் வாநயா சிந்தயா
நூநம் ஸ்தோத்ரமிதம் படிஷ்யதி
ஜநோ யஸ்யாஸ்தி பக்திஸ்த்வயி ।

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஸம்சிந்த்யாபி லகுத்வமாத்மநி த்ருடம்
ஸஞ்ஜாயமாநம் ஹடாத்
த்வத் பக்த்யா முகரீ க்ருதேன ரசிதம்
யஸ்மாந் மயாபி த்ருவம் || 21 ||

(பொழிப்புரை) ஓ அன்னையே! நான் மிகவும் அல்பபுத்தியுள்ளவன் என்பது எனக்கு நன்கு தெரியும். எனினும் உன்னிடத்திலே நான் கொண்ட ஆழ்ந்த பக்தியின் பரவசத்தினுல் தூண்டப்பெற்ற காரணத்தாலே என்னையுமறியாது, இந்த ஸ்துதி தானுகவேயுண்டாகியது. இது உறுதி. இந்த ஸ்துதியிலே காவ்யலக்ஷணங்களுக்குரிய சொல், பொருள் முதலிய அணிகளும்; ஓஜஸ், காந்தி, ப்ரஸாதம்-தெளிவு-முதலிய குணங்களும், ச்ருங்காரம் முதலிய நவரஸங்களும் இல்லாதிருந்தாலும், அல்லது அவைகள் யாவும் நிரம்பியிருந்தாலும், உன்னிடத்திலே உறுதியுடன் கூடிய பக்தியுள்ளவர்கள் ஆதரவோடு கூட பாராயணம் செய்வது உறுதி. ஆகவே இந்த ஸ்தவமானது தோஷத்தோடும், குணத்தோடும், நிந்திக்கத்தக்கதாகவோ, நிந்திக்கத்தாகததாகவோ, இருந்தாலும் அதைக் குறித்த சிந்தனையால் எனக்கு என்ன பிரயோஜனம்? ஒன்றுமில்லை. எல்லாம் உன்னிடத்திலுள்ள பக்தியின் பரவசத்தாலெழுந்த ஸ்துதிகளல்லவா?

(விரிவுரை) உண்மையில் ஆராய்ந்து பார்த்தால் இந்த ஸ்துதியானது ஸகல காவ்யலக்ஷணமும் பொருந்தியதோர் சிறு - லகு - காவ்யமெனச் சொல்லலாம். “स एष रसनां रसतमः”—ஸ ஏஷ ரஸாநாம் ரஸ்தம: “இதுவே ரஸங்களுக்குள் ரஸத்தன்மையுடையது” என

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

உபநிஷத்தில் கூறியிருப்பது போல, இச்சிறு காவியத்திலே பக்திரஸத்தையே முக்கியமாகக் கொண்டு, சிவசக்தியின் வடிவாயமைந்ததும், தத்துவவடிவாயமைந்தது மான சக்தியினுடைய உபாஸனைக்கு இன்றியமையாத ஸாதநமெனக்கருதி இங்கு விளக்கப்பெற்றதுமாகும். அதற்கு அங்கங்களாக ச்ருங்காரம் முதலிய ரஸங்களும் ஆங்காங்கு விளக்கப் பெற்றுள்ளன.

அதாவது—மூன்று, ஐந்து, ஆறு, எட்டு, பதினாறு இவைகளில் அத்புதரஸமும்; நான்காவது ச்லோகத்தில் கருணரஸமும்; ஏழாவது ச்லோகத்தில் சாந்தரஸமும்; ஒன்பதாவது ச்லோகத்தில் விப்ரலம்பச்ருங்காரரஸமும்; பத்தாவது ச்லோகத்தில் சிருங்காரம், அத்புதம், இவையிரண்டும்; பதினோராவது ச்லோகத்தில் ஸம்போக ச்ருங்காரம், சாந்தம் இவையிரண்டும்; பன்னிரண்டாவது ச்லோகத்தில் அத்புதம், வீரம் இவையிரண்டும்; பதின்மூன்ருவது ச்லோகத்தில் பயாநகரஸமும்; பதினான்காவது ச்லோகத்தில் கருணரஸமும்; பதினைந்தாவது ச்லோகத்தில் அத்புதம், பயாநகம் இவையிரண்டும்; பதினேழாவது ச்லோகத்திலே பயாநகமும்; (தன்மை) பதினெட்டாவது ச்லோகத்தில் கேவலம் பாவங்களும், விளக்கப்பெற்றுள்ளன.

மற்றும் ஒரே ரஸத்தோடு துவங்கி முடிவிலும் அதையே கொள்வது ஆன்ருேர் மரபுமாம். முதலிரண்டு ச்லோகங்களிலே உவமையுடன் அநுப்ராஸம், ஸௌகுமார்யம் முதலிய சொல்லணியிலக்கணங்களும் கொண்டகாரணத்தாலும், இது ஒரு சித்ரகாவ்யமுமாகும். இவ்விதம் இந்த ஸ்துதியை ரஸங்களையும், அணிகளையும் முக்கியமாகக் கொண்டு நுண்ணிய ஆராய்ச்சியோடு

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

பார்த்தால் இது ஒரு லகுகாவ்ய மென்பது விளங்காமற் போகாது.

ஆகவே, கவியானவர் தான் செய்த ஸ்தவத்திற்குக் காவ்ய இலக்கணங்களோடு கூடிய லகுஸ்தவம் எனப் பெயரிட்டதும் நன்கு பொருந்தும், மற்றும் இதை யியற்றிய கவி தன்னிடத்திலே லகுத்வத்தை (வணக்கத்தை) ஆரோபித்துக் கொண்டதால் இந்நூலுக்கு லகுஸ்துதி யென்பதுமாம். ஏனெனில் அவரது திருநாமம் லகுபட்டாரகர் என்பது.

அல்லது लघु-क्षिप्रम्-अरं-द्रुतम् ' லகு-க்ஷிப்ரம்-அரம்-த்ருதம்-என்ற பதங்களுக்குக் கோசங்களிலே, வேகம்-சீக்கிரம் (விரைவு) எனப் பொருள்களுண்டு. அதன் காரணமாக சீக்கிரத்தில் அநாயாஸமாகச் செய்யப் பெற்றது கொண்டது லகுஸ்துதியென்ருவது; சப்தங்களினுல் லகுவாகவும்; அர்த்தங்களினுல் மஹத்தாகவும் இருப்பது கொண்டு லகுஸ்துதி யென்ருவது; லகுவாக-ஸுலபமாக - ஸ்துதி செய்யும் பக்தர்களிடத்திலே உண்மை வடிவாயிருந்துகொண்டு அவர்கள் கோரிய பலன்களை வெகு சீக்கிரத்திலே கொடுப்பதாலும், ஸ்ரீதேவியினுடைய ஸ்துதியின் வடிவாயமைந்த காரணத்தாலும் லகுஸ்துதியெனவும் பொருள் கொள்ளலாம். சிவம்.

இவ்விதம் ஸ்ரீலகுபட்டாரகரியற்றிய லகுஸ்தவத்திற்கு
வாதூல வேங்கடஸுப்ரஹ்மண்யருடைய தநயன்
ராமசந்த்ர சர்மா இயற்றிய லகுதீபிகை
யென்னும் தமிழுரை இவண் முற்றும்.
சிவார்ப்பணம்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஸ்ரீ தேவீ பஞ்சஸ்தவீ

சர்சாஸ்தவ: (2)

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

सौन्दर्यविभ्रमभुवो भुवनाधिपत्य-
संकल्पकल्पतरवस्त्रिपुरे जयन्ति ।
एते कवित्वकुमुदप्रकरावबोध-
पूर्णेन्दवस्त्वयि जगज्जननि प्रणामाः ॥ १ ॥

(பதவுரை) **हे त्रिपुरे** - ஓ த்ரிபுரஸுந்தரி! **सौन्दर्य-विभ्रम-भुवः** - வனப்பின் விலாஸங்களுக்கு உறைவிடமாயுள்ளவையும்; **भुवन - आधिपत्य - संकल्प - कल्पतरवः** - உலகத்தினுடைய ஆதிபத்யம் - அதிகாரம் - என்ற ஸம்பத்திற்குக் கற்பகத்தருக்களாகவுமுள்ள; **एते** - இந்த; **कवित्व - कुमुद - प्रकर - अवबोध - पूर्ण - इन्दवः** - கவிதைகள் என்னும் குமுதங்களுடைய கூட்டங்களை மலரச் செய்கின்ற நிறைமதிகள்; **त्वयि** - உன்னிடத்தில்; **जयन्ति** - சிறந்து விளங்குகின்றன. **जगत् - जननि** - உலகைத் தோற்றுவித்த ஓ அன்னையே! **प्रणामाः** - (உனக்கு) நமஸ்காரங்கள்.

ஸௌந்தர்ய விப்ரமபுவோ புவநாதிபத்ய-
ஸங்கல்பகல்பதரவஸ்த்ரிபுரே ஜயந்தி |
ஏதே கவித்வகுமுதப்ரகராவபோத-
பூர்ணேந்தவஸ்த்வயி ஜகஜ்ஜநநி ப்ரணாமா: || 1

(பொழிப்புரை) ஓ அன்னையே! வனப்பின் விளையாட்டுக்கு உறைவிடமாயுள்ளவையும்; உலகத்தை ஒரு குடையின்கீழ் ஆள்வதற்குரிய ஸம்பத்தைப் பொழிவதில் கற்பகத்தருக்களாகவும், கவிதையென்னும் ஆம்பல்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

தொகுதிகளை மலரச்செய்வதில் நிறைமதிகளோவென ஐயங்கொள்ளுமாறு ஒப்பற்ற ஒளியுடன் திகழும் உனது திருமுகம், தனித்த சிறப்புடன் பொலிகின்றது. உலகத்தைத் தோற்றுவித்த ஓ அன்னையே! உனக்கு நமஸ்காரங்கள்.

அன்னையின் திருமுகமானது ஒருங்கு சேர்ந்த வனப்பின் லீலைக்கு இருப்பிடமாயுள்ளது. மற்றும், ஒரு குடையின் கீழ் அமர்ந்து உலகை ஆளுகின்ற திறமையை யளிப்பதில் கற்பகத்தருக்களுக்கு நிகராக விளங்குகின்றது. இவைதானோ வெனில்; மற்றுமுண்டு. அதுவோ கவிதைகள் என்னும் ஆம்பல்கள் மலர்வதற்குக் காரணமாயுள்ள நிறைமதிகள் எனவும் விளங்குகின்றன. இத்தகைய பெருமை வாய்ந்தவளும், மூவுலகையும் தோற்று வித்தவளுமான ஓ அன்னையே! உனக்கு நமஸ்காரங்கள்.

அன்னை, தன்னைத் தொழுகின்ற தொழும்பனுக்கு வனப்பையும், சக்ரவர்த்திப் பதவியையும், கவிதை புனைவதற்கான தகுதியையும் கொடுப்பவள் என்பது இச்செய்யுளின் திரண்ட ஸாரமாகும்.

இன்னோரன்ன பல கருத்துக்கள் அமைந்துள்ள, உதயணன் போன்ற அரசர்களுடைய நிகழ்ச்சிகளை மேலே வரப்போகின்ற செய்யுட்களில் காணலாம்.

இச்செய்யுளோடு, ஸௌந்தர்யலஹரியிலுள்ள "शिवः शक्त्या युक्तः - சிவః சக்த்யா யுக்தః" என்ற செய்யுளையும் ஒற்றுநோக்கி கருத்தொற்றுமை காணலாம்.

மற்றும் ஸௌந்தர்யலஹரிக்குச் சிறந்த அருணாமோதிநீ என்ற உரைவகுத்தருளிய காமேச்வரிஸூரியான

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

வர் இந்த ஸ்தவத்தின் முதல் மூன்று செய்யுட்களை முதற் செய்யுளின் உரையில் மேற்கோளாகக் காட்டிக் கருத் தொற்றுமை கூறுவர். இத்துதியிலுள்ள பதினாருவது செய்யுளையும் அங்கு மேற்கோளாகக் காட்டுவார்.

देवि स्तुतिव्यतिकरे कृतबुद्धयस्ते
वाचस्पतिप्रभृतयोऽपि जडीभवन्ति ।
तस्मान्निसर्गजडिमा कतमोऽहमत्र
स्तोत्रं तव त्रिपुरतापनपत्नि कर्तुम् ॥ २ ॥

हे त्रिपुर-तापन-पत्नि - முப்புரம் கொண்ட முக்கண்ணனுடைய மனைவியே! **देवि** - ஒளியுடன் கூடிய அன்னையே! **ते** - உன்னுடைய; **स्तुति - व्यति - करे** - ஸ்துதி ஸம்பந்தமான விஷயத்தில், **वाचस्पति- प्रभृतयः- अपि**- ப்ருஹஸ்பதி முதலியவர்களும், **जडी-भवन्ति** - வாயடைத்தவர்களாக இருக்கின்றனர். **तस्मात्**-ஆகையால்; **निसर्ग- जडिमा** - இயற்கையாவே ஊமைத்தன்மை வாய்ந்த; **अहम्** - நான்; **अत्र** - இவ்விஷயத்தில், **तव**-உன்னுடைய; **स्तुतिम्** - துதியை; **कर्तुम्** -செய்வதற்கு, **कतमः** - எவன்?

தேவி ஸ்துதிவ்யதிகரே க்ருதபுத்தயஸ்தே
வாசஸ்பதிப்ரப்ருதயோऽபி ஜடீ பவந்தி।
தஸ்மாந் நிஸர்கஜடிமா கதமோऽஹமத்ர
ஸ்தோத்ரம் தவ த்ரிபுரதாபநபத்நி கர்தும் ॥ 2

(பொழிப்புரை) ஒளியுடன் இயங்கும் ஓ அன்னையே! முப்புரம் கொண்ட பரமசிவனுடைய மனைவியே!

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

உன்னைத் துதிக்கும் விஷயத்தில் தேவகுருவாம் ப்ருஹஸ்பதி முதலியவர்களும் வாயடைத்து ஊமையாயிருக்கின்றனர். அங்ஙனமிருக்கும்பொழுது பிறவியிலே ஊமையாயுள்ள நான் உன்னைத் துதிப்பது எங்ஙனம்? அதற்கு நான் தகுதியுள்ளவனோ! இல்லையன்றோ!

இங்கு, ப்ருஹஸ்பதி முதலியவர்கள் என்றதால், நான்முகன், விஷ்ணு, ருத்ரன் முதலியவர்களையும் கொள்ளவேண்டும். எனவே இவர்கள் யாவரும் உன்னைத் துதிப்பதற்குத் தயங்குகின்றனர். அவ்விதமிருக்க உன்னை துதிப்பதற்கு நான் தகுதியுள்ளவனோ எனத் தன்னைத் தானே ஐயங்கொண்டு கேட்டுக்கொள்ளுகிறார். ஆகவே இந்த வேண்டுகோளின்வழியாக அன்னையின் முன்பு தன்னுடைய விநயத்தையும் வெளியிட்டுக் கொள்ளுகிறார் எனவும் கிடைக்கும். ஆயினும் தான் தகுதியுள்ளவன் என்பதையும் தனது உள்ளம் கலந்த உறுதியும் தனக்கு உண்டு என்பதையும் மறைமுகமாகக் காட்டுகிறார்.

இச் செய்யுளோடு ஸௌந்தர்யலஹரியின் முதற் செய்யுளையும் ஒப்புநோக்கி, கருத்தொற்றுமையைக் கண்டு கொள்ளலாம்.

मातस्तथापि भवतीं भवतीव्रताप-
विच्छित्तये स्तवमहार्णवकर्णधारः ।
स्तोतुं भवानि स भवच्चरणारविन्द-
भक्तिग्रहः किमपि मां मुखरीकरोति ॥ ३ ॥

(பதவுரை) हे मातः - ஓ அன்னையே! तथा - अपि - அவ்விதமிருந்த பொழுதிலும்; भव - तीव्र - ताप - विच्छि-

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

च्छये - பிறவித்துன்பமென்னும் கொடுமையான தாபத்தினுடைய களைதலின் பொருட்டு; **स्तव-मह-अर्णव-कर्णधारः**-துதியென்னும் பெருங்கடலுக்குக் கப்பிந்தானுக விளங்குகின்ற; **हे भवानि** - ஓ பவாநி! **सः** - அப்பெருமை வாய்ந்த; **भवत्-चरण-अरविन्द-भक्ति-ग्रहः** - உன்னுடைய சரணகமலங்களிலே ஒன்றிய பக்தியின் பரவசமானது; **भवतीम्**-உன்னை; **स्तोतुम्** - துதிப்பதற்கு; **माम्** - என்னை; **किम्-अपि** - ஏதோ ஒன்று; **मुखरी-करोति** - தூண்டுகிறது.

மாதஸ்ததாபி பவதீம் பவதீவ்ரதாப-
விச்சித்தயே ஸ்தவமஹார்ணவ கர்ணதார: ।
ஸ்தோதும் பவாநி ஸ பவச்சரணாரவிந்த-
பக்திக்ரஹ: கிமபி மாம் முகரீகரோதி ‖ 3 ‖

(பொழிப்புரை) ஓ அன்னையே! பவாநி! அவ்விதமிருப்பினும், துதியென்னும் பெருங்கடலுக்குக் கப்பலோட்டியைப் போல, பெருமை வாய்ந்த உன்னுடைய சரணங்கள் என்னும் கஞ்சமலர்களிலே ஒன்றிய பக்தியின் பெருமையால் கட்டுண்டு பரவசமடைந்து,பிறவிக்கடலென்னும் கொடிய தாபத்தைக் களைவதற்காக உன்னைத் துதிப்பதற்கு, எண்ணத்திற்கும் எட்டாத ஒருவித சக்தியானது என்னை உன்பால் உந்தச் செய்கிறது.

இச்செய்யுளில், பிறவிக்கடலைக் கடப்பதற்கு அன்னையினிடம் தோன்றும் இடையறாத நிலைத்த பக்தி ஒன்றேதான் சாலச் சிறப்புடைத்து. அந்த பக்தியும் பலபடியான துதிகளின் வாயிலாகத் தன்னையும் மறந்து, அன்னையும், தானும் ஒன்றே என அசைக்கமுடியாத உறுதியுண்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

டாகும் வரையில் அடிக்கடி அகத்தே அவளுடைய கல்யாண குணங்களைச் சிந்தனை செய்து வருவதும்தான் என்பதும் இங்கு வலியுறுத்தப் பெற்றது.

सूते जगन्ति भवती भवती बिभर्ति
जागर्ति तत् क्षयकृते भवती भवानि ।
मोहं भिनत्ति भवती भवती रुणद्धि
लीलायितं जयति चित्रमिदं भवत्याः ॥ ४ ॥

(பதவுரை) **हे-भवानि !** ஓ பவானி! **भवती** - நீ; **जगन्ति** - உலகங்களை ; **सूते**-தோற்றுவிக்கிறாய்; **भवती**- நீ; **बिभर्ति** - போஷணை செய்கிறாய்; **भवती** - நீ; **तत्**- அந்த உலகை ; **क्षय-कृते** - அழியச் செய்வதில் ; **जागर्ति**- விழிப்புடன் இருக்கிறாய் ; **भवती** - நீ ; **मोहम्** - மயக்கத்தை ; **भिनत्ति** - அகற்றுகிறாய் ; **भवती** - நீ ; (அந்த மயக்கத்தையும்) **रुणद्धि** - மறைக்கிறாய் ; **इदम्** - இந்த ; **चित्रम्** - வியக்கத்தக்க செய்கையானது. **जगति** - உலகில் ; **भवत्याः** - உன்னுடைய ; **लीलायितम्** - விளையாட்டின் தன்மையாக அமைந்துள்ளதன்றோ !

ஸூதே ஜகந்தி பவதீ பவதீ பிபர்தி
ஜாகர்தி தத் க்ஷயக்ருதே பவதீ பவானி ।
மோஹம் பிநத்தி பவதீ பவதீ ருணத்தி
லீலாயிதம் ஜயதி சித்ரமிதம் பவத்யா: ॥ 4 ॥

(பொழிப்புரை) ஓ பவானி அன்னையே ! நீ ஒருபொழுது உலகங்களைத் தோற்றுவிக்கிறாய். நீ மற்றொரு பொழுது தோற்றுவித்த உலகைப் போஷிக்கிறாய். பிரி

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri.

தொருபொழுது இவ்வுலகை அழிப்பதில் விழிப்புடன் இருக்கிறாய். ஒரு ஸமயம் பிராணி ஸமூஹங்களை மயங்கச்செய்கிறாய், மற்றொரு ஸமயம் அந்த மயக்கத்தைத் தடுக்கிறாய், இன்னோரன்ன உன்னுடைய இந்தச் செய்கைகள் யாவும் விளையாட்டாகவே அமைந்துள்ளன போலும். இச்செய்கைகள் யாவும் வியக்கத் தக்க வண்ணம் அமைந்துள்ளது என்பது கருத்து.

அன்னை உலகைத் தோற்றுவித்து, அதைப் போஷித்து ஊழிக்காலத்திலே அதை அழித்து விடுகிறாள். இவ்விதமே மக்களை மயங்கச் செய்கிறாள், ஒரு ஸமயம் அவர்களை மயக்கத்திலிருந்து எழுப்பிச் சிறந்த பதவியையும் கொடுக்கிறாள். இவ்வாறு உனது செயல்கள் யாவும் விளையாட்டாகவே அமைந்துள்ளன. இந்த மஹா மாயா சக்தியின் திறமையைத்தான் எவ்விதம் எடுத்துச் சொல்ல முடியும் ? அன்னையின் நிலையைக் காண்பதற்கு மஹா தபஸ்விகளும், யோகிகளும் கடுந்தவம் புரிந்தும் களைப்படைந்து காணமுடியாது தவிக்கின்றனர். எனவே அன்னை தனது மாயா சக்தியினால் இவ்வுலகை ஆட்டி வைக்கிறாள் என்பதும் திரண்ட ஸாரம்.

இக் கருத்தையே லலிதோபாக்யானம் பின்வருமாறு வர்ணித்துள்ளது —

क्रीडा ते लोकरचना सखा ते चिन्मयः शिवः ।
आहारस्ते चिदानन्दो वासस्ते हृदयं सताम् ॥

—ஓ அன்னையே ! உன்னுடைய விளையாட்டு உலகை ரசனை செய்வது (படைப்பது). இந்த விளையாட்டுக்கு உற்ற தோழன் சிவனாவன். உனக்கு ஆஹாரமோ சிதானந்தம். உன்னுடைய இருப்பிடமோ ஸாதுக்களுடைய

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஹ்ருதயமாகும் என்பதாகும். வியாஸஸூத்ரமும் लोकवत्तु लीलाकैवल्यम् - எனக் கூறும்.

மற்றும் நமது பெண் குழந்தைகள் வாசலில் கோலம்போட்டு அது ஸரியாயமைந்துள்ளதா என ஒரு க்ஷணநேரம் அதையே பார்த்துக்கொண்டிருப்பார்கள். அது சரியாக அமையவில்லை என மனதிற்குத் தோன்றும் பொழுது அதையழித்து மறுபடியும் நேரிய கோலத்தைப் போடுவது போலல்லவா உனது இந்த விளையாட்டு அமைந்துள்ளது. உனது மாயையின் பெருமிதம் தான் என்னே!

> यस्मिन् मनागपि नवाम्बुजपत्रगात्रि
>
> गौरि प्रसादमधुरां दृशमाददासि ।
>
> तस्मिन्निरन्तरमनङ्गशरावकीर्ण-
>
> सीमन्तिनीनयन संततयः पतन्ति ॥ ५ ॥

(பதவுரை) **नव-अम्बुज - पत्र - गात्रि** - அன்றலர்ந்த தாமரை மலரின் இதழ் போன்ற சரீரத்தையுடையவளே; **गौरि** - ஓ அன்னையே! **यस्मिन्** - எவனிடத்தில்; **प्रसाद - मधुराम्** - தயை நிறைந்து வனப்புடன் விளங்குகின்ற; **दृशम्** - பார்வையை; **मनाग्-अपि** - கொஞ்சமாவது; **आददासि** - கொடுப்பாயேயாகில்; **तस्मिन्** - அவனிடத்தில்; **निरन्तरम्** - எப்பொழுதும்; **अनङ्ग-शर-प्रकीर्ण-सीमन्तिनी-नयन-संततयः** - காமதேவனுடைய கணைகளினால் துளைக்கப்பெற்ற ஸுந்தரிகளுடைய கண்களின் வரிசைகள்; **पतन्ति** - விழுகின்றன.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

யஸ்மிந் மநாகபி நவாம்புஜ பத்ரகாத்ரி
கௌரிப்ரஸாத மதுராம் த்ருச மாததாஸி |
தஸ்மிந் நிரந்தரமநங்கசராவகீர்ண-
ஸீமந்திநீ நயநஸந்ததய: பதந்தி | 5 |

(பொழிப்புரை) அன்று மலர்ந்த தாமரை மலர் போன்ற மெல்லிய திருமேனியையுடைய ஓ அன்னையே! எந்தத் தொழும்பனிடத்தில் கருணை ததும்பும் உனது கடைக்கணிப்பானது ஒருகணம் நிலைத்து நிற்குமேயாகில், அவனிடத்தில் காமதேவனுடைய கணைகளால் துளைக்கப் பெற்ற தருணீமணிகளுடைய கண்களின் வரிசையானது நிலைத்து நிற்குமன்றோ!

அன்னையினுடைய கருணை ததும்பும் திருநோக்கானது, எந்தத் தொழும்பனுக்கு நிறைவுள்ளதாகக் கிடைக்கின்றதோ, அவனுக்குக் காமதேவன் கணைகளால் தாக்குண்ட காமினிகளுடைய கடைக்கணிப்புக்கள் இடைவிடாது கிடைக்கின்றன. அதாவது அன்னையின் அருள் சுரக்கும் கடைக்கணிப்பு ஒரு தொழும்பனுக்குக் கிடைத்து விட்டால், அவனை காமினிகளும் காமுறப் பெற்று ஸேவித்தவண்ணமிருக்கின்றனர் என்பது ஸாரம்.

இச்செய்யுளோடு, "नरं वर्षीयांसं" என்ற ஸௌந்தர்யலஹரியினுடைய செய்யுளையும் ஒப்பு நோக்கி, கருத்தொற்றுமை காணலாம்.

पृथ्वीभुजोऽप्युदयनप्रभवस्य तस्य
विद्याधरप्रणतिचुम्बितपादपीठः ।
तच्चक्रवर्तिपदवीप्रणयः स एषः
त्वत्पादपङ्कजरजः कणजः प्रसादः ॥ ६ ॥

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பதவுரை) **पृथ्वी - भुजः - अपि** - அரசனுயிருந்த பொழுதிலும்; **उदयन - प्रभवस्य** - உதயணனுடைய தோன்றலான; **तस्य**-அந்த வத்ஸராஜனுக்கு; **विद्या-धर-प्रणति - चुम्बित - पाद - पीठः** - வித்தியாதரர்களால் வணங்கப்பெற்ற பாதபீடத்தையுடைய; **चक्रवर्ति - पदवी-प्रणयः - इति-यत्**-சக்ரவர்த்தி பதவியை அடைவிக்கும் என்பதும் யாதொன்று உண்டோ; **सः** - அப்பெருமை வாய்ந்த; **एषः** - இந்த சக்ரவர்த்தி பதவியும்; **त्वत्-पाद-पङ्कज-रजः-कणजः**-உன்னுடைய சரணங்கள் என்னும் செந்தாமரை மலரின் துகளின் திவலையென்ற; **प्रसादः** - தயையேயன்றோ.

ப்ருத்வீ புஜோऽப்யுதயநப்ரபவஸ்ய தஸ்ய
வித்யாதர ப்ரணத சும்பிதபாத பீட: ।
தச்சக்ரவர்த்தி பதவீ ப்ரணயஸ் ஸ ஏஷ:
த்வத்பாத பங்கஜரஜ: கணஜ: ப்ரஸாத: ॥ 6 ॥

(பொழிப்புரை) ஓ அன்னையே! உதயணன் வழி வந்த அந்த வத்ஸராஜன் வித்யாதரர்களால் வணங்கப் பெற்ற பாதபீடத்தையுடைய சக்ரவர்த்தி பதவியை அடைந்துள்ளான் என்பது, உனது பெருமை வாய்ந்த சரண கமலங்கள் என்னும் செந்தாமரை மலரின் துகள்களுடைய திவலையை ஸேவித்த காரணத்தால் அன்றோ!

இக்கவியினுல் இயற்றப் பெற்ற முதல் ஸ்தவமாகிய லகுஸ்தவத்திலுள்ள பன்னிரண்டாவது செய்யுளையும், இச்செய்யுளையும் ஒப்பு நோக்கினுல் கருத்தொற்றுமை காணலாகும்.

CC-0. Amritsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

त्वत्पादपङ्कजरजः प्रणिपातपूर्वैः
पुण्यैरनल्पमतिभिः कृतिभिः कवीन्द्रैः ।
क्षीरक्षपाकरदुकूलहिमावदाता
कैरप्यवापि भुवनत्रितयेऽपि कीर्तिः ॥ ७ ॥

(பதவுரை) त्वत्-पाद-पङ्कज-रजः - प्रणिपात - पूर्वैः - உன்னுடைய பாதங்கள் என்னும் தாமரை மலரின் துகளை முன்னிட்டு வணங்குகின்றவர்களும்; पुण्यैः - புண்யசாலிகளும், अनल्प - मतिभिः - மஹாபுத்திசாலிகளும், कृतिभिः - கிருதார்த்தர்களுமான; कविन्द्रैः - கவிபுங்கவர்களால்; क्षीर-क्षपा-कर-दुकूल-हिम-अवदाता - பால், சந்திரன், வெண்துகில், பனி இவைகளுக்கு நிகரான வெண்ணிறம் வாய்ந்த; कीर्तिः - கீர்த்தியானது; भुवन-त्रितये-अपि-உலகம் மூன்றிலும்; अवापि - அடையமுடியுமன்றோ, कैः अपि - மற்றவர்களால்தான்; अवापि- அடைய முடியுமோ, முடியாதன்றோ!

த்வத்பாதபங்கஜரஜ: ப்ரணிபாத பூர்வை:
புண்யைரநல்பமதிபி: க்ருதிபி: கவீந்த்ரை: ।
க்ஷீரக்ஷபாகரதுகூலஹிமாவதாதா
கைரப்யவாபி புவநத்ரிதயேऽபி கீர்தி: ॥ 7 ॥

(பொழிப்புரை) ஓ அன்னையே! உன்னுடைய பாதங்கள் என்னும் செந்தாமரை மலரின் துகளை முன்னிலையாகச் செய்து வணங்குகின்றவர்களும், மஹா புண்யசாலிகளும், மஹா புத்திசாலிகளும் கிருதார்தர்களுமான கவிபுங்கவர்களால், பால்போலும், நிறை மதிபோலும், வெண்துகில் போலவும், மாசற்ற வெண்ணிறம்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

பொலிவுறும் புகழை மூவுலகிலும் அடைகின்றனர். இப்பெருமை வாய்ந்த மாசற்ற புகழானது மற்றவர் களால் அடைய முடியாதன்றோ !

அன்னையிடம் பக்தி செலுத்துகின்றவர்கள் பாபங் களைக் களைந்த மஹா புண்யசாலிகள். அவர்களுக்கு அன்னையின் அருளால் கவிதை புனையும் திறமையும் கிடைக்கின்றது. மதிவளமிக்கவர்களாய்த் திகழுகின்ற னர். அன்னையின் திருவருளால் மூவுலகிலும் பரவியுள்ள அழியாப் புகழையும் அடைகின்றனர் என்பது ஸார மாகும்.

இவ்விடத்தில் புகழை வெண்ணிறம் கொண்ட வஸ்துக்களுக்கு ஒப்பிடுவது கவிகளுடைய மரபு. அம் மரபினைத் தழுவி வெண்துகில், பிறைமதி, பால், பனி இவைகள் இங்கு சொல்லப் பெற்றுள்ளது என்பதை உணரவேண்டும்.

कल्पद्रुमप्रसवकल्पितचित्रपूजा-
मुद्दीपितप्रियतमा मदरक्तगीतिम् ।
नित्यं भवानि भवतीमुपवीणयन्ति
विद्याधराः कनकशैलगुहागृहेषु ॥ ८ ॥

(பதவுரை) हे भवानि - ஓ பவானி ! कल्प-द्रुम-प्रसव-कल्पित-चित्र-पूजाम् - கற்பகத்தருக்களுடைய; மலர்க ளால், செய்யப் பெற்ற வியக்கத்தக்க பூஜையை யுடையவளும், उद्-दीपित-प्रियतमा-मद रक्त-गीतिम् -தூண் டப்பெற்ற மனைவிகளுடைய மகிழ்ச்சியின் காரண மாக ஒன்றிய கானத்தை யுடையவளுமான ; भवतीम् -

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

உன்னை ; **विद्याधराः** - வித்யாதரர்கள் ; **नित्यम्** - எப்பொழுதும் ; **कनक-शैल-गुहा-गृहेषु** - மேருமலையின் கண்ணுள்ள குஹையென்னும் வீடுகளில் ; **उप-वीणयन्ति** - கானம் செய்கின்றனர்.

கல்பத்ரும ப்ரஸவகல்பிதசித்ரபூஜா-
முத்தீபித ப்ரியதமா யதரக்த கீதம் ।
நித்யம் பவாநி பவதீமுபவீணயந்தி
வித்யாதரா: கநகசைல குஹாக்ருஹேஷு ॥ 8 ॥

(பொழிப்புரை) ஓ பவாநி! கற்பகத்தருக்களுடைய மலர்கள் கொண்டு வியக்கத் தக்கவகையிலே பூஜை செய்து கொண்டிருப்பவர்களும், தங்கள் மனைவிகளால் வெளியிடப்பெற்ற மகிழ்ச்சியோடு ஒன்றிய காரணத்தை யுடையவர்களுமான வித்யாதரர்கள், எப்பொழுதும் மேருமலையின் தாழ்வரையிலேயுள்ள குஹைகள் என்னும் இல்லங்களிலே உனது வீரம் செறிந்த புகழினைப் போற்றிப் பாடியவண்ணமிருக்கின்றனர் அன்றோ!

மேருமலையின் தாழ்வரையிலேயுள்ள குஹைகளைத் தமது அழகிய இல்லங்களாக அமைத்துக்கொண்டுள்ள வித்யாதரர்கள், தத்தம் நாயிகைகளோடு, கற்பகத் தருக்களின் அழகிய மலர்களால் அர்ச்சனை செய்து வணங்கிய வண்ணம் அன்னையின் வீரம் செறிந்த வரலாறுகளைப் போற்றி கானம் செய்த வண்ணமிருக்கின்றனர் என்பது கருத்து.

लक्ष्मीवशीकरणकर्मणि कामिनीना-
माकर्षणव्यतिकरेषु च सिद्धमन्त्रः ।

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

नीरन्ध्रमोहतिमिरच्छिदुरप्रदीपो
देवि त्वदङ्घ्रिजनितो जयति प्रसादः ॥ ९ ॥

(பதவுரை) हे देवि ! - ஓ அன்னையே ! त्वद्-अङ्घ्रि-जनितः - உன்னுடைய பாதங்களிலிருந்து தோன்றிய ; प्रसादः - அருளானது ; लक्ष्मी-वशीकरण-कर्मणि - திருமகளை வசீகரணம் செய்யும் செயலில் ; कामिनीनाम् - கண்கவரும் ஸௌந்தரிகளுடைய ; आकर्षण-व्यतिकरेषु च - ஆகர்ஷணம் செய்யும் விஷயங்களில் ; सिद्धमन्त्रः - காரியத்தின் நிறைவையளிக்கவல்ல, மந்த்ரமாகவும், नीरन्ध्र-मोह-तिमिर-च्छिदुर-प्रदीपः - நெருக்கமாயுள்ள மயக்கமென்னும் இருளை யகற்றவல்ல ஒளியாகவும் ; जयति - சிறப்புடன் விளங்குகின்றது.

லக்ஷ்மீவசீகரணகர்மணி காமிநீநாம்
ஆகர்ஷணவ்யதிகரேஷு ச ஸித்தமந்த்ர: ।
நீரந்த்ரமோஹதிமிரச்சிதுரப்ரதீபோ
தேவி த்வதங்க்ரிஜநிதோ ஜயதி ப்ரஸாத: ॥ 9 ॥

(பொழிப்புரை) ஓ அன்னையே ! கஞ்சமலரெனத் திகழுகின்ற உன்னுடைய சரணங்களிலிருந்து தோன்றும் அருளானது ; திருமகளைத் தன் வயப்படுத்துகின்ற செயலிலும், ஆரணங்குகளை ஆகர்ஷணம் செய்கின்ற விஷயங்களிலும், கைவரப்பெற்ற காரிய வடிவாயமைந்த மஹா மந்த்ரமாகவும், நெருக்கமாயுள்ள மயக்கமென்னும் இருளை யகற்றுகின்ற பேரொளிப் பிழம்பாகவும் சிறப்புடன் விளங்குகின்றது.

அன்னையின் செந்நிறத் திருவடியானது, பிறவி பிறவியாகத் தொடர்ந்து வந்துள்ள நெருக்கமாயுள்ள

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

மயக்கத்தை யகற்றும் திறனைப் பெற்று விளங்குவன. மற்றும் திருமகளைத் தன் வயப்படுத்தி, காமினிகளைக் கவரச் செய்கின்றதுமான மந்த்ர வடிவாகவும் அமைந்துள்ளன என்பது ஸாரம்.

देवि त्वदङ्घ्रिनखरत्नभुवो मयूखाः
प्रत्यग्रमौक्तिकरुचो मुदमुद्वहन्ति ।
सेवानतिव्यतिकरे सुरसुन्दरीणां
सीमन्तसीम्नि कुसुमस्तबकायितं यैः ॥ १० ॥

(பதவுரை) हे देवि - ஓ அன்னையே! यैः - எந்த கிரணங்களால்; सेवा-नति-व्यतिकरे - பூஜை நமஸ்காரம் இவைகள் செய்யும் பொழுது; सुर-सुन्दरीणाम् - தேவ ஸுந்தரிகளுடைய; सीमन्त - सीम्नि - வகிட்டின் எல்லையிலே; कुसुम-स्तबकायितम् - மலர்கொத்துக்கள் என அமையப்பெற்றுள்ளதோ; ते- அந்த; त्वद्-आङ्घ्रि-नख-रत्न-भुवः - உன்னுடைய சரணங்களின் நகங்கள் என்னும் இரத்தினங்களிலிருந்து தோன்றியவைகளான; मयूखाः - கதிர்கள்; प्रत्यग्र-मौक्तिक-रुचः - குங்கும ப்ரதேசத்தைத் திரும்ப அடைந்துள்ள முத்துக்களின் காந்திகளுக்கு; मुदम् - ஆநந்தத்தை; उद्वहन्ति - உண்டு பண்ணுகின்றன.

தேவி த்வதங்க்ரி நகரத்நபுவோ மயூகா:
ப்ரத்யக்ரமௌக்திகருசோ முதமுத்வஹந்தி ।
ஸேவா நதிவ்யதிகரே ஸுரஸுந்தரீணாம்
ஸீமந்தஸீம்நி குஸுமஸ்தபகாயிதம் யை: ‖10‖

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஓ அன்னையே ! ஸுரஸுந்தரிகள் - தேவ மாதர்கள்- உன்னை ஆராதித்து நமஸ்காரம் செய்யும்பொழுது அவர் களுடைய நுதலின் மேலே விளங்கும் வகிட்டின் எல்லை யிலே பூங்கொத்துக்களே போன்று அமைந்துள்ள ஸிந்தூரத் துகள்கள், உன்னுடைய சரணங்களிலே ஒளி யுடன் இலங்குகின்ற நகங்கள் என்னும் இரத்தினங்களி லிருந்து தோன்றிய ஒளியேயன்றோ ! அவைகளும் குங்கும ப்ரதேசத்தை-நெற்றியை-யடைந்து நல்முத்துக் களே போன்றுள்ள வெண்ணிறக் காந்திகளுக்கு ஆனந் தத்தை யுண்டுபண்ணுகின்றன.

தேவகன்னியர்கள் அன்னையைத் தொழுது வந் தனம் செய்யும் பொழுது அவர்களுடைய கருத்தடர்ந்த கூந்தல்களின் நடுவேயுள்ள வகிட்டின் எல்லையிலே துலங் கும் ஸிந்தூரத்துகளிலே, மலர்க்கொத்தென பதிந்துள்ள அன்னையின் திருவடிகளிலுள்ள நகங்களின் முத்துக்களே போன்ற வெண்ணிறக் காந்திகள் ஆநந்தத்தைக் கொடுக்கின்றன என்பது கருத்து.

இங்கு, வகிட்டிலே துலங்கும் ஸிந்தூரம் சென்னிறப் பொலிவு கொண்டு திகழ்வது. அன்னையின் சேவடியி லுள்ள நகங்கள் வெண்ணிறம் கொண்டு விளங்குவது. ஆகவே ஸிந்தூரத்தின் சென்னிறம் இரத்தினங்களாக வும், நகங்களுடைய வெண்ணிறம் நல்முத்துக்களாகவும் இவைகளுடைய இணைப்பை இச்செய்யுளில் கவி உருவகம் செய்துள்ளார் என்பதும் கிடைக்கப் பெறும்.

मूर्ध्नि स्फुरत् तुहिनदीधितिदीप्तिदीप्तं

मध्ये ललाटममरायुधरश्मिचित्रम् ।

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

हृच्चक्रचुम्बि हुतभुक्कणिकानुकारि
ज्योतिर्यदेतदिदमम्ब तव स्वरूपम् ॥ ११ ॥

(பதவுரை) हे अम्ब - ஓ அன்னையே! यत् - யாதொரு ஒளியானது; मूर्ध्नि - சிரஸில்; स्फुरत्-तुहिन-दीधिति-दीप्त-दीप्तम् - ஒளிருகின்ற சந்த்ர கிரணங்களுடைய காந்தியினால் விளங்குகின்றதோ; यत् - யாதொரு காந்தியானது; मध्ये - ललाटम् - நெற்றியின் நடுவில்; अमर-आयुध-रश्मि-चित्रम्-இந்திரனுடைய ஆயுதமாம் வானவில்லின் கிரணங்களுடைய பலவர்ணங்களையுடையதும், यत्-யாதொரு ஒளியானது, हुत-भुक्-कणिका-अनुकारि - அக்நியினுடைய பொறிகளைத் தழுவியதாக; हृच्चक्र-चुम्बि - ஹ்ருதய கமலத்தைத் தொட்டுக்கொண்டுள்ளதோ; एतत्-இந்த; ज्योतिः-ஒளியானது इदम् - இப்பெருமை வாய்ந்த; (இதுவும்) तव -உன்னுடைய; स्वरूपम् - வடிவமன்றோ!

மூர்த்நி ஸ்புரத்-துஹிநதீதிதி தீப்திதீப்தம்
மத்யே லலாடமமராயுத ரச்மிசித்ரம்
ஹ்ருச்சக்ரசும்பி ஹுதபுக் கணிகாநுகாரி
ஜ்யோதிர்யதேதத்திதமம்ப தவ ஸ்வரூபம் || 11 ||

ஓ அன்னையே! எந்த ஒளியானது நிறைமதியின் காந்தியெனச் சிரஸிலேயே விளங்குகின்றதோ, எந்த ஒளியானது நுதலின் நடுவே வானவில்லே போன்று வனப்புடன் விளங்குகின்றதோ, எந்த ஒளியானது அநாஹத சக்ரத்தைத் தழுவிக் கொண்டு அக்நியினுடைய பொறிகளே போன்று பொலிவுடன் விளங்குகின்றனவோ, அப்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

பெருமை வாய்ந்த இந்த ஒளியும் உனது திருவுருவின் வடிவாய்த் திகழ்வதன்றோ !

இச்செய்யுளில் சிரஸ், நெற்றி, ஹ்ருதயம் இந்த மூன்று இடங்களிலும் மந்த்ரங்களைக் கொண்டு உபாஸனை செய்யவேண்டுமென்பது மறைமுகமாகச் சொல்லப் பெறுகின்றது.

மற்றும், இந்தச் செய்யுளோடு முதல் ஸ்தவமாகிய லகுஸ்தவத்தினுடைய முதற் செய்யுளையும் ஒப்புநோக்கி கருத்தொற்றுமை காணலாம். மற்ற மந்த்ர விளக்கங்கள் அச்செய்யுளில் எம்மால் விரிவாக விளக்கப் பெற்றுள்ளதால் அங்கு கண்டு தெரிந்துகொள்ள வேண்டுவதாகும்.

रूपं तव स्फुरितचन्द्रमरीचिगौर-
मालोकते शिरसि वागधिदैवतं यः ।
निःसीमसूक्तिरचनामृतनिर्झरस्य
तस्य प्रसादमधुराः प्रसरन्ति वाचः ॥ १२ ॥

(பதவுரை) हे अम्ब - ஓ அன்னையே! तव - உன்னுடைய ; शिरसि - சிரஸில் ; स्फुरित-चन्द्र-मरीचि-गौरम्- ஒளியுடன் இலங்கும் சந்திர கிரணங்களைப் போல வெண்மையான ; रूपम् - உருவத்தை ; यः - எவன் ; वाग् - अधि - दैवतम् - வாக்கின் அதிதேவதையாக ; आलोकते - காண்கின்றானோ. तस्य - அவனுக்கு ; निः - सीम-सूक्ति-रचना-अमृत-निर्झरस्य - எல்லையற்ற நற்சொற்களைப் புனைவதில் அமுதப் பெருக்கையுடைய ; प्रसाद-मधुराः - தெளிவுள்ளதும் ; மிகச் சுவையுள்ளவையுமான ; वाचः - சொற்கள் ; प्रसरन्ति - பரவுகின்றன.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ரூபம் தவ ஸ்புரித சந்த்ர மரீசிகௌர-
மாலோகதே சிரஸி வாகதிதைவதம் ய: ।
நி:ஸீமஸூக்தி ரசநாம்ருத நிர்ஜரஸ்ய
தஸ்ய ப்ரஸாத மதுரா: ப்ரஸரந்தி வாச: ‖ 12

(பொழிப்புரை) ஓ அன்னையே! உன்னுடைய சிரஸில் ஒளியுடன் விளங்கும் நிறைமதியின் கதிர்களே போன்று வெண்ணிறம் கொண்ட உனது திருவுருவை எவனொருவன் வாக்குகளுக்குஅதிதேவதையாகக்(தலைவி) காண்கின்றானோ; அவனுக்கு எல்லையற்ற நற்சொற்கள், அமுதப் பெருக்கே போல, உனது அருளால், தெளிவு மிக்கதும் இனிமை வாய்ந்ததுமாக வெளிவருகின்றன வன்றோ!

அன்னையை நிர்மலமான வெண்ணிறம் கொண்டு விளங்கும் வடிவாக உருவகம் செய்து, வாக்கின் அதி தேவதை எனவும், கருத்திலே நிலைக்கச் செய்து உபாஸனை செய்து வந்தால் அத்தொழும்பனுக்கு, இனிமையும், அமுதமும் போன்ற சுவையுள்ளதுமான சொற்களைக் கொண்ட கவிகளைப் புனையும் திறனும் உண்டாகுமென்பது ஸாரம்.

सिन्दूरपांसुपटलच्छुरितामिव द्यां
त्वत्तेजसा जतुरसस्नपितामिवोर्वीम् ।
यः पश्यति क्षणमपि त्रिपुरे विहाय
व्रीडां मृडानि सुदृशस्तमनुद्रवन्ति ॥ १३ ॥

(பதவுரை) हे मृडानि - ஓ அன்னையே! त्रिपुरे - ஓ த்ரிபுரே! त्वत् - உன்னுடைய; तेजसा - ஒளியினால்;

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

द्याम् - ஆகாசத்தையும், सिन्दूर - पांसु-पटल-छुरिताम्-इव-ஸிந்தூரத்துகள்களுடைய தொகுதிகள் நிறைந்துள்ள தே போல ; उर्वीम् - பூமியை ; जतु- रस - स्नपिताम् - इव - அரக்கு ஜலத்தால் நனைக்கப் பெற்றது போலவும் ; यः - எவன் ; क्षणम् - अपि - ஒரு கணமாவது ; पश्यति - பார்க்கின்ருனே ! तम्-அவனை ; सुदृशः-அழகிய கண் களையுடைய ஆரணங்குகள் ; व्रीडाम् - வெட்கத்தை ; विहाय - விட்டு ; अनु-द्रवन्ति - பின் தொடருகின்றனர்.

ஸிந்தூரபாம்ஸுபடலச்சுரிதாமிவ த்யாம்
த்வத்தேஜஸா ஜதுரஸ ஸ்நபிதாமிவோர்வீம் ।
ய: பச்யதி க்ஷணமபி த்ரிபுரே விஹாய
வ்ரீடாம் ம்ருடாநி ஸுத்ருசஸ்தமநுத்ரவந்தி ॥

(பொழிப்புரை) ஓ அன்னையே! த்ரிபுரஸுந்தரி! உனது ஒளியினுல் ஆகாயத்தை ஸிந்தூரத்துகள்களு டைய தொகுதிகள் நிறைந்துள்ளது போலவும், பூமியை அரக்கு ஜலத்தால் மூழ்கியிருப்பது போலவும், எவனெரு வன் ஒரு கணமாவது மனதால் சிந்தை செய்து காண் கின்ருனே; அத் தொழும்பனை அழகிய விழிகளோடு கூடிய ஸுந்தரிகள் வெட்கத்தையும் விட்டு பின் தொடருகின்றனர் இது உண்மை.

இச்செய்யுளோடு முதலாவது ஸ்தவமாகிய லகுஸ் துதியின் ஒன்பதாவது செய்யுளையும், ஸௌந்தர்ய லஹரியின் பத்தொன்பதாவது செய்யுளையும் ஒப்பு நோக்கினுல் கருத்தொற்றுமை காணலாம். இச்செய்யுட் களின் பொருள் விளக்கங்களை எமது தமிழுரையில் விரி வாகக் காணலாம்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

मातर्मुहूर्तमपि यः स्मरति स्वरूपं
लाक्षारसप्रसरतन्तुनिभं भवत्याः ।
ध्यायन्त्यनन्य मनसस्तमनङ्गतप्ताः
प्रद्युम्नसीम्नि सुभगत्वगुणं तरुण्यः ॥ १४ ॥

(பதவுரை) हे मातः - ஓ அன்னையே! यः - எவன்; भवत्याः - உன்னுடைய; स्वरूपम् - உருவத்தை; लाक्षा-रस-प्रसर-तन्तु - निभम् - அரக்குக் குழம்பினுல் பரவிய நூலுக்கு நிகரான காந்தியை; स्मरति - சிந்தனை செய்கிருனே! तम् - அவனை; प्रद्युम्न-सीम्नि - மன்மதனுடைய எல்லேயாகிய; सुभगत्व-गुणम् - அழகிய தன்மை வாய்ந்த குணத்தை; (கண்டு) तरुण्यः - யுவதிகள்; अनङ्ग - तप्ताः - விரஹதாபமடைந்தவர்களாகவும்; अनन्य-मनसः - வேறு வஸ்துக்களில் செல்லாத மனதையுடையவர்களாகவும்; ध्यायन्ति - சிந்தனை செய்கின்றனர்.

மாதர் முஹூர்தமபி ய: ஸ்மரதி ஸ்வரூபம்
லாக்ஷாரஸ ப்ரஸரதந்து நிபம் பவத்யா:।
த்யாயந்த்யநந்ய மநஸஸ்த மநங்கதப்தா:
ப்ரத்யும்நஸீம்நி ஸுபகத்வகுணம் தருண்ய: ॥

(பொழிப்புரை) ஓ அன்னையே! எந்தத் தொழும்பன் உன்னுடைய அழகிய திருவுருவை, அரக்குக் குழம்பினுல் பரவியுள்ள தாமரைத் தண்டின் நூலுக்கு நிகரான காந்தியோடு காண்கின்றனே, காமதேவனுடைய வனப்பின் எல்லேயாகிய மனதைக் கவரும் குணத்தையுடைய அத்தொழும்பனை அழகிய காரிகையின் கண்களையுடைய நாரீமணிகள் வேறு சிந்தனையை விட்டொழித்து, அவனி.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

டம் மனதைப் பறிகொடுத்து, அவனையே அல்லும் பகலும் நினைத்தவண்ணமிருக்கின்றனர்,

அன்னையின் திருவுருவை, அரக்குக் குழம்பினால் தோய்ந்த செந்நிறத்தோடு கூடிய தாமரைத் தண்டின் நுண்ணிய நூலைப்போல எவன் சிந்தனை செய்கின்றானோ; அவனை அழகிய கண்களைக் கொண்ட வனப்பு மிக்க வநிதையர்கள்; வேறு ஒரு சிந்தனையும் இல்லாது அவனையே நினைத்து நினைத்துச் சிந்தனை செய்து உருகுகின்றனர் என்பது ஸாரம்.

மற்றும், बिसतन्तुतनीयसी - பிஸதந்துதநீயஸீ - தாமரைத்தண்டினுள்ளேயுள்ள நூலைப் போன்று நுண்ணிய வடிவம் கொண்டவள் என்ற லலிதா ஸஹஸ்ரநாமத்தையும் இங்கு ஒப்பு நோக்குக.

योऽयं चकास्ति गगनार्णवरत्नमिन्दु-
योऽयं सुरासुरगुरुः पुरुषः पुराणः ।
यद्धाममर्घमिदमन्धकसूदनस्य
देवि त्वमेव तदिति प्रतिपादयन्ति ॥ १५ ॥

(பதவுரை) हे देवि - ஓ அன்னையே! गगन-अर्णव-रत्नम् - ஆகாயமென்னும் அலைகடலிலே தோன்றிய இரத்தினமாக; चकास्ति - விளங்குகின்றானோ; अयम् - அவன்; इन्दुः - சந்த்ரன். (போன்றவன்) यः - எவன்; सुरासुर - गुरुः - தேவர்களுக்கும், அஸுரர்களுக்கும் குருவாக விளங்குகின்றானோ; अयम् - அவன்; पुराणः - பழமைவாய்ந்த; पुरुषः - புருஷனவன். यत् - யாதொன்று; अन्धक-सूदनस्य - அந்தகன் என்னும் அஸுரனைக்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

கொன்ற பரமசிவனுக்கு; **वामम्** - இடது பாகமா யுள்ள; **इदम्** - இந்த; **अर्धम्** - பகுதியானது (உண் டோ) **तत्** - அதுவும்; **त्वम्-एव** - நீயே; **इति** - என்று; **प्रति-पादयन्ति** - நிரூபணம் செய்கின்றனர்.

யோऽயம் சகாஸ்தி ககநார்ணவரத்நமிந்துர்
யோऽயம் ஸுராஸுரகுரு: புருஷ: புராண: ।
யத் வாமமர்த்தமிதமந்தக ஸூதநஸ்ய
தேவி த்வமேவ ததிதி ப்ரதிபாதயந்தி । 15

(பொழிப்புரை) ஓ அன்னையே! ஆகாயமென்னும் அலை கடலிலே தோன்றிய இரத்தினமாக எவன் விளங்கு கின்றானே அவன் சந்த்ரன். எவன் தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் குருவாக விளங்குகின்றானே அவன் புராண புருஷன். யாதொன்று அந்தகன் என்றும் அஸுரனை மாய்த்த மஹாதேவனுடைய ஒரு பகுதியாக இடப்புறத்திலமைந்துள்ளதோ, அதுவும் உனது திருவுரு வாகும் என அறிஞர் வெளியிடுகின்றனர்.

ஆகாயத்திலே தோன்றும் நிறைமதியும், தேவர் களுக்கும் அஸுரர்களுக்கும் ஆசானாகிய புராண புருஷ னும், அந்தகாஸுரனை அழித்த பரமசிவனுடைய பகுதி வடிவம் கொண்டவள் யாவும் நீயே என ஆன் றோர் சொல்லுகின்றனர்.

இச்செய்யுளோடு, ஸௌந்தர்யலஹரியினுடைய "**तटिल्लेखातन्वीम्**" தடில்லேகாதந்வீம் என்ற செய்யுளை யும் ஒப்பு நோக்கி கருத்தொற்றுமை காணலாம்.

इच्छानुरूपमनुरूपगुणप्रकर्ष
संकर्षिणि त्वमभिमृश्य यदा बिभर्षि ।

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

जायेत स त्रिभुवनैकगुरुस्तदानीं
देवः शिवोऽपि भुवनत्रयसूत्रधारः ॥ १६ ॥

(பதவுரை) अनुरूप-गुण-प्रकर्ष-संकर्षिणि- அநுஸரணையான குணத்தினுடைய சிறப்பைக் கொண்ட ஓ அன்னையே! त्वम् - நீ; अभिमृश्य - ஆராய்ந்து; इच्छा - अनुरूपम् - விருப்பத்திற்கிணங்கிய வடிவத்தை; यदा - எப்பொழுது, बिभर्षि - தரிக்கின்றாயோ; तदानीम् - அப்பொழுது; त्रिभुवन-एक - गुरुः - மூவுலகுக்கும் முக்யமான தந்தையாயமைந்தவனும்; भुवनत्रय-सूत्र - धारः - உலகம் மூன்றுக்கும் ஸூத்ரதாரனாகவும்; देवः - (எந்த) விளையாடிக் கொண்டிருக்கின்றவனுமான; सः-அந்த; शिवः-अपि- பரமசிவனும்; जायेत - தோன்றுகிறான்.

இச்சாநுரூபமநுரூபகுணப்ரகர்ஷ-
ஸம்கர்ஷிணி த்வமபிம்ருச்ய யதா பிபர்ஷி |
ஜாயேத ஸ த்ரிபுவனைககுருஸ்ததாநீம்
தேவ: சிவோऽபி புவநத்ரய ஸூத்ரதார: ‖ 16

(பொழிப்புரை) ஓ அன்னையே! அந்த அந்த குணங்களின் நிறைவின் சிறப்பை விமர்சனம் செய்து, உனது விருப்பத்திற்கிணங்கிய திருவுருவை எப்பொழுது நீ எடுக்கின்றனையோ, அப்பொழுதே இந்த மூவுலகுக்கும் தந்தையாயுள்ளவனும், இம் மூவுலகையும் ஆட்டிவைக்கும் ஸூத்ரதாரியாயுள்ளவனும், இச்செய்கைகளில் ஆனந்தத்தோடு திளைத்து விளையாடிக்கொண்டிருப்பவனுமான அந்த மங்கள வடிவாம் பரமசிவனும் தோன்றுகிறான் அன்றோ!

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

அன்னை முக்குணங்களுக்கும் அப்பாற்பட்டவள் எனினும் அவள் உலகைக் காப்பாற்றுவதற்கு அவ்வப் பொழுது குணங்களின் ஏற்றத் தாழ்வை யநுஸரித்து பல அவதாரங்களை எடுக்கவேண்டியிருக்கிறது. அப்பொழுது அன்னைக்கு உதவியாக பரமசிவனும் கூடவே தோன்று கிருள் என்பது ஸாரம்.

அன்னையின் அவதார விசேஷங்களைக் குறித்து தேவீ பாகவதம், தேவீ மாஹாத்ம்யம் முதலிய நூல்களில் விரிவாக வர்ணிக்கப் பெற்றுள்ளன. அன்னைக்குத் துணை யாக சிவன், ப்ரஹ்மன், விஷ்ணு, இந்த்ரன் முதலியவர் கள் தோன்றினர் என்ற வரலாறுகளையும், மற்ற விரிவான விளக்கங்களையும் எமது தேவீமாஹாத்ம்யத் தின் தமிழுரையில் காணலாம்.

ध्यातासि हैमवति येन हिमांशुरश्मि-
मालामलद्युतिरकल्मषमानसेन ।
तस्याविलम्बमनवद्यमनन्तकल्प-
मल्पैर्दिनैः सृजसि सुन्दरि वाग्विलासम् ॥ १७ ॥

(பதவுரை) हे हैमवति-பனிவரையின் பெருமகளே हे सुन्दरि - அழகின் வடிவே! येन - எவனால்; हिमांशु-रश्मि-माला-अमल-द्युतिः-சந்த்ரகிரணங்களின் வரி சைகளே போன்று தூய்மையான காந்தியானது; अकल्मष-मानसेन-களங்கமற்ற மனதோடு கூட; ध्याता - சிந்தனை செய்யப் பெற்றதாக; असि- (நீ) இருக்கிரு யோ; तस्य - அவனுக்கு; अल्पैः - குறுகியதான; दिनैः - நாட்களிலேயே; अविलम्बम् - தாமதமில்லாமலும்;

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

अनवद्यम् - குற்றமற்றதும், ஆன ; वाग्-विलासम् - வாக்கின் விலாஸத்தை ; सृजसि - உண்டு பண்ணுகிறாய்.

த்யாதா௱ஸி ஹைமவதி யேந ஹிமாம்சுரச்மி-
மாலாமலத்யுதிரகல்மஷ மாநஸேந ।
தஸ்யாவிலம்ப மநவத்ய மநந்தகல்ப-
மல்பைர் தினை: ஸ்ருஜஸி ஸுந்தரி வாக் விலாஸம் ॥

(பொழிப்புரை) பனிவரையின் பெருமையைக் காப்பதற்குத் தோன்றிய ஓ அன்னையே ! வனப்பின் வடிவே ! எந்தத் தொழும்பன் களங்கமற்ற மனதோடுகூட, நிறைமதியின் கதிர்களின் வரிசைகளே போன்று, மாசற்ற காந்தியின் வடிவாக உன்னைச் சிந்தனை செய்கின்றானோ ; அவனுக்கு குறுகிய காலத்தில் வெகு விரைவில் புகழ்வாய்ந்ததும் கல்பகோடி காலம் நிலைத்துள்ளதுமான வளமிக்க வாக்விலாஸத்தை நீ உண்டுபண்ணுகிறாய் அன்றோ !

அன்னையை, வெண்ணிறப் பொலிவுடன் கூடிய திருவுருவாக உருவகம் செய்து சிந்தையிலே நிலைக்கச் செய்து உபாஸனை செய்து வந்தால், வளமிக்க வாக்விலாஸம் விரைவில் அத்தொழும்பனுக்கு உண்டாவது உறுதி எனச் சொல்லப் பெற்றது என்பது ஸாரம்.

இச் செய்யுளோடு ஸௌந்தர்யலஹரியினுடைய பதினைந்தாவது செய்யுளையும் ஒப்பு நோக்கின் கருத்தொற்றுமை காணமுடியும். இவ்விதமே முதலாவது துதியாகிய லகுஸ்துதியினுடைய எட்டாவது செய்யுளும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

आधारमारुतनिरोधवशेन येषां
सिन्दूररञ्जितसरोजगुणानुकारि ।
दीप्तं हृदि स्फुरति देवि वपुस्त्वदीयं
ध्यायन्ति तानिह समीहितसिद्धसार्थाः ॥ १८ ॥

(பதவுரை) हे देवि! ஓ அன்னையே! आधार-मारुत-निरोध-वशेन - மூலாதாரத்தினுள்ள வாயுவினுடைய; தடுத்தலின் காரணத்தால்; येषाम् - எவர்களுடைய; हृदि - மனதில்; त्वदीयम्- உன்னைச் சார்ந்துள்ள; वपुः - சரீரமானது; सिन्दूर-रञ्जित-सरोज-गुण-अनुकारे - ஸிந்தூரத்தினால் தோயப் பெற்ற தாமரைமலரைத் தழுவுகின்ற; दीप्तिम् - காந்தியை; स्फुरति - ஒளிரச் செய்கின்றதோ; तान् - அவர்களை; इह - இவ்வுகில், समीहित - सिद्ध - सार्थाः - நன்கு விரும்பப் பெற்ற ஸித்திகளை யடைந்தவர்களாக; ध्यायन्ति - சிந்தனை செய்கின்றனர்.

ஆதாரமாருத நிரோத வசேந யேஷாம்
ஸிந்தூர ரஞ்ஜித ஸரோஜ குணாநுகாரி।
தீப்தம் ஹ்ருதி ஸ்புரதி தேவி வபுஸ்த்வதீயம்
த்யாயந்தி தாநிஹ ஸமீஹிதஸித்தஸார்த்தா:॥

(பொழிப்புரை) ஓ அன்னையே! உன்னுடைய சரீரமானது மூலாதாரத்திலுள்ள வாயுவை நிலைக்கச் செய்த காரணத்தால், ஸிந்தூரமெனச் செந்நிறப் பொலிவுடன் விளங்கும் தாமரை மலரை எடுத்துக் கூறுகின்ற காந்தியை எவர்களுடைய மநதிலே விளங்கச் செய்கின்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

றதோ அவர்களை இவ்வுலகில் இஷ்டப்படி விரும்பிய பயன்களைப் பெற்றவர்களாக மக்கள் நினைக்கின்றனர்.

மூலாதாரத்தில் முறைப்படி வாயுவை நிலைக்கச் செய்து ஒரு முகமாகத் திருப்பிய மனதிலே செந்நிறப் பொலிவுடன் திகழுகின்ற அன்னையை உருவகம் செய்கின்ற யோகியானவன் அவன் விரும்பிய பயன் யாவும் எளிதில் ஒருங்கே யடையப்பெறுகிறான் என்பது ஸாரம்.

மற்றும் ஆதார கமலத்தில் அன்னையைச் சிந்தனை செய்ய வேண்டுமென ஆகமங்கள் கூறுகின்றன. அது வருமாறு:—

आधाराब्जे धनुर्बाणवरदाभयलक्षिताम् ।
ध्यायेद् बन्धूकपुष्पाभां कामराजस्वरूपिणीम् ॥

ஆதாராப்ஜே தநுர்பாண வரதாபய லக்ஷிதாம் ।
த்யேயேத் பந்தூக புஷ்பாபாம் காமராஜ ஸ்வரூபிணீம் ॥

—மூலாதார கமலத்தில், தநுஸ், பாணம், வரதம், அபயம், என்பவைகளோடு காணப்பெறுகின்றவளும் செம்பருத்தி மலரே போன்ற செந்நிறக் காந்தியையுடையவளும், காமராஜ பீஜத்தின் வடிவாயமைந்தவளுமான ஸ்ரீ தேவியாம் அன்னையை த்யாநம் செய்யவேண்டும் என்பதாகும்.

எனவே யோகமுறையையுணர்ந்த ஞாநிகள் மூலாதாரத்தில் அன்னையைச் சிந்தனை செய்ய வேண்டும் எனவும் கிடைக்கப்பெறும். ஆகவே யோகிகள் அவ்விடத்தில் அன்னையை இடையறாத சிந்தனை செய்து தங்களுடைய மநோரதங்களையும் நிறைவேற்றிக் கொள்ளுகின்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

றனர் என்பதும் ஸாரமாகும். இச்செய்யுள் மூலாதாரத்தையுபாஸனை செய்யும் முறையையும் விளக்குவதாகக் கொள்ளலாம்.

ये चिन्तयन्त्यरुणमण्डलमध्यवर्ति
रूपं तवाम्ब नवयावकपङ्कपिङ्गम् ।
तेषां सदैव कुसुमायुधबाणभिन्न-
वक्षःस्थला: मृगदृशो वशगा भवन्ति ॥ १९ ॥

(பதவுரை) हे अम्ब - ஓ அன்னையே! नव-यावक-पङ्क-पिङ्गम् - புதியதான செம்பருத்திக் குழம்புபோல பிங்கலவர்ணமாகத் திகழுகின்றதும்; अरुण-मण्डल-मध्यवर्ति - ஸூர்ய மண்டலத்தினுடைய நடுவேயுள்ளதுமான; तव - உன்னுடைய; रूपम् - வடிவத்தை; ये - எவர்கள்; चिन्तयन्ति - சிந்தனை செய்கின்றனரோ; तेषाम् - அவர்களுக்கு; कुसुमायुध-बाण-भिन्न-वक्षः-स्थलाः - காமதேவனுடைய மலர்க்கணைகளினால் துளைக்கப் பெற்ற மார்புகளையுடைய; मृगदृशः - மானின் மருண்ட விழிகளே போன்ற விழிகளையுடைய வனிதையர்கள்; सदा-एव - எப்பொழுதுமே; वशगाः - வசமுள்ளவர்களாக; भवन्ति - ஆகின்றனர்.

யே சிந்தயந்த்யருணமண்டல மத்யவர்தி
ரூபம் தவாம்ப நவயாவக பங்கபிங்கம் ।
தேஷாம் ஸதைவ குஸுமாயுதபாணபிந்ந
வக்ஷ: ஸ்தலா: ம்ருகத்ருசோ வசகா பவந்தி ॥

(பொழிப்புரை) ஓ அன்னையே! செம்பருத்தி மலரின் செந்நிறக் குழம்பே போல பிங்கல வர்ணமாகத்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

திகழுகின்றதும், ஸூர்ய மண்டலத்தின் நடுவேயுள்ளது மான உனது அழகிய திருவுருவை எவர்கள் சிந்தனை செய்கின்றனரோ, அவர்களுக்குக் காமனுடைய கணைகளினுல் துளைக்கப் பெற்ற திருமார்பகத்தே தோன்றுகின்ற நகில்களையும் மானின் மருண்ட விழிகளே போன்ற அழகிய பார்வைகளை யுடையவர்களுமான ஆரணங்குகள் எப்பொழுதும் அடிமையாயிருக்கின்றனர்.

செம்பருத்தி மலரே போலச் சென்னிறம் தோய்ந்து விளங்கும் ஸூர்ய மண்டலத்தின் நடுவே அன்னையை அமர்ந்துள்ளவளாக உருவகம் செய்து, சிந்தையிலே நிலைக்கச் செய்தால் காமனுடைய கணைகளால் உந்தப் பெற்று, உயர்ந்து விம்முகின்ற திருமார்பிலே இலங்கும் அழகிய நகில்களைக் கொண்ட மானின் மருண்ட விழிகளையொத்த அழகிய ஆரணங்குகளும் அடிமையாகின்றனர் என்பது ஸாரம்.

त्वामैन्दवीमिव कलामनुफालदेश-
मुद्भासिताम्बरतलामवलोकयन्तः ।
सद्यो भवानि सुधियः कवयो भवन्ति
त्वं भावनाहितधियां कुलकामधेनुः ॥ २० ॥

(பதவுரை) हे भवानि - ஓ பவானி! अनु-फालदेशम् திருநுதலைத் தொடர்ந்துள்ள ; उद् - भासित - अम्बर-तलाम् - ஒளிருகின்ற ஆகாச ப்ரதேசத்தை ; ऐन्दवीम् - இந்துவைச் சார்ந்த ; कलाम् - इव - கலையைப் போல் ; त्वाम् - உன்னை ; आलोकयन्तः - (எவர்கள்) காண்கின்றனரோ ; सद्यः - (அவர்கள்) அக்கணத்திலேயே ;

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

सुधियः - தெளிவுள்ள மதியைப் பெற்ற ; कवयः - கவி களாக ; भवन्ति - ஆகின்றனர் ; त्वम् - நீ ; भावनाद्धि-तधियाम् - பாவனையால் கட்டுண்ட மனதை யுடைய வர்களுக்கு ; कुल-कामधेनुः - குலத்தின் பெருமையை வழங்குகின்ற காமதேனுவுக்கு நிகராக இருக்கின்றாய் அன்றோ.

த்வாமைந்தவீமிவ கலாமநுபாலதேச-
முத்பாஸிதாம்பர தலா மவலோகயந்த: |
ஸத்யோ பவந்தி ஸுதிய: கவயோ பவந்தி
த்வம் பாவநாஹிததியாம் குலகாமதேநு: || 20 ||

(பொழிப்புரை) ஓ அன்னையே! தொழும்பர்களா யுள்ள எவர் உனது திருநுதலின்கண் ஒளிருகின்ற ஆகா யத்தையுடையதும், நிறைமதியைத் தொடர்ந்துள்ளது மான கலையைப்போல உன்னைக் காண்கின்றனரோ,அவர் கள், தெள்ளிய மதியைப் பெற்ற மஹா கவிகளாக விளங்குகின்றனர். மற்றும் பாவனையினால் கட்டுண்ட மனதையுடையவர்களுக்குக் குலத்தை விளங்கச் செய்யும் காமதேநுவுக்கு நிகராகவும் நீ விளங்குகின்றாய் அன்றோ!

அன்னையினுடைய திருநுதல் பிறைமதிக்கு நிகராக விளங்குகின்றது. ஆகவே அத்திருநுதலை ஒரு கலை யாகவே உருவகம் செய்து அகத்தே நிலைக்கச் செய்து உபாஸனை செய்ய வேண்டும் என்பது கருத்து. இவ்விதம் உபாஸனை செய்துவந்தால் பெருகிய கவிதா ஸாம்ராஜ்ய மும் கிடைக்கப்பெறுவதோடு நிலைத்த பாவனையைக் கொண்டுள்ள மனமுள்ள அத்தொழும்பர் குலத்தை விளங்கச் செய்வதில் காமதேநுவுக்கு நிகராகவும் அன்னை விளங்குகிறாள் என்பதும் ஸாரமாகும்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

शर्वाणि सर्वजनवन्दितपादपद्मे
पद्मच्छदद्युतिविडम्बितनेत्रलक्ष्मि ।
निष्पापमूर्तिजनमानसराजहंसि
हन्सि त्वमापदमनेकविधां जनस्य ॥ २१ ॥

(பதவுரை) हे शर्वाणि - சர்வதேவனுடைய துணை வியாம் ஓ அன்னையே! सर्व-जन-वन्दित-पाद-पद्मे - ஸகல ஜனங்களாலும் வணங்கப் பெற்ற சரணகமலங்களை யுடையவளே; पद्म-च्छद-द्युति-विडम्बित-नेत्र-लक्ष्मि - தாமரையிதழின் காந்தியைப் பரிஹஸிக்கின்ற கண் களுடைய சோபையையுடையவளே! निष्पाप-मूर्ति-जन-मानस-राजहंसि -புண்யசாலிகளுடைய மாநஸமென்னும் வாவியிலுள்ள ராஜஹம்ஸம் போன்றவளே; जनस्य- ஜநங்களுடைய अनेक-विधाम् - பலவகையான; आपदाम्- துயரங்களை' त्वम् - நீ; हन्सि களைகின்றாய்.

சர்வாணி ஸர்வஜந வந்தித பாத பத்மே
பத்மச்சதத்யுதி விடம்பித நேத்ர லக்ஷ்மி ।
நிஷ்பாப மூர்த்திஜநமாநஸராஜஹம்ஸி
ஹந்ஸி த்வமாபதமநேகவிதாம் ஜநஸ்ய ॥ 2

(பொழிப்புரை) ஓ அன்னையே! செந்தாமரை மல ரெனச் சிறந்து விளங்குகின்ற உனது சேவடிகள் மக்கள் பலராலும் வணங்கப்பெறுகின்றன. உன்னுடைய கண் களோ, செந்தாமரை யிதழின் காந்தியைப் பழித்த வண்ணமிருக்கின்றன, மற்றும் பாபங்களைக் களைந்த மஹாத்மாக்களுடைய மநமென்னும் மாநஸவாவியில் ராஜஹம்ஸமெனத் திளைத்து விளையாடுகின்றாய். இன்னே

CC-0. Agasthi R. Nagarajah Collection, New Delhi. Digitized by eGangotri

ரன்ன பல சிறப்புக்களும் ஒருங்கே அமைந்து விளங்கும் ஓ சர்வாணி! உன்னையே தஞ்சமெனத் தொழுது நிற்கும் தொழும்பர்களிடத்தில் பல படியாகப் பெருகிய துயரங் களையும் நீ துடைக்கின்றாய் அன்றோ!

அன்னையின் பெருமை வாய்ந்த கமலசரணங்கள், தாமரையிதழ்களின் சென்னிறத்தை வெற்றி கொண்டு விளங்குவதோடு, அவைகள் குற்றங்கள் களையப்பெற்ற குலயோகிகளுடைய மாநஸமென்னும் மாநஸவாவியி லும் திளைத்து விளையாடுகின்றன. இன்னோரன்ன பல சிறப்புக்களையும் ஒருங்கே பெற்று விளங்கும் சென்னிறத் தாள்கள் தொழும்பர்களுடைய பெருகிய துயரங்களைத் துடைக்கும் என்பதில் ஐயமுண்டோ. இல்லையன்றோ!

उत्तप्तहेमरुचिरे त्रिपुरे पुनीहि
चेतश्चिरंतनमघौघवनं लुनीहि ।
कारागृहे निगलबन्धनयन्त्रितस्य
त्वत्संस्मृतौ झडिति मे निगलास्त्रुटन्ति ॥ २२ ॥

(பதவுரை) **उत्तप्त-हेम-रुचिरे** - உருக்கிய பொன்னை நிகர்த்த காந்தியோடு கூடியவளே! **हे - त्रिपुरे** - முப்பு ரம் கொண்ட ஓ அன்னையே! **मे** -என்னுடைய; **चेतः**- மனதை; **पुनीहि** - தூய்மையடையச் செய்வாயாக. **चिरंतनम्** - நீண்ட நாளாகவுள்ள; **अघ-ओघ-वनम्** - பா பங்களுடைய தொகுதியென்னும் வனத்தை; **लुनीहि**- அழிப்பாயாக; **कारागृहे** - சிறையில்; **निगल-बन्धन-यन्त्रि-तस्य** - விலங்குகளினால் பூட்டப்பெற்ற; **मे** - எனக்கு; **त्वत्-संस्मृतौ** - உன்னை நன்கு நினைத்த அளவிலே;

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

झडिति - விரைவில்; निगलाः - விலங்குகள்; त्रुटन्ति - தெறிக்கின்றன.

உத்தப்தஹேமருசிரே த்ரிபுரே புநீஹி
சேதஸ்சிரம்தநமஹெளக வநம் லுநீஹி।
காராக்ருஹே நிகலபந்தனயந்த்ரிதஸ்ய
த்வத்ஸம்ஸ்ருதௌ ஜடிதி மே நிகலாஸ்த்ருடந்தி॥

(பொழிப்புரை) உருக்கிய பொன்னே போலத் துலங்கும் திருமேனியையுடைய ஓ அன்னையே! என்னுடைய மநதைத் தூய்மை செய்வாயாக. வெகுகாலமாகச் சேர்ந்துள்ள என்னுடைய பாபங்கள் என்னும் கொடிய காநகத்தை அழிப்பாயாக. மற்றும் பிறவியென்னும் சிறையிலே கொடுமையான தளைகளால் கட்டுண்ட எனக்கு, உன்னை நான் மனமார நன்கு நினைத்த அளவிலே விரைவில் அத்தனைகளும் தெறிக்குமன்றோ!

பிறவி பிறவியாகத் தொடர்ந்து வந்துள்ள மயக்க வடிவாம் பாபங்களைக் களைந்து ஸம்ஸாரபந்தம் என்னும் சிறையிலே தள்ளப்பெற்று வெளியேற வழியறியாது தவித்துக் கொண்டு நிற்கும் என்னுடைய தளைகளைத் தாமதியாது தெறிக்கச் செய்து, உனது சேவடிகளில் என்னைத் தடுத்தாட்கொள்ள வேண்டும் என்பதும் தொழும்பனுடைய வேண்டுகோளாகும் என்பது ஸாரம்.

त्वां व्यापिनीति सुमना इति कुण्डलीति
त्वां कामिनीति कमलेति कलावतीति।
त्वां मालिनीति ललितेत्यपराजितेति
देवि स्तुवन्ति विजयेति जयेत्युमेति ॥ २३ ॥

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பதவுரை) हे देवि - ஓ அன்னையே! त्वाम् - உன்னை; व्यापिनी - எங்கும் பரவியவள்; इति - எனவும்; सुमनाः - நல்ல மனதையுடையவள்; इति - எனவும்; कुण्डली - குண்டலிநீ; इति - எனவும்; त्वाम् - உன்னை; कामिनी - காமிநீ; इति - எனவும்; कमला - லக்ஷ்மீ; इति - எனவும்; कलावती - கலையோடு கூடியவள்; इति - எனவும்; त्वाम् - உன்னை; मालिनी - மாலிநீ; इति - எனவும்; ललिता - லலிதா; इति - எனவும்; अपराजिता - அபராஜிதா; इति - எனவும்; विजया - விஜயா; इति - எனவும்; जया - ஜயா; इति - எனவும்; उमा - உமை; इति - எனவும்; स्तुवन्ति - துதிக்கின்றனர்.

த்வாம் வ்யாபிநீதி ஸுமநா இதி குண்டலீதி
த்வாம் காமிநீதி கமலேதி கலாவதீதி ।
த்வாம் மாலிநீதி லலிதேத்யபராஜிதேதி
தேவி ஸ்துவந்தி விஜயேதி ஜயேத்யுமேதி ||23||

(பொழிப்புரை) ஓ அன்னையே! உன்னை எங்கும் நிறைந்தவள் எனவும், நல்ல மநமுள்ளவள் எனவும், குண்டலிநீ எனவும், காமிநீ எனவும், கமலா எனவும், கலாவதீ எனவும், மாலிநீ எனவும், லலிதா எனவும், அபராஜிதா எனவும், விஜயா எனவும், ஜயா எனவும், உமா எனவும் தொழும்பர்கள் துதிக்கின்றனர்.

उद्दामकामपरमार्थसरोजखण्ड-
चण्डद्युतिद्युतिमपासितषड्विकाराम् ।

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

मोहद्विपेन्द्रकदनोद्यतबोधसिंह-
लीलागुहां भगवतीं त्रिपुरां नमामि ॥ २४ ॥

(பதவுரை) उद्-दाम-काम-परम-अर्थ-सरोज-खण्ड चण्ड-द्युतिः-द्युतिम् - எழுச்சியுற்ற விருப்பத்தோடு கூடிய சிறந்த மோக்ஷமென்னும் தாமரை வநத்திற்கு ஆதவனைப் போன்ற காந்தியைப் போன்றவளும்; अपासित-षड्-विकाराम् - களையப்பெற்ற ஆறுபாவவிகாரங்களையுடையவளும்; मोह-द्विप-इन्द्र-कदन-उद्यत-बोध-सिंह-लीला-गुहाम् - மயக்கமென்னும் கஜேந்த்ரனை மாய்ப்பதற்குரிய உணர்வைப் பெற்ற ஸிம்ஹத்தின் லீலைக்குரிய குஹையின் வடிவாயுள்ளவளுமான; भगवतीम् - ஐச்வர்யம் முதலிய ஆறுகுணங்களும் நிரம்பிய; त्रिपुराम् - த்ரிபுரஸுந்தரியை; नमामि -நமஸ்காரம் செய்கிறேன்.

உத்தாமகாமபரமார்த்த ஸரோஜ கண்ட
சண்டத்யுதித்யுதிமபாஸித ஷ்ட்விகாராம் ।
மோஹத் விபேந்த்ரகதநோத்யதபோத ஸிம்ஹ
லீலாகுஹாம் பகவதீம் த்ரிபுராம் நமாமி ॥ 24 ॥

(பொழிப்புரை) எழுச்சியுள்ள விருப்பத்தையும், சிறந்த மோக்ஷத்தையும் ஒருங்கே அடைவதற்கு எவ்விதம் தாமரை வநத்திற்கு ஆதவனுடைய ஆதரவோடு கூடிய காந்தியுள்ளதோ, அவ்விதமுள்ள காந்தியையுடையவளும், களையப்பெற்ற ஆறு வகையான பாவவிகாரங்களையுடையவளும், மயக்கமென்னும் கஜேந்த்ரனை மாய்ப்பதற்கு முயற்சியுள்ள உணர்வோடு கூடிய ஸிம்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஹத்தினுடைய லீலைக்கு இருப்பிடமாயுள்ள குஹையைப் போலுள்ளவளும், ஆறுவகையான ஐச்வர்யங்கள் நிறையப் பெற்றவளும், ஆன ஸ்ரீ த்ரிபுரஸுந்தரியை நான் நமஸ்காரம் செய்கிறேன்.

ஆறு வகையான பாவவிகாரங்களைக் களைந்த வள் என்ற வாக்கியத்திற்குப் பின் வருமாறு பொருளாகும்—**जायते** - ஜாயதே உண்டாகிறது. **अस्ति** - அஸ்தி-இருக்கிறது, **विपरिणमते** - விபரிணமதே-மாறுதலடைகிறது, **वर्धते** - வர்த்ததே -வளர்ச்சியடைகிறது. **अपक्षीयते** - அபக்ஷீயதே - குறைவுறுகிறது. **विनश्यति** - விநச்யதி - அழிவடைகிறது, என்ற இவைகளையே ஆறுவகையான பாவ விகாரங்கள் என அறிஞர் அழைப்பர். இந்த பாவ விகாரங்கள் ஒன்றும் அன்னைக்குக் கிடையாது. என்பது கருத்து.

மற்றும் இவ்விடத்தில் "மயக்க மென்னும் களேந்த்ரனை மாய்ப்பதற்கு-என்ற ஒரு வாக்ய முள்ளது. அதனுடைய பொருள் வருமாறு—காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் இந்த ஆறு குணங்களையும், மதயானைக்கு நிகராக உருவகம் செய்துள்ளது. இவைகள் மனிதனை மீளா நரகத்திலாழ்த்துவது.

எனவே தனது தொழும்பனை இவைகளிலிருந்து காப்பாற்றுவதற்கு யானையினிடம் பகைமை கொள்ளும் ஸிம்ஹத்திற்கு அன்னையை உருவகம் செய்யப் பெற்றது. மற்றும் அன்னையினிடம் ஆறுவித ஐச்வர்யங்கள் எப்பொழும் நிலைத்து நிறைந்துள்ளது என்பதும் கருத்தாகும்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

गणेशवटुकस्तुता रतिसहायकामान्विता
स्मरारिवरविष्टरा कुसुमबाणवाणैर्युता ।
अनङ्गकुसुमादिभिः परिवृता च सिद्धैस्त्रिभिः
कदम्बवनमध्यगा त्रिपुरसुन्दरी पातु नः ॥ २५ ॥

(பதவுரை) गणेश वटुक-स्तुता - கணேசர்களாலும், வடுகர்களாலும் துதிக்கப் பெற்றவளும், रति - सहाय-काम-अन्विता - ரதிக்குத் துணைவனாகிய காமதேவனோடு கூடியவளும்; स्मर-अरि-वर-विष्टरा - காமனுக்குப் பகைவனும் பரமசிவனுடைய சிறந்த ஆஸனத்திலமர்ந்தவளும், कुसुम-बाण बाणैः-युता - மலர்களாலான பாணங்களோடு கூடியவளும்; अनङ्ग कुसुम-आदिभिः - அநங்ககுஸுமா முதலியவர்களால்; परि-वृता - சூழப் பெற்றவளும்; त्रिभिः - மூன்று; सिद्धैः - ஸித்திகளாலும் (சூழப்பெற்றவளும்) कदम्ब-वन-मध्यगा -கதம்பவநத்தின் நடுவையடைந்தவளுமான; त्रिपुर-सुन्दरी - த்ரிபுரஸுந்தரியானவள்; नः - நம்மை; रक्षतु - காப்பாற்றுவதாக.

கணேச வடுகஸ்துதா ரதிஸஹாய காமாந்விதா
ஸ்மராரி வரவிஷ்டரா குஸுமபாணபாணைர்யுதா।
அநங்ககுஸுமாதி: பரிவ்ருதா ச ஸித்தைஸ்த்ரிபி:
கதம்ப வநமத்யகா த்ரிபுரஸுந்தரீ பாது ந: || 25 ||

(பொழிப்புரை) கணேசர்கள், வடுகர்கள் இவர்களால் துதிக்கப் பெற்றவளும். ரதிதேவியின் துணைவனும் காமதேவனோடு கூடியவளும், காமனுக்குப் பகைவனும்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

காமேச்வரனுடைய சிறந்த மடியை இருப்பிடமாகக் கொண்டவளும், மலர்களாலாகிய பாணங்களையுடைய வளும், அநங்க குஸுமா முதலிய பரிவாரங்களால் சூழப்பெற்றவளும், மூன்று ஸித்திகளால் சூழப் பெற்ற வளும். கதம்பவநத்தின் நடுவேயுள்ளவளுவான ஸ்ரீத்ரி புரஸுந்தரியாம் அன்னை நம்மைக் காப்பாற்றுவதாக.

रुद्राणि विद्रुममयीं प्रतिमामिव त्वां
ये चिन्तयन्त्यरुणकान्तिमनन्यरूपाम् ।
तानेत्य पक्ष्मलदृशः प्रसभं भजन्ते
काण्ठावसक्तमृदुबाहुलतास्तरुण्यः ॥ २६ ॥

(பதவுரை) हे रुद्राणि - ருத்ரனுடைய நாயகியாம் ஓ அன்னையே! अनन्य-रूपाम् - இணையற்ற வடிவத்தை யுடைய; त्वाम् - உன்னை; विद्रुममयीम् - பவழத்தன்மை வாய்ந்த; प्रतिमाम् - உருவத்தை; इव - போல; अरुण-कान्तिम् - சென்னிறக் காந்தியை; ये - எவர்கள்; चिन्त-यन्ति - சிந்தனை செய்கின்றனரோ; तान् - அவர்களை; पक्ष्मल-दृशः - சஞ்சலமான கண்களையுடைய; तरुण्यः - நாரீமணிகள்; एत्य - அடைந்து; कण्ठ-अवसक्त-मृदु-बाहु-लताः-கழுத்தில் சுற்றப் பெற்றுள்ள மெல்லிய கைக்கொள்ளும் கொடியையுடையவர்களாக (இருந்து கொண்டு,) प्रसभम् - பலாத்காரமாக; भजन्ते - ஸேவிக்கின்றனர்.

ருத்ராணி வித்ருமமயீம் ப்ரதிமாமிவ த்வாம்
யே சிந்தயந்த்யருண காந்திமநந்ய ரூபாம் ।

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

தாநேத்ய பக்ஷ்மலத்ருச: ப்ரஸபம் பஜந்தே
கண்டாவஸக்த ம்ருதுபாஹுலதாஸ்தருண்ய: ॥

(பொழிப்புரை) ஓ அன்னையே! உன்னை, பவழத் தன்மை வாய்ந்ததும் சென்னிறம் பொருந்தியதுமான இணையற்ற திருவுருவை, எந்தத் தொழும்பன் சிந்தனை செய்கின்றானோ! அவனை, மருண்ட மானின் விழிகளை போன்று சஞ்சலத்தோடு கூடிய அழகிய கண்களையுடைய ஆரணங்குகள் வலுவில் வந்தடைந்து மெல்லிய கொடியே போன்ற திருக்கரங்களால் தழுவிய வண்ணம் ஸேவிக்கின்றனர்.

அன்னையின் திருவுருவம், பவழம்போலச் சென்னிறப் பொலிவுடன் திகழ்வது. இத்திருவுருவை தொழும்பர்கள் இடைவிடாது ஒருமுகமாகச் சிந்தனை செய்து மனதிலே நிலைக்கச் செய்தால் அவர்களை மான்களுடைய மருண்ட விழிகளை போன்ற விழிகளைக் கொண்ட அழகிய ஆரணங்குகள், தங்களுடைய தளிர்போன்ற மெல்லிய கைகளால் கழுத்தைச் சுற்றியவண்ணமிருந்துகொண்டு ஸேவிக்கின்றனர் என்பது ஸாரம். இச் செய்யுளில் வச்ய ப்ரயோகமும் குறிப்பாக உணர்த்தப் பெற்றது என்பதும் அறியற்பாலது.

त्वद्रूपैकनिरूपणप्रणयिताबन्धो दृशोस्त्वद्गुण-
ग्रामाकर्णनरागिता श्रवणयोस्त्वत्संस्मृतिश्चेतसि ।
त्वत्पादार्चनचातुरी करयुगे त्वत्कीर्तितं वाचि मे
कुत्रापि त्वदुपासनव्यसनिता मे देवि मा शाम्यतु ॥ २७

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பதவுரை) हे देवि ! ஓ அன்னையே! मे என்னுடைய ; दृशोः - கண்களுக்கு; त्वद्-रूप-निरूपण-प्रणयिता-बन्धः - உனது வடிவத்தை முக்யமாகக் காண்பதிலேயே அன்பினால் கட்டுண்ட நிலையானது; मा-शाम्यतु - நீலைத்திருப்பதாக. मे - என்னுடைய; श्रवणयोः - செவிகளுக்கு ; त्वद्-गुण-ग्राम-आकर्णन-रागिता - உன்னுடைய கல்யாண குணங்களுடைய ஸமூஹத்தைக் கேட்பதிலுள்ள விருப்பமானது; मा शाम्यतु - நிலைத்திருப்பதாக; मे - என்னுடைய; चेतसि - மனதில்; त्वत्-संस्मृतिः - உன்னுடைய நிலைத்த நினைவானது; मा शाम्यतु - நிலைத்திருப்பதாக; मे - என்னுடைய; करयुगे - கைகள் இரண்டிலும்; त्वत्-पाद-अर्चन-चातुरी - உனதுசரணங்களை அர்ச்சனை செய்யும் திறமையானது; मा शाम्यतु . நிலைத்திருப்பதாக; मे - என்னுடைய; वाचि - வாக்கில்; त्वत्-कीर्तितम् - உன்னுடைய புகழ் பாடுவது; मा शाम्यतु - நிலைத்திருப்பதாக; मे - எனக்கு; कुत्र - अपि - ஒருபொழுதும் त्वत्-उपासना-व्यसनिता - உபாஸனையின் முயற்சியானது; मा शाम्यतु - விலகாது நிலைத்திருப்பதாக.

த்வத்ரூபைக நிரூபண ப்ரணயிதாபந்தோ
த்ருசோஸ்த்வத்குண-
க்ராமாகர்ணநராகிதா ச்ரவணயோ-
ஸ்த்வத் ஸம்ஸ்ம்ருதிஸ் சேதஸி ।

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

த்வத்பாதார்சநசாதுரீ கரயுகே
த்வத்கீர்த்திதம் வாசி மே
குத்ராபி த்வதுபாஸநவ்யஸநிதா
மே தேவி மா சாம்யது || 27 ||

(பொழிப்புரை) ஓ அன்னையே! என்னுடைய கண்கள் உன்னைக் காண்பதிலே விருப்பமுற்றுப் பழகவேண்டும். என்னுடைய செவிகளோ உன்னுடைய உயரிய குணங்களைக் கேட்பதிலேயே நிலைத்திருக்க வேண்டும். என்னுடைய மனமானது உன்னை நன்கு சிந்தனை செய்வதில் திளைத்திருக்க வேண்டும். என்னுடைய இரண்டு கைகளும் உனது கமலசரணங்களை அர்ச்சனை செய்வதிலேயே நிலைத்திருக்க வேண்டும், என்னுடைய வாக்கானது உனது கல்யாண குணங்களைப் புகழ்வதிலேயே நிலைத்திருக்க வேண்டும். எனக்கு எப்பொழுதும் உன்னை உபாஸனை செய்யும் முயற்சியானது தளராதிருக்க அருள் புரிய வேண்டும்.

இச் செய்யுளோடு ஸௌந்தர்யலஹரியிலுள்ள "जपो जल्पः शिल्पम्" ஜபோ ஜல்பஃ சில்பம் - என்ற செய்யுளையும், அவ்விதமே, சிவாநந்தலஹரியிலுள்ள 'आत्मा त्वं गिरिजा मतिः" ஆத்மா த்வம் கிரிஜா மதிஃ - என்ற செய்யுளையும் ஒப்பு நோக்கிக் கருத்தொற்றுமை காணலாம்.

त्वद्रूपमुल्लसितदाडिमपुष्परक्त-
मुद्भावयेन्मदनदैवतमक्षरं यः ।
तं रूपहीनमपि मन्मथनिर्विशेष-
मालोकयन्त्युरुनितम्बतटास्तरुण्यः ॥ २८ ॥

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பதவுரை) मदन - दैवतम् - காமதேவனுடைய தொடர்புள்ள ; अक्षरम्-அக்ஷரமானது, उल्लसित-दाडिम-पुष्प-रक्तम् - மலர்ந்த மாதுளை மலரை நிகர்த்துச் சென்னிறம் பொருந்திய ; त्वद्-रूपम्-உன்னுடைய திருவுருவை ; यः - எவன் ; उद् - भावयेत् - நன்கு சிந்தனை செய்கின்றானோ ; रूप-हीनम् - அழகில் குறைந்துள்ள ; तम् -अपि-அவனையும் ; उरु-नितम्ब-तटाः - விஸ்தீர்ணமான நிதம்ப ப்ரதேசத்தையுடையவர்களான ; तरुण्यः - நாரீமணிகள் ; मन्मथ-निर्विशेषम् - காமதேவனைக் காட்டிலும் ; आलोकयन्ति - (மேலாக எங்கும்) காண்கின்றனர்.

த்வத்ரூப முல்லஸித தாடிம புஷ்பரக்த-
முத்பாவயேந் மதநதைவதமக்ஷரம் ய: ।
தம் ரூபஹீநமபி மந்மதநிர்விசேஷ
மாலோகயந்த்யுருநிதம்ப தடாஸ்தருண்ய: ॥ 28 ॥

(பொழிப்புரை) சொற்களின் தலைவியே! மூவுலகுக்கும் தலைமை பூண்டவளே! உலகத்திற்கு அன்னையாய் விளங்குபவளே! நான்முகன், ருத்ரன், விஷ்ணு, இந்த்ரன், சந்த்ரன், ஸூர்யன், குமரன், கணபதி, அக்நி முதலியவர்களால் வணங்கப் பெற்றவளும், உள்ளும், புறமும் எங்கும் நிலைத்து நிற்பவளும் ஆன உனக்கு நமஸ்காரம்.

அன்னை நால்வகையான வாக்குகளின் தலைவியாவள். அதாவது, பரா, பச்யந்தீ, மத்யமா, வைகரீ என்ற நால் வகை வாக்குகளையும் தோற்றுவிப்பவள் என்பது ஸாரம்.

மற்றும் உலகின் தோற்றம், நிலை, அழிவு இவைகளுக்கும் அவளே காரணமாயிருப்பதால் உலகுக்கு

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

அவளே தலைவியெனவும் சொல்லப் பெற்றது. மேலும் நான்முகன் முதலிய தேவர்களால் வணங்கப்பெறுகின்ற காரணத்தால் அன்னையைத் தவிர வேறு எந்தத் தெய்வமும் இச் சராசரங்களைத் தனியே தோற்றுவிக்க முடியாது என்பதும் கிடைப்பதாகும்.

எனவே, இச்சராசரங்களைப் படைத்துத் தானும் அவைகளுனூடே அந்தர்யாமியாய் இருந்து கொண்டு நிற்பவள். மற்ற தேவர்களோவெனில் அன்னையின் கட்டளைக்குக் கீழ்படிந்து அவளுடைய கட்டளையை நிறைவேற்றுகின்றவர்கள் என்பதும் இச் செய்யுளின் திரண்ட ஸாரமாகும்.

இன்னோரன்ன பல கருத்துக்களை ஸௌந்தர்யலஹரி, தேவீமாஹாத்ம்யம், லலிதோபாக்யானம் முதலிய நூல்களின் எமது தமிழுரையில் விரிவாகக் காணலாம்.

ब्रह्मेन्द्ररुद्रहरिचन्द्रसहस्ररश्मि-
स्कन्दद्विपाननहुताशनवन्दितायै ।
वागीश्वरि त्रिभुवनेश्वरि विश्वमात-
रन्तर्बहिश्च कृतसंस्थितये नमस्ते ॥ २९ ॥

(பதவுரை) वागीश्वरि - வாக்குகளுக்குத் தலைவியாய; ஓ அன்னையே! त्रिभुवन-ईश्वरि - மூவுலகுக்கும் தலைவியாய ஓ அன்னையே! ब्रह्म-इन्द्र-रुद्र - हरि - चन्द्र - सहस्ररश्मिः-स्कन्द - द्विप - आनन - हुताशन - वन्दितायै - நான்முகன், இந்த்ரன், ருத்ரன், விஷ்ணு, சந்த்ரன், ஸூர்யன்; ஸ்கந்தன், கணபதி, அக்நி முதலியவர்களால் வணங்கப் பெற்றவளும்; अन्तः - உள்ளிலும்;

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

बहिः च - வெளியிலும்; कृत-संस्थितायै -செய்யப்பெற்ற நிலையை யுள்ளவளுமான; ते - உனக்கு; नमः - நமஸ் காரம்.

ப்ரஹ்மேந்த்ரருத்ர ஹரிசந்த்ர ஸஹஸ்ரரச்மி-
ஸ்கந்தத் விபாகந ஹு[illegible]தாசநவந்திதாயை ।
வாகீச்வரி த்ரிபுவநேச்வரி விச்வமாத-
ரந்தர் பஹிஶ்ச க்ருதஸம்ஸ்திதயே நமஸ்தே ॥

(பொழிப்புரை) ஓ அன்னையே! நன்கு மலர்ந்த மாதுளை மலரை நிகரித்து விளங்கும் உனது திருவுருவை எந்தத் தொழும்பன் காமதேவனோடு தொடர்பு கொண்ட பீஜாக்ஷரத்தோடு சிந்தனை செய்கின்றானோ; அத்தொழும்பன் உருக்குலைந்தவனாயினும் அவனை விசாலமான நிதம்ப பிரதேசத்தோடு கூடிய ஆரணங்கு கள், காமதேவனைக் காட்டிலும் ஒப்புயர்வற்ற வனப் புள்ளவனாகக் காண்கின்றனர் அன்றோ!

பீஜங்களில் சிறந்தது காமராஜ பீஜமாகும். அது க்லீம் என்பது. அதனை இடைவிடாது ஒருவன் உபா ஸித்து ஸித்தி பெற்றால், அவ்வுபாஸகன் உருக்குலைந்து அழகற்று விளங்குகின்றவனாயிருப்பினும், அவனை விசால மான அழகிய நிதம்ப ப்ரதேசத்தையுடைய நாரீமணிகள் அநங்கனைக் காட்டிலும் அழகுள்ளவர்களாகக் காண் கின்றனர்.

எனவே காமராஜ பீஜத்தை யுபாஸிக்கும் தொழும் பனுக்கு ஆரணங்குகளும் அநாயாஸமாக வசமாகின்ற னர் என்பது ஸாரம். இச்செய்யுளோடு, ஸௌந்தர்ய

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

லஹரியிலுள்ள **नरं वर्षीयांसं-** நரம் வர்ஷீயாம்ஸம் என்ற செய்யுளையும் ஒப்பு நோக்கின் கருத்தொற்றுமை காணலாம்.*

य: स्तोत्रमेतदनुवासर मीश्वराया:
श्रेयस्करं पठति वा यदि वा शृणोति ।
तस्येप्सितं फलति राजभिरीड्यतेऽसौ
जायेत स प्रियतमो मदिरेक्षणानाम् ॥ ३० ॥

इति श्रीमहाकविकालिदासविरचितायां
श्रीदेवी पञ्चस्तव्यां द्वितीयश्चर्चास्तव:
संपूर्ण: ॥

(பதவுரை) **य:** - எவன்; **श्रेयस्करम्** - புகழைச் செய்வதான; **एतत्** - இந்த; **ईश्वराया:** - ஈச்வரியினுடைய; **स्तोत्रम्** - துதியை; **अनु-वासरम्** - தினந்தோறும் தொடர்ந்து; **पठति** - படித்து வருகின்றானோ; **यदि - वा** - அல்லது; **शृणोति** - கேட்கின்றானோ; **तस्य** - அவனுக்கு; **ईप्सितम्** - விரும்பியது; **फलितम्** - பலிதமடையும்; **असौ** - இவன்; **राजभि:** - அரசர்களினால்; **ईड्यते** - துதிக்கப் பெறுவன்; **स:** - அவன்; **मदिर - ईक्षणानाम्** - மானின் மருண்ட விழிகளைப் போன்ற விழிகளையுடைய வநிதையர்களுக்கு; **प्रियतम:** - மிகவும் பிரியமுள்ளவனாக; **जायते** - ஆகிறான்.

---

* இந்த 'க்லீம்' என்னும் மந்த்ர பீஜத்தின் விரிவான அவயவார்த்தங்களுடைய உட்பொருள் விளக்கங்களை எமது 'சக்தி மந்த்ர விளக்கம்' என்னும் நூலில் பரக்கக் காணலாம்.

CC-0. Mutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

इति - இவ்வாறு; महा-कवि-कालि-दास-विरचितायां - மஹாகவி காளிதாஸனால் இயற்றப்பெற்ற, श्री देवी - पञ्चस्तव्यां - ஸ்ரீ தேவியினுடைய ஐந்து ஸ்தவங்களில்; द्वितीयः - இரண்டாவதாகிய, चर्चास्तवः - சர்சாஸ்தவமானது; संपूर्णः - நன்கு நிறைவுற்றது.

இதி ஸ்ரீ மஹாகவிகாளிதாஸ விரசிதாயாம்
ஸ்ரீ தேவீ பஞ்சஸ்தவ்யாம் த்விதீய:
சர்சாஸ்தவ: ஸம்பூர்ண:

யஃ ஸ்தோத்ர மேத தநுவாஸர மீச்வராயாஃ
ச்ரேயஸ்கரம் படதி வா யதி வா ச்ருணோதி ।
தஸ்யேப்ஸிதம் பலதி ராஜபிரீட்யதேऽஸௌ
ஜாயேத ஸ ப்ரியதமோ மதிரேக்ஷணாநாம் ॥

(பொழிப்புரை) எந்தத் தொழும்பன் புகழை யளிக்கவல்ல இந்த த்ரிபுரஸுந்தரியினுடைய ஸ்தவத்தை தினந்தோறும் படித்தும், கேட்டும் வருகின்றானோ, அவனுக்கு விரும்பிய பலன்கள் யாவும் கிடைக்கும். அவன் அரசர்களால் துதிக்கப் பெறுவான். அவன் மருண்ட அழகிய கண்களையுடைய மாதர்களால் அன்புடன் நேசிக்கப் பெருகின்றான்.

இத்துதியை ஒருவன் தினந்தோறும் படித்தாலும், பிறர் படிக்கத் தான் கேட்டாலும், அவன் விரும்பிய பலன்களைப் பெறுகின்றான், அவன் அரசனால் புகழப் பெறுகின்றான், ஆரணங்குகளின் மாசற்ற அன்பையும் பெறுகின்றான். முடிவில் அன்னையின் நிலைத்த ஸாம்ராஜ்யமென்னும் மோக்ஷ பதவியையும் அடைகின்றான். சிவம்.

இவ்வாறு ஸ்ரீமஹாகவிகாளிதாஸர் திருவாய் மலர்ந்தருளிய
ஸ்ரீதேவி பஞ்சஸ்தவங்களில் இரண்டாவது
சர்சாஸ்தவம இவண் முற்றும்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஸ்ரீ தேவீ பஞ்சஸ்தவீ

கடஸ்தவ: (3)

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

आनन्दमन्थरपुरंदरमुक्तमाल्यं
मौलौ हठेन निहितं महिषासुरस्य ।
पादाम्बुजं भवतु मे विजयाय मञ्जु
मञ्जीरशिञ्जितमनोहरमम्बिकायाः ॥ १ ॥

आनन्द-मन्थर-पुरंदर-मुक्त - माल्यम् - ஆநந்தத்தினல் பெருமிதம் கொண்ட மந்தரமலைக்கு (நிகரான) இந்திரனல் அர்ச்சிக்கப் பெற்ற மாலையையுடையதும்; **हठेन** - பலாத்காரத்தினல், **महिष-असुरस्य** - மஹிஷாஸுரனுடைய; **मौलौ** - சிரஸில்; **निहितम्** - வைக்கப் பெற்றதும், **मञ्जु** - அழகிய; **मञ्जीर** - காற்சிலம்புகளுடைய; **शिञ्जित** - மணிகளின் ஒலியினல் **मनोहरम्** - மனதைக் கவருகின்றதுமான; **अम्बिकायाः** - லோகமாதாவான அன்னையாம் மஹிஷமர்தனியினுடைய; **पाद-अम्बुजम्** - சரணகமலம், **मे** - என்னுடைய; **विजयाय** - விஜயத்தின் பொருட்டு; **भवतु** - இருப்பதாக.

ஆநந்த மந்தரபுரம்தரமுக்தமால்யம்
மௌலௌ ஹடேந நிஹிதம் மஹிஷாஸுரஸ்ய।
பாதாம்புஜம் பவது மே விஜயாய மஞ்ஜு
மஞ்ஜீரசிஞ்ஜித மநோஹரமம்பிகாயா: || 1 ||

(பொழிப்புரை) பெருமிதம் கொண்ட ஆநந்தந் தோடு, மந்த்ரம் என்னும் மலைக்கு நிகராக விளங்குகின்ற தேவேந்திரனல் அர்ச்சனை செய்யப் பெற்ற மாலையை

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

யுடையதும், மஹிஷாஸுரனுடைய சிரஸிலே வைக்கப் பெற்றதும். அழகிய காற்சிலம்புகளுடைய மணிகளின் ஒலிகளினால் மனதைக் கவருகின்றதுமான உலகங்களைத் தோற்றுவித்த அன்னையாம் ஸ்ரீமஹிஷமர்தனியினுடைய கமல சரணமானது என்னுடைய வெற்றியின் பொருட்டு துணை நிற்பதாக.

देवि त्र्यम्बकपत्नि पार्वति सति त्रैलोक्यमातः शिवे
शर्वाणि त्रिपुरे मृडानि वरदे रुद्राणि कात्यायनि ।
भीमे भैरवि चण्डि शर्वरिकले कालक्षये शूलिनि
त्वत्पादप्रणताननन्यमनसः पर्याकुलान् पाहि नः ॥ २ ॥

(பதவுரை) त्र्यम्बक-पत्नि-முக்கண்ணன் மனைவியே! पार्वति - மலையரசன் மகளே! सति - கற்பின் நிறைவே! त्रैलोक्य-मातः - மூவுலகுக்கும் அன்னையாயமைந்தவளே! शिवे - மங்களவடிவே! शर्वाणि - சர்வதேவன் துணைவியே! त्रिपुरे - முப்புரம் கொண்டவளே! मृडानि - ஸுகத்தின் வடிவே! वरदे-வரத்தையளிப்பவளே! रुद्राणि-ருத்ரனின் துணைவியே! कात्यायनि - கதன் என்ற மஹர்ஷியின் மகளே! भीमे - பயங்கரவடிவே। भैरवि-பைரவன் தலைவியே! चण्डि - சண்டிகே! शर्वरि - காலராத்ரி வடிவம் கொண்டவளே! कले - கலையின் வடிவே! कालक्षये - காலத்திற்கும் காலவடிவாயமைந்தவளே; शूलिनि - சூலாயுதத்தைத் தரித்தவளே! देवि - ஒளியுடன் விளங்குபவளே! अनन्य-मनसः - ஒருமுகமாகச் செய்யப் பெற்ற மனதையுடையவர்களும். पर्याकुलान् - மிகுந்த கலக்கத்தை அடைந்தவர்களும்,

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

त्वत्-पाद-प्रणतान् - உன்னுடைய பாதங்களை வணங்கிய வர்களுமான ; नः - எங்களை पाहि - காப்பாற்றுவா யாக.

தேவி த்ரயம்பகபத்னி பார்வதி ஸதி
த்ரைலோக்யமாத: சிவே
சர்வாணி த்ரிபுரே ம்ருடானி வரதே ருத்ராணி
காத்யாயனி |
பீமே பைரவி சண்டி சர்வரி கலே க லக்ஷயே சூலினி
த்வத்பாதப்ரணதாநநந்யமநஸ: பர்யாகுலான்
பாஹி ந: || 2 ||

(பொழிப்புரை) முக்கண்ணன் மனைவியே! மலையர சன் மகளே! கற்பின் நிறைவே! மூவுலகுக்கும் அன்னை யாயமைந்தவளே! மங்கள வடிவே! சர்வன் துணை வியே: (முப்புரம் கொண்டவளே! ஸுகத்தின் வடிவே! வரத்தையளிப்பவளே! ருத்ரனுடைய துணைவியே! கதன் என்ற மஹர்ஷியின் மகளே! பயங்கர வடிவம் கொண்டவளே! பைரவனுடைய தலைவியே! சண்டிகே! காளராத்ரியின் வடிவாயமைந்தவளே! கலையின் வடிவே! காலத்திற்கும் கால வடிவாயமைந்தவளே! சூலாயுதத் தைத்தரித்தவளே! ஒளியின் வடிவே! உன்னை ஒரு முகமாகச் சிந்தனை செய்கின்றவர்களும், மிகுந்த கலக் கத்தையடைந்தவர்களும், உன்னுடைய பாதங்களை வணங்கியவர்களுமான எங்களைக் காப்பாற்றுவாயாக.

देवि त्वां सकृदेव यः प्रणमति क्षोणीभृतस्तं नम-
न्त्याजन्मस्फुरदङ्घ्रिपीठविलुटत्कोटीरकोटिच्छटाः ।
यस्त्वामर्चति सोऽर्च्यते सुरगणैर्यः स्तौति स स्तूयते
यस्त्वां ध्यायति तं स्मरार्तिविधुरा ध्यायन्ति वामभ्रुवः ॥ ३

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பதவுரை) हे देवि - ஓ அன்னையே! यः - எவன்; त्वाम् - உன்னை; सकृद्-एव - ஒரு தடவையாவது; प्रणमति -வணங்குகின்றானோ; तम्- அவனை; आजन्म -பிறவி முதற்கொண்டு; स्फुरद् - ஒளியுடன் இலங்கும்; अङ्घ्रि-पीठ - சரணதலத்தில், विलुठत् - உறைகின்ற; कोटीर - கிரீடத்தினுடைய; कोटि - छटाः -நுனியின் காந்திகளையுடைய; क्षोणी - भृतः - அரசர்கள்; नमन्ति - வணங்குகின்றனர்; यः - எவன்; त्वाम् - உன்னை; अर्चति - அர்சனை செய்கின்றானோ; स - அவன்; सुर-गणैः-தேவ கணங்களால்; अर्च्यते - அர்ச்சனை செய்யப் பெருகின்றான்; यः - எவன்; स्तौति - துதிக்கின்றானோ; सः - அவன்,(தேவர்களால்)स्तूयते-துதிக்கப்பெறுகின்றான்; यः - எவன்; त्वाम् - உன்னை; ध्यायति - த்யானம் செய்கின்றானோ; तम्-அவனை; स्मर-आर्ति - विधुराः - மன்மதனால் பீடிக்கப்பெற்றுத் தாக்குண்டவர்களான; वाम-भ्रुवः - அழகிய புருவங்களுடைய ஆரணங்குகள்; ध्यायन्ति - நீங்காச் சிந்தனையில் ஆழ்ந்துள்ளவர்களாக இருக்கின்றனர்.

தேவி த்வாம் ஸக்ருதேவ யः ப்ரணமதி க்ஷோணீ
ப்ருதஸ்தம் நம-
ந்த்யாஜந்மஸ்புரதங்க்ரிபீடவிலுடத்கோடீர
கோடிச்சடா:।
யஸ்த்வாமர்சதி ஸோऽர்ச்யதே ஸுரகணைர்
யः ஸ்தௌதி ஸ ஸ்தூயதே
ய: ஸத்வாம் த்யாயதி தம் ஸ்மரார்தி விதுரா:
த்யாயந்தி வாமப்ருவः। 3

(பொழிப்புரை) ஓ அன்னையே! ஒளியின் வடிவே! எவன் உன்னை ஒரு தடவையாவது வணங்குகின்றானோ!

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

அவனை, பிறவி முதல் ஒளியுடன் இலங்கும் சரணதலத்தில் உறைகின்ற கிரீடத்தினுடைய நுனிகளிலே இலங்கும் காந்திகளையுடைய அரசர்கள் வணங்குகின்றனர். எவன் உன்னை அர்சனை செய்கின்றானோ, அவன் தேவ கணங்களால் அர்சனை செய்யப் பெறுகின்றான். எவன் துதிக்கின்றானோ அவன் தேவர்களால் துதிக்கப்பெறுகின்றான், எவன் உன்னைச் சிந்தனை செய்கின்றானோ; காமனால் பீடிக்கப் பெற்றுத் தாக்குண்ட அழகிய புருவங்களுடைய ஆரணங்குகள் அவனைப் பற்றி சிந்தை வயமாகின்றனர்.

उन्मत्ता इव सग्रहा इव विषव्यासक्तमूर्च्छा इव
प्राप्तप्रौढमदा इवार्तिविरहग्रस्ता इवार्ता इव ।
ये ध्यायन्ति हि शैलराजतनयां धन्यास्त एवाग्रत-
स्त्यक्तोपाधिविशुद्धरागमनसो ध्यायन्ति तान् सुभ्रुवः ॥ ४

(பதவுரை) ये - எவர்கள்; उन्मत्ताः-इव - பித்தர்கள் போலவும், सग्रहाः - इव - துஷ்டக்ரஹங்களோடு கூடியவர்கள் போலவும்; विष - व्यासक्त - मूर्च्छा - इव - கொடிய விஷத்தினால் நன்கு பீடிகப்பெற்று மயக்கமடைந்தவர்கள் போலவும்; प्राप्त-प्रौढ-मदाः-इव - அடையப்பெற்ற யௌவநத்தாலுண்டானமதப்பெருக்கெடுத்தவர்கள் போலவும்; आर्ति-विरह-ग्रस्ताः-इव - பீடிக்கப் பெற்ற விரஹத்தால் விழுங்கப்பெற்றவர்கள் போலவும்; आर्ताः-इव - மூவகையான தாபங்களால் பீடிக்கப் பெற்றவர்கள் போலவும்; शैल- राज - तनयाम् - கைலேசனின் மகளாம் உன்னை; ध्यायन्ति - சிந்தனை செய்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

கின்றனரோ ; ते-एव - அவர்களே ; धन्याः - புண்யசாலிகள் அன்றோ ! तान् - அவர்களை ; त्यक्त - விடப்பெற்ற; उपाधि - பயம், லஜ்ஜை இவைகளால், विवृद्ध - राग - मनसः - வளர்ச்சியடைந்த ஆசைகளால் உந்தப்பெற்ற மனதையுடையவர்களான ; सु-भ्रुवः - அழகிய புருவங்களுடைய ஆரணங்குகள், अग्रतः-முக்யமாக ; ध्यायन्ति- சிந்தனை செய்கின்றனர்.

உன்மத்தா இவ ஸக்ரஹா இவ விஷவ்யாஸக்த
மூர்ச்சா இவ
ப்ராப்த ப்ரௌடமதா இவார்த்தி விரஹக்ரஸ்தா
இவார்த்தா இவ ।
யே த்யாயந்தி ஹி சைலராஜதநயாம் தந்யாஸ்த
ஏவாக்ரத-
ஸ்த்யக்தோபாதி விவ்ருத்தராகமநஸோ த்யாயந்தி
தாந் ஸுப்ருவ: ॥

(பொழிப்புரை) எவர்கள், பித்தர்களைப் போலவும், துஷ்டக்ரஹங்களோடு கூடியவர்கள் போலவும், கொடிய விஷத்தால் தாக்குண்டு மயக்கமடைந்தவர்கள் போலவும், யௌவனத்தையடைந்த மதங்கொண்டவர்கள் போலவும், விரஹதாபத்தாலுண்டான துயரத்தால் விழுங்கப் பெற்றவர்கள் போலவும் மூவகையான தாபங்களினால் பீடிக்கப் பெற்றவர்கள் போலவும், * சைலேசன் மகளாம் உன்னைச் சிந்தனை செய்கின்றனரோ, அவர்களே புண்யசாலிகள். வெட்கம், பயம் இவைகளை ஒதுக்கி,

* மூவகையான தாபங்கள்—ஆத்யாத்மிதம, ஆதிதைவிக ஆதிபௌதிகம் என்பன.

சைலேசன்—மலையரசன்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஆசைகளின் எழுச்சியினால் உந்தப்பெற்ற மனதைக் கொண்ட அழகிய புருவங்களோடு கூடிய ஆரணங்குகள் அவர்கள் எதிரில் சிந்தனை செய்த வண்ணமிருக்கின்றனர்.

(விரிவுரை) ஒருவனுக்கு ஒரு வஸ்துவில் பற்று உண்டாகி அது கிடைக்காவிடில் சிறிது நாளில் புத்தி கலங்கி விடும். அவன் அதையே சொல்லிக்கொண்டு திரிந்து கொண்டிருப்பான். இந்நிலையை பைத்தியம் எனச் சிலர் சொல்லுவர். விஷத்தால் தாக்குண்டால் மயக்கமடைந்தவர் தன்னிலையையிழப்பர்.

ध्यायन्ति ये क्षणमपि त्रिपुरे हृदि त्वां
लावण्ययौवनघनैरपि विप्रयुक्ताः ।
ते विस्फुरन्ति ललितायतलोचनानां
चित्तैकभित्तिलिखितप्रतिमाः पुमांसः ॥ ५ ॥

(பதவுரை) हे त्रिपुरे - ஓ த்ரிபுரே! ये-எவர்கள்; लावण्य - यौवन-घनैः - லாவண்யம்; யௌவனம், தனம் இவைகளால்; विप्रयुक्ताः - अपि - விலகி இருப்பவர்களாயினும்; क्षणम् - अपि - ஒரு கணமாவது; हृदि - மனதில்; त्वाम् - உன்னை; ध्यायन्ति - சிந்தனை செய்கின்றனரோ; ते - அந்த; पुमांसः - புருஷர்கள்; ललित-आयत-लोचनानाम् - அழகிய நீண்ட கண்களையுடைய நாரீமணிகளுடைய; चित्त-एक- भित्ति - लिखित - प्रतिमाः - மனமென்னும் முக்யமான சுவற்றில் எழுதப்பெற்ற ப்ரதிமைகளைப் போல; वि-स्फुरन्ति - நன்கு ஒளியுடன் விளங்குகின்றனர்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

த்யாயந்தி யே க்ஷணமபி த்ரிபுரே ஹ்ருதி த்வாம்
லாவண்யயௌவநதநைரபி விப்ரயுக்தா: ।
தே விஸ்புரந்தி லலிதாயதலோசநாநாம்
சித்தைகபித்திலிகிதப்ரதிமா: புமாம்ஸ: ॥ 5 ॥

(பொழிப்புரை) முப்புரம் கொண்ட ஓ அன்னையே! எவர்கள் வனப்பு, யௌவநம் பொருள் இவைகளால், விலகியிருப்பவர்களாயினும், ஒரு கணமாவது உன்னை மனதிலே சிந்தை செய்கின்றனரோ, அந்த மஹா புருஷர்கள்; அழகியதும், நீண்டவையுமான கண்களுடைய காமினிகளுடைய மனமென்னும் சிறந்த சுவற்றிலே எழுதப்பெற்ற ப்ரதிமைகளைப் போல நன்கு ஒளிருகின்றனர்.

एतं किं नु दृशा पिबाम्युत विशाम्यस्याङ्गमङ्गैर्निजैः
किं वामुं निगराम्यनेन सहसा किं वैकतामाश्रये ।
यस्येत्थं विवशो विकल्पललिताकूतेन योषिज्जनः
किं तद्यन्न करोति देवि हृदये तस्य त्वमावर्तसे ॥ ६ ॥

(பதவுரை) त्वम् - நீ; यस्य - எவனுடைய; हृदये - ஹ்ருதயத்தில்; आवर्तसे - நிலைத்துள்ளனையோ; त्वम् - நீ; एतम् - இவனை; दृशा - கண்ணால்; पिबामि - பருகுகிறேன்; किं नु - இதில் வியப்பென்ன; उत இல்லாவிடில்; अस्य - இவனுடைய; अङ्गम् - சரீரத்தை; निजैः - தங்களுடைய; अङ्गैः - சரீரங்களோடு; विशामि - ஆட்கொள்ளுகிறேன், किं वा - அல்லது; अमुम् - இவனை; निगरामि - விழுங்குகிறேன். वा - அல்லது; अनेन - இவனோடுகூட; सहसा - விரைவில்; एकताम् -

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பதவுரை) अम्ब - ஓ அன்னையே! त्वम् - நீ; शशिनि - சந்த்ரனிடத்தில், चन्द्रिका - நிலவாகவும்; त्वम् - நீ; तिग्मरुचौ - ஸூர்யனிடத்தில்; रुचिः - கதிர்களாகவும்; पुरुषे - புருஷனிடத்தில்; चेतना - சேதன வடிவாகவும்; असि - இருக்கிருய்; पवने - வாயுவினிடத்தில்; त्वम् - நீ; बलम् - பலத்தின் வடிவாயமைந்தவள்; त्वम् - நீ; सलिले - ஜலத்தில், स्वादुता - ருசியின் வடிவாக; असि - இருக்கிருய். शिखिनि - அக்நியில்; त्वम् - நீ; ऊष्मा - உஷ்ணத்தின் வடிவாயமைந்தவள். त्वद्-ऋते - உனது தொடர்பு இல்லாமல்; यदि - ஒரு ஸமயம்; स्यात् - இருக்குமேயாகில், निखिलम् - இவை யாவும்; निः-सारम् एव - ஸாரமற்றவைகளாக இருக்குமன்றோ!

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

த்வம் சந்த்ரிகா சசிநி திக்மருசௌ ருசிஸ்த்வம்
த்வம் சேதநாஸி புருஷே பவநே பலம் த்வம் ।
த்வம் ஸ்வாதுதாஸி ஸலிலே சிகிநி த்வமூஷ்மா
நி:ஸாரமேவ நிகிலம் த்வத்ருதே யதி ஸ்யாத் ॥

(பொழிப்புரை) ஓ அன்னையே! நீ நிறைமதியினிடத்திலே தோன்றும் நிலவைப் போலவும், ஆதவனிடத்திலே தோன்றும் கதிர்களைப் போலவும், புருஷனிடத்திலேயுள்ள சேதநத்தின் தன்மையாகவும், வாயுவினிடத்தேயுள்ள பலத்தின் தன்மையாகவும், ஜலத்திலேயுள்ள சுவையின் தன்மையாகவும், அக்நியினிடத்திலுள்ள உஷ்ணத்தின் தன்மையாகவும் யாவற்றிலும் பரவியுள்ளாய். உன்னுடைய தொடர்பில்லாத வஸ்துக்கள் யாவும் சுவையற்றனவாக இவ்வுலகில் இருப்பவையன்றோ!

ज्योतींषि यद्दिवि चरन्ति यदन्तरिक्षं
सूते पयांसि यदहिर्धरणिं च धत्ते ।
यद्वाति वायुरनलो यदुदर्चिरास्ते
तत्सर्वमम्ब तव केवलमाज्ञयैव ॥ २१ ॥

(பதவுரை) हे अम्ब - அன்னையே! यत् - எந்த; ज्योतींषि - நக்ஷத்ரங்கள்; दिवि - ஆகாயத்தில்; चरन्ति - ஸஞ்சரிக்கின்றனவோ; यत् - யாதொன்று; अन्तरिक्षम् - ஆகாயத்தையடைந்து; पयांसि - ஜலங்களை; सूते - தோற்றுவிக்கின்றதோ; यत् - யாதொன்று; अहि: - ஆதிசேஷவடிவாயமைந்து; धरणिम् - பூமியை; धत्ते - தாங்குகின்றதோ; यत् - யாதொன்று; वायु: - வாயுவடி

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

வாயமைந்து ; वाति-வீசுகின்றதோ ; यत् யாதொன்று;
अग्निः - அக்கினிவடிவாயமைந்து ; उदर्चिः - எழுகின்ற
ஜ்வாலையை யுடையதாக ; आस्ते - இருக்கின்றதோ ;
तत्-सर्वम् -அவை யாவும் ; तव - உன்னுடைய ; केवलम् -
உறுதியாயுள்ள ; आज्ञया इव - உத்திரவினாலே போல
(இயங்குகின்றன).

ஜ்யோதீம்ஷி யத்திவி சரந்தி யதந்தரிக்ஷம்
ஸூதே பயாம்ஸி யதஹிர்தரணிம் ச தத்தே।
யத் வாதி வாயுரநலோ யதுதர்ச்சிராஸ்தே
தத்ஸர்வமம்ப தவ கேவலமாஜ்ஞயைவ ॥ 21 ॥

(பொழிப்புரை) ஓ அன்னையே! வானிலே தோன்றும் விண்மீன்கள் உலவி வருவதும், வானையடைந்து ஜலங்களைப் பொழிவதும், அரவத்தின் உருவையடைந்து அவனியைச் சுமப்பதும், ஆகாயத்தையடைந்து காற்று வீசுவதும், அக்னியையடைந்து ஜ்வாலையாகத் திகழ்வதும் ஆன இவைகள் யாவும் உன்னுடைய உறுதியான உத்திரவுக்கிணங்க செயல்கள் புரிகின்றனவன்றோ.

இச்செய்யுளிலுள்ள பூதங்களுடைய தோற்றங்கள், வேதங்களிலும் உபநிஷதங்களிலும் சொல்லியவைகள் இங்கு சுருக்கமாக விளக்கப் பெற்றுள்ளன.

संकोचमिच्छसि यदा गिरिजे तदानीं
वाक्तर्कयोस्त्वमसि भूमिरनामरूपा ।
यद्वा विकासमुपयाति यदा तदानीं
त्वन्नामरूपगणनाः सुकरा भवन्ति ॥ २२ ॥

CC-0. Arutsakthi R.Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பதவுரை) हे गिरिजे - மலையினிடம் தோன்றிய வளே! यदा - எப்பொழுது; संकोचम् - சுருக்கத்தை; इच्छसि - விரும்புகிருயோ; तदानीम् - அப்பொழுது; त्वम् - நீ; वाक्-तर्कयोः - சொல்லுக்கும், நினைவுக்கும்; अनाम-रूपा - பெயரும், வடிவமும் இல்லாத; भूमिः - நிலையில்; असि - இருக்கிருய் यद्वा - அல்லது; यदा - எப்பொழுது; विकासम् - மலர்ச்சியை; उपयासि - அடைகின்ருயோ; तदानीम् - அப்பொழுது त्वत्-नाम - रूप-गणनाः - உன்னுடைய பெயர், வடிவம் இவைகளுடைய நிர்ணயங்கள், सुकराः - ஸுலபமுள்ளவைகளாக भवन्ति - இருக்கின்றன.

ஸங்கோச மிச்சஸி யதா கிரிஜே ததாநீம்
வாக்தர்கயோஸ்த்வமஸி பூமிரநாமரூபா ।
யத்வா விகாஸ முபயாஸி யதா ததாநீம்
த்வந் நாமரூப கணநா: ஸுகரா பவந்தி ॥ 22 ॥

(பொழிப்புரை) வரையிலே தோன்றிய வனப்பே! ஓ அன்னையே! நீ எப்பொழுது ஸங்கோசத்தை (சுருக்கம்) விரும்புகின்றனையோ, அப்பொழுது சொல்லுக்கும், நினைவிற்கும், பெயரும், உருவும் இல்லாத நிலையில் இருக்கின்ருய். அல்லது நீ எப்பொழுது மலர்ச்சியையடைகின்றனையோ அப்பொழுது உன்னுடைய பெயர், உருவு இவைகளுடைய உறுதியான நிலைகள் எளிதாக உனக்கு இருக்கின்றன.

भोगाय देवि भवतीं कृतिनः प्रणम्य

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

भ्रूकिंकरीकृतसरोजगृहा सहस्राः ।

चिन्तामणिप्रचयकल्पितकेलिशैले
कल्पद्रुमोपवन एव चिरं रमन्ते ॥ २३ ॥

(பதவுரை) हे देवि ! அன்னையே; कृतिनः - புண்யசாலிகள்; भवतीम् - உன்னை; भोगाय - ஸுகத்தின் பொருட்டு; प्रणम्य - வணங்கி; भ्रूकिङ्करी-कृत सरोजगृहा-सहस्राः - புருவங்களுடைய அசைவுக்கு அடிமையாகச் செய்யப்பெற்ற தாமரை மலர்களையே தங்களது இருப்பிடமாகக் கொண்ட பல லக்ஷ்மிகளையும்; அடையப் பெற்று; चिन्तामणि-प्रचय-कल्पित-केलिशैले - சிந்தாமணிக்கற்களின் தொகுதிகளால் நிர்மாணம் செய்யப்பெற்ற க்ரீடாபர்வதத்தில்; कल्पद्रुम-उपवने-கற்பகத்தருக்களால் சூழப்பெற்ற உத்யானத்தில், चिरम् - நீண்டகாலம்; रमन्ते-एव - திளைக்கின்றனர் அன்றோ!

போகாய தேவி பவதீம் க்ருதிநஃ ப்ரணம்ய
ப்ருகிங்கரீக்ருத ஸரோஜ க்ருஹா ஸஹஸ்ராஃ ।
சிந்தாமணி ப்ரசய கல்பித கேலிசைலே
கல்பத்ருமோபவந ஏவ சிரம் ரமந்தே ॥ 23 ॥

(பொழிப்புரை) ஒலியுடன் இலங்கும் ஓ அன்னையே புண்யசாலிகள் உன்னை ஸுகத்தின் பொருட்டு வணங்குகின்றனர். அவர்கள் அவ்விதம் வணங்கி உனது புருவங்களுடைய அசைவிற்கு அடிமையாகச் செய்யப் பெற்ற தாமரை மலர்களையே தங்களுடைய இருப்பிடமாகச் செய்து கொண்ட லக்ஷ்மிகளையும் அடையப்பெற்று சிந்தாமணிக் கற்களின் தொகுதிகளால் உருவாக்கப்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

பெற்ற க்ரீடாசைலத்தில், கற்பகத் தருக்களால் சூழப் பெற்ற உத்யானவனத்தில் நீண்டகாலம் திளைத்து நிற்கின்றனர் அன்றோ!

हर्तुं त्वमेव भवसि त्वदधीनमीशे
संसारतापमखिलं दयया पशूनाम् ।
वैकर्तनीकिरणसंहतिरेव शक्ता
घर्मं निजं शमयितुं निजयैव वृष्ट्या ॥ २४ ॥

(பதவுரை) हे ईशे - ஈசாந தேவனுடைய மனைவியான ஓ அன்னையே! पशूनाम् - பிராணிகளுடைய; संसार-तापम् - பிறவித்துன்பம் என்னும் தாபம்; अखिलम् - யாவும், त्वत्-अधीनम् - உனக்கு அடிமையன்றோ, (ஆகையால்) दयया - தயையோடுகூட; हर्तुम् - அழிப்பதற்கு; त्वम्-एव - நீ ஒருவனே; भवसि - இருக்கிறாய். (ஏனெனில்) वैकर्तनी - किरण - संहतिः - ஸூர்ய கிரணங்களுடைய, தொகுதியானது; निजम् - தன்னுடைய; घर्मम् - வெப்பத்தை; शमयितुम् - தணிப்பதற்கு; निजया - தனது; वृष्ट्या - மழையினால், शक्ता-एव - திறமை பெற்று விளங்குவதன்றோ!

ஹர்தும் த்வமேவ பவஸி த்வததீநமீசே
ஸம்ஸார தாபமகிலம் தயயா பசூநாம் |
வைகர்தநீ கிரணஸம்ஹதிரேவ சக்தா
கர்மம் நிஜம் சமயிதும் நிஜயைவ வ்ருஷ்ட்யா ||

(பொழிப்புரை) ஈசாந தேவனுடைய துணைவியாம் ஓ அன்னையே! உலகத்தில் தோன்றிய பிராணி வர்க்க

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

களுடைய பிறவித் துன்பங்கள் யாவும் உனக்கு அநிந மன்றோ! ஆகையினுல் கருணையோடுகூட அவைகளை அழிப்பதற்கு நீ ஒருவளே திறமையுள்ளவளாக இருக்கின்றாய். ஏனெனில்; ஆதவனிடத்திலேயுள்ள வெப்பம் சூழ்ந்த கதிர்களாலுண்டான கொடியதாபத்தை, அவன் தன்னிடத்திலுள்ள மழையினுலேதான் குளிரச் செய்கின்றான் அன்றோ! தொழும்பர்களிடத்திலுள்ள உனது நிலையும் அதே போன்றுள்ளது என்பது கருத்து.

शक्तिः शरीरमधिदैवतमन्तरात्मा
ज्ञानं क्रिया करणमानसजालमिच्छा ।
ऐश्वर्यमायतनमावरणानि च त्वं
किं तन्न यद्भवसि देवि शशाङ्कमौले: ॥ २५ ॥

(பதவுரை) हे देवि! ஓ அன்னையே! शशाङ्कमौलेः- சந்த்ர மௌலியினுடைய; शरीरम् - சரீரமாகவும்; शक्तिः - சக்தியாகவும்; अधिदैवतम् - தெய்வத்தன்மை வாய்ந்ததாகவும்; अन्तरात्मा - அந்தராத்ம வடிவாகவும், ज्ञानम् - ஞாநத்தின் வடிவாகவும்; क्रिया - செயலின் வடிவாகவும்; करण - मानस - जालम् - இந்த்ரியங்கள், மனம், இவைகளின் தொகுதியாகவும்; ऐश्वर्यम् - ஐச்வர்யத்தின் வடிவாகவும், आयतनम् - இருப்பிடமாகவும், आवरणानि च - பரிவாரங்களாகவும், त्वम् - நீ; यत् - எக்காரணம் கொண்டு; भवसि - இருக்கிருயோ; तत् - அதுவும்; न किम् - (உனது பெருமையின்) சிறப்பில்லையா என்ன?

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

சக்திஃ சரீரமதிதைவதமந்தராத்மா
ஞானம் க்ரியா கரணமானஸஜாலமிச்சா ।
ஐச்வர்ய மாயதநமாவரணாநி ச த்வம்
கிம் தந்ந யத் பவஸி தேவி சசாங்கமௌலேஃ ॥ 25

(பொழிப்புரை) ஒளியுடன் இலங்கும் ஓ அன்னையே! பாதிமதியைச் சூடிய சந்த்ரமௌளியினுடைய சரீரமாகவும், சக்தி எனவும், சிறந்த தெய்வத்தன்மை வாய்ந்ததும், அந்தராத்ம நிலையையெய்தியதும், ஞானத்தின் நிறைவுள்ளதும். செயலின் வடிவம் கொண்டதும், பொறிகளோடு இயங்கும் மனம் முதலிய தொகுதிகளோடு கூடியதும், ஸம்பத்தின் நிறைவை யெய்தியதும், யாவற்றிற்கும் இருப்பிடமாயுள்ளதும், பரிவாரங்களால் சூழப் பெற்ற நிலையையும் கொண்டு, எக்காரணத்தால் விளங்குகின்றனையோ, அதுவும் உனது சிறப்பான பெருமைகளின் நிறைவேயன்றோ!

भूमौ निवृत्तिरुदिता पयसि प्रतिष्ठा
विद्यानिले मरुति शान्तिरतीतशान्तिः ।
व्योम्नीति याः किल कलाः कलयन्ति विश्वं
तासां हि दूरतरमम्ब पदं त्वदीयम् ॥ २६ ॥

(பதவுரை) हे देवि! ஓ அன்னையே! भूमौ - பூமியில்; निवृत्तिः - நிவ்ருத்தியானது, उदिता - தோன்றியது. पयसि - ஜலத்தில்; प्रतिष्ठा - ப்ரதிஷ்டையானது, (தோன்றியது) अनले - அக்னியில், विद्या - வித்யையானது, (தோன்றியது) मरुति - வாயுவினிடத்தில், शान्तिः - சாந்தியானது (தோன்றியது) व्योम्नि - ஆகா

CC-0. Anushree R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

யத்தில், अतीतशान्तिः - யாவற்றையும் கடந்த சாந்தி யானது (தோன்றியது) याः - எந்த ; कलाः - கலைகள் विश्वम् - உலகை ; कलयन्ति - எண்ணுகின்றனவோ, तासाम् - அவைகளுக்கும், त्वदीयम् - உன்னைத் தொடர்ந்துள்ள ; पदम् - நிலையானது ; दूरतरम् - அப்பாலுள்ளதாக ; हि - இருப்பதல்லவா ?

பூமௌ நிவ்ருத்திருதிதா பயஸி ப்ரதிஷ்டா
வித்யா நிலே மருதி சாந்தி ரதீதசாந்திः ।
வ்யோம்நீதி யாः கில கலாः கலயந்தி விச்வம்
தாஸாம் ஹி தூரதரமம்ப பதம் த்வதீயம் ॥ 26 ॥

(பொழிப்புரை) ஓ அன்னையே ! பூமியிலே தோன்றியது நிவிருத்தியாகும். ஜலத்திலே தோன்றியது ப்ரதிஷ்டையாகும். அக்நியிலே தோன்றியது வித்தையாகும். வாயுவினிடத்தில் தோன்றியது அதீத சாந்தியாகும். ஆகவே இக்கலைகள் யாவும் உலகைப் பரவியிருந்து கொண்டு, அவைகளை அளந்து நிற்கின்றன. நீயோ அக்கலைகளுக்கும் அப்பாலுள்ள நிலையில் இருக்கின்றாய் அல்லவா ?

यावत्पदं पदसरोजयुगं त्वदीयं
नाङ्गीकरोति हृदयेषु जगच्छरण्ये ।
तावद्विकल्पजटिलाः कुटिलप्रकारा-
स्तर्कग्रहाः समयिनां प्रलयं न यान्ति ॥ २७ ॥

(பதவுரை) जगत्-शरण्ये - உலகத்திற்கு அடைக்கலமாயுள்ள ஓ அன்னையே ! त्वदीयम् - உன்னைச்சார்ந்துள்ள ; पद-सरोजयुगम् - சரணகமலங்கள் இரண்டும் ;

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

यावत्-पदम् - எந்த இருப்பிடம் வரையில்; हृदयेषु - ஹ்ருதயங்களில், न-अङ्गीकरोति - ஏற்றுக் கொள்ள வில்லையோ; तावत्-पदम् - அது வரையில்; समयिनाम् - உபாஸகர்களுடைய; विकल्प-जटिला: - வேற்றுமை களின் ஐயங்களும்; कुटिल-प्रकारा:-வக்ரமான செயல் களும்; तर्क-ग्रहा: - வீணன சர்சைகளால் விழுங் கப் பெற்ற நிலைகளும்; प्रलयम् - நாசத்தை; न:-यान्ति- அடைகின்றன என்பது இல்லை.

யாவத்பதம் பதஸரோஜயுகம் த்வதீயம்
நாங்கீ கரோதி ஹ்ருதயேஷு ஜகச்சரண்யே ।
தாவத் விகல்ப ஜடிலா குடிலப்ரகாரா:
தர்கக்ரஹா: ஸமயிநாம் ப்ரலயம் ந யாந்தி ॥ 27 ॥

(பொழிப்புரை) உலகங்களுக்கு அடைக்கலமாயுள்ள ஓ அன்னையே? உன்னைச் சார்ந்துள்ள உனது சரண கமலங்கள் இரண்டும் தொழும்பர்களுடைய ஹ்ருதயங் களில் எவ்வளவு தூரம் பதிந்துள்ளனவாக நீ ஏற்றுக் கொள்ளவில்லையோ, அவ்வளவு தூரம் தொழும்பர் களான ஸமயிகளுடைய வேற்றுமைகளிலிருந்து தோன் றிய ஐயங்களும், விபரீதமாயுள்ள வீணன சர்ச்சைகளால் விழுங்கப்பெற்ற நிலைகளும், ஒரு பொழுதும் அவர்களை விட்டு விலகாது, இது உறுதி.

निर्देवयानपितृयाणविहारमेके
कृत्वा मन: करणमण्डलसार्वभौमम् ।
याने निवेश्य तव कारणपञ्चकस्य
CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri
पर्वाणि पार्वति नयन्ति निजासनत्वम् ॥ २८ ॥

(பதவுரை) हे पार्वति - மலையரசன் மகளாம் ஓ அன்னையே! एके - சிலர், निर्देव-यान-पितृयाण-विहारम् - தேவமார்கம், பித்ருமார்கம் என்ற இரண்டு வழி களிலும் திளைத்தவர்களாகவும், करण - मण्डल-सार्व-भौमम् - ஞானேந்த்ரியம், கர்மேந்த்ரியம் இவையிரண் டின் ஸமுதாயத்திற்கு சக்ரவர்த்தியாயும்; मनः - மனதை; कृत्वा - நிலைக்கச் செய்து; तव - உன்னு டைய; कारण-पञ्चकस्य - காரண ப்ரஹ்மவடிவாயுள்ள ஐந்து தேவர்களுடைய; याने - ஆஸநத்தில், निवेश्य - வைத்து; निज - आसनत्वम् - தன்னுடைய ஆஸநமா யிருக்கும் நிலையை; पर्वाणि - பர்வத்தில் செய்கின்ற உத்ஸவங்களை; नयन्ति - அடையுமாறு செய்கின்றனர்.

நிர்தேவயாந பித்ரு யாணவிஹாரமேகே
க்ருத்வா மநः கரணமண்டல ஸார்வபௌமம் ||
யாநே நிவேச்ய தவ காரண பஞ்சகஸ்ய
பர்வாணி பார்வதி நயந்தி நிஜாஸநத்வம் | 28

(பொழிப்புரை) மலையரசன் மகளாம் ஓ அன்னையே! சிலர் தேவமார்க்கம், பித்ருமார்க்கம் என்ற இரண்டு வழிகளிலும் திளைத்து நிற்பவர்களாகவும், ஞானேந்திரி யங்கள், கர்மேந்திரியங்கள் இவையிரண்டின் தொகுதி களுக்குத் தலைமைபூண்ட சக்ரவர்த்திகளாகவும் தங்களு டைய மனதைப் பழக்கி, உன்னுடைய காரணப்ரஹ்ம வடிவாயமைந்த ஐந்து தேவர்களுடைய ஆஸநத்தில் வைத்து, தன்னுடைய ஆஸநமாயிருக்கும் நிலையையும் தோற்றுவித்து, பஞ்சபர்வா போன்ற 'உத்ஸவங்களையும் நடத்துகின்றனர்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

स्थूलासु मूर्तिषु महीप्रमुखासु शंभोः
कस्याश्च नापि तव वैभवमम्ब यस्याः ।
पत्या गिरामपि न शक्यत एव वक्तुं
सापि स्तुता किल मयेति तितिक्षितव्यम् ॥ २९ ॥

(பதவுரை) हे अम्ब - ஓ அன்னையே!, शंभोः - பரமசிவனுடைய; मही - प्रमुखासु - பூமி முதலிய; स्थूलासु - ஸ்தூலமான; मूर्तिषु - வடிவங்களில்; यस्याः - कस्याः-च - ஏதாவதொரு; तव - உன்னுடைய; वैभवम् - பெருமையானது, न - இல்லையோ! गिराम् - சொற்களுக்கு; पत्या - தலைவனாலும், वक्तुम्-अपि - சொல்லுவதற்கும், न-शक्यते-एव - திறமையில்லையன்றோ; सा-अपि - அந்த ஸரஸ்வதியும், मया - என்னால், स्तुता - துதிக்கப்பெற்றாள், इति - என்பதை; तितिक्षितव्यम् - பொறுத்துக்கொள்ள வேண்டும்; किल - அன்றோ!

ஸ்தூலாஸு மூர்திஷு மஹீப்ரமுகாஸு சம்போ:
கஸ்யாஸ்ச நாபி தவ வைபவ மம்ப யஸ்யா: |
பத்யா கிராமபி ந சக்யத ஏவ வக்தும்
ஸாபி ஸ்துதா கில மயேதி திதிக்ஷிதவ்யம் ॥ 29

(பொழிப்புரை) ஓ அன்னையே! பூமி முதலிய ஸ்தூல வடிவங்களிலுள்ள பரமேச்வரனுடைய வடிவங்களில், உன்னுடைய ஏதாவதொரு பெருமையானது இல்லையென்பதை சொற்களின் தலைவியாம் கலைமகளுடைய கணவனும் நான்முகனாலும் சொல்லுவதற்கும் திறமையில்லையன்றோ! அங்ஙனமிருக்க அக்கலைமகளும் என்னால் துதிக்கப் பெற்றாள் என்பதைப் பொருத்தருள வேண்டுவதும் உனது கடமையன்றோ!

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

कालाग्निकोटिरुचिमम्ब षडध्वशुद्धा-
वाप्लावनेषु भवतीममृतौघवृष्टिम् ।
श्यामां घनस्तनतटां सकलीकृतौ च
ध्यायन्त एव जगतां गुरवो भवन्ति ॥ ३० ॥

(பதவுரை) हे अम्ब - ஓ அன்னையே! षडध्व-शुद्धौ - ஆறுவழிகள் என்னும் சுத்தமான நிலையில், अमृत-ओघ - वृष्टिम् - அமுதப் பெருக்கின் பொழிவை; आप्लावनेषु - எங்கும் முழுகியுள்ளவைகளில்; काल-अग्नि-कोटि-रुचिम् - ஊழிக்காலத்திலே தோன்றும் அக்கினியினுடைய பல காந்திகளையுடைய; भवतीम् - உன்னை; सकली-कृतौ-च - ஒன்று சேர்ந்துள்ள வடிவத்திலும், घन - स्तन - तटाम् - நெருக்கமுள்ள நகில்களுடைய ப்ரதேசத்தையுடைய; श्यामाम् - கருமை நிறம் வாய்ந்த திருமேனியை; ध्यायन्त - एव - சிந்தனை செய்தவர்களாகவே; जगताम् - உலகங்களுக்கு, गुरवः - குருக்களாக; भवन्ति - இருக்கின்றனர்.

காலாக்நிகோடிருசிமம்ப ஷடத்வசுத்தா-
வாப்லாவநேஷு பவதீமம்ருதௌக வ்ருஷ்டிம் ।
ச்யாமாம் கநஸ்தநதடாம் ஸகலீக்ருதௌ ச
த்யாயந்த ஏவ ஜகதாம் குரவோ பவந்தி ॥ 30

(பொழிப்புரை) ஓ அன்னையே! ஆறுவகையாயுள்ள சுத்தமான அத்வாக்களில் முழுகியுள்ளவைகளில் அமுதத் தொகுதிகளைப் பொழிகின்றவளும், ஊழிக்கலத்தே பலவனவாகத்தோன்றும் அனற்பிழம்பின் ஒளியெனவிளங்குகின்றவளுமான உன்னை ஒன்று சேர்ந்துள்ள உருவத்தி

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

லும், நெருக்கமுள்ள நகில்களுடைய இருப்பிடத்தையும், கருமை நிறம் கொண்ட திருமேனியையும் எவர்கள் சிந்தனை செய்த வண்ணமிருக்கின்றனரோ, அவர்கள் உலகங்களுக்குத் தலைமை பூண்டுள்ள குருக்களாகவும் இருக்கின்றனர் அன்றோ !

विद्यां परां कतिचिदम्बरमम्ब केचिदा-
नन्दमेव कतिचित् कतिचिच्च मायाम् ।
त्वां विश्वमाहुरपरे वयमामनामः
साक्षादपारकरुणां गुरुमूर्तिमेव ॥ ३१ ॥

(பதவுரை) हे अम्ब - ஓ அன்னையே ! त्वाम् - உன்னை ; कतिचित् - சிலர், पराम् - சிறந்த ; विद्याम् - வித்யை எனவும், केचित् - சிலர் ; अम्बरम् - ஆகாயம் எனவும் ; कतिचित् - சிலர் ; आनन्दम्-एव - ஆநந்த வடிவே எனவும், कतिचित् - சிலர் ; मायां-च - மாயை எனவும், अपरे-வேறு சிலர் ; विश्वम् - உலகம் எனவும், आहुः - சொல்லுகின்றனர், वयं-तु -நாங்களோவெனில் ; साक्षात् - காக்ஷிவடிவாயுள்ள ; अपार-करुणाम् - அளவு கடந்த கருணை வடிவாயமைந்த ; गुरुमूर्तिम् - ஸ்ரீகுரு வின் வடிவாயமைந்த சரீரம் என்று ; आमनामः - சொல்லுகிறோம்.

வித்யாம் பராம் கதிசிதம்பரமம்பகேசி-
தாநந்தமேவ கதிசித் கதிசிச் ச மாயாம் ।
த்வாம் விச்வ மாஹுரபரே வயமாமநாம:
ஸாக்ஷாத பாரகருணாம் குருமூர்த்திமேவ ॥ 31

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பொழிப்புரை) ஓ அன்னையே! உன்னைச் சிலர், சிறந்த வித்தையின் வடிவமெனவும், வேறு சிலர் ஆகாய மெனவும், மற்றும் சிலர், ஆநந்த வடிவமெனவும், ஒரு சிலர் மாயை எனவும், வேறு சிலர் உலகின் வடிவ மெனவும் சொல்லுகின்றனர், ஆயினும், உன்னுடைய தொழும்பர்களான நாங்களோவெனில், அளவு கடந்த கருணை வடிவாயமைந்துள்ள ஸ்ரீகுருவினுடைய திருவுருவே எனச் சொல்லுகிறோம்.

कुवलयदलनीलं बर्बरस्निग्धकेशं
पृथुतरकुचभाराक्रान्तकान्तावलग्नम् ।
किमिह बहुभिरुक्तैस्त्वत्स्वरूपं परं नः
सकलजननि मातः संततं संनिधत्ताम् ॥ ३२ ॥

इति श्रीमहाकविकालिदासविरचितायां श्रीदेवीपञ्चस्तव्यां
चतुर्थोऽम्बास्तवः संपूर्णः

(பதவுரை) सकल जननि - சராசரங்களைத் தோற்று விக்கும்; मातः - ஓ அன்னையே! कुलय-दलनीलम् - கருநெய்தல் மலரின் இதழ்கள்போன்ற நீலநிறம் கொண்டதும், बर्बर - स्निग्ध - केशम् - கரடுமுரடாக நெருக்கமுள்ள தலைமுடியையுடையதும், पृथुतर-कुच-भार-आक्रान्त-कान्त-अवलग्नम् - பெருத்துள்ள கொங்கை களுடைய சுமையினால் வியாபிக்கப்பெற்ற இடையை யுடையதும், परम् - சிறந்ததுமான ; त्वत्-உன்னுடைய; स्वरूपम् - வடிவானது, संततम् - எப்பொழுதும், नः - எங்களுடைய; (எதிரில்) संनिधत्ताम् - நன்கு நிலைத் திருப்பதாக. इह - இவ்விஷயத்தில், बहुभिः - பற்பல ;

CC-0. Arutselvar K. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

उक्तैः - சொற்களினல், किम् - என்ன பிரயோஜனம்? (ஒன்றுமில்லையன்றோ!)

குவலயதல நீலம் பர்பரஸ்நிக்த கேசம்
ப்ருதுதரகுசபார க்ராந்த காந்தாவலக்நம் ।
கிமிஹ பஹுபிருக்தைஸ் த்வத்ஸ்வரூபம் பரம் ந:
ஸகலஜநநி மாதஃ ஸம்ததம் ஸந்நிதத்தாம் ॥ 32

இதி ஸ்ரீ மஹாகவி காளிதாஸ விரசிதாயாம்
ஸ்ரீ தேவீபஞ்சஸ்தவ்யாம் சதுர்த்தஃ
அம்பாஸ்தவ: ஸம்பூர்ண:

(பொழிப்புரை) சராசரங்களைத் தோற்றுவிக்கும் ஓ அன்னையே! கருநெய்தல் மலர்களின் இதழ்களை போன்ற நீலநிறம் வாய்ந்ததும், கரடுமுரடான தலை முடியை யுடையதும், பெருத்துள்ள நகில்களுடைய சுமையினுல் தழுவப்பெற்ற இடையையுடையதும், சிறந்ததுமான உன்னுடைய உருவமானது எப்பொழுதும் எங்களுடைய எதிரில் நன்கு நிலைத்திருப்பதாக. இவ்விஷயத்தில் எனது சொற்களின் மிகுதிகளால் என்ன பிரயோஜனம்? ஒன்றும் இல்லையன்றோ! சிவம்.

இவ்வாறு ஸ்ரீ காளிதாஸர் திருவாய் மலர்ந்தருளிய
ஸ்ரீ தேவீ பஞ்சஸ்தவத்தில் நான்காவது
அம்பாஸதவத்தின் தமிழுரை
இவண் முற்றும்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஸ்ரீ தேவீ பஞ்சஸ்தவீ

ஸகலஜனனீஸ்தவ: (5)

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

अजानन्तो यान्ति क्षयमवशमन्योन्यकलहै-
रमी मायाग्रन्थौ तव परिलुठन्तः समयिनः ।
जगन्मातर्जन्मज्वरमयतमः कौमुदि वयं
नमस्ते कुर्वाणाः शरणमुपयामो भगवतीम् ॥ १ ॥

(பதவுரை) जन्म-ज्वर-मय-तमः-कौमुदि - பிறவியென்னும் பிணியின் வடிவாயமைந்த இருளுக்கு நிலவு போலுள்ள, जगन्मातः - உலகத்தோற்றத்திற்குக் காரணமாயுள்ள ஓ அன்னையே! तव - உன்னுடைய, माया-ग्रन्थौ-மாயையென்னும் முடிச்சில், परि-लुठन्तः-நான்கு புறமும் உழன்று கொண்டிருக்கின்ற, अमी - இந்த, समयिनः - ஸமயிகள், अवशम् - ஸ்வதந்த்ரத்தையிழந்த நிலையை, अजानन्तः-அறியாதவர்களாக, अन्योन्य-कलहैः பரஸ்பரமுண்டாகிய கலஹங்களினல், क्षयम्-அழிவை यान्ति - அடைகின்றனர், वयम् - நாங்கள், ते - உனக்கு नमः - நமஸ்காரத்தை, कुर्वाणाः - செய்பவர்களாக (त्वाम्) - உன்னை, शरणम् - சரணமாக. उपयामः - அடைகிறோம்.

(அவதாரிகை) இச்செய்யுளில் அன்னையினுடைய மாயாசக்தியின் பெருமிதம் விளக்கப் பெறுகின்றது—

அஜாநந்தோ யாந்தி க்ஷயமவசமந்யோந்ய கலஹை-
ரமீ மாயாக்ரந்தௌ தவ பரிலுடந்த: ஸமயிந: ।
ஜகந்மாதர் ஜந்ம ஜ்வரமயதம: கௌமுதி வயம்
நமஸ்தே குர்வாணா: சரணமுபயாமோ பகவதீம் ॥ 1

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பொழிப்புரை) உலகத் தோற்றத்திற்கு காரணமா யமைந்துள்ள ஓ அன்னையே! உன்னுடைய மாயை யென்னும் முடிச்சினுள் அகப்பட்டுக் கொண்டு நாற் புரமும் உழன்று கொண்டுள்ள இந்த ஸமயிகள், தன்னிலை யிழந்து ஒன்றும் அறியாது ஒருவருக்கொருவர் கலஹம் விளைவித்துக்கொண்டு அழிவை நாடிச் செல்கின்றனர். அந்தோ! பிறவிப் பிணியென்னும் இருளுக்கு நிலவு போலுள்ள ஓ அன்னாய்! உனது தொண்டர்களாகிய நாங்களோ, நமஸ்காரம் செய்தவண்ணம் உன்னுடைய கஞ்ஜ மலரைத் தஞ்சமடைகின்றோம்.

ஸமயிகள்—சக்தி மதத்தைத் தழுவியவர்கள், உபா ஸனைகளுடைய உட்கருத்தை ஒரு சிறிதும் அறியாது வெளிப்படையாக - ஆடம்பரமாக - உபாஸனை செய்து கொண்டு ஒருவருக்கொருவர் நானே சிறந்தவன், எனது வழியே சாலச் சிறந்தது, என வீண் பெருமைகளுக்காக காலத்தை வீணே செலவழித்து சண்டையிடுகின்றனர்.

இவர்கள் இவ்விதம் உன்னுடைய உண்மை நிலையை யுணராது, உனது மாயையின் வசமாகத் தங்களுடைய சக்திகளையுமிழந்து நிற்கின்ற காரணத்தாலன்றோ. ஆகவே உன்னுடைய தொண்டர்களான நாங்களோ, இவர்களைப் போல் சண்டை போடுவதில் காலத்தைச் செலவிடாது, எப்பொழுதும் உனது கஞ்ஜமலராம் திருவடிகளைத் தஞ்சமடைகின்றோம்.

தன்னிலை - ஸ்வதந்திரம்-அதையிழந்தவர்கள். உபா ஸனை-ஆராதனை - மாயை - அன்னையினுடைய சக்தியின் பெருமிதம், இதுவே உலகம் தோன்றக் காரணமா யிருப்பது.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

वचस्तर्कागम्यस्वरसपरमानन्दविभव-
प्रबोधाकाराय द्युतितुलितनीलोत्पलरुचे ।
शिवस्याराध्याय स्तनभरविनम्राय सततं
नमस्तस्मै कस्मैचन भवतु मुग्धाय महसे ॥ २ ॥

(பதவுரை) वचः-तर्क-अगम्य-स्वरस-परम-आनन्द-विभव-प्रबोध-आकाराय -சொல், ஊஹம் இவைகளுக்குப் புலனு காத இனிமையான சிறந்த ஆநந்தத்தினுடைய நிறைவோடு கூடிய உணர்வின் அறிகுறியின் பொருட்டும், द्युति-तुलित-नील-उत्पल-रुचे -ஒளியினுல் துல்யமாகச் செய்யப்பெற்ற கருநெய்தல் மலரின் காந்தியையுடையதும், स्तन-भर-विनम्राय -ஈகில்களுடைய அமைப்பினுல் நன்கு வணங்கியுள்ளதும், शिवस्य - பரமசிவனுடைய ஆராதனைக்குரியதும், मुग्धाय - அழகியதுமான, तस्मै - அச்சிறப்பு வாய்ந்த, कस्मैचन - சொற்களால் சுட்டிக்காட்டமுடியாத, महसे - ஒளியின் பொருட்டு, सततम् - எப்பொழுதும், नमः - நமஸ்காரம், भवतु - இருப்பதாக.

கவி அன்னையினுடைய வனப்பை இச் செய்யுளில் உருவகம் செய்கிறார்:—

வசஸ்தர்காகம்யஸ்வரஸ பரமாநந்தவிபவ-
ப்ரபோதாகாராய த்யுதிதுலித நீலோத்பலருசே ।
சிவஸ்யாராத்யாய ஸ்தநபர விநம்ராய ஸததம்
நமஸ்தஸ்மை கஸ்மைசந பவது முக்தாய மஹஸே ॥

(பொழிப்புரை) சொற்கள், சிந்தனை இவைகளுக்குப் புலனுகாததும், ஸமரஸ வடிவாயமைந்துள்ளதும்,

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

சிறந்த ஆநந்தம் நிறைந்ததும், உணர்வின் உறைவிடமாயுள்ளதும், ஒளியால் நிர்மலமாயுள்ளதும், கருநெய்தல் காந்தியே போன்றதும், நகில்களின் சுமைகளால் நன்கு வணங்கியதும், சிவனுடைய ஆராதனைக்குரியதுமாய் அமைந்துள்ளதும், ஒளிப்பிழம்பாயுள்ளதும், இவ்விதமெனச் சுட்டிக்காட்ட முடியாததுமான அழகிய ஒரு வஸ்துவின் பொருட்டு எப்பொழுதும் நமஸ்காரம் இருப்பதாக.

இச் செய்யுளின் முதலடியில் உபநிஷத்துக்களுடைய கருத்தமைந்துள்ளதைக் காணலாம்— यतो वाचो निवर्तन्ते। अप्राप्य मनसा सह - யதோ வாசோ நிவர்தந்தே-எக்காரணத்தால் மநதோடுகூட அடைய முடியாது சொற்கள் திரும்புகின்றனவோ என்ற கருத்து. 'வசஸ்தர்காகமய:' என்றதால் விளக்கப்பெற்றது". ஸ்வரஸ பரமாநந்த-என்றதால் ஸாமரஸ்ய வடிவாயுள்ள நிலையை, "आनन्दो ब्रह्मेति व्यजानात्। आनन्दाद्ध्येव खल्विमानि भूतानि जायन्ते- ஆனந்தோ ப்ரஹ்மேதி வ்யஜாநாத், ஆநந்தாத்யேவ கல்விமாநி பூதாநி ஜாயந்தே" ஆநந்தத்தையே ப்ரஹ்மம் என அறியவேண்டும்; ஆநந்தத்திலிருந்து இந்த ஐம்பெரும் பூதங்களும் உண்டாகின்றன" என்பன போன்ற வாக்யங்கள் விளக்குகின்றன.

'சிவஸ்யாராத்யாய' என்றது சிவனுடைய ஆராதனைக்குரியவள் என்றது கொண்டு அன்னையின் பெருமை அளவிடமுடியாது சிறந்து விளங்குகின்றது எனவும் [illegible] பெறும். அதாவது சக்தியின்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

வடிவாயமைந்த அன்னையே உலகம் தோன்றச் செய்ய, அப்பனுக்குத் துணையாயிருப்பவள் என்பதும் வலியுறுத்தப் பெறுகின்றது. அதாவது சக்தியின் துணையின்றி சிவன் உலகைப் படைப்பதற்குத் திறமையற்றவன் எனவுமாம்.

अनाद्यन्ताभेदप्रणयरसिकापि प्रणयिनी
शिवस्यासीर्यत्त्वं परिणयविधौ देवि गृहिणी ।
सवित्री भूतानामपि यदुदभूः शैलतनया
तदेतत् संसारप्रणयनमहानाटकसुखम् ॥ ३ ॥

(பதவுரை) हे देवि - ஓ அன்னையே! अनादि - अन्त - अभेद - प्रणय-रसिक-अपि - முதல் முடிவு இவைகளின் ஒன்றிய நிலையிலுண்டான வேட்கையில் திளைத்திருப்பினும், त्वम् - நீ, शिवस्य - பரமசிவனுடைய, परिणय - विधौ - விவாஹ காலத்தில், प्रणयिनी - ப்ரியமுள்ள, गृहिणी - குடும்பத்தலைவியாக, आसीः - இருந்தாய் அன்றோ! यत् - என்பது, யாதொன்று உண்டோ, तत् - அதுவும், भूतानाम् - சராசரங்களுடைய, सवित्री - अपि - தோற்றத்திற்கு அன்னையாயிருந்த பொழுதிலும், शैल-तनया - மலையரசன் மகளாக, उदभूः - தோன்றினையன்றோ! यत् - என்பது யாதொன்று உண்டோ, तत् - அதுவும்; एतत् - இந்த, संसार-प्रणयन-महा-नाटक-सुखम् - ஸம்ஸாரமென்னும் பிரியமாயுள்ள மஹாநாடகத்தினுடைய ஸுகத்தின் பொருட்டேயன்றோ!

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(அ-கை) இங்கு உலகத்தின் தோற்றம், அழிவு இக் காரியங்களில் ஸதாசிவனோடு அன்னை இணைந்துள்ளதைக் கவி உருவகம் செய்கிறார்:—

அநாத்யந்தா பேதப்ரணய ரஸிகாபி ப்ரணயிநீ
 சிவஸ்யாஸீர்யத் த்வம் பரிணயவிதௌ தேவி
 க்ருஹிணீ ।
ஸவித்ரீ பூதாநாமபி யதுதபூ: சைலதநயா
 ததேதத் ஸம்ஸாரப்ரணயநமஹா நாடகஸுகம் ॥3॥

(பொழிப்புரை) ஓ அன்னாய்! ஆதி, அந்தம் இவை களுடைய ஒன்றிய நிலையிலே தோன்றிய வேட்கையிலே திளைத்திருப்பினும் நீ சிவனுடைய மணவினையின் பொழுது அன்பு நிறைந்த குடும்பத் தலைவியானாய். இச் சராசரங்களைத் தோற்றுவிக்க மலையரசன் மகளாகத் தோன்றினாய் அன்றோ! இவ்விரண்டு பிறவிகளும் ஸம்ஸாரமென்னும் பிணைப்போடு கூடிய நாடகத்தின் ஸுகத்தின் நிமித்தமாயுள்ளதன்றோ!

அன்னை உலத்தின் தோற்றம், அழிவு இவைகளில் ஸதாசிவனோடு ஒன்றிய நிலையிலிருக்கும் பொழுது அவனுடைய இணைப்பால் குடும்பத் தலைவி- அதாவது ஆதித்தம்பதி என அழைக்கப் பெறுகின்றாள்; மறுபடியும் மலையரசன் மகளாகத் தோன்றி இச்சராசரங்களுடைய தோற்றத்திலே திளைத்து ஸம்ஸாரமென்னும் மஹா நாடகத்தில் தோன்றும் இன்பத்தை நுகருகின்றாய் அதாவது இவ்வுலகை ஸதாசிவனுடைய துணைகொண்டு தானே படைத்து அவைகளினூடே பிரவேசித்து உலக வடிவாய் அன்னை காக்ஷியளிக்கின்றாள் என்பது கருத்து.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

तत्सृष्ट्वा - தத்ஸ்ருஷ்ட்வா - அதைப் படைத்து, तदेवानुप्राविशत् - ததேவ அநுப்ராவிசத் - அதனிடத்தே பின் தொடர்ந்து" என்ற உபநிஷத்தின் வாக்யமும் இக் கருத்தை வலியுறுத்தும்.

இச் செய்யுளை ஸ்ரீ காமேச்வரஸூரி தமது ஸௌந்தர்யலஹரியின் உரையிலே மேற்கோளாகக் காட்டுவர்:-

பவதேவனுக்குத் துணைவியாயிருக்கும் நிலையை அன்னை அடைந்துள்ள காரணத்தால் அவள் ஸம்ஸாரியாகவுமிருக்கின்றாள். அன்னை ஆதியும் அந்தமுமில்லாது ஒன்றிய ப்ரணயத்தை-ஊடலை-ரஸிக்கின்ற மனைவியாக மறுபடியும் பரமசிவனுடைய பரிணய காலத்தில் தோன்றினாள். உலகைத் தோற்றுவிக்கும் திறமையுள்ளவளாயிருந்த பொழுதிலும் மலையரசன் மகளாகவும் தோன்றினாள். இவை யாவும் :ஸம்ஸாரமென்னும் ப்ரணய மஹாநாடகமன்றோ! எனச் சொல்லுவர்.

ब्रुवन्त्येके तत्त्वं भगवति सदन्ये विदुरसत्
परे मातः प्राहुस्तव सदसदन्ये सुकवयः ।
परे नैतत्सर्वं समभिदधते देवि सुधिय-
स्तदेतत् त्वन्मायाविलसितमशेषं ननु शिवे ॥ ४ ॥

(பதவுரை) हे भगवति ! - அறுவகை ஐச்வர்யங்களும் நிறைந்துள்ள ஓ அன்னையே! एके - சிலர், तव - உன்னுடைய, तत्त्वम् - உண்மை நிலையை (மூலப்ரக்ருதியென, ब्रुवन्ति - சொல்லுகின்றனர்) अन्ये - வேறு சிலர், सत् - ஸத்தையெனவும், विदुः -உணருகின்றனர்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

हे मातः! - ஓ அன்னையே! **परे** - மற்றுஞ்சிலர், **असत्** - பொய்யான தோற்றமென; **प्राहुः** - சொல்லுகின்றனர். **सुकवयः** - அழகிய கவிதைகளைப் புனைகின்ற பண்டிதர்களோ, **सद्-असत्** - ஸத்தையும், அஸத்தையும் கலந்துள்ளதாக; **प्राहुः** - சொல்லுகின்றனர். **हे देवि!** - ஒளியுடன் இலங்கும் ஓ அன்னையே! **परे** - பிறிதொரு சார்புடைய; **सुधियः** - தெள்ளிய மதியையுடைய மஹான்கள், **एतत्-सर्वम्** - இவைகள் யாவும், **न** - ஒன்றுமில்லை, **समभिदधते** - (என) அசைக்கமுடியாத உறுதியுடன் சொல்லுகின்றனர். **हे शिवे** - ஓ மங்களவடிவே! **तत्-एतत्** - இவையாவும், **त्वत्-माया-विलसितम्** - உன்னுடைய மஹாமாயையின் லீலையே; **ननु** - அன்றோ!

(அ-கை) இச்செய்யுளில் பல்வேறு கொள்கைகளைக் கொண்ட அன்னையின் நிலை விளக்கப் பெருகின்றது:—

ப்ருவந்த்யேகே தத்வம் பகவதி ஸதந்யே விதுரஸத்
பரே மாதః ப்ரார்ஹுஸ்தவ ஸதஸதந்யே ஸுகவயః।
பரே நைதத்ஸர்வம் ஸம்பிததததே தேவி ஸுதியః
ததேதத் த்வந்மாயா விலஸிதமசேஷம் நநு சிவே ॥4

(பொழிப்புரை) ஓ அன்னாய்! சிலர் உன்னுடைய உண்மை நிலையை மூலப்ரக்ருதியின் வடிவமெனச் சொல்லுகின்றனர். வேறு சிலர், ஸத்தை எனவும் உணருகின்றனர். மற்றும் சிலர் 'அஸத்' பொய்யான தோற்றமெனச் சொல்லுகின்றனர். அழகிய கவிதைகளைப் புனைகின்ற பண்டிதர்களோ, ஸத்-உண்மை, அஸத்-பொய் இவ்விரண்டும் கலந்துள்ளன எனச் சொல்லுகின்றனர்.

CC-0 Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஒளியுடன் இலங்கும் அன்னாய்! இவைகள் யாவும் ஒன்றும் இல்லையென உறுதியுடன் வேறு சில நுண்மதியுள்ளவர்கள் சொல்லுகின்றனர். ஓ மங்களவடிவே! இன்னோரன்ன பலபடியான கொள்கைகள் யாவும் உன்னுடைய வலியதான மாயையின் லீலையேயன்றோ!

ஸத்தாகவும், அஸத்தாகவும், இவ்விரண்டும் இணைந்துள்ளதும், ஆயினும் இவை ஒன்றுமே இல்லை எனவும் அவரவர்கள் தத்தம் மதியின் வலிமைக்குகந்தவாறு அன்னையைக் காணுகின்றனர், இவ்விதம் அவர்கள் நினைப்பதும் அன்னையாம் உன்னுடைய மாயையின் பெருமையன்றோ எனக்கவி உத்பிரேக்ஷை செய்கிறார்.

இச் செய்யுளில், ततो वै सदजायत-ததோவை ஸதஜாயத - அதனிடமிருந்து ஸத்தை உண்டாகியது, असद्वा इदमग्र-आसीत् - அஸத்வா இதமக்ர ஆஸீத்-இந்த அஸத்தல்லவோ முதலில் உண்டாகியது, तम आसीत्-தம ஆஸீத் - இருளே இருந்தது என்பன போன்ற உபநிஷத் வாக்யங்களுடைய கருத்தையும் காணலாம்.

लुठत् गुञ्जाहारस्तनभरनमन्मध्यलतिका-

मुदञ्चद्घर्माम्भःकणगुणितवक्त्राम्बुजरुचम् ।

शिवं पार्थत्राणप्रवणमृगयाकारगुणितं

शिवामन्वगयान्तीं शबरमहमन्वेमि शबरीम् ॥ ५ ॥

(பதவுரை) लुठत्-गुञ्जा-हार-स्तन-भर-नमन्-मध्य-लतिकाम् - துவளுகின்ற குந்துமணிகளாலான மாலைகளோடு கூடிய நகில்களால் வணங்கிய கொடியெனத்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

திகழும் இடையையுடையவளும்; उदञ्चद्-घर्म-अम्भः-कण-गुणित वक्त्र-अम्बु-रुचम् - வெளியே அரும்பிய வியர்வை ஜலத்தின் திவலைகளினால் இருமடங்காகச் செய்யப் பெற்ற தாமரை மலரின் காந்தியை யுடையவளும், पार्थ त्राण-प्रवण-मृगया - आकार - गुणितम् - அர்ஜுனனைக் காப்பதற்குப் பற்றுக்கொண்டு வேடுவன் வடிவம் கொண்டு நாணையேந்திய, शबरम्-வேடுவனுருவெடுத்த, शिवम् - பரமசிவனை, अन्वग्-यान्तीम् - பின்தொடருகின்றவளும், शिवाम् - மங்கள வடிவாயுள்ளவளுமான, शबरीम् - வேட்டுவச்சியை, अहम् - நான், अन्वेमि - பின் தொடருகிறேன்.

(அ-கை) இச் செய்யுளில் அன்னை பரமசிவனோடு கூடச் செய்த லீலாவிபூதிகள் சொல்லப்பெறுகின்றன—

லுடத் குஞ்ஜா ஹாரஸ்தநபரநமந் மத்ய லதிகா—
முதஞ்சத்கர்மாம்பஃ கணகுணித வக்த்ராம்புஜருசம் ।
சிவம் பார்த்தத்ராண ப்ரவணம்ருகயா காரகுணிதம்
சிவாமந்வக் யாந்தீம் சபரமஹ மந்வெமி சபரீம் ॥ 5

(பொழிப்புரை) பண்டு, பரமசிவன் பார்த்தனைக் காக்க, வேடுவனுருவம் கொண்டு, கானகம் செல்லுங்கால் அவனைப் பின் தொடர்ந்து அன்னையும், வேட்டுவச்சியின் வடிவம் கொண்டு துணை சென்ற அவளது உருவத்தைக் கவி இங்கு உருவகம் செய்கிறார் — குந்துமணிகளாலான மாலைகளினால் துவளுகின்ற நகில்களுடைய சுமையினால் சிறிது வணங்கிய இடையையும், வெளியே அரும்பிய வியர்வையின் திவலைகளால் இருமடங்காக வனப்புடன் விளங்கும் தாமரைமலர்போன்ற திருமுகத்தோடு

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

மங்களமே யுருவாய்த்திகழுகின்ற வேடுவச்சியின் வடிவம் கொண்டு, அப்பனைப் பின்தொடருகின்ற அன்னையை நானும் பின் தொடருகிறேன் என்பது கவியினுடைய அபிப்பிராயமாகும்.

இச் செய்யுளில் கண்ட கருத்துக்களை மஹாகவி பாரவி தமது கிராதார்ஜுநீயம் என்ற மஹாகாவியத்தில் விஸ்தாரமாக வர்ணித்துள்ளதை அங்கு கண்டு தெரிந்து கொள்ளலாம்.

मिथः केशाकेशिप्रघननिधनास्तर्कघटनाः
बहुश्रद्धाभक्तिप्रणयविषयाः शास्त्रविधयः ।
प्रसीद प्रत्यक्षीभव गिरिसुते देहि शरणं
निरालम्बं चेतः परिलुठति पारिप्लवमिदम् ॥ ६ ॥

(பதவுரை) तर्क - घटनाः - தர்க்க சாஸ்த்ரங்களில் திளைத்துள்ளவர்கள், मिथः - ஒருவருக்கொருவர், केशा-केशि - குடுமியைப் பிடித்துக்கொண்டு, प्रघन - निधनाः - யுத்தம் செய்து மடிகின்றனர். शास्त्र - विधयः - தர்ம சாஸ்த்ரங்களுடைய அநுஷ்டாநங்கள, बहु-श्रद्धा-प्रणय-विषयः- மிகுந்த சிரத்தை, பக்தி, விச்வாஸம் இவைகளுக்கு இலக்கானவைகள். हे गिरिसुते-ஓ மலையரசன் மகளே! அன்னையே! पारि-प्लवम् - சஞ்சலத்தன்மை வாய்ந்த; इदम् - இந்த; चेतः - மநமானது; निरालम्बम् - ஆதாரவற்றதாக, परि - लुठति - பலவகையாக உழலுகின்றது; प्रसीद - பொருத்தருள்க, प्रत्यक्षी-भव - (என்னுடைய) எதிரில் காக்ஷி வடிவாயிருப்பாயாக; शरणम्- அடைக்கலத்தை. देहि - கொடுப்பாயாக.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(அ-கை) சாஸ்த்ரங்களைக் கற்று வாதப்ரதிவாதம் செய்து கொண்டிருப்பவர்களுக்கு அன்னையின் அருள் கிடைப்பதரிது என இங்கு சொல்லப் பெறுகின்றது:—

மித: கேசாகேசி ப்ரதந நிதநாஸ்தர்க்ககடநாஃ
பஹுச்ரத்தா பக்திப்ரணயவிஷயா: சாஸ்த்ர
விதய: ।
ப்ரஸீத ப்ரத்யக்ஷீபவ கிரிஸுதே தேஹி சரணம்
நிராலம்பம் சேதஃ பரிலுடதி பாரிப்லவமிதம் ॥ 6 ॥

(பொழிப்புரை) மலையரசன் மகளாம் ஓ அன்னையே! தர்க்க சாஸ்த்ரங்கள் போன்றவைகளைக் கசடறக்கற்று, அவைகளில் திளைத்துள்ளவர்கள் ஒருவருக்கொருவர் குடுமியைப் பிடித்துக்கொண்டு சண்டை செய்யட்டும். தர்மசாஸ்த்ரங்களுடைய அநுஷ்டாநங்களோ, மிகுந்த சிரத்தை, பக்தி, விச்வாஸம் இவைகளின் இலக்காயமைந்துள்ளன. ஆதலின் சஞ்சலத்தன்மை வாய்ந்த இந்த மனமானது, ஆதரவற்று பலபடியாக உழன்று கொண்டிருக்கின்றது. எனவே, என்னைப் பொருத்தருள்க. என்னுடைய முன்னிலையிலே காக்ஷிவடிவாயிருப்பாயாக. என்னை உன்னிடம் அடைக்கலமாகவும் செய்து கொள்வாயாக.

शुनां वा वह्नेर्वा खगपरिषदो वा यदशनं
कदा केन क्वेति क्वचिदपि न कश्चित् कलयति ।
अमुष्मिन् विश्वासं विजहिहि ममाह्राय वपुषि
प्रपद्येथाश्चेतः सकलजननीमेव शरणम् ॥ ७ ॥

(பதவுரை) कदा - எப்பொழுது ; केन - ஏதோ ஒரு காரணத்தால்; க் - எங்காவது ; शुनां-वा - நாய்களுக்கா

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

வது ; वह्नेः वा - நெருப்புக்காவது ; खग-परिषदः-वा - கழுகுக்கூட்டங்களுக்காவது, यत् - யாதொரு (சரீரமானது) ; अशनम् - உணவாக ; भवति - இருக்கின்றதோ ; तस्मिन् - அவ்விஷயத்தில் ; कश्चित् - ஒருவனும், क्वचित् - ஒரு சிறிதும் ; न-कलयति - நினைப்பதில்லை ; हि - இதுவும் விந்தையன்றோ ! हे चेतः - ஓ மநமே ! अमुष्मिन् - இந்த ; मम - என்னுடைய ; वपुषि - சரீரத்தில் ; अह्नाय - விரைவில் ; विश्वासम् - அபிமாநத்தை ; विजहि - அடியோடு அகற்றுவயாக ; सकलजननीम्-एव - எல்லா சராசரங்களுக்கும் அன்னையாயிருப்பவளே, शरणम् - அடைக்கலமாக, प्रपद्येथाः - அடைவாயாக.

(அ-கை) இச்செய்யுளில் இச்சரீரம் நிலையற்றது, இது நாய்களுக்காவது, கழுகுகளுக்காவது இரையாவது என்பதை ஒருவனும் சிந்தனை செய்வதில்லை. இந்நிலையைக் கவி தனது மனதிற்கு அறிவுறுத்துகிறார்—

சுநாம் வா வஹ்நேர் வா ககபரிஷதோ வா யதசநம்
கதா கேந க்வேதி க்வசிதபி நகஶ்சித் கலயதி ।
அமுஷ்மிந் விச்வாஸம் விஜஹி ஹி மமாஹ்நாய வபுஷி
ப்ரபத்யேதாஶ்சேதஃ ஸகலஜநநீமேவ சரணம் ॥ 7 ॥

(பொழிப்புரை) இச்சரீரமானது, எப்பொழுது ஏதோ ஒரு காரணத்தால், எங்கோ நாய்களுக்கோ, அன்றி கழுகுக் கூட்டங்களுக்கோ உணவாக யமையத்தக்கது என்பதை ஒரு பொழுதும், ஒருவனும் சிந்தனை செய்வதில்லை. ஆதலால் ஓ மநமே, இச்சரீரத்திலுள்ள ஆசையை விரைவில் விடுவாயாக. இவ்வாறு ஆசையை யகற்றி இச்சராசரங்களுக்கு ஒரே தலைவியாம் அன்னையைச் சரணமடைவாயாக.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

சரீரம் நிலையற்றது. எப்பொழுது, எங்கே, எவ்விதம் அழியும் என்பதைச் சொல்ல முடியாது. மற்றும நாய்களுக்கோ, கழுகுகளுக்கோ உணவாகத் தக்கது. இவ்விதமுள்ள சரீரத்தைச் சதமென நினைத்து, மனிதர்கள் ஏமாறுகின்றனர். ஓ மநமே! நீ இவ்விஷயத்தில் ஏமாற்றமடைய வேண்டாம். இவ்வுலகங்கள் அனைத்தையும் தோற்றுவிக்கின்ற அன்னையை விரைவில் சரணமடைவாயாக என்பது கவியினுடைய அபிப்ராயமாகும்.

तटित्कोटिज्योतिर्द्युतिदलितषड्ग्रन्थिगहनं
प्रविष्टं स्वाधारं पुनरपि सुधावृष्टिवपुषा ।
किमप्यष्टत्रिंशत्किरणसकलीभूतमनिशं
भजे धाम श्यामं कुचभरनतं बर्बरकचम् ॥ ८ ॥

(பதவுரை) तटित्-कोटि-ज्योति-द्युति-दलित-षड्-ग्रन्थि-गहनम् - மின்னல்களுடைய பல ஒளியின் காந்தியினால், பிளக்கப் பெற்ற ஆறு முடிச்சுக்களுடைய ஸமூஹத்தையுடையதும்; पुनः - अपि - மறுபடியும்; सुधा-वृष्टि-वपुषा-அமுதத்தைத் பொழிகின்ற சரீரத்தோடு; अष्ट-त्रिंशत्-किरण-सकली-भूतम् - முப்பத்தெட்டு கிரணங்களுடைய தொகுதிகளால் பரவியுள்ளதும்; कुच-भर-नतम्- நகில்களுடைய சுமையினால் வணங்கியதும், बर्बर-कचम् - கரடு முரடான தலைமுடியையுடையதும்; श्यामम् - கருமை நிறம் வாய்ந்ததுமான; किम्-अपि - சொற்களுக்கெட்டாத ஏதோ ஒரு; धाम ஒளியை; अनिशम् - எப்பொழுதும், भजे - (நான்) ஸேவிக்கிறேன்.

CC-0 Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(அ-கை) இச் செய்யுளில் அன்னையின் அவ்யாஜமான ஒளி வர்ணிக்கப் பெறுகின்றது:—

தடித்கோடி ஜ்யோதி த்யுதி தளித ஷட்க்ரந்தி கஹநம்
ப்ரவிஷ்டம் ஸ்வாதாரம் புநரபி ஸுதாவ்ருஷ்டி வபுஷா
கிமப்யஷ்டத்ரிம்சத் கிரணஸகலீபூதமநிசம்
பஜே தாம ச்யாமம் குசபரநதம் பர்பரகசம் ॥ 8 ॥

(பொழிப்புரை) பல வர்ணங்கள் தோய்ந்து ஒன்று திரண்ட ஒளியோடு ஆறு க்ரந்திகளையும் பிளந்து கொண்டு, தனது ஆதாரத்தையடைந்து, மறுபடியும் அமுதத்தைப் பொழிகின்ற சரீரத்தோடு எப்பொழுதும் முப்பத்தெட்டு கதிர்களால் பரவியுள்ளதும். நகில்களுடைய சுமையினுல் வணங்கியதும், கரடுமுரடான தலைமுடியையுடையதும், கருமை நிறம் தோய்ந்ததும், மனம், சொல் இவைகளுக்குப் புலனுகாததுமான ஒரு ஒளியை நான் ஸேவிக்கிறேன்.

இச் செய்யுளில் அன்னையை அமுதத்தைப் பொழிகின்றவளாகவும், பல வர்ணங்கள் தோய்ந்த ஒளியின் வடிவாகவும் கவி உருவகம் செய்கிருர்.

चतुष्पत्रान्तःषड्दलपुटभगान्तस्त्रिवलय-
स्फुरद्विद्युद्वह्निद्युमणिनियताभद्युतियुते ।
षडश्रं भित्वादौ दशदलमथ द्वादशदलं
कलाश्रं च द्व्यश्रं गतवति नमस्ते गिरिसुते ॥ ९ ॥

(பதவுரை) चतुः - पत्र-अन्तः- षड् - दल - पुट - भान-अन्तः- त्रिवलय-स्फुरद् - विद्युद् - वह्नि - द्युति - मणि - नियत - आभ - द्युति - युते - நான்கு இதழ்களுடைய உள்ளே

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ஆறு இதழ்கள் கொண்ட மொக்கின் வடிவாய மைந்து அதனுள்ளே மூன்று வலயங்களாக ஒளிரு கின்ற மின்னல், அக்நி, ஸூர்யன் இவைகளுடைய இயற்கையான கந்தியே போன்று நிலைத்த ஒளி யென்னும் கொடியே போன்ற அன்னையே! षड्-अश्रम् - ஆறுகோணம் கொண்ட கமலத்தை : आदौ- முதலில்; भित्वा-பிளந்து கொண்டு; अथ - பிறகு; दश-कमलम् - பத்து தளங்கள் கொண்ட கமலத்தையும்; द्वादश-कमलम् - பன்னிரண்டு தளங்கள் கொண்ட கம லத்தையும்; कला-अश्रं-च-பதினாறு தளங்கள் கொண்ட கமலத்தையும்; द्वि-अश्रम्-இரண்டு தளங்கள் கொண்ட கமலத்தையும் (பிளந்து கொண்டு); गतवति - அடைந் துள்ள பொழுது; हे गिरिसुते! ஓ மலையரசன் மகளே; ते - உனக்கு; नमः - நமஸ்காம்.

சதுஷ்பத்ராந்தஃ ஷட்சளபுட பகாந்தஸ்த்ரிவலய-
ஸ்புரத்வித்யுத் வஹ்நி த்யுமணி நியதாபத்யுதியுதே
ஷடச்ரம் பித்வாதௌ தசதளமத த்வாதசதளம்
கலாச்ரம் ச த்வ்யச்ரம் கதவதி நமஸ்தே கிரிஸுதே॥

(பொழிப்புரை) நான்கு இதழ்களுக்குள்ளே ஆறு தளங்கள் கொண்ட மொக்கின் வடிவாயமைந்து, அதனுள்ளே மூன்று வலயங்களாக ஒளிருகின்ற மின்னல், அக்நி, ஆதவன் இவைகளுடைய இயற்கையாயுள்ள காந்தியே போன்று நிலைத்த ஒளியென்னும் கொடியே போன்றவளும், ஆறு கோணங்கள் கொண்ட கமலத்தை முதலில் பிளந்து கொண்டு, பிறகு பத்து, பன்னிரண்டு, இரண்டு என் முறையே இம்மூன்று கமலங்களையும்

CC-0. Sakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

பிளந்து கொண்டு சென்று உனதிருப்பிடத்தில் உறைந்துள்ள ஓ அன்னையே! உனக்கு நமஸ்காரம்.

மற்றும், ஸௌந்தர்யலஹரியினுடைய உரையாசிரியருள் சிறந்தவரான ஸ்ரீலக்ஷ்மீதராசார்யர் தொண்ணூற்று ஒன்பதாவது செய்யுளுக்கு உரை வகுக்கும் பொழுது, இச்செய்யுளை மேற்கோளாகக் காட்டி மிகவும் விஸ்தாரமாக பொருள் விளக்கம் கொடுத்துள்ளார். அவ்வுரையினைச் சுருக்கமாக இங்கு வாசகர்களுக்கு விளக்கப் பெறுகின்றது.—

நான்கு தளங்கள் கொண்டது ஆதார கமலம். ஆறு தளங்கள் கொண்டது ஸ்வாதிஷ்டானம் அதனுள்ளே இயங்குவது. அந்த ஸ்வாதிஷ்டானத்தினுடைய தளங்களின் வடிவாயமைந்துள்ள முக்கோணங்கள் என்பதை இங்கு "புடபக" என்ற சொல்லால் சுட்டப் பெற்றது. மணிபூரம் முதலிய நான்கு சக்ரங்களுக்கும் மூலாதாரமே ஆதாரமாயிருப்பதும் ஆதலால் இங்கு முக்கோணத்தின் தன்மை சொல்லப் பெற்றது. ஆகவே முக்கோணத்தின் நடுவே மூன்று மூன்று வலயமாயுள்ள மூன்று க்ரந்திகளும், ஸ்வாதிஷ்டாநம், அநாஹதம் ஆஜ்ஞை இவைகளுடைய எல்லையில், அக்நி, ஸூர்யன், ஸோமன் இவர்களுடைய வடிவாகத் திகழுகின்ற ருத்ரக்ரந்தி, விஷ்ணுக்ரந்தி, ப்ரஹ்மக்ரந்தி என்ற மூன்று க்ரந்திகளின் வடிவாக அவ்விடத்தில் ஒளியுடன் இருப்பவள் என்பதும் கிடைக்கப் பெறும்.

இங்கு 'வித்யுதஃ-மின்னல்' என்ற சொல் கணக்கற்ற மின்னல்களின் ஒளியே போன்ற ஒளியைச் சுட்டும். ஆகவே அந்த மின்னல்களுடைய காந்தி போன்று அன்னை

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

இருப்பவள் என்பதுமாகும். அதாவது நிலைத்த மின்னல் கொடியே போன்று விளங்குபவள் அன்னை என்பது ஸாரம்.

மற்றும் ஆஜ்ஞையின் முடிவிலே ப்ரஹ்மக்ரந்தியைப் பிளந்து செல்லும் பொழுது மின்னல் கொடியின் காந்தியோடும், ஸ்வாதிஷ்டானத்தின் எல்லையிலே ருத்ர க்ரந்தியைப் பிளந்து செல்லும்பொழுது அக்நியை நிகர்த்த காந்தியோடும், அநாஹதத்தின் எல்லையிலே விஷ்ணு க்ரந்தியைப் பிளந்து கொண்டு செல்லும் பொழுது ஸூர்யனுடைய காந்தியையும் கொண்டு அன்னை விளங்குகின்றாள் என்பதையும் உணரவேண்டும்,

மூலாதாரத்தோடு கூடிய ஆறுதளங்கள் கொண்ட ஸ்வாதிஷ்டானத்தையும், பிறகு பத்து இதழ்கள் கொண்ட மணிபூரத்தையும், பன்னிரண்டு தளங்கள் கொண்ட அநாஹதத்தையும், பதினாறு தளங்கள் கொண்ட விசுத்தியையும், இரண்டு தளங்கள் கொண்ட ஆஜ்ஞையையும் முறையே பிளந்து கொண்டு, ஆயிரம் தளங்கள் கொண்ட ஸஹஸ்ராரகமலத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்ற மலையரசன் மகளாம் ஓ அன்னையே! உனக்கு நமஸ்காரம் என்பதும் இச் செய்யுளின் திரண்ட ஸாரமாகும்.

कुलं केचित् प्राहुर्वपुरकुलमन्ये तव बुधाः
परे तत्संभेदं समभिदधते कौलमपरे ।
चतुर्णामप्येषामुपरि किमपि प्राहुरपरे
महामाये तत्त्वं तव कथममी निश्चिनुमहे ॥ १० ॥

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பதவுரை) हे महामाये! ஓ மஹாமாயே! तव - உன்னுடைய; वपु; - சரீரத்தை; केचित् - சிலர், कुलम् - நீலம் முதலிய வர்ணங்களுடைய தொகுதியென; प्राहुः - சொல்லுகின்றனர்; अन्ये - மற்றுஞ் சிலர்; बुधाः - அறிஞர்கள்; अकुलम् - நீலம் முதலிய வர்ணங்களுடைய தொகுதியற்றவையென - (சொல்லுகின்றனர்) परे - மற்றவர்கள் - तत् संभेदम् - முன்னர் கூறிய அந்த இரண்டிற்கும் வேருகவுள்ளது (என); समभिदधते - சொல்லுகின்றனர். अपरे - வேறுசிலர்; कौलम् - குலத்தைத் தொடர்ந்துள்ளது (என) प्राहुः - சொல்லுகின்றனர்; अपरे - பிறதொருசாரார்; एषाम् - இந்த; चतुर्णाम् अपि - நால் வகையான வேற்றுமைகளுக்கும்; उपरि - மேலே, किम् - अपि சிந்தைக்கும் சொற்களுக்கும், எட்டாதது (என), प्राहुः - சொல்லுகின்றனர்; तव - உன்னுடைய: तत्त्वम् - உண்மை நிலையை, अमी - இவர்கள்; कथम् - எவ்விதம்; निश्चिनुमहे - உறுதி செய்யப் போகின்றனரோ (தெரியவில்லை).

(அ-கை) இச்செய்யுளில் அன்னையின் உண்மை நிலையை ஒருவரும் உணர்ந்துகொள்ள முடியாது என்பதை விளக்குகிறார்:—

குலம் கேசித் ப்ராஹுர்வபுரகுலமந்யே தவ புதா:
பரே தத்ஸம்பேதம் ஸமபிதததே கௌலமபரே।
சதுர்ணுமப்யேஷாமுபரி கிமபி ப்ராஹுரபரே
மஹாமாயே தத்வம் தவ கதமமீ நிஶ்சினுமஹே॥

(பொழிப்புரை) அன்னுய்! சிலர் உனது திருமேனியை நீலம் முதலிய வர்ணங்களுடைய தொகுதிகள்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

எனச் சொல்லுகின்றனர். வேறு சிலர், அவ்விதமன்று எனச் சொல்லுகின்றனர். மற்றுஞ் சிலர் இவ்விரண்டினும் வேருனது என விளம்புகின்றனர். பிறிதொரு சாரார் குலத்தைத் தொடர்ந்துள்ளது என்பர். மற்ருெரு சாரார் இந்நால்வகையான வேற்றுமைகளுக்கும் மேலே சிந்தைக்கும் சொற்களுக்கும் புலனுகாதது எனச்சொல்லுகின்றனர். ஆகவே உன்னுடைய உண்மை நிலையை இவர்கள் எங்ஙனம் உள்ளவாறு உணர்ந்து கொள்ளப் போகின்றனரோ எனக்கு விளங்கவில்லை.

षडध्वारण्यानीं प्रलयरविकोटिप्रतिरुचा
रुचा भस्मीकृत्य स्वपदकमलप्रह्वशिरसाम् ।
वितन्वानाः शैवं किमपि वपुरिन्दीवररुचिः
कुचाभ्यामानम्रस्तव पुरुषकारो विजयते ॥ ११ ॥

(ப-ரை) स्व-पद कमल-प्रह्व-शिरसाम्-தனது பாதங்கள் என்னும் தாமரைமலர்களில் வணங்கிய சிரஸையுடையவர்களுக்கு, प्रलय-रवि- कोटि - प्रति-रुचा - ஊழிக்காலத்திலே தோன்றும் ஆதவர் பலரை நிகர்த்த காந்தியையுடைய ; रुचा - காந்தியினுல் ; षडध्वा - अरण्यानीम् -ஆறு வழிகள் என்ற பெரிய வனத்தை, भस्मी-कृत्य - சாம்பராகச் செய்து, किम् - अपि - சிந்தைக்கும், சொற்களுக்கும், எட்டாத ஒரு, शैवम् - மங்களத் தொடர்புள்ள, वपुः - சரீரத்தை, वितन्वानः - செய்து கொண்டு, तव - உன்னுடைய, इन्दीवर-रुचिः - கரு நெய்தல் மலரையொத்த காந்தி போன்ற காந்தியை யுடையதும், कुचाभ्याम् - ஸ்தனங்களினுல், आनम्रः - சுற்றும் வணங்கி

CC-0. Anusakthi P. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

யுள்ள, पुरुष-कार: -புருஷனுடைய தொடர்பு கொண்ட ஒரு சக்தியானது, विजयते - சிறந்து வெற்றிப் பெருமிதம் கொண்டு விளங்குகின்றது.

ஷடத்வாரண்யானீம் பிரளய ரவிகோடி ப்ரதிருசா
ருசா பஸ்மீக்ருத்ய ஸ்வபதகமல ப்ரஹ்வசிரஸாம் ।
விதத்வானா: சைவம் கிமபி வபுரிந்தீ வரருசி:
குசாப்யாமாநம்ரஸ்தவ புருஷகாரோ விஜயதே ॥

(பொழிப்புரை) அன்னாய்! கஞ்ஜமலரெனத் திகழுகின்ற உனது சேவடியை ஸேவிக்கின்ற தொண்டர்களுக்கு, ஊழியிலே தோன்றும் பல ஆதவர்களை நிகர்த்த காந்தியினால் அறுவகை அத்வாக்கள் என்றும் பெரிய வனத்தைச் சுட்டுச் சாம்பராகச் செய்து, சிந்தைக்கும், சொற்களுக்கும் புலனாகாத ஒரு மங்களத் தொடர்புள்ள திருமேனியைத் தோன்றச் செய்து, கருநெய்தல் மலரெனத் திகழுகின்றதும், நகில்களால் சுற்றும் வணங்கியதும் புருஷனுடைய தொடர்பைக் கொண்டதுமான ஒரு சக்தியானது வெற்றிப் பெருமிதத்தோடு விளங்குகின்றதன்றோ! அச்சக்தியும் நீயே தான் என்பது ஸாரம்.

प्रकाशानन्दाभ्यामविदितचरीं मध्यपदवीं
प्रविश्यैतद् द्वन्द्वं रविशशिसमाख्यं कबलयन् ।
प्रविश्योर्ध्वं नादं लयदहनभस्मीकृतकुलः
प्रसादात् ते जन्तुः शिवमकुलमम्ब प्रविशति ॥ १२ ॥

(பதவுரை) हे अम्ब! ஓ அன்னையே! जन्तुः - பிராணியானது, ते - உன்னுடைய, प्रसादात् - அருளினால், प्रकाश-आनन्दाभ्याम् - ஒளி, ஆனந்தம், இவைகளினால்,

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

अविदित-चरीम् - அறியமுடியாத ஸஞ்சாரத்தையுடைய, **मध्य-पदवीम्** - நடுவேயுள்ள இருப்பிடத்தை, **प्रविश्य**- அடைந்து, **रवि-शशि-समाख्यम्** - ஸூர்யன், சந்த்ரன் எனச் சொல்லப் பெறுகின்ற; **एतत्** - இந்த; **द्वन्द्वम्**- இரட்டையை; **कवलयन्** - விழுங்கிக் கொண்டு, **ऊर्ध्वम्**- மேலேயுள்ள **नादम्** - நாதத்தை, **प्रविश्य** - அடைந்து, **लय-दहन-भस्मी-कृत-कुलः** - ஒடுக்கப் பெற்றுள்ள காலாக்நியினுல் சாம்பராகச் செய்யப் பெற்ற குலத்தை யுடையதாக (இருந்து கொண்டு) **अकुलम्** - உருவமற்ற தாயுள்ள, **शिवम्** - மங்களத்தைச் செய்கின்ற இருப்பிடத்தை, **प्रविशति** - அடைகிறது.

(அ-கை) இச் செய்யுளில் அன்னையின் குலநிலையை யடையுமுபாயம் சொல்லப் பெருகின்றது:—

ப்ரகாசா நந்தாப்யா மவிதிதசரீம் மத்யபதவீம்
ப்ரவிச்யைதத் த்வந்த்வம் ரவிசசிஸமாக்யம் கபலயந்
ப்ரவிச்யோர்த்வம் நாதம் லயதஹநபஸ்மீக்ருதகுல:
ப்ரஸாதாத் தே ஜந்து: சிவமகுலமம்ப ப்ரவிசதி ॥

(பொழிப்புரை) அன்னாய்! உன்னுடைய அருளின் துணைகொண்டு, ஒளி ஆநந்தம் இவைகளினுல் அறியவியலாத ஸஞ்சாரத்தையுடைய நடுநிலையையடைந்து, ஆதவன் நிறைமதி எனச் சொல்லப் பெறுகின்ற இவ்விரண்டையும் விழுங்கிக் கொண்டு, மேலேயுள்ள நாதத்தையடைந்து ஒடுக்கத்தைப் பெற்ற ஊழித் தீயினுல் சாம்பராகச் செய்யப் பெற்று மங்களத்தை நல்கும் அருவமான குலத்தை உனது அருளின் துணை கொண்டு ஜீவன் அடைகின்றதன்றோ?

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

मनुष्यास्तिर्यञ्चो मरुत इति लोकत्रयमिदं
भवाम्भोधौ मग्नं त्रिगुणलहरीकोटिलुठितम्।
कटाक्षश्चेदद्य क्वचन तव मातः करुणया
शरीरी सद्योऽयं व्रजति परमानन्दतनुताम्॥ १३॥

(பதவுரை) हे मातः - ஓ அன்னையே! मनुष्याः - மானிடர்கள்; तिर्यञ्चः-மிருகங்கள், பறவைகள்; मरुतः - தேவர்கள்; इति - என்ற; इदम् - இந்த; लोकत्रयं - உலகம் மூன்றும்; भव-अम्भोधौ - ஸம்ஸாரக்கடலில்; मग्नं - மூழ்கியதாக, त्रिगुण-लहरी-कोटि - लुठितं - முக்குணங்களென்னும் அலைகளுடைய தொகுதிகளோடு சுழன்று கொண்டிருக்கின்றது; अद्य - இப்பொழுது; करुणया-கருணையினால்; क्वचन - சிறிதளவு; तव -உன்னுடைய; कटाक्षः-चेत् - கடைக்கணிப்பானது இருக்குமேயாகில்; सद्यः - அப்பொழுதே; अयं - இந்த; शरीरी - ஜீவனானது; परम-आनन्द-तनुतां -பரமானந்த வடிவாயமைந்த சரீரத்தை; व्रजति - அடைகின்றது.

(அ-கை) இச் செய்யுளில் அன்னையின் கடைக் கணிப்பின் அருள் வேண்டப் பெறுகின்றது:—

மநுஷ்யாஸ்திர்யஞ்சோ மருத இதி லோகத்ரயமிதம்
பவாம்போதௌ மக்நம் த்ரிகுணலஹரீகோடிலுடிதம் ।
கடாக்ஷஶ் சேதத்ய க்வசந தவமாத: கருணயா
சரீரீ ஸத்யோऽயம் வ்ரஜதி பரமாநந்த:தநுதாம்॥ 13

(பொழிப்புரை) அன்னாய்! முக்குணங்கள் என்னும் எண்ணற்ற அலைகளால் சூழ்ந்து கொண்டுள்ள மனிதர்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

கள், பறவைகள், விலங்குகள், தேவர்கள் என்பன நிறைந்துள்ள இம் மூவுலகும், பிறவி என்னும் கடலிலே உழன்று கொண்டுள்ளது. இப்பொழுது உனது கருணையினுல் ஒரு சிறிதளவு கடைக்கணிப்புக் கிடைக்குமேயாகில், அப்பொழுதே இந்த ஜீவனும் பரமானந்த வடிவாய் அமைந்த சரீரத்தையடைகின்றதன்றோ!

पियङ्गुश्यामाङ्गीमरुणतरवासःकिसलयां
समुन्मीलन्मुक्ता फलबहलनेपथ्यसुभगाम् ।
स्तनद्वन्द्व स्फारस्तवकनमितां कल्पलतिकां
सकृद् ध्यायन्तस्त्वां दधति शिवचिन्तामणिपदम् ॥१४॥

(பதவுரை) प्रियङ्गु श्यामाङ्गीम् - ஞாழல்போன்று கருமை நிறம் வாய்ந்த திருமேனியின் காந்தியையுடையவளும்; अरुणतरवासः किसलयाम् - நல்ல செந்நிறம் தோய்ந்த துகிலென்னும் துளிரையுடையவளாகவும்; समुन्मीलन्मुक्ताफल - बहल नेपथ्य - सुभगाम् - நன்கு விரிந்த முத்துக்கள் பலவற்ருல் செய்யப் பெற்ற அலங்காரத்தினுல் வனப்புள்ளவளாகவும்; स्तन - द्वन्द्व -स्फार-स्तबक-नमितां - நகில்களின் இரண்டின் வளர்ச்சியினுல் பூங்கொத்துப் போல வணங்கியுள்ள, कल्पलतिकाम् - கற்பகக் கொடியாகவும்; त्वाम् - உன்னை; सकृत् - ஒரு தடவையாவது; ध्यायन्तः - சிந்தனை செய்யும் (தொண்டர்கள்); शिव - चिन्तामणि - पदम् - சிவனென்னும் சிந்தாமணி பதவியை - இருப்பிடத்தை; दधति - அடைகின்றனர் அன்றோ!

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ப்ரியங்கு ச்யாமாங்கீ மருணதரவாஸ: கிஸலயாம்
ஸமுன்மீலந்முக்தா பல பஹுல நேபத்யஸுபகாம் ।
ஸ்தநத்வந்த்வ ஸ்பாரஸ்தபகநமிதாம் கல்பலதிகாம்
ஸக்ருத் த்யாயந்த ஸ்த்வாம் தததி சிவ சிந்தாமணிபதம் ॥

(பொழிப்புரை) அன்னாய்! ஞாழலின் கருமை நிறத்தை நிகர்த்த திருமேனியின் காந்தியையுடையவளாகவும், நல்ல செந்நிறம் தோய்ந்த துகிலென்னும் துளிரையுடையவளாகவும், நன்கு விரிந்த முத்துக்கள் பலவற்றால் செய்யப் பெற்ற அலங்காரத்தினால் வனப்புடன் விளங்குகின்றவளாகவும், வளர்ச்சியுற்ற இரண்டு நகில்கள் என்னும் பூங்கொத்துக்களால் வணங்கிய கற்பகக் கொடியெனவும், உன்னைத் தொண்டர்கள் ஒரு தடவையாவது சிந்தனை செய்த அளவிலே, அவர்கள் சிவனென்னும் சிந்தாமணி பதவியை அடைகின்றனர் அன்றோ!

षडाधारावर्तैरपरिमितमन्त्रोर्मिपटलै-
र्लसन्मुद्राफेनैर्बहुविधचलद्दैवतझषैः ।
क्रम स्रोतोभिस्त्वं वहसि परनादामृतनदी
भवानि प्रत्यग्रा शिवचिदमृताब्धिप्रणयिनी ॥ १५ ॥

(பதவுரை) हे भवानि! ஓ பவானியாம் அன்னையே! त्वम्-நீ, षड् - आधार - आवर्तैः - ஆறு ஆதாரங்கள் என்னும் சுழல்களோடும், अपरि-मित-मन्त्र-ऊर्मि-पटलैः - அளவிடமுடியாத மந்த்ரங்கள் என்னும் அலைகளின் தொகுதிகளோடும், लसन्-मुद्रा-फेनैः - ஒளிருகின்ற முத்திரைகள் என்னும் நுரைகளோடும், बहुविध-चलद्-दैवत-

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

झषैः - பலவகையாகச் சலிக்கின்ற தேவதைகள் என்னும் மத்ஸ்யங்களோடும், क्रम-स्रोतोभिः - ஆசாரங்கள் என்னும் ப்ரவாஹங்களோடும் கூடிய, प्रत्यग्रा - புதியதான, शिव-चिद्-अमृत-अब्धि-प्रणयिनी - சிவனென்னும் சித்தியின் வடிவாயமைந்து அமுதமயமான கடலின் அன்புக்குரியதாயமைந்துள்ள, पर - नाद - अमृत - नदी - சிறந்த நாதமென்னும் வடிவாயமைந்துள்ள அமுத நதியாகவும், वहसि - பெருகிக் கொண்டிருக்கிறாய்.

ஷடாதாராவர்த்தைரபரிமித மந்த்ரோர்மி படலைர்-
லஸந்முத்ராபேனைர் பஹுவிதசலத் தைவத ஜஷை:।
க்ரம: ஸ்ரோதோபிஸ்த்வம் வஹஸி பரநாதாம்ருதநதீ
பவாநி ப்ரத்யக்ரா சிவசிதம்ருதாப்திப்ரணயிநீ ॥ 15 ॥

(பொ-ரை) பவதேவனுடைய துணைவியாம் ஓ பவாநி! ஆறு ஆதாரங்கள் என்னும் சுழல்களோடும், எண்ணிக்கையிலடங்காத மந்த்ரங்கள் என்னும் அலைகளுடைய தொகுதிகளோடும், ஒளிருகின்ற முத்ரைகள் என்னும் நுரைகளோடும், பலவகையாகச்சலிக்கின்ற தேவதைகள் என்னும் மத்ஸ்யங்களோடும், ஆசாரமென்னும் அணி அணியாயுள்ள ப்ரவாஹங்களோடும் கூடியதான புதியதான சித்தின் வடிவாயமைந்து, அமுதமயமான கடலின் அன்புக்குரியதாயுள்ள சிறந்த நாதமென்னும் வடிவாகத்திகழுகின்ற அமுத நதியாகவும் நீ பெருகிக்கொண்டிருக்கிறாய் அன்றோ!

महीपाथोवह्निश्वसनवियदात्मेन्दुरविभि-
र्वपुर्भिस्त्रस्ताशैरपि तव किमानन्द महिमा।

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

अमून्यालोक्यन्ते भगवति न कुत्राप्यणुतमा-
मवस्थां प्राप्तानि त्वयि तु परमव्योमवपुषि ॥ १६ ॥

(பதவுரை) हे अम्ब - ஓ அன்னையே! ग्रस्तांशैः-अपि - விழுங்கப் பெற்ற பகுதிகளையுடையவனுயினும்; तव - உன்னுடைய; मही - पाथो - वह्नि - श्वसन - वियद्-आत्मा - इन्दु - रविभिः - மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், ஆத்மா, சந்த்ரன், ஸூர்யன் இவர்களுடைய, वपुर्भिः-சரீரங்களினுல்; महिमा-பெருமையானது; कियान् - எவ்வளவுதான் உண்டாகும்; भगवति! அறுவகை ஐச்வர்கள் நிறைந்து விளங்கும் ஓ அன்னையே! परम - व्योम - वपुषि - மஹாகாச வடிவாயமைந்துள்ள சரீரத்தையுடைய; त्वयि-तु - உன்னிடத்திலோ வெனில்; अणुतमाम् - மிகவும் நுண்ணியதான; अवस्थाम्-நிலையை; अमूनि - இந்த மண் முதலியவைகள், प्राप्तानि-அடைகின்றன; कुत्र-अपि - வேறு எங்கும்; न-आलोक्यन्ते - காணப் பெறுகின்றவையல்ல.

மஹீபாதோவஹ்நிச்வஸந வியதாத்மேந்து ரவிபிர்-
வபுர்பிர் க்ரஸ்தாம்சைரபி தவ கியாநம்ப மஹிமா।
அமுந்யாலோக்யந்தே பகவதி ந குத்ராப்யணுதமா-
மவஸ்தாம் ப்ராப்தாநி த்வயிது பரமவ்யோமவபுஷி॥

(பொழிப்புரை) அன்னய்! மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம், ஆத்மா, சந்திரன், ஸூர்யன் இவர்களுடைய சரீரங்களினுல் பெருமையானது எவ்வளவு தான் உண்டாகும். அறுவகை ஐச்வர்யங்களும் நிறைந்து விளங்கும் ஓ அன்னையே! மஹாகாச வடிவாயமைந்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

துள்ள சரீரத்தையுடைய உன்னிடத்திலோவெனில், இம் மண் முதலியவைகள் மிகவும் நுண்ணியதாயிருக்கும் நிலையை யடைகின்றன. இந்நிலையோ வேறு எங்கும் காணப் பெறுவதில்லையன்றோ!

कलां मायां प्रज्ञां समयमनुभूतिं समरसं
गुरुं पारंपर्यं विनयमुपदेशं शिवकथाम् ।
प्रमाणं निर्माणं प्रकृतिमभिभूतिं परगुहां
विधिं विद्यामाहुः सकलजननीमेव मुनयः ॥ १७ ॥

(பதவுரை) मुनयः - மஹர்ஷிகள், कलाम् - கலை யெனவும், मायाम् - மாயையெனவும், प्रज्ञाम् - அறிவு எனவும், समरसम् - ஒற்றுமையின் வடிவமெனவும், समयम् - ஸமய வடிவமெனவும், अनुभूतिम् - அநுபவ வடிவமெனவும், पारं-पर्यम् - தொடர்ச்சியாக வந்துள்ள गुरुम् - ஸ்ரீ குருவின் வடிவமெனவும், विनयं - விநயத்தோடு கூடிய, उपदेशम् - உபதேச வடிவமெனவும், शिव-कथाम् - சிவ கதையின் வடிவமெனவும், प्रमाणम् - சாஸ்த்ர வடிவமெனவும், निर्वाणम् - ஸுகத்தின் வடிவமெனவும், அல்லது மோக்ஷத்தின் வடிவமென வும், प्रकृतिम् - மூலப்ரக்ருதியின் வடிவமெனவும் अभि भूतिम् - பரவிய ஐச்வர்யங்களின் வடிவமெனவும் परगुहाम् - சிறந்த குஹையின் வடிவமெனவும், विधिम् - செயலின் வடிவமெனவும், विद्यां - வித்தையின் வடிவ மெனவும் सकल - जननीम् - எல்லா சராசரங்களையும் தோற்றுவிக்கும் அன்னையெனவும் त्वाम्-एव-உன்னை யே, आहुः - சொல்லுகின்றனர்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

கலாம் மாயாம் ப்ரஜ்ஞாம் ஸமயமநுபூதிம் ஸமரஸம்
குரும் பாரம்பர்யம் விநயமுபதேசம் சிவகதாம் ।
ப்ரமாணம் நிர்வாணம் ப்ரக்ருதிமபிபூதிம் பரகுஹாம்
விதிம் வித்யாமாஹு: ஸகலஜநநீமேவ முநய: ॥ 17

(பொழிப்புரை) அன்னாய்! மோன நிலை கைவரப் பெற்ற முநிபுங்கவர்கள், கலையெனவும், மாயையெனவும் அறிவு எனவும், ஒற்றுமையின் வடிவமெனவும், ஸமய வடிவமெனவும், அநுபவ வடிமெனவும், பரம்பரையாக வந்துள்ள ஸ்ரீ குருவின் வடிவமெனவும், விநயத்தோடு கூடிய உபதேச வடிவமெனவும், சிவகதையின் வடிவ மெனவும், சாஸ்திரத்தின் வடிவமெனவும், ஸுகத்தின் வடிவமெனவும் (அல்லது மோக்ஷத்தின் வடிவமெனவும்) மூலப்ருகிருதியின் வடிவமெனவும், பரவிய ஐச்வர்யங் களின் வடிவமெனவும், பெருகிய ஆவரணத்தின் வடிவ மெனவும், செயலின் வடிவமெனவும், வித்தையின் வடிவ மெனவும், எல்லா சராசரங்களையும் தோற்றுவிக்கும் அன்னையெனவும் உன்னையே சொல்லுகின்றனர்.

प्रलीने शब्दौघे तदनु विरते बिन्दुविभवे
ततस्तत्त्वे चाष्टध्वनिवपुरुपाधिन्युपगते ।
श्रिते शाक्ते पर्वण्यनुकलितचिन्मात्रगहनां
स्वसंवित्तिं योगी रसयति शिवाख्यां परतनुम् ॥ १८ ॥

(பதவுரை) शब्द - ओघे - சப்தங்களின் தொகுதி யானது ; प्रलीने-सति - நன்கு மறைந்துள்ள பொழுது ; तदनु - பிறகு ; बिन्दु-विभवे-பிந்துவின் தோற்றமானது; विरते-सति - ஒழிந்துள்ள பொழுது, ततः - பிறகு ; अष्ट-ध्वनि-वपुः - उपाधिनि - எண்வகையான த்வனிவடிவா

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

யமைந்த சரீர தர்மமாயுள்ள ; **तत्त्वे** - தத்துவமானது ; **उपगते** - **च** - அடைந்துள்ள பொழுது ; **शाक्ते** - சக்தியின் தொடர்புகொண்ட ; **पर्वणि** - கலையானது ; **श्रिते** - தழுவிய பொழுது ; **अनु** - **कलित** - **चिन्मात्र-गहनां** - பின் தொடர்ந்து ஒன்றியுள்ள, சித்தின் இருப்பிடமாயுள்ளதும், **परतनुं** - மிகவும் நுண்ணியதாயுமுள்ள ; **शिवाख्यां** - சிவையென்னும் பெயருள்ளதுமான ; **स्वसंवित्तिम्** - தனது ஸம்வித்தை ; **योगी** - யோகியானவன் ; **रसयति** - அநுபவிக்கிறான்.

ப்ரலீநே சப்தௌகே ததநு விரதே பிந்து விபவே
ததஸ்தத்வே சாஷ்டத்வநி வபுருபாதிந்யுபகதே ।
ச்ரிதே சாக்தே பர்வண்யநு கலித சிந்மாத்ர கஹநாம்
ஸ்வஸம்வித்திம் யோகீ ரஸயதி சிவாக்யாம்பரதநும் ॥

(பொழிப்புரை) அன்னாய்! ஒளிகளின் தொகுதிகள் நன்கு மறைந்துள்ள பொழுது, பிறகு பிந்துவின் தோற்றமானது ஒழிந்துள்ள பொழுது, பிறகு எண்வகையான த்வநி வடிவாயமைந்த சரீரமாயுள்ள தத்வமானது அடைந்துள்ள பொழுது, பின்தொடர்ந்து ஒன்றியுள்ள சித்தின் இருப்பிடமாயுள்ளதும், மிகவும் நுண்ணியதாயுமுள்ள சிவையென்னும் பெயருள்ளதுமான தனது ஆத்ம வடிவான அறிவை யோகீ நுகருகின்றான்.

परानन्दाकारां निरवधिशिवैश्वर्यवपुषं
[1]निराकारां ज्ञानप्रकृतिमपरिछिन्नकरुणाम् ।

---

1. निराघाटज्ञानम् प्रकृतिम् - அப்பொழுது தடங்கல் ஒன்றுமில்லாத ஸ்வதந்த்ர ஞாநத்திற்குக் காரணமாயிருப்பவன் என்பது பொருள்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

सवित्रीं लोकानां निरतिशयधामास्पदपदां

भवो वा मोक्षो वा भवतु भवतीसेव भजताम् ॥ १९ ॥

(பதவுரை) भवः-वा - ஸம்ஸாரமாவது, मोक्षः-वा - மோக்ஷமாவது, भवतु - இருக்கட்டும். परानन्दाकाराम् - சிறந்த ஆநந்த வடிவாயுள்ளதும், निरवधि-शिव-ऐश्वर्य-वपुषं - எல்லையில்லாத பரமசிவனுடைய பரமைச்வர்யமான சரீரத்தையுடையதும், निराकाराम् - வடிவமற்றதாயுள்ளதும், ज्ञान प्रकृतिं - ஞானத்தை ஸ்வபாவமாகப் பெற்றுள்ளதும், अपरिच्छिन्न - करुणां - அளவற்ற கருணையையுடையதும். निरतिशय-धाम-आस्पदां - ஒப்பில்லா ஒளியின் இருப்பிடமாயுள்ளதும், सवित्रीं - அன்னையாயுள்ளவளுமான भवतीं - एव - உன்னையே भजतां - ஸேவிக்கட்டும்.

பராநந்தா காராம் நிரவதி சிவைச்வர்ய வபுஷம்
நிராகாராம் ஞாந ப்ரக்ருதி மபரிச்சிந்நகருணாம் ।
ஸவித்ரீம் லோகாநாம் நிரதிசய தாமாஸ்பத பதாம்
பவோ வா மோக்ஷோவா பவது பவதீமேவ பஜதாம் ॥

(பொழிப்புரை) அன்னாய்! எனக்குப் பிறவியோ, மோக்ஷமோ கிடைக்கட்டும், அதைக் குறித்து நான் கவலை கொள்ளவில்லை. ஆயினும் சிறந்த ஆநந்த வடிவமாயமைந்துள்ளவளும், பரமசிவனுடைய எல்லையில்லா சிறந்த ஐச்வர்ய வடிவாயமைந்துள்ள சரீரத்தையுடையவளும், வடிவமற்றவளும், ஞாநத்திற்கு இருப்பிடமாயுள்ளவளும், எல்லையில்லா கருணையை யுடையவளும், ஒப்பில்லா ஒளியின் இருப்பிடமாயுள்ளவளும், உலகைத்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

தோற்றுவிப்பவளுமான உன்னையே தஞ்சம் புகுந்த என் மனம் உன்னிடத்திலே நிலைத்து ஸேவித்து நிற்பதாக. அது ஒன்றே எனக்குப் போதுமானது.

இச்செய்யுளை அருணாமோதிநீ என்ற ஸௌந்தர்ய லஹரியினுடைய தனது உரையில் முப்பத்தொன்றாவது செய்யுளில் ஸ்ரீ காமேச்வரிஸுரி மேற்கோளாகக் காட்டி விளக்கம் கொடுத்துள்ளார்:—

அந்த ஒருவளே உலகத்திற்கு உபகாரம் செய்யத் தக்கவள். அவள் கருணை நிரம்பியவள். அவள் ஒருவள் தான் உபாஸனை செய்வதற்குத் தகுதியுள்ளவள் அவளைக் காட்டிலும் வேறு கருணையுள்ளம் படைத்த தேவதையைக் காணமுடியாது. அவள் சிறந்த ஆநந்த வடிவம் கொண்டவள், எல்லையில்லா மங்கள வடிவான திருமேனியையுடையவள் அவள். தடங்கலில்லாத ஞாநத்திற்குக் காரணமாயுள்ளவள், பிரிக்க முடியாத கருணையின் வடிவம் கொண்டவள். அவள் சராசரங்களைத் தோற்றுவிப்பவள். எல்லையற்ற ஒளியின் இருப்பிடத்திற்குக் காரணமாயிருப்பவள். ஆகவே இன்னோரன்ன பல பெருமைகளைக் கொண்டு விளங்கும் அன்னையை நான் ஸேவித்துச் சரணாகதியடைந்தால் அவள் மோக்ஷத்தைக் கொடுத்தாலும், ஸம்ஸாரத்தைக் கொடுத்தாலும் எனக்கு எல்லாம் ஒன்றுதான் என்பது கவியினுடைய வேண்டுகோளாகும். எனச் சொல்லுவர்,

जगत् काये कृत्वा तदपि हृदये तच्च पुरुषे
पुमांसं बिन्दुस्थं तदपि वियदात्मये च गहने ।

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

तदेतद् ज्ञानाख्ये तदपि परमानन्दगहने
महाव्योमाकारे त्वदनुभवशीलो विजयते ॥ २० ॥

(பதவுரை) **हे मातः** - ஓ அன்னையே! **काये** - சரீரத்தில்; **जगत्** - உலகை; **कृत्वा** - செய்து; **तत्-अपि**-அதையும்; **हृदये**-ஹ்ருதயத்தில்; செய்துதத் च - அதையும்; **पुरुषे**-புருஷனிடத்தில் (செய்து); **पुमांसम्** - புருஷனை; **बिन्दुस्थम्** - பிந்துவில் இருப்பவனாகச் செய்து; **तत्-अपि** - அந்த பிந்துவையும், **वियत्-आख्ये** - ஆகாயம் எனச் சொல்லப் பெறுகின்ற; **गहने** - காட்டில் (செய்து) **तत्-एतत्** - அந்த காட்டையும்; **ज्ञानाख्ये** - ஞானம்; என்ற பெயருள்ளதில் (செய்து) **तद्-अपि** - அந்த ஞானத்தையும்; **परम-आनन्द-गहने** - சிறந்த ஆனந்தமென்னும் அரண்யத்தில் (செய்து); **महा-व्योम-आकारे**-மஹாகாச வடிவத்தில்; **त्वद्-अनुभव-शीलः** உன்னை உபாஸித்து அநுபவம் கைவரப்பெற்ற சீலனாகிய யோகியானவன், **विजयते** - விளங்குகிறான்.

ஜகத் காயே க்ருத்வா ததபி ஹ்ருதயே தச்ச புருஷே
புமாம்ஸம் பிந்துஸ்தம் ததபி வியதாக்யே ச கஹநே।
ததேதத் ஞாநாக்யே ததபி பரமாநந்தகஹநே
மஹாவ்யோமாகாரே த்வதநுபவ சீலோ விஜயதே ॥

(பொழிப்புரை) அன்னாய்! உன்னையுபாஸித்து ஆத்மாநுபவம் கைவரப் பெற்ற சீலனாகிய யோகியானவன். (தனது) சரீரத்தில் உலகைக் கண்டு, அவ்வுலகையும் ஹ்ருதயத்தில் கண்டுகொண்டு, அந்த ஹ்ருதயத்தையும் புருஷனிடத்தில் கண்டு கொண்டு, அப்புருஷனையும்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

பிந்துவிலே இருப்பவனைக் கொண்டு, அந்த பிந்துவையும் ஆகாயமெனச் சொல்லப் பெறும் காட்டிலே கண்டு அக் காட்டையும் ஞானத்திலே - அறிவிலே - கண்டு அந்த அறிவையும் சிறந்த ஆநந்தமென்னும் அரண்யத்தில் கண்டு, அந்த ஆநந்தத்தையும் மஹாகாச வடிவத்தில் கண்டுகொண்டு உன்னிடத்திலேயே திளைத்திருக்கின்றனர் அன்றோ!

विधे वेद्ये विद्ये विविधसमये वेदगुलिके
विचित्रे विश्वाद्ये विनयसुलभे वेदजननि ।
शिवज्ञे शूलस्थे शिवपदवदान्ये शिवनिधे
शिवे मातर्मह्यं त्वयि वितर भक्तिं निरुपमाम् ॥ २१ ॥

(பதவுரை) विधे - கால வடிவாயுள்ளவளே! वेद्ये - உபநிஷத்துக்களால் அறியத் தக்கவளே! विद्ये - ஞானவடிவாயுள்ளவளே! विविध-समये - பலபடியான ஆசாரங்களையுடையவளே! वेदगुलिके - வேதத்தின் ஸாரமாயுள்ள குளிகை போன்றவளே, विचित्रे - வியக்கத்தக்க நிலைகளையுடையவ்ளே, विश्वाद्ये - உலகுக்கு முன்னேயிருப்பவளே, विनिय-सुलभे - விநயமுள்ளவர்களுக்கு ஸுலபமாயிருப்பவளே, वेद-जननि - வேதங்களைத் தோற்றுவித்தவளே, शिवज्ञे - ஸதாசிவ தத்துவத்தின் வடிவாயுள்ளவளே, शूलस्थे - த்ரிசூலத்தின் வடிவாயிருப்பவளே, शिव-पद-वदान्ये - சிவபதத்தைக் கொடுப்பவளே, शिवनिधे - மக்களுக்கு நிதியாயுள்ளவளே, शिवे - மங்கள வடிவே, मातः - ஓ அன்னையே! त्वयि - உன்னிடத்தில், निरुपमां -

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

இணையில்லாத, भक्तिं - பக்தியை, मह्यं - என் பொருட்டு, वितर - வழங்குவாயாக.

விதே வேத்யே வித்யே விவிதஸமயே வேதகுளிகே
விசித்ரே விச்வாத்யே விநயஸுலபே வேத ஜநநி ।
சிவஜ்ஞே சூலஸ்தே சிவபதவதாந்யே சிவநிதே
சிவே மாதர்மஹ்யம் த்வயி விதர பக்திம் நிருபமாம் ॥

(பொழிப்புரை) ஓ அன்னாய்! கால வடிவாயுள்ள வளும் உபநிஷதங்களால் அறியத் தக்கவளும் ஞாந வடிவாயுள்ளவளும், பலபடியான ஆசாரங்களையுடைய வளும், வேதத்தின் ஸாரமாயுள்ள குளிகை போலுள்ள வளும் வியக்கத் தக்க நிலைகளையுடையவளும், உலகுக்கு முன்னே தோன்றியவளும், விநயமுள்ளவர்களுக்கு எளிதில் அடையத் தக்கவளும், வேதங்களைத் தோற்றுவித்த வளும், ஸதாசிவ தத்துவத்தின் வடிவாயுள்ளவளும், சிறந்த சிவபதத்தைக் கொடுப்பவளும் மங்களங்களுக்கு நிலைத்த இருப்பிடமாயுள்ளவளும், மங்கள வடிவாயுள்ள வளுமான நீ எனக்கு, உன்னிடத்தில் இணையில்லாது என்றும் நிலைத்துள்ள பக்தியைக் கொடுத்தருள்வாயாக.

विधेर्मुण्डं हृत्वा यदकुरुत पात्रं करतले
हरिं शूलप्रोतं यदगमयदंसाभरणताम् ।
अलंचक्रे कण्ठं यदपि गरलेनाम्ब गिरिशः
शिवस्थायाः शक्तेस्तदिदमखिलं ते विलसितम् ॥ २२ ॥

(பதவுரை) गिरिशः - பரமசிவன்; विधेः - நான்முக னுடைய; मुण्डं - தலையை; हृत्वा - கொய்து; करतले - கையில்; पात्रं பாத்திரமாகச் செய்து கொண்டான்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(என்பது) यत् - யாதொன்று உண்டோ; शूलप्रोतं - திரிசூலத்தில் கோர்க்கப் பெற்ற; हरिं - விஷ்ணுவை; अंसाभरणतां - தோள்களுடைய ஆபரணமாயிருக்கும் தன்மையை; अगमयत् - அடையப் பெற்ருன் என்பது; यत् - யாதொன்று உண்டோ; गरलेन - விஷத்தினுல்; कण्ठं - கழுத்தை; अलंचक्रे - அலங்காரம் செய்து கொண்டான் என்பது, यत्-अपि - யாதொன்று உண்டோ அதுவும்; तत् - அப்பெருமை வாய்ந்த; इदम्-अखिलं - இச்செய்கைகள் யாவும்; शिवस्थायाः - சிவனிடத்திலுள்ள; शक्तेः - சக்தியின்வடிவாயமைந்த; ते உன்னுடைய; विलसितं - செயலின் பெருமிதமன்ரே!

விதேர் முண்டம் ஹ்ருத்வா யதகுருத பாத்ரம் கரதலே
ஹரிம் சூலப்ரோதம் யதகமயதம்ஸாபரணதாம்।
அலம்சக்ரே கண்டம் யதபி கரலே நாம்ப கிரிசஃ
சிவஸ்தாயா: சக்தேஸ்ததிதமகிலம் தே விலஸிதம்॥

(பொழிப்புரை) ஓ அன்ஞய்! பண்டு, பரமசிவன் நான்முகனுடைய தலையைக் கொய்து தனது கையில் பாத்திரமாகச் செய்து கொண்டதும், த்ரிசூலத்தில் கோர்க்கப் பெற்ற மஹாவிஷ்ணுவை தோள் வளையங்களாகச் செய்து கொண்டதும், ஹாலாஹல விஷத்தினுல் கழுத்தைக் கருமை நிறமாகச் செய்து கொண்டதுமான இச் செய்கைகள் யாவும், அந்தப் பரமசிவனிடத்திலே ஒன்றிய சக்தியின் வடிவாயமைந்துள்ள பெருமை வாய்ந்த உனது செயலின் பெருமிதத்தாலன்ரே!

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

இச்செய்யுளை ஸ்ரீகாமேச்வரஸூரி தமது அருணு மோதிநீ என்ற ஸௌந்தர்ய லஹரியின் முதற் செய்யுளுக்கு மிகவும் விரிவாக உரை வகுத்துள்ள விடத்தில் மேற்கோளாகக் காட்டுவர்,—உலகம் யாவையும் ஒடுக்கு வதற்கு முனைந்துள்ள காலகூட விஷத்தைப் பருகிய பொழுது, அதை விழுங்கவும் முடியாது, வெளியே கொண்டுவரவும் முடியாது திணறும் நிலையிலே, அமுத வடிவாயமைந்த அன்னையின் தன்மையென்னும் சக்தியின் பெருமிதத்தாலன்றோ அவ்விஷமும் அப்பனுடைய கழுத்திலே நிலைத்துள்ளது எனச்சொல்லுவர்.

विरिञ्चाख्या मातः सृजसि हरिसंज्ञा त्वमवसि
त्रिलोकीं रुद्राख्या हरसि विदधासीश्वरदशाम् ।
भवन्ती नादाख्या विहरसि च पाशौघदलनी
त्वमेवैकानेका भवसि कृतिभेदैर्गिरिसुते ॥ २३ ॥

(பதவுரை) हे मातः - ஓ அன்னையே! त्वम् - நீ; विरिञ्चाख्या - நான்முகன் என்ற பெயரில்; त्रिलोकीम् - மூவுலகையும்; सृजसि - படைக்கிறாய்; हरि संज्ञा - விஷ்ணு என்ற பெயரில்; अवसि - காப்பாற்றுகிறாய்; रुद्राख्या - ருத்ரன் என்ற பெயரில், हरसि - அழிக்கிறாய்-ईश्वरदशाम् - ஈச்வரத்தன்மை என்ற நிலைமையை, विद-धासि - விசேஷமாகத்தரிக்கிறாய்; पाश-ओघ-दलनी - பந்தங்களுடைய தொகுதிகளை அழிப்பதில், नादाख्या-च-நாதம் என்ற பெயருள்ளவளாக; भवन्ती - இருந்து கொண்டு; विहरसि விளையாடுகின்றாய்; हे गिरिसुते - ஓ மலையரசன் மகளே! एका - இரண்டற்றவளாக;

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

त्वम्-एव-நீயே, कृति-भेदैः-காரியங்களின் வேறுபாடு களினால்; अनेका - பலபடியாக; भवसि - இருக்கிறாய்.

விரிஞ்சாக்யா மாத: ஸ்ருஜஸி ஹரிஸம்ஜ்ஞா த்வமவஸி
த்ரிலோகீம் ருத்ராக்யா ஹரஸி விததாஸீச்வரதசாம்।
பவந்தீ நாதாக்யா விஹரஸி ச பாசௌகதளநீ
த்வமேவைகாநேகா பவஸி க்ருதிபேதைர்கிரிஸுதே ॥

(பொழிப்புரை) ஓ அன்னாய்! நீ நான்முகன் என்ற பெயரோடு மூவுலகையும் படைக்கின்றாய். விஷ்ணு என்ற பெயரோடு மூவுலகையும் பாலநம் செய்கின்றாய். ருத்ரன் என்ற பெயரோடு மூவுலகையும் அழிக்கின்றாய், ஈச்வர நிலையையும் விசேஷமாகத் தரிக்கின்றாய், மற்றும், பவபாசங்களைக் களைவதில் நாதத்தின் வடிவாயிருந்துகொண்டு விளையாடுகின்றாய், ஓ மலையரசன் மகளே! நீயே செயல்களுடைய வேறுபாடுகளால் பலபடியாக இருக்கின்றாய் அன்றோ!

அன்னையின் பெருமிதத்தை விளக்குகின்ற இவ் வரலாறுகளை ஸ்ரீலலிதாஸஹஸ்ரநாமம், லலிதோபாக்யாநம் முதலிய நூல்களில் விரிவாகக் காணலாம்.

இச் செய்யுளை ஸ்ரீ காமேச்வரஸூரி தமது அருணாமோதிநீ என்ற ஸௌந்தர்யலஹரியின் இருபத்துநான்காவது செய்யுளின் உரையிலே மேற்கோளாகக் கொண்டு விளக்கம் கொடுத்துள்ளார்—

நான்முகன், விஷ்ணு, ருத்ரன், என்றவர்கள் முத்தொழிலையும் முறையே செய்கின்றனர் எனச் சொல்வதும் கற்பனையின் அளவிலேதான். எவ்விதம், "आत्मा वै पुत्रनामासि - ஆத்மாவை புத்ரநாமாஸி, "स एवायं पुरुषः

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

प्रत्यक्षेणोपलभ्यते " பிரஸித்தமான ஆத்மவடிவே புத்ரனு யுமிருக்கின்முன். அப்பெருமை வாய்ந்த அப்புருஷனே காக்ஷி வடிவாகக்காணப்பெருகின்முன்" என்ற ச்ருதியை யும், மேற்கோள் காட்டி உண்மையில் அன்னே ஒருவளே இவ்வாறு பல வடிவங்களில் தோன்றிக் கொண்டு, அவளே இக்காரியங்களேச் செய்கிருள் எனச்சொல்லுவர்.

मुनीनां चेतोभिः प्रमुदितकषायैरपि मना-
गशक्यं संस्प्रष्टुं चकितचकितैरम्ब सततम् ।
श्रुतीनां मूर्धानः प्रकृतिकठिनाः कोमलतरे
कथं ते विन्दन्ते पदकिसलये पार्वति पदम् ॥ २४ ॥

(பதவுரை) हे अम्ब - ஓ அன்னுய்! सततम् - எப்பொழுதும்; प्रमुदित - कषायैः - अपि - மிகுந்த மகிழ்ச்சியினுல் கலங்கியுள்ள பொழுதிலும்; चकित - चकितैः - பயந்து பயந்துள்ள; मुनीनाम् - முனிபுங்கவர்களுடைய; चेतोभिः - சித்தங்களினுல்; मनाक् - சிறிதளவாவது; संस्प्रष्टुम् - தொடுவதற்கு; अशक्यम् - முடியாது; कोमलतरे - மிகவும் மெல்லியதான; पद-किसलये - பாதங்களென்னும் தளிரை; हे पार्वति - ஓ மலேயரசன் மகளே! प्रकृति-कठिनाः - இயற்கையாகவே கடினமாயுள்ளவைகளான; श्रुतीनाम् - வேதங்களுடைய; मूर्धानः - சிரஸாக விளங்குகின்ற உபநிஷதங்கள்; ते - உன்னுடைய; पदम् - இருப்பிடத்தை; कथम् - எவ்விதம்; विन्दन्ते - உணருகின்றனவோ?

முநீநாம் சேதோபிঃ ப்ரமுதிதகஷாயைரபி மநா-
கசக்யம் ஸம்ஸ்ப்ருஷ்டும் சகிதசகிதைரம்ப ஸததம் ।

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

ச்ருதீநாம் மூர்தாந: ப்ரக்ருதிகடிநா: கோமலதரே
கதம் தே விந்தந்தே பதகிஸலயே பார்வதி பதம் ॥

(பொழிப்புரை) அன்னாய்! மிகுந்த மகிழ்ச்சியின் காரணமாக எப்பொழுதும் கலங்கியுள்ளதும், பயந்து, பயந்து கொண்டுள்ளதுமான முநிபுங்கவர்களுடைய சித்தங்களினால் சிறிதளவாவது உனது கஞ்சமலரை நன்கு பற்றுவதற்கு முடியவில்லை, அவ்விதமிருக்கும் பொழுது, இயற்கையாகவே கடினங்களாயுள்ள வேதங்களின் சிரோபாகமாயுள்ள உபநிஷத்துக்கள், மிகவும் மெல்லியதான தளிரெனத் திகழுகின்ற உன்னுடைய சேவடியை, ஓ மலையரசன் மகளாம் அன்னையே! அவைகள் எங்ஙனம் பற்றுக் கொண்டு உணருகின்றனவோ விளங்கவில்லை ?

तटिद्वल्लीं नित्याममृतसरितं पाररहितां
मलोत्तीर्णां ज्योत्स्नां प्रकृतिमगुणग्रन्थिगहनाम् ।
गिरां दूरां विद्यामविनतकुचां विश्वजननी-
मपर्यन्तां लक्ष्मीमभिदधति सन्तो भगवतीम् ॥ २५ ॥

(பதவுரை) नित्याम् - எப்பொழுதும்; तटिद्-वल्लीम् மின்னல் கோடிபோன்றுள்ளவளும்; पार - रहिताम् கரையற்ற; अमृत - सरितम् - அமுதப் பெருக்கெடுத்த ஆறு போலுள்ளவளும்; मलोत्तीर्णाम् - மாசுகளிலிருந்து விடுபட்ட; ज्योत्स्नाम् - ஒளியே போலுற்றவளும்; अगुण-ग्रन्थि गहनाम् - முக்குணங்களென்னும் முடிச்சைத் தவிர்த்த; प्रकृतिम् - ப்ரக்ருதி வடிவாயுள்ளவைகளும், गिराम् - சொற்களுக்கு; दूराम् - எட்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

டாத; विद्याम् - வித்தையின் வடிவாயுள்ளவளும். अविनत-कुचाम् - வணக்கமில்லாத நகில்களையுடையவளும்; विश्व-जननी - உலகைத் தோற்றுவிக்கும் அன்னையாயுள்ளவளும்; अपर्यन्तीम्-எல்லையற்றவளும்; लक्ष्मीम् - லக்ஷ்மீவடிவாயுள்ளவளும், भगवतीम् - அறுவகை ஐச்வர்யமுள்ளவளுமான அன்னையென்றே; सन्तः - ஸாதுக்கள் अभिदधति - சொல்லுகின்றனர்.

தடித் வல்லீம் நித்யாமம்ருதஸரிதம் பாரரஹிதாம்
மலோத்தீர்ணாம் ஜ்யோத்ஸ்நாம் ப்ரக்ருதிம-
குணக்ரந்திகஹநாம்।
கிராம் தூராம் வித்யாமவிநதகுசாம் விச்வஜநநீ-
மபர்யந்தாம் லக்ஷ்மீமபிததி ஸந்தோ பகவதீம்॥

(பொழிப்புரை) அன்னாய்! எப்பொழுதும் நிலைத்துள்ள மின்னல் கொடியே போன்றுள்ளவளும், இருபுரமும் கரையில்லாத அமுதப் பெருக்கெடுத்த ஆறு போலுள்ளவளும், மாசுகளிலிருந்து விடுபெற்ற ஒளியே போன்றுள்ளவளும், முக்குணங்களால் விடப்பெற்ற ப்ருக்ருதி வடிவாயுள்ளவளும், சொற்களுக்கும் எட்டாத வித்தையின் வடிவாயுள்ளவளும், வணக்கமில்லாத இரண்டு நகில்களையுடையவளும், உலகைத் தோற்றுவிக்கும் அன்னையாயுள்ளவளும், எல்லை காணாதவளாகவும், லக்ஷ்மியின் வடிவாயுள்ளவளும், அறுவகை ஐச்வர்யங்கள் நிரம்பியுள்ளவளுமான உன்னையே அன்னையென ஸாதுக்கள் சொல்லுகின்றனர்.

शरीरं क्षित्यम्भः प्रभृति रचितं केवलमिदं
सुखं दुःखं चायं कलयति पुमांश्चेतन इति ।

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

स्फुटं जानानोऽपि प्रभवति न देही रहयितुं
शरीराहंकारं तव समयबाह्यो गिरिसुते ॥ २६ ॥

(பதவுரை) हे गिरिसुते - மலையரசன் மகளே! तव - உன்னுடைய; समय-बाह्यः - ஸமயத்திற்கு புறம்பேயுள்ள; देही - ப்ராணியானது; इदम् - இந்த; शरीरम् - சரீரத்தை, - केवलम् - முக்யமாக, क्षिति - अम्भः प्रभृति - மண் நீர் முதலியவைகளால், रचितम् - செய்யப் பெற்றது(என்பதை) चेतनः - சின்மாத்ரமாயுள்ள, अयम् - இந்த, पुमान् - புருஷன், सुखं - ஸுகத்தையும், दुःखं - து:க்கத்தையும், स्फुटम् - வெளிப்படையாக, कलयति - அனுபவிக்கிறான். इति - என்று, जानानः अपि - அறிந்துள்ளவனுயினும், शरीर - अहंकारं - சரீரத்தைப் பற்றியுள்ள அஹம்காரத்தை, रहयितुं - வருவதற்கு, न - प्रभवति - சக்தியற்றதாயுள்ளது.

சரீரம் க்ஷித்யம்ப: ப்ரப்ருதி ரசிதம் கேவலமிதம்
ஸுகம் து:கம் சாயம் கலயதி புமாம்ஶ்சேதந இதி।
ஸ்புடம் ஜாநாநோऽபி ப்ரபவதி ந தேஹீ ரஹயிதும்
சரீராஹம்காரம் தவ ஸமயபாஹ்யோ கிரிஸுதே ॥

(பொழிப்புரை) மலையரசன் மகளாம் ஓ அன்னையே! ஸமயத்திற்கு - சந்த்ரகலைக்கு - புரம்பேயுள்ள ப்ராணியானது; இந்த சரீரத்தை முக்யமாக மண், நீர், முதலியவைகளால் நிர்மாணம் செய்யப் பெற்றது. சித்தின் வடிவாயுள்ள இப்புருஷன், ஸுகத்தையும் துக்கத்தையும், வெளிப்படையாக அநுபவிக்கின்றான் என அறிந்துள்ளதாயினும், சரீரத்தைப் பற்றியுள்ள அஹம்காரத்தை விடுவதற்கு சக்தியற்றதாயுள்ளது.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

पिता माता भ्राता सुहृदनुचरः सद्म गृहिणी
वपुः क्षेत्रं मित्रं धनमपि यदा मां विजहति ।
तदा मे भिन्दाना सपदि भयमोहान्धतमसं
महाज्योत्स्ने मातर्भव करुणया संनिधिकरी ॥ २७ ॥

(பதவுரை) हे महाज्योत्स्ने! मातः! பெருகிய ஒளி யின் வடிவாயமைந்துள்ள ஓ அன்னையே! पिता - தந்தையும், माता - அன்னையும், भ्राता - ஸஹோதரனும், सुहृत् - நண்பனும், अनुचरः - பணியாளும், सद्म - வீடும், गृहिणी - மனைவியும், वपुः - சரீரமும், क्षेत्रम् - பூமியும், मित्रम् - மித்ரனும், धनम् - अपि - தநமும், यदा - எப்பொழுது, मां - என்னை, विजहति - விடுகின்றதோ, तदा - அப்பொழுது, भय - मोह - अन्ध - तमसम् - பயம், மயக்கம், கண்ணை மறைக்கும் இருள் என்ற இவைகள், सपदि - விரைவில், भिन्दाना - அழிந்துவிடுவனவன்றோ! करुणया - கருணையோடுகூட, संनिधिकरी - எதிரில் காக்ஷிவடிவாக, भव - இருப்பாயாக.

பிதா மாதா ப்ராதா ஸுஹ்ருதநுசர: ஸத்ம க்ருஹிணீ
வபு:க்ஷேத்ரம் மித்ரம் தநமபி யதா மாம் விஜஹதி ।
ததா மே பிந்தாநா ஸபதி பயமோஹாந்ததமஸம்
மஹாஜ்யோத்ஸ்நே மாதர்பவ கருணயா ஸம்நிதிகரீ ॥

(பொழிப்புரை) ஒளியின் வடிவாயமைந்துள்ள ஓ அன்னையே! தந்தையும், தாயும், உடன்பிறந்தோனும், நண்பனும், பணியாளும், வீடும், மனைவியும், சரீரமும் பூமியும், மித்ரனும், பொருளும் எப்பொழுது என்னை விடுகின்றதோ, அப்பொழுது, பயம், மயக்கம்

CC-0. Arutkumar Narayanan Collection, New Delhi. Digitized by eGangotri

கண்களை மறைக்கும் இருள் என்ற இவைகள் விரைவில் அழிந்துவிடுவனவன்றோ! அன்னாய்! கருணையோடு கூட அப்பொழுது எனது முன்னிலையில் காக்ஷி வடிவாய் இருப்பாயன்றோ!

सुता दक्षस्यादौ किल सकलमातस्त्वमुदभूः
सदोषं तं हित्वा तदनु गिरिराजस्य दुहिता ।
अनाद्यन्ता शंभोरपृथगपि शक्तिर्भगवती
विवाहाज्जायासीत्यहह चरितं वेत्ति तव कः ॥ २८ ॥

(பதவுரை) हे **सकलमातः**- ஸகல ஜீவராசிகளின் தோற்றத்திற்குக் காரணமாயுள்ள ஓ அன்னாய்! **त्वम्**- நீ, **आदौ**-முதலில், **दक्षस्य**-தக்ஷப்ரஜாபதியினுடைய, **सुता**-பெண்ணாக, **उदभूः-किल**-தோன்றினாய் அன்றோ! **तदनु**-பிறகு, **सदोषम्**-குற்றத்தோடுகூடிய, **तम्**-அப்பிறவியையும், **हित्वा**-விட்டு, **अनादि अन्ता**- ஆதியும், முடிவும் இல்லாதவளும், **भगवती**-அறுவகை ஐச்வர்யங்கள் நிரம்பியவளும், **शंभोः**-பரமசிவனுடைய, **अपृथक्**-பிரிக்கமுடியாத, **शक्तिः**-**अपि**-சக்தியாயிருந்தபொழுதிலும், **गिरिराजस्य**-மலையரசனுடைய, **दुहिता**-மகளாகத் தோன்றினாய், **विवाहात्**-விவாஹத்தின் பொழுது, **जाया**- மனைவியாகவும் **असि**-இருந்தாய், **तव**-உன்னுடைய, **चरितम्**-சரித்திரத்தை, **कः**-எவன், **वेत्ति**-அறிந்துள்ளான்-ஒருவனும் இல்லையன்றோ!

ஸுதா தக்ஷஸ்யாதௌ கில ஸகலமாதஸ்தவ முதபூ:
ஸதோஷம் தம் ஹித்வா ததநு கிரிராஜஸ்ய துஹிதா!

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

அநாத்யந்தா சம்போரப்ருதகபி சக்திர் பகவதீ
விவாஹாஜ் ஜாயர்ஸீத்யஹஹ சரிதம் வேத்தி
தவ க: ||

(பொழிப்புரை) ஸகல ஜீவராசிகளின் தோற்றத்திற்குக் காரணமாயுள்ள ஒ அன்னையே! பண்டு, நீ தக்ஷப்ரஜாபதிக்குப் பெண்ணாகத் தோன்றினையன்றோ! பிறகு குற்றத்தோடு கூடிய அப்பிறவியையும் விட்டு, ஆதியும், அந்தமும் இல்லாதவளும், அறுவகை ஐச்வர்யங்கள் நிரம்பியவளும், பரமசிவனுடைய பிரிக்க முடியாத சக்தியாயிருந்தபொழுதிலும், மலையரசன் மகளாகத் தோன்றி, மணவினையின் பொழுது மனைவியாகவும் இருக்கின்றாய் என்பது வியக்கத்தக்கதாயுள்ளதன்றோ! அன்னாய்! உனது சரிதத்தை எவன் அறிந்துள்ளான்? ஒருவனும் இல்லையன்றோ!

மற்றும், ஸௌந்தர்யலஹரியினுடைய உரையாசிரியருள் ஒருவராகிய ஸ்ரீ காமேச்வரஸூரி என்பவர், முதற் செய்யுளுக்கு மிகவும் விஸ்தாரமாக உரைவகுத்துள்ளார். அவ்விடத்தில் இச்செய்யுளை மேற்கோளாகக் காட்டுவர். அங்கு அன்னை வடிவமற்றவளாயினும், தனது இச்சை தோன்றிய அளவிலே சக்தியின் பெருமிதம் கொண்டு பல வடிவங்களைத் தன்னிடம் கல்பனை செய்து கொள்ளுகிறாள் என வர்ணித்துள்ளார்.

कणास्त्वद्दीप्तीनां रविशशिकृशानुप्रभृतयः
परं ब्रह्म क्षुद्रं तव नियतमानन्दकणिका ।
शिवादिक्षित्यन्तं त्रिवलयतनोः सर्वमुदरे
तवास्ते भक्तस्य स्फुरसि हृदि चित्रं भगवति ॥ २९ ॥

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பதவுரை) हे भगवति ! - அறுவகை ஐச்வர்யங்களும் நிறைந்த ஓ அன்னையே! रवि - शशि - कृशानु - प्रभृतयः - ஸூர்யன், சந்த்ரன், அக்நி முதலியவர்கள், त्वत्-दीप्तीनाम् - உன்னுடைய ஒளிகளுடைய, कणाः - சிறுதிவலைகள், परं - சிறந்ததாயுள்ள, ब्रह्म - பரப்ரஹ்மமும், तव - உனக்கு, नियतं - எப்பொழுதும், क्षुद्र - சிறியதான, आनन्द कणिका - ஆநந்தத்தின் லேசமாகும், शिव - आदि - क्षिति - अन्तं - முதலாவதாகக்கொண்ட பூமி வரையிலுள்ள, सर्वं - யாவும், त्रिवलय - तनोः - மூன்று வலயமாயுள்ள சரீரத்தையுடைய तव - உன்னுடைய, उदरे - வயிற்றில், आस्ते - இருக்கிறது. भक्तस्य - தொண்டனுடைய, हृदि - ஹ்ருதயத்தில், स्फुरसि - ஒளிருகின்றாய், चित्रम् - வியப்பன்றோ !

கணாஸ்த்வத்தீப்தீநாம் ரவிசசிக்ருசாநு ப்ரப்ருதய:
பரம் ப்ரஹ்ம க்ஷுத்ரம் தவ நியதமாநந்தகணிகா ।
சிவாதி க்ஷித்யந்தம் த்ரிவலயதநோ: ஸர்வமுதரே
தவாஸ்தே பக்தஸ்ய ஸ்புரஸி ஹ்ருதி சித்ரம் பகவதி ॥

(பொழிப்புரை) அறுவகை ஐச்வர்யங்களும் நிறைந்துள்ள ஓ அன்னாய்! ஆதவன், அக்நி, நிறைமதி முதலியவர்கள் உனது ஒளிகளுடைய சிறு திவலைகளன்றோ! அவ்விதமே சிறந்ததாயுள்ள அந்த பரப்ரஹ்மமும் நுண்ணிய ஆநந்தத்தினுடைய ஒரு திவலையேயன்றோ! சிவனை முதலாவதாகக் கொண்ட பூமி வரையிலுள்ள யாவும் மூன்று வலைய வடிவாயமைந்த சரீரத்தையுடைய உன்னுடைய வயிற்றில் இருக்கின்றதுமாகும். உனது தொண்டர்களுடைய ஹ்ருதயத்திலும் ஒளிருகின்றாய், இந்த உனது

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

செய்கை வியக்கத் தக்கதாயிருக்கின்றது. என்னே உனது பெருமை !

पुरः पश्चादन्तर्बहिरपरिमेयं परिमितं
परं स्थूलं सूक्ष्मं सकुलमकुलं गुह्यमगुहम् ।
दवीयो नेदीयः सदसदिति विश्वं भगवती
सदा पश्यन्त्याख्या वहसि भुवनक्षोभजननीम् ॥ ३० ॥

(பதவுரை) भगवती - அறுவகை ஐச்வர்யங்கள் நிறைந்தவளும், भुवन-क्षोभ-जननी - உலகங்களுடைய அழிவிற்குக் காரணமாயுள்ளவளுமான (நீ), पुरः- எதிரிலும், पश्चात् - பின்புறமும், अन्तः - உள்ளேயும், बहिः - வெளியேயும், अपरिमेयम् - அகண்டாகாரமாக வும், परिमितम् - அளவையுள்ளதும், परम् -சிறந்ததும், स्थूलम् - பெரியதும், सूक्ष्मम् - நுண்ணியதும், सकुलम् - நீலம், மஞ்சள் முதலிய வர்ணத்தோடு கூடியதும், अकुलम् - நீலம், மஞ்சள் முதலிய வர்ணமற்றதாயும், गुह्यं - ரஹஸ்யமாயும், अगुह्यं - வ்யக்தமாயும், दवीयः - தூரத்திலுள்ளதும், नेदीयः - அருகிலுள்ளதும், सद् - ஸத்தின் வடிவமாயும், असत् - அஸத்தின் வடிவமா யும், इति -இவ்விதமுள்ள, विश्वं -யாவையும், पश्यन्त्या- ख्या - பச்யந்தீ என்ற பெயருள்ளவளாக இருந்து கொண்டு, सदा - எபபொழுதும், वहसि - வஹிக் கின்றாய்.

புர: பஶ்சாதந்தர் பஹிரபரிமேயம் பரிமிதம்
பரம் ஸ்தூலம் ஸூக்ஷ்மம் ஸகுலமகுலம் குஹ்ய-
மகுஹம் ।

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

தவீயோ நேதீய: ஸதஸதிதி விச்வம் பகவதீ
ஸ்தா பச்யந்த்யாக்யா வஹஸி புவநக்ஷோபஜநநீம் ॥

(பொழிப்புரை) அறுவகை ஐச்வர்யங்கள் நிறைந்துள்ளவளும், உலகத்திற்கு க்ஷோபத்தையுண்டுபண்ணுகின்றவளுமான நீ, எதிரிலும், பின்புறத்திலும், உள்ளேயும், வெளியேயும், அளவிட முடியாததும், அளவையுள்ளதும், சிறந்ததும், பெரியதும், நுண்ணியதும், நீலம், மஞ்சள் முதலிய வர்ணத்தோடு கூடியதும், நீலம், மஞ்சள் முதலிய வர்ணங்களற்றதாயும், ரஹஸ்யமாயும், வெளிப்படையாகவும், தூரத்திலுள்ளதும், அருகிலுள்ளதும், ஸத்தின் வடிவாகவும், அஸத்தின் வடிவாகவும் இவ்வாறு உலகம் யாவையும் பச்யந்தீ என்ற பெயருள்ள வாக்கின் வடிவாயிருந்துகொண்டு எப்பொழுதும் நிர்வாஹம் செய்து வருகின்றாய்.

அதாவது நால்வகை வாக்குகளில் அன்னை பச்யந்தீ என்ற நிலையையடையும் பொழுது முன்னர் கூறிய நிலைகளில் உலகை நிர்வாஹம் செய்து வருகின்றாள் என்பது ஸாரம். மற்றும் இச் செய்யுளிலுள்ள பதங்கள் யாவும் உபநிஷதங்களில் ஆங்காங்கு விரவி வருவதையும் ஒப்பு நோக்கினால், அன்னை அந்த உபநிஷதங்களே வர்ணிக்கப் பெறுகின்ற சொற்களின் வடிவாயமைந்த பரப்ரஹ்மத்தினின்றும் வேறுபட்டவள் அல்லவென்பதையும் உணரலாம்.

प्रविश्य त्वन्मार्गं सहजदयया देशिकदृशा
षडध्वध्वान्तौघच्छिदुरगणनातीतकरुणाम् ।

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

परामाज्ञाकारां सपदि शिवयन्तीं शिवतनुं
स्वमात्मानं धन्याश्चिरमुपलभन्ते भगवतीम् ॥ ३१ ॥

(பதவுரை) सहज-दयया - இயற்கையாயமைந்த தயவோடு கூடிய, देशिक-दृशा-ஸ்ரீகுருவினுடைய பார்வையினால், त्वन्मार्गम् - உன்னுடைய வழியை, प्रविश्य - அடைந்து, षड् -अध्व -ध्वान्त - ओघ -छिदुर-गणना-अतीत-करुणां - அறுவகையான அத்வாக்களென்னும் இருளின் தொகுதிகளையகற்றுகின்ற எண்ணிக்கைகளையும் கடந்துள்ள கருணையையுடையதும்; परां - சிறந்ததும்: आज्ञा-आकारां -ஆஜ்ஞையின் வடிவாயமைந்துள்ளதும்; सपदि-அப்பொழுதே, स्वं-தனது, आत्मानं - ஆத்மாவை, शिव-तनुः - சிவமயமான சரீரமாக; शिवयन्तीं - ஒளிரச்செய்கின்றதுமான; भगवतीं - அறுவகை ஐச்வர்யங்களும் நிறைந்துள்ள உன்னை; चिरं - வெகுகாலம் धन्याः -புண்யம் செய்துள்ளசீலர்கள்; उपलभन्ते -அடைகின்றனர்.

ப்ரவிச்ய த்வந்மார்கம் ஸஹஜதயயா தேசிகத்ருசா
ஷடத்வத்வாந்தௌகச்சிதுரகணநாதீதகருணாம்।
பராமாஜ்ஞாகாராம் ஸபதி சிவயந்தீம் சிவதநும்
ஸ்வமாத்மாநம் தந்யாஶ்சிரமுபலபந்தே பகவதீம் ॥

(பொழிப்புரை) அன்னாய்! இயற்கையாயமைந்த தயவோடு கூடிய ஸ்ரீகுருவினுடைய பார்வையினால், உன்னுடைய ஸமய மார்க்கத்தையடைந்து அறுவகையான அத்வாக்கள் என்னும் இருளின் தொகுதிகளையகற்றுகின்றதும், எண்ணிக்கைகளையும் கடந்துள்ள

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

கருணையையுடையதும், சிறந்ததும், ஆஜ்ஞையின் வடிவாயமைந்துள்ளதும், அப்பொழுதே தனது ஆத்மாவை சிவமயமான சரீரமாக ஒளிரச் செய்கின்றதுமான உன்னை வெகுகாலம் புண்யம் செய்துள்ள சிலர்கள் அடைகின்றனர்.

मयूखाः पूष्णीव ज्वलन इव तद्दीप्तिकणिकाः
पयोधौ कल्लोलाः प्रतिहतमहिम्नीव पृषतः ।
उदेत्योदेत्याम्ब त्वयि सह निजैः सात्त्विकगुणै-
र्भजन्ते तत्त्वौघाः प्रशममनुकल्पं परवशाः ॥ ३२ ॥

(பதவுரை) हे अम्ब - ஓ அன்னையே! पूष्णि - ஸூர்யனிடத்தில், मयूखाः - इव - கதிர்களைப்போலவும், ज्वलने - அக்நியினிடத்தில், तद् - दीप्ति - कणिकाः - इव - அதனுடைய ஒளிகளின் திவலைகளைப்போலவும், प्रतिहत - महिम्नि - தடை செய்யப் பெற்ற எல்லையையுடைய, पयोधौ - கடலில், कल्लोलाः - அடுத்தடுத்து வருகின்ற, पृषतः - इव - ஜலபிந்துக்களே போல, तत्त्व-ओघाः - தத்துவங்களுடைய தொகுதிகள், उदेत्य - उदेत्य - தோன்றித் தோன்றி, त्वयि - உன்னிடத்தில், निजैः - தன்னுடைய, सात्त्विक - गुणैः - ஸத்துவகுணங்களினால், परवशाः - பரவசமடைந்தவைகளாக, अनुकल्पं - ஒவ்வொரு கல்பத்திலும், त्वयि - உன்னிடத்தில் प्रशमं - சாந்தியை, भजन्ते - அடைகின்றன.

மயூகா: பூஷ்ணீவ ஜ்வலந இவ தத்தீப்திகணிகா:
பயோதௌ கல்லோலா: ப்ரதிஹத மஹிம்நீவ
ப்ருஷத:।

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

உதேத்யோதேத்யாம்ப த்வயி ஸஹ நிஜை: ஸாத்விககுணைர்
பஜந்தே தத்வௌகா: ப்ரசமமநுகல்பம் பரவசா: ॥

(பொழிப்புரை) அன்னாய்! ஆதவனிடத்தில் அமைந்துள்ள கிரணங்கள் போலவும், அக்நியினிடத்திலுள்ள ஒளிகளின் திவலைகளைப் போலவும், தடை செய்யப் பெற்ற எல்லையையுடைய ஆழியிலே அடுத்தடுத்து வருகின்ற ஜலபிந்துக்களை போல, தத்துவங்களுடைய தொகுதிகள் தோன்றித் தோன்றி உன்னிடத்திலே தனது ஸாத்விக குணங்களினால் பரவசமடைந்தவர்களாக ஒவ்வொரு கல்பத்திலும் உன்னிடத்திலேயே சாந்தியை அடைகின்றன.

विधिर्विष्णुर्ब्रह्मा प्रकृतिरणुरात्मा दिनकरः
स्वभावो जैनेन्द्रः सुगतमुनिराकाशमलिनः ।
शिवः शक्तिश्चेति श्रुतिविषयतां तामुपतां
विकल्पैरेभिस्त्वामभिदधति सन्तो भगवतीम् ॥ ३३ ॥

(பதவுரை) विधिः- காலமும்; विष्णुः -விஷ்ணுவும், ब्रह्मा - நான்முகனும், प्रकृतिः - மாயையும், अणुः - அணுவும், आत्मा - ஜீவனும், दिनकरः - ஸூர்யனும், स्वभावः- இயற்கையும், जैनेन्द्रः - ஜைநஸ்வாமியும், सुगत - मुनिः - ஸுகதமுநியும், आकाशमलिनः - ஆகாயத்தின் மலினமும், शिवः - சிவனும், शक्तिः - च - சக்தியும், इति - இவ்வாறு, एभिः - இந்த, विकल्पैः -வேறுபாடுகளால், श्रुति-विषयताम् - வேதத்திற்கு புலனாயிருக்கும் தன்மையை, उपगताम् - அடைந்து, ताम् - அச்சிறப்பு வாய்ந்த,

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

भगवतीम्-அறுவகை ஐச்வர்யங்கள் நிரம்பியுள்ள, त्वां-உன்னை, सन्तः - அறிஞர்கள், अभिदधति - சொல்லுகின்றனர்.

விதிர் விஷ்ணுர் ப்ரஹ்மா ப்ரக்ருதிரணுராத்மாதிநகர:
ஸ்வபாவோ ஜைநேந்த்ர: ஸுகதமுநிராகாசமலிந:।
சிவ: சக்திஃசேதி ச்ருதி விஷயதாம் தாமுபகதாம்
விகல்பை ரேபிஸ்த்வாமபிதததி ஸந்தோ பகவதீம்॥

(பொழிப்புரை) அன்னாய்! காலமும், விஷ்ணுவும், நான்முகனும், மாயையும், அணுவும், ஜீவனும், ஆதவனும், இயற்கையும், ஜைநஸ்வாமியும், ஸுகத முநியும், ஆகாயத்தின் மலிநமும், சிவனும், சக்தியும், இவ்வாறுள்ள இந்த வேறுபாடுகளால், வேதத்திற்குப் புலனாயிருக்கும் தன்மையை அடைந்து, அச்சிறப்பு வாய்ந்த அறுவகை ஐச்வர்யங்கள் நிரம்பியுள்ளவள் என அறிஞர்கள் உன்னைச் சொல்லுகின்றனர்.

शिवस्त्वं शक्तिस्त्वं त्वमसि समया त्वं समयिनी
त्वमात्मा त्वं दीक्षा त्वमयमणिमादिर्गुणगणः ।
अविद्या त्वं विद्या त्वमसि निखिलं त्वं किमपरं
पृथक् तत्त्वं त्वत्तो भगवति न वीक्षामह इमे ॥ ३४ ॥

(பதவுரை) हे भगवति! - அறுவகை ஐச்வர்யங்கள் நிறைந்துள்ள ஓ அன்னையே! शिवः - சிவனும், त्वम् - நீ, शक्तिः - சக்தியும், त्वम् - நீ, समया - ஆசாரவடிவாகவும், त्वम् - நீயே, असि - இருக்கிறாய். समयिनी - ஸித்தாந்தவடிவமும், त्वम् - நீயே, आत्मा - ஜீவனும் त्वम् - நீ, दीक्षा - தீக்ஷையும், त्वम् - நீ, अयम् - இந்த,

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

अणिमादिः - அணிமாமுதலிய, गुणगणः -குணத்தொகுதியும், त्वम् - நீ, अविद्या - அவித்தையும், त्वम् - நீ, विद्या - தத்துவஞானமும், त्वम् - நீ, निखिलम् - யாவும், त्वं - நீயாகவே, असि - இருக்கிறாய், अपरं - வேறு, किं - யாதும், इमे - இவைகள், त्वत्तः - உன்னைக் காட்டிலும் पृथक् - வேறான, तत्त्वं - தத்வமாக, न वीक्षामहे - (நாங்கள்) காண்பதற்கில்லை.

சிவஸ்த்வம் சக்திஸ்த்வம் த்வமஸி ஸமயா த்வம் ஸமயிநீ
த்வமாத்மா த்வம் தீக்ஷா த்வமயமணிமாதிர்குணகண:
அவித்யா த்வம் வித்யா த்வமஸி நிகிலம் த்வம் கிமபரம்
ப்ருதக் தத்வம் த்வத்தோ பகவதி ந வீக்ஷாமஹ இமே ॥ 34 ॥

(பொழிப்புரை) அறுவகை ஐச்வர்யம் நிறைந்துள்ள அன்னையே! சிவனும் நீயே, சக்தியும் நீயே, ஸமயாசார வடிவாயிருப்பவளும் நீயே. ஸித்தாந்த வடிவாயுள்ளவளும் நீயே, ஜீவ வடிவம் கொண்டவளும் நீயே, தீக்ஷை அணிமா முதலிய எண்வகை ஸித்திகளின் குணத்தொகுதிகளும் நீயே, அவித்யா வடிவான அஜ்ஞானமும், வித்யா வடிவான தத்வ ஞானமும் நீயேயன்றோ! மற்றும் இவ்வுலகில் பரவியுள்ள யாவும் நீயே! உன்னைக் காட்டிலும் வேறாகவுள்ள தத்வத்தையும் நாங்கள் காண முடியவில்லை.

இச் செய்யுளை ஸ்ரீகாமேச்வரஸுந்தரி ஸௌந்தர்ய லஹரியினுடைய முதற் செய்யுளின் உறையிலே மேற்கோளாகக் கொண்டு விளக்கம் கொடுத்துள்ளது வருமாறு:—

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

அன்னை, மாயை, அவித்யை முதலிய சொற்களுக்கு இலக்காயிருப்பினும், மிகுந்த திறமை வாய்ந்த சக்தியின் வடிவாகவேயிருந்துகொண்டு, பலபடியான தத்துவங்களை அவ்வப்பொழுது தோற்றுவிப்பவள் அவள் ஒருவளே எல்லாவற்றிற்கும் மூல காரணமாயிருப்பவள் எனச் சொல்லுவர்.

[1]त्वया यो जानीते रचयति भवत्यैव सततं
त्वयैवेच्छत्यम्ब त्वमसि निखिला यस्य तनवः ।
[2]गता साम्यं शंभोर्वहति परमं व्योम भवती
तथाप्येवं हित्वा विहरति शिवस्येति किमिदम् ॥ ३५ ॥

(பதவுரை) हे अम्ब - ஓ அன்னையே! यः- எவன், त्वया - உன்னால், जानीते - அறியப்படுகிறானோ, भवति - एव - உன்னிடத்திலேயே, सततम् - எப்பொழுதும், रचयति - தோற்றுவிக்கின்றாயோ, त्वया - एव - உன்னாலேயே, इच्छति - விரும்பப்பெறுகின்றதோ, यस्य- எவனுடைய, निखिलाः - ஸமஸ்தமான, तनवः - ப்ருதிவீ முதலிய எண்வகையான சரீரங்களும், त्वं - நீயாகவே, असि - இருக்கின்றாயோ, (அவனுக்கு) शंभोः - பரமசிவனுடைய, साम्यं - ஸமானநிலையை, गता-सती - அடைந்துள்ளபொழுது, परमं - சிறந்த, व्योम - ஆகாயத்தை, वहसि - வஹிக்கின்றாய், तथा - अपि - அவ்விதமிருந்த பொழுதிலும், एवं - இவ்வாறு, शिवस्य - சிவ

1. त्वयासौ, 2. सकलम्, गतः என்பது அருணமோதிநீ பாடம்.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

னுக்கு, त्वां - உன்னை, हित्वा - விட்டு, विहरति - விளையாடு கிறான், इति - என்ற इदं - இச்செய்கை किं - என்னவோ !

த்வயா யோ ஜாநீதே ரசயதி பவத்யைவ ஸததம்
த்வயைவேச்சத்யம்ப த்வமஸி நிகிலாயஸ்ய தநவ:।
கதா ஸாம்யம் சம்போர்வஹஸி பரம் வ்யோம பவதீ
ததாப்யேவம் ஹித்வா விஹரதி சிவஸ்யேதி கிமிதம்॥

(பொழிப்புரை) அன்னாய்! எவன் உன்னால் அறியப் பெறுகின்றானோ, உன்னிடத்திலேயே எப்பொழுதும் தோற்றுவிக்கின்றாயோ, உன்னாலே விரும்பப் பெறு கின்றதோ, எவனுக்கு முழுவதுமாயுள்ள ப்ருதிவீ முதலிய எண்வகையான சரீரங்களும் நீயாகவே இருக் கின்றாயோ, அப்பெருமை வாய்ந்த பரமசிவனுக்கு ஸமானமாயுள்ள நிலையையடைந்துள்ள பொழுது, சிறந்த ஆகாசமென்னும் இருப்பிடத்தை வஹிக்கின்றாய் அன்றோ! அவ்விதமிருந்த பொழுதிலும் இவ்வாறு சிவனுடைய, உன்னை விட்டு விளையாடுகின்றான் என்ற இச்செய்கை என்னவோ அறிய முடியவில்லை.

இச்செய்யுளை ஸ்ரீகாமேச்வரஸூரி தமது அருணா மோதிநீ என்ற ஸௌந்தர்யலஹரியினுடைய உரையிலே முப்பத்தைந்தாவது செய்யுளில் மேற்கோளாகக் கொண்டு விளக்கம் கொடுத்துள்ளார்:—

அன்னை தனது இச்சையின் அளவிலே எப்பொழுதும் யாவற்றையுமுணர்ந்துகொண்டு படைப்பதும், பலவகை யான சரீரரங்களைத் தோற்றுவிப்பதுமாயிருந்துகொண்டு அதே ஸமயத்தில் பரமசிவனையும் தனக்கு ஸமமாகயிருக்

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

கும் தர்மத்தைத் தாங்கச் செய்து, அவனுக்கு உதவி செய்யும் வகையிலே மங்கை பாகனுகயுள்ள வடிவையும் கொடுத்துள்ளாள் என்பது ஸாரம் என்பர்.

असंख्यैः प्राचीनैर्जननि जननैः कर्मविलयात्
कृते जन्मन्यन्ते गुरुवपुषमासाद्य गिरिशम् ।
अवाप्याज्ञां शैवीं क्रमतनुरपि त्वां विदितवान्
नयेयं त्वत्पूजास्तुतिविरचनैरेव दिवसान् ॥ ३६ ॥

(பதவுரை) **हे जननि** - ஓ அன்னையே! **असंख्यैः** - கணக்கற்றதும், **प्राचीनैः** - பழமையானதுமான, **जननैः** - பிறவிகளினுல், **कर्मविलयात्** - செயல்களுடைய அழிவிலிருந்து, **जन्मनि** - பிறவியானது, **अन्ते-कृते** - அழிவுற்ற பொழுது, **गुरु-वपुषं** - ஸ்ரீகுருவின் சரீரமாயமைந்த, **गिरिशम्** - ஈச்வரனை; **आसाद्य** - அடைந்து, **शैवीं** - சிவனுடைய சார்புள்ள, **आज्ञां**-கட்டளையை. **आवाप्य** -பெற்று, **क्रमतनुः**-வழி வழிவந்த சரீரத்தையுடைய, **त्वां**-உன்னை, **विदितवान्** -அறிந்துள்ளவனுக, **त्वत्-पूजा-स्तुति-विरचनैः** - உன்னுடைய பூஜை, துதி இவைகளின் செய்கைகளினுல், **दिवसान्**- நாட்களை, **नयेयम्** - (நான்) செலுத்திக் கொண்டிருக்கிறேன்.

அஸங்க்யை: ப்ராசீநைர் ஜநநி ஜநநை: கர்ம விலயாத்
க்ருதே ஜந்மந்யந்தே குருவபுஷமாஸாத்ய கிரிசம்।
அவாப்யாஜ்ஞாம் சைவீம் க்ரமதநுரபி த்வாம் விதிதவாந்
நயேயம் த்வத் பூஜாஸ்துதிவிரசநைரேவ திவஸாந்॥

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பொழிப்புரை) அன்னாய்! கணக்கற்றதும், பழமையானதுமான பிறவிகளினால் செயல்களுடைய அழிவிலிருந்து பிறவியானது அழிவுற்றபொழுது, ஸ்ரீகுருவின் சரீரமாயமைந்த பரமசிவனை அடைந்து, சிவனுடைய சார்புள்ள கட்டளையைப்பெற்று, வழிவழியாக வந்துள்ள சரீரத்தையுடைய உன்னை அறிந்துள்ளவனாக, உன்னுடைய பூஜை, துதி. இவைகளின் செயல்களால் நாட்களை நான் செலுத்திக் கொண்டிருக்கிறேன்.

यत् षट्पत्रं कमलमुदितं तस्य या कर्णिकाख्या
योनिस्तस्याः प्रथितमुदरे यत् तदोंकारपीठम् ।
तस्मिन्नन्तः कुचभरनतां कुण्डलीतः प्रवृत्तां
श्यामाकारां सकलजननीं संततं भावयामि ॥ ३७ ॥

(பதவுரை) षट् - पत्रम् - ஆறு இதழ்கள் கொண்ட, यत् - யாதொரு, कमलं - தாமரைமலருள்ளதோ, तस्य - அம்மலருடைய, कर्णिकाख्या - தாமரைக்காய் என்ற பெயருடைய, या - யாதொரு, योनिः - இருப்பிடமுள்ளதோ, तस्याः - அந்தத் தாமரைக் காயினுடைய, उदरे - வயிற்றில், प्रथितम् - புகழ்பெற்ற, यत् - யாதொரு, ओंकारपीठम् - ஓங்காரபீடமுள்ளதோ, तस्मिन् - அந்த பீடத்தில், अन्तः - உள்ளே, कुच - भर - नताम् - தனங்களுடைய பாரத்தினால் வளைந்துள்ளவளும், कुण्डलीतः - குண்டலியினிடமிருந்து, प्रवृत्तां - தொடர்ந்துள்ளவளும், श्यामाकारां - கருமை நிறம் கொண்ட வடிவம் கொண்டவளுமான, सकल-जननीं - ஸகல ஜனங்களுக்கும்,

CC-0. Arutsadhi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

संततं - எப்பொழுதும், **भावयामि** - சிந்தனை செய்கிறேன்.

யத்ஷட்பத்ரம் கமலமுதிதம் தஸ்ய யா கர்ணிகாக்யா
யோநிஸ்தஸ்யா: ப்ரதிதமுதரே யத் ததோங்கார பீடம்।
தஸ்மிந்நந்த: குசபரநதாம் குண்டலீத: ப்ரவ்ருத்தாம்
ச்யாமாகாராம் ஸகலஜநநீம் ஸம்ததம் பாவயாமி॥

(பொழிப்புரை) அன்னாய்! ஆறுதளங்கள் கொண்ட யாதொரு கமலமுள்ளதோ, அக்கமலத்தினுடைய தாமரைக்காய் என்ற பெயருடைய யாதொரு இருப்பிடமுள்ளதோ, அத்தாமரைக் காயினுள்ளே புகழ்பெற்ற யாதொரு ஓம்கார பீடமுள்ளதோ, அந்த ஓங்கார பீடத்தினுள்ளே, நகில்களுடைய சுமையினால் வணங்கியுள்ளவளும், குண்டலியினிடமிருந்து தொடர்ந்துள்ளதும், கருமை நிறம் கொண்ட வடிவாயமைந்துள்ளவளுமான ஸகலஜநநியாம் உன்னை எப்பொழுதும் சிந்தனை செய்கிறேன்.

भुवि पयसि कृशानौ मारुते खे शशाङ्के
सवितरि यजमानेऽप्यष्टधा शक्तिरेका ।
वहति कुचभराभ्यां यावनम्रापि विश्वं
सकलजननि सा त्वं पाहि मामित्यवश्यम् ॥ ३८ ॥

॥ इति श्रीमहाकविकालिदासविरचितायां देवीपञ्चस्तव्यां पञ्चमः सकलजननीस्तवः संपूर्णः ॥

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

(பதவுரை) हे सकल-जननि - ஸகல ஜநநியாம் ஓ அன்னையே! भुवि - புவியிலும், पयसि - நீரிலும், कृशानौ - அக்நியிலும், मारुते - காற்றிலும், - खे - ஆகாயத்திலும், शशाङ्के - சந்திரனிடத்திலும், सवितरि - ஸூர்யனிடத்திலும், यजमाने - अपि - புருஷனிடத்திலும், अष्टधा - எண்வகையாக, एका - ஒன்ருயுள்ள, या - எந்த, शक्तिः - சக்தியுள்ளதோ, कुचभराभ्याम् - நகில்களுடைய சுமையினுலே, अवनम्रा - अपि - வளைந்துள்ளபொழுதிலும், सा - அப்பெருமை வாய்ந்த சக்தியும், त्वम् - நீயேயன்ரே. मां - என்னை, अवश्यम् - (ஆதலின்) உறுதியாக, पाहि - காப்பாற்றுவாயாக, इति - என்று, (சிந்தனை செய்கிறேன்.)

புவி பயஸி க்ருசாநௌ மாருதே கே சசாங்கே
ஸவிதரி யஜமாநேऽப்யஷ்டதா சக்திரேகா !
வஹதி குசபராப்யாம் யாவநம்ராபி விச்வம்
ஸகலஜநநி ஸா த்வம் பாஹி மாமித்ய வச்யம் ॥

இதி ஸ்ரீ மஹாகவி காளிதாஸ விரசிதாயாம்
ஸ்ரீ தேவீ பஞ்சஸ்தவ்யாம் பஞ்சம:
ஸகல ஜநநீஸ்தவ: ஸம்பூர்ண:

(பொழிப்புரை) ஸகலஜநநியாம் ஓ அன்னுய்! புவியிலும், நீரிலும், நெருப்பிலும், காற்றிலும், ஆகாயத்திலும், நிறைமதியினிடத்திலும், ஆதவனிடத்திலும், புருஷனிடத்திலும் எண்வகையாகப் பரிணமித்துள்ள ஒன்ருயுள்ள யாதொரு சக்தியுள்ளதோ, நகில்களுடைய பாரத்தினுல் வணங்கியுள்ள பொழுதிலும். அப்பெருமை வாய்ந்த சக்தியாயுள்ளவளும் நீயேயன்ரே ! ஆதலின்

CC-0. Arutselvar R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

என்னை முக்யமாக உறுதியுடன் காப்பாற்றுவாயாக எனச் சிந்தனை செய்கிறேன்.

இச்செய்யுளை ஸௌந்தர்யலஹரியினுடைய அருண மோதிநீ என்ற தமது உரையிலே ஸ்ரீ காமேச்வரஸூரி மேற்கோளாகக் காட்டுவர்:—

மண், நீர், முதலிய எண்வகையான மூர்த்திகளிடத்திலும் ஒரே சக்தியாக விளங்கும் நீ, உனது பெருமிதத்தின் காரணமாக ஊடுருவிநிற்கின்றாய். ஆதலின், உலகில் உன்னைத் தவிர வேறு ஒரு வஸ்து இருப்பதாக நாங்கள் காணமுடியவில்லை. ஆதலின், இப்பெருமை வாய்ந்த நீ, உனது தொண்டனும் என்னையும் அருள்நோக்குக் கொண்டு அவச்யம் காப்பாற்ற வேண்டும் என்பது கவியின் வேண்டுகோளாகும்.

இச்செய்யுளோடு சாகுந்தலத்தின் முதற் செய்யுளாகிய நாந்தீ ச்லோகத்தையும் ஒப்பு நோக்கினால் எண் வகையாயுள்ள மூர்த்திகளின் ஒற்றுமையாயுள்ள விவரங்களைக் காணமுடியும். இதேபோல மற்ற இரண்டு நாடகங்களாகிய விக்ரமோர்வசீயம், மாளவிகாக்நி மித்ரம் என்ற இரண்டு நாடகங்களுடைய நாந்தீ ச்லோகங்களிலும் விரவி வருவதை நுட்பமாகக் கவனித்தால் நன்கு விளங்கும்.

இவ்வாறு ஸ்ரீமஹாகவி காளிதாஸர் திருவாய்
மலர்ந்தருளிய ஸ்ரீதேவீ பஞ்சஸ்தவத்தில்
ஐந்தாவது ஸகலஜனனீஸ்தவத்தின்
தமிழுரை இவண் முற்றும்,

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

இவ்விதம் வாதூல வேங்கடஸுப்ரஹ்மண்ய சர்மா
வினுடைய தநயன் ராமசந்த்ர சர்மாவினுல்
இயற்றப்பெற்ற ஸ்ரீமஹாகவி காளிதாஸ
னுடைய தேவீ பஞ்சஸ்தவங்களில்
ஐந்தாவது ஸகல ஜநநீஸ்தவத்
தின் ஸரளா என்ற தமிழுரை
இவண் முற்றும்.


சிவார்ப்பணம்.

லக்ஷ்மி விஜயம் பிரஸ், திருவல்லிக்கேணி, சென்னை-5.

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

185/20

58/13





CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri

Copies available at :

M/s Higginbothams (P) Ltd.
Mount Road, Madras-2.

AND

all Higginbothams Railway Station Bookstalls

CC-0. Arutsakthi R. Nagarajan Collection, New Delhi. Digitized by eGangotri